# தமிழரசு

மே16-1972 35காசு



# அரசு - மிகவுயர்ந்த தரமான

# போர்ட்லேண்ட் சிமெண்ட் உங்களுக்குக் கிடைக்கிறது

அரசு சிமெண்ட் தரத்தில் தலைசிறந்து விளங்குவது; தரமே உருவானது. வலிமைக்கு மற்றொரு பெயரான அரசு, வலுவான கட்டுமானங்களுக்கு நேர் நிகரில்லாததாகும்.

அரசு சிமெண்டுக்குள்ள தனிச் சிறப்புத் தன்மைகள், அதனல் கட்டப்படும் எதையும் திண்மையும், நீர்க்காத திறனும் கொண்டு நெடுங்காலம் நீடித்து விளங்கச் செய்கின்றன.

அரசு ஒரு நவீன, விஞ்ஞான ரீதியான தயாரிக்கப்படும் போர்ட்லெண்ட் சிமெண்ட் குடியிருப்பு இல்லங்கள், பண்ணைக் கட்டிடங்கள், அலுவலக கட்டிடங்கள், தானியக் குதிர்கள், குழாய் அமைப்புகள், அணைகள், பாலங்கள், நீர்த்தொட்டிகள், நீர்த் தேக்கங்கள், நீச்சல் குளங்கள், அலங்கார அமைப்புக்கள் போன்ற எத்தனையோ கட்டுமான வேலைக்கு அரசு அருமையானதொரு சிமெண்ட்.

அரசு தமிழ்நாட்டிலேயே முதலாவதான ஒரே அரசினர் துறை சிமெண்ட் ஆலை




யால், கடுமையான தரக்கட்டுப்பாடுகளைக் கையாண்டு உற்பத்தி செய்யப்படுகிறது.

## தமிழ்நாடு சிமெண்ட்ஸ்

(தமிழ்நாடு அரசுக்கு சொந்தமான நிறுவனம்)

ஆலங்குளம், இராமநாதபுரம் மாவட்டம்

## அரசு - வலிவும் வனப்பும் வாய்ந்தது

AC-16

# தமிழரசு

மலர் 2 இதழ் 22

16-5-1972

முதல்வர் எழுதும் குறளோவியம்

வெற்றிக்கு அடிப்படை!

உண்மையின் சந்நிதி
(புதிய தொடர் கதை)

இருதயச் சிகிச்சைக்கு
இணையற்ற நிலையம்

சத்துணவில் ஒரு
சாதனை

மேனி எழிலுக்கு
மேற்கிந்தியச் செர்ரி

அரிசன மக்களுக்கு
அரசு அளிக்கும்
பெருஞ் சலுகைகள்

உழவர்களுக்குப்
பயிற்சியளிக்க
ஒரு நிலையம்

சென்னையில் பால் ஆறு

ஏழை செல்வராஜர்

புள்ளி விவரம்
-புள்ளியைப் பற்றி

காவல்துறை
- ஒரு கண்ணோட்டம்

முகப்பில்
உதகைக் காட்சி


குறளோவியம்

# முதல்வர், கலைஞர் மு.கருணாநிதி

வெள்ளிப் பாற்குடத்தின் வாய்போன்ற வட்ட நிலா. அல்லிக்குளமோ
என ஐயுறும் வண்ணம் நட்சத்திர வானம். அவைகளைப் பற்றியெல்லாம்
தேனிசை மீட்டிவிட்டு உலகத்தையே மறந்து அசைவற்று இருக்கின்றன. அந்த
நல்யாழ்கள் இரண்டும். அந்த உயிர் யாழ்களின் கனவுலகத்தைக் கலைத்து
விடக் கூடாதேயென்ற பயத்தோடு, மென்காற்று - அவர்களைக் கீழ் ஸ்தாயியில்
தாலாட்டுகிறது.

வானத்திலே உள்ள - விண்மீன்களோ, பெரியதோர் குழப்பமான ஆராய்ச்சி
யில் இறங்கிக் கலங்கித் திரிகின்றன; என்ன அந்த ஆராய்ச்சி?

தாங்கள் எங்கேயிருக்கிறோம் - நிலவு எங்கேயிருக்கிறது என்பதுதான்
அவைகளின் ஆராய்ச்சியாகும்.

வானத்திலே உள்ள கண்ணாடியில்தான் இவள் முகம் தெரிகிறதோ-அல்லது,
பூமியில் உள்ள கண்ணாடியில்தான் நிலவு தெரிகிறதோ - என வியக்கும்
அளவுக்கு, நிலா முகம் படைத்த பேரழகி அவள்! ஆகவேதான் அவளுக்கும்
நிலவுக்கும் வேறுபாடு தெரியாமல் விண்மீன்கள் கலங்கித்திரிகின்றன. அதற்கு

இதோ குறள் :—

" மதியும் மடந்தை முகனும் அறியாப்
பதியிற் கலங்கிய மீன் "

இப்படி விண்மீன்களுக்கே கலக்கத்தை உண்டு பண்ணிய அந்தக் கட்டழகி
யின் தோளிலே ஒருவன் மெய்ம்மறந்து சாய்ந்து கிடக்கிறான் என்பதைக்
காணும்போது, இளம் உள்ளங்களில் பொறாமைக் கீறல் விழத்தான் செய்யும்—
ஆனால் வள்ளுவர் உள்ளமோ அறிவு மணக்கும் அழகான கேள்வியொன்றை
எழுப்புகிறது.

தான் விரும்பும் காதலியின் மெல்லிய தோளில் சாய்ந்திருந்து துயிலும்
துயில்போல் இனிமை வாய்ந்ததா, அந்தத் தாமரைக்கண்ணான் உலகம்?

இல்லை, - இல்லை!

இதோ, குறளோவியம் காணுங்கள் :—

" தாம்வீழ்வார் மென்றோள் துயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணான் உலகு? "

முத்து

# நமது பெருமைகளைச் சொல்லும் தூதுவர்

சுற்றுலாத் துறையின் வளர்ச்சியின் ஒரு கட்டமாக, சுற்றுலாப் பயணிகளைச் சுற்றுலாவிற்கு ஏற்ற பல்வேறு இடங்களுக்கு அழைத்துச் செல்லவும் கண்ணையும் கருத்தையும் கவருகிற பகுதிகளையும் தமிழ் நாட்டின் வரலாற்றுச் சிறப்புக்கள், பழமையான பகுதிகள், தமிழ் நாட்டின் இலக்கியச் சிறப்புக்கள் இவைகளை வெளி மாநிலங்களிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் வருகின்ற சுற்றுலாப் பயணிகள் உணர்வதற் கேற்ற வகையில் அவர்களை அழைத்துச் செல்லவும் இந்த ஊர்தி நாளை முதல் தன் பயணத்தைத் தொடங்குகிறது.

பல்வேறு நாடுகளோடு ஒப்பு நோக்குமிடத்து, இந்தியா சுற்றுலாத் துறையில் அவைகளோடு இணைந்து முன்னேறியதாகச் சொல்ல முடியாது.

சுற்றுலாவிற்கென்று இந்தியச் செலவுத் திட்டத்தில், ஒதுக்கப்படுகிற தொகைகூடக் குறைவானதாக இருக்கிறது. ஆகவே மாநிலங்களில் சுற்றுலாத்துறையை வளர்ப்பது இயலாத ஒன்றாக இருக்கிறது என்று மத்திய அமைச்சர் அடிக்கடி எங்களிடம் வருத்தத்தைத் தெரிவிக்கிற சூழ்நிலையில் இருக்கிறார்.

மேல்நாடுகளில் இந்தத் துறை வளர்ந்திருப்பது ஏதோ உல்லாசமாகப் பொழுது போக்க வருகின்றவர்களுக்கென்று மாத்திரமில்லாமல், அந்தந்த நாடுகளுடைய பொருளாதார வளர்ச்சியைப் பெரிதும் முன்னேற்றவும் பயன்படுகிறது.

நம் நாட்டில்; 'சுற்றுலா என்பதே ஒரு சொகுசானது, பொழுது போக்காகப் பயன்படுவது - பணக்காரர்களுக்காக இருப்பது' என்ற ஒரு தவறான அடிப்படையில் அந்தத் துறை வளர்க்கப்படக் கூடிய சூழ்நிலை இல்லாமல் போய்விட்டது.

தமிழ் நாட்டோடு ஒப்பிடும் போது சுவிட்சர்லாந்து மிகச் சிறிய நாடு. ஆனால், அந்த நாட்டிற்கு ஆண்டு தோறும் சுற்றுலாவின் வாயிலாகக் கிடைக்கின்ற வருமானம் அமெரிக்காவிலே ஓர் ஆண்டிற்குச் சுற்றுலா மூலம் எவ்வளவு வருமானம் கிடைக்கிறதோ அதோடு போட்டி போடப் கூடிய அளவிற்கு இருக்கிறது. அந்த அளவிற்கு அங்கே செழித்த இயற்கை வளங்களும், மலை வளங்களும் இருக்கின்றன.

இத்தாலி நாட்டில் சுற்றுலாத் துறையின் மூலமாகப் பெறுகின்ற வருமானம், அந்நாட்டு மக்களுக்குத் தேவையான இறைச்சியைப் பெற அவர்கள் செலவழிக்கக் கூடிய 500, 600 கோடி ரூபாய் அளவுக்கு இருப்பதாகச் சொல்கிறார்கள்.

ஆகவே, பொருளாதார வளர்ச்சியிலும் ஒரு கட்டமாக இன்றைய தினம் சுற்றுலாத் துறை அமைந்திருக்கிறது.

நம்முடைய நாட்டுப் பெருமைகளை, சரித்திரச் சான்றுகளை, பழைய கால வரலாறுகளை, மாமன்னர்கள் நம் நாட்டில் எப்படியெல்லாம் அரசோச்சினார்கள், அந்தக் காலத்தில் ஜனநாயகமுறை எப்படி அறிமுகப்படுத்தப்பட்டது என்பதையெல்லாம் சுற்றுலாப் பயணிகள் அறிந்து கொள்ளத் தக்க அளவிற்கு நாம் இத்துறையைப் பயன்படுத்தியாகவேண்டும்.




ஓர் ஊர்தியைப் பயன்

படுத்துவதற்காக இந்த விழா நடை-பெறுகிறது.

ஆனால், மேல்நாடுகளில் இப்படிப்பட்ட ஊர்திகள் நூற்றுக் கணக்கில், ஆயிரக் கணக்கில் நடமாடிக் கொண்டிருக்கின்றன. 'ஒண்ணே ஒண்ணு, கண்ணே கண்ணு' என்ற அளவில் விழா நடத்திக் கொண்டிருக்கிறோம். 'அர்த்த ராத்திரியில் குடை பிடிப்பது' என்று பழமொழி சொல்வார்கள். இதன் சின்னங் கூடக் குடையாகத்தான் இருக்கிறது.

இந்த ஊர்தியில் அமர்ந்திருந்தபோது அமைச்சர் இராசாராம் உதகை போன்ற இடங்களில் இது போன்ற சுற்றுலாப் பயணிகளுக்கு வழிகாட்டிகளாக விளக்கமுரைக்கும் வகையில் அரசாங்க அதிகாரிகளுடைய வீட்டுப் பெண்கள் வருவதற்கு ஒப்புதல் அளித்திருப்பதாகவும், அவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட செலவுத் தொகை தர வேண்டியிருக்குமென்றும் சொன்னார்.

ஹாலந்து நாட்டில் நான் கண்டேன். படகில் சுற்றுலாப் பயணிகள் சென்று கொண்டிருக்கையில் சிலர் புகைப்படம் எடுக்கிறார்கள். நாம் சுற்றிவிட்டுத் திரும்பி வரும்போது, அதைப் பிரிண்ட் போட்டு விற்பனை செய்கிறார்கள். ஒரு படப் பிரதியின் விலை 20 அல்லது 25 ரூபாய் ஆகிறது. மேலும் அந்தப் படகுகளில் வழிகாட்டிகளாகக் கல்லூரி மாணவர்களும், மாணவிகளும் இருபக்கமும் அமர்ந்து ஒலி பெருக்கி மூலம், இருபுறத்திலும் இருக்கிற கட்டடங்கள் யார் யார் காலத்தில் கட்டப்பட்டது, இப்போது அங்கேயிருக்கிற அலுவலகங்கள், யாவை? அங்கேஎன்ன பணி நடைபெறுகிறது போன்ற விளக்கங்களை அளிக்கிறார்கள். திரும்பத் திரும்ப அந்தப் பணியினைச் செய்வதால் அதில் கொஞ்சமும் சலிப்போ அலுப்போ காட்டாமல் செய்கிறார்கள். அதிலே அவர்கள் பெறுகிற ஊதியத்தைக் கல்லூரியில் படிப்பதற்குச் செலவு செய்கிறார்கள்என்பதை அறியும்போது மிகுந்த மகிழ்ச்சி ஏற்படுகிறது.

இந்தத் துறை நம் நாட்டிலும் மற்றவர்களுக்குப் பயன்படும் விதத்தில் மேம்படுத்தப்பட வேண்டும். பொருளாதார மேம்பாட்டிற்குத் துணையாக இருக்கும் என்ற அடிப்படையில்தான் இன்று நாம் முயற்சிகளை எடுத்துக் கொண்டு, அதற்காக இந்த நிறுவனத்தைக் கடந்த ஆண்டு உருவாக்கி, அதன் தலைவராக அருமை நண்பர் ஆசைத்தம்பி அவர்கள் பொறுப்பேற்றுச் சிறந்த முறையில் செயலாற்றி வருகிறார்.

'இந்த ஊர்தி இலாபகரமாக நடக்கும். நாளையத் தினமே பயணிகள் எல்லாம் இதில் செல்லத் தயாராக இருக்கிறார்கள்' என்று அறிவித்தார். ஒரு நாளைக்கு மட்டும் இலாபகரமாக நடந்தால் போதாது. தொடர்ந்து இன்னும் பல ஊர்திகளைப் பயன்படுத்தக் கூடிய வகையில் நடைபெற்றால்தான் இலாபகரமாக நடக்கிறது என்று அர்த்தம்.

அதே நேரத்தில் தமிழ் நாட்டின் பெருமைகளை மற்ற மாநிலங்களுக்கு - வெளிநாடுகளுக்கு எடுத்துச் சொல்கிற தூதுவர்களாக இத்துறை அமைந்திட வேண்டும்.

**(தலைமைச் செயலகத்தில் 9-5-72 மாலை, சுற்றுலாப் பயணிகளுக்காக வாங்கப்பட்ட ஊர்தியினைத் தொடங்கி வைத்து ஆற்றிய உரை.)**





# வெற்றிக்கு அடிப்படை



உடற்பயிற்சிக்கல்வி நாட்டுக்கு மிக இன்றியமையாத ஒன்றாகும். பண்டைக்காலத்தில் கிரேக்க, ரோம நாடுகள் உடற்பயிற்சியைத் தம் நாட்டு மக்களுக்கு அளிப்பதில் பேரார்வம் காட்டிவந்தன. பண்டைத்தமிழர்களும், வீர விளையாட்டுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து வந்தனர், என்பதைச் சங்க இலக்கியங்கள் மூலம் நாம் கண்கிறோம். ஆனால், இடையில் அத்தகைய நிலைமைகள் மாறிவிட்டன. அத்தகைய நிலைமைகளை மீண்டும் ஏற்படுத்துவது நம் அனைவரின் கைகளில் உள்ளது.

உடற்பயிற்சிக்கும், விளையாட்டுக்கும் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் நல்லதொரு இடத்தை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்பதில் நான் கல்வி அமைச்சர் என்ற முறையில் முயற்சிகள் மேற்கொண்டுள்ளேன். இப்போது பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் மாணவர்களால் அலட்சியப்படுத்தப்படும் வகுப்புகளாக, மாணவர்களுக்குத் திடீர் வயிற்றுவலி போன்றவைகள் ஏற்படும் வகுப்புகளாக உள்ளவை உடல்பயிற்சி வகுப்புகள்தான். இதற்குக் காரணம் மாணவர்கள் தங்கள் ஆற்றல் திறனை வெளிப்படுத்தும் அளவுக்கு இந்த வகுப்புகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படாமல் இருப்பதுதான். துவக்கப்பள்ளி, உயர்நிலைப்பள்ளிகளிலேயே மாணவர்களுக்கு விளையாட்டுகளில் ஆர்வம், அக்கறை ஏற்படும் முறைவேண்டும்.

துவக்கப்பள்ளியிலிருந்து 15 ஆண்டுகள் 20 ஆண்டுகள் உடற்பயிற்சியை அலட்சியப்படுத்திவிட்டு ஆர்வம், அக்கறை காட்டாமல் இருந்து விட்டால் 25 வயதில் ஆர்வம் அக்கறை காட்ட முடியாது. துவக்கத்திலிருந்தே ஆயிரக்கணக்கானவர்கள் இதில் ஈடுபட்டு வந்தால் தான் நன்கு திறமை படைத்தவர்கள் பிறகு 100பேராவதுகிடைப்பார்கள். அப்படிச் சில 100 பேர்களையாவது வெளி மாநிலங்களுக்கும், வெளி நாடுகளுக்கும் அனுப்பினால்தான் ஒரு சிலராவது இத்துறையில் உலகப்புகழ் பெறும் அளவுக்கு வரமுடியும். துவக்கத்திலேயே ஒரு சிலரே இதில் ஈடுபடும் நிலை இருப்பதால்தான், வேறு பல நாடுகளைப் போன்று உலகப்புகழ் பெறும் விளையாட்டு வீரர்களை நம்மால் பெற முடியவில்லை.

மாணவர்கள் விளையாட்டுப் பயிற்சியில் அக்கறை காட்டாமல் இருப்பதற்கு இன்னொரு காரணம், தற்போது இதற்குத் தேர்வில் மதிப்பெண்கள் இல்லாமல் இருப்பதுதான். உடற்பயிற்சி விளையாட்டுகளிலும் திறமையைக் காட்டினால்தான் 7-ம் வகுப்பிலிருந்து 8-ம் வகுப்புக்குப் போக முடியும்என்ற நிலை இல்லாததால் இதில் மாணவர்களுக்கு அலட்சியம் ஏற்படுகிறது. ஆகவே, கல்வித்துறை அதிகாரிகளுடன் இதுபற்றிப் பேசி உடற்பயிற்சி மற்றும் விளையாட்டுக்கும் மதிப்பெண்கள் ஏற்படுத்துவது பற்றியோசித்து வருகிறேன்.

மற்றப் பாடங்களில் தேர்வில் குறிப்பிட்ட மதிப்பெண்கள் வாங்காமல் மேல் வகுப்புகளுக்குச் செல்ல முடியாததைப் போன்று இந்தப் பாடத்திலும் இருக்க வேண்டும். மற்றும் கையெழுத்து, நூல்நிலைய அறிவு, நடத்தை போன்றவைகளுக்கும் மதிப்பெண்கள் வைக்க வேண்டும் என்று சொல்லி வருகிறேன். விளையாட்டு, உடற்பயிற்சிக்கு 50 மதிப்பெண்களும், கையெழுத்து மற்றும் எண்ணங்களை வெளியிடும் ஆற்றலுக்கும் 50 மதிப்பெண்களும், நூல்நிலையங்களைப் பயன்படுத்தும் திறனுக்கு 50 மதிப்பெண்களும், நன்னடத்தைக்கு 50 மதிப்பெண்களும் என்ற அளவில் மேற்கொண்டு, 200 மதிப்பெண்கள் வைத்து, மொத்தம் 800 மதிப்பெண்கள் பள்ளிகளில் ஏற்படுத்தினால்தான் இவற்றில் மாணவர்களுக்கு ஓரளவு அக்கறையும், ஆர்வமும் ஏற்படும்.

இளமைப் பருவத்திலிருந்தே உடற்பயிற்சியும், விளையாட்டுக்களில் ஆர்வமும், அக்கறையும் பெறாத காரணத்தால் எந்த ஒரு காரியத்தையும் துணிந்து செய்யும் செயலாற்றல் பெற்ற பெரியவர்களை அதிகம் காண முடியவில்லை. பெரும்பாலோர் சோம்பேறிகளாகவே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். 'என்னால்

இதைச் செய்ய முடியும்' என்ற துணிவு ஒருவருக்கு அவருடைய உடல் வளத்தால்தான் ஏற்பட முடியும்.

''வினைத் திட்பம் என்பது ஒருவரது மனத்திட்பம்'' என்றார் வள்ளுவர். செயல் திறம் பெற மனவலிமை வேண்டும். மனவலிமையை உடல் வளத்தால்தான் பெறமுடியும். நோஞ்சான்களாக இருப்பவர்களுக்கு மற்றவர்களை அடிக்க வேண்டும் என்ற ஆசை இருக்குமே தவிர அடிக்க முடியாது. ஒருவருக்குத் துணிச்சல் எப்படி வரும்? உடல் வலிவுள்ளவர்களுக்குத்தான் துணிச்சல் வரும். துணிச்சல்தான் வெற்றிக்கு அடிப்படை. உடல் அஞ்ச, அஞ்ச உள்ளமும் அஞ்சும். ஆகவே நாட்டில் ஆற்றல் திறன் மிக்கவர்கள் ஏற்படவேண்டும். அதற்கு மாணவர்களுக்கு, துவக்கப் பள்ளிகளிலிருந்தே உடற்பயிற்சியிலும், விளையாட்டுக்களிலும் நல்ல அக்கறையையும், ஆர்வத்தையும் ஊட்ட வேண்டும். ஒருவருக்குத் திடீரென்று 15, 20 வயதில் விளையாட்டுகளில் அக்கறையும் ஆர்வமும் ஏற்பட்டுவிட முடியாது.

மற்றொன்றையும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நம் அனைவரது உடலிலும் சரியாகவோ, தவறாகவோ மிருக உணர்ச்சி உள்ளது. டார்வின் சித்தாந்தப் படியும் மனிதன் மிருகத்திலிருந்து வந்தவன்தான். அந்த மிருக உணர்ச்சி எப்படியாவது வெளிப்பட்டாக வேண்டும். அப்போதுதான் மனிதன் மனிதனாக ஆக முடியும். அந்த மிருக உணர்ச்சி விளையாட்டுகள், உடற்பயிற்சி மூலம் வெளிப்படும் வாய்ப்புகள் உள்ளன. விளையாட்டுகளிலும், உடற் பயிற்சியிலும் நன்கு ஈடுபட்டவர்களில் 100-க்கு 90 பேர்கள் உள்ளம் கபடமற்றவர்களாக இருக்கிறார்கள். ஆனால், இத்தகைய விளையாட்டுகளிலும் வேறு எதிலும் கவனம் செலுத்தாமல் இவர்களும் ஆடாமல், ஆடுபவர்களையும் சென்று பார்க்காமல் திண்ணையிலேயே 'உம்' என்று உட்கார்ந்து இருப்பவர்களின் உணர்ச்சிகள் வெளிப்படாமல் நாளடைவில் அவர்கள் வஞ்சக உள்ளம் கொண்டவர்களாக மாறி, எதைப் பற்றியும் பேசாமல், சிரிக்காமல் பிறர்மேல் பொறாமை கொண்டு, பிறரைக் கெடுக்கத் திட்டம் போடும் அளவுக்கு மாறும் நிலைமை ஏற்படுகிறது. இத்தகையவர்களிடம் நேர்மை நாணயமும் போய்— உடல் வளையாத நிலையில் குறுக்கு வழியில், நயவஞ்சகம் மூலம் வேண்டியதை எப்படியும் அடையலாம் என்றுதான்நினைப்பார்கள். ஆகவேதான் பள்ளிகள்தோறும் விளையாட்டுக்கு நல்லதொரு இடத்தைநாம் தந்தாகவேண்டும்.

சப்பான் நாட்டு மக்கள் திட்டம் போட்டுத் திட்டம் போட்டு உடற்பயிற்சி மூலம் தங்கள் தேசிய உயரத்தையே அதிகரித்து காட்டியுள்ளார்கள். உலகிலேயே குள்ளமானவர்கள் என்பதால் அவர்களுக்குத் தாழ்வு மனப்பான்மை பல காலமாக இருந்து வந்தது. ஆகவே, இதில் கவனம் செலுத்திக் கவனம் செலுத்தித் திட்டமிட்டு நாட்டின் சராசரி உயரத்தை, உடற் பயிற்சி மூலம் அரை அங்குலம் உயர்த்திக் காட்டியிருக்கின்றனர்.

அந்த அளவுக்குச் சிறந்த நிலைமைகளை இங்கும் வேறு வழிகளில் ஏற்படுத்த முடியும். இதைக் கருத்திற் கொண்டுதான் கடந்த மூன்று ஆண்டுகளாகத் தமிழகத்தில் பொதுவிளையாட்டுப் போட்டிகளை ஆரம்பித்து நடத்தி வருகிறோம்.

இது தவிர விளையாட்டுப் போட்டிகளில் இளைஞர்களுக்கு ஆர்வமும், அக்கறையும் ஏற்பட வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் மாவட்டத் தலைநகரங்களில் விளையாட்டு அரங்குகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. மூன்று மாவட்டங்களில் ஏற்கெனவே கட்டி முடிக்கப்பட்டு விட்டன. மூன்று மாவட்டங்களில் பெரிய அளவில் திட்டங்கள் நடைபெற்று வருகின்றன. அகில இந்தியாவை எடுத்துக்கொண்டால் எல்லா வகையிலும் தமிழகம் சிறந்த பெயரெடுத்து இருப்பதைப்போல் உடற்பயிற்சி விளையாட்டுத் துறையிலும் அகில இந்தியாவிலும் சிறந்த பெயர் பெற, ஒலிம்பிக் அளவிலும் பெயர் பெற வேண்டும் இதற்கு நான் ஆரம்பத்தில் சொல்லியதுபோல் ஆரம்பத்தில். இலட்சக்கணக்கானவர்களை இதில் ஈடுபடுத்தினால்தான் பிறகு ஆயிரக்கணக்கில் வந்து, பிறகு நூற்றுக்கணக்கில் வந்து ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொள்ளும் அளவுக்கு ஒருசில சிறந்தவர்கள் கிடைப்பார்கள். சில சிறந்தவர்களை பல இலட்சக் கணக்கானவர்களிடத்திலிருந்துதான் பெற முடியும்.

## கல்வியமைச்சர்
## டாக்டர் நாவலர்

# பார்த்தோம் படித்தோம்

### எல்லாம் மலரே !

'தமிழரசு' ஒவ்வொரு இதழுமே மலராக மலர்ந்து மணம் வீசித் திகழ்கிறது. வண்ணச் சித்திரங்கள், எண்ண இன்ப மூட்டும் எழில்மிகு கட்டுரை தான் எத்தனை ! எத்தனை ! தமிழக அரசு என்ன செய்தது என்போருக்கு விடை பகரும் சான்றிதழாகவும் விளங்குகிறது.

—பி. சுசீலா,
கடம்பத்தூர்.

### இனிய கதை இது !

ஏன் இந்தக் காதல் ? எனும் தொடர் கதையின் இருபது பகுதிகளையும் இனிதே படித்து வந்தேன். அனைத்திற்கும் சிகரம் வைத்தாற் போல, மே மாத முதல் இதழிலே 'சூறைக் காற்று' எனும் தலைப்போடு முடித்திருக்கும் உயர்மிகு அ. மறைமலையான் அவர்கள் மிகவும் உயர்ந்த கருத்துக்களைக் கொண்டு நெஞ்சை யள்ளும் உயர்ந்த கதையாக விறுவிறுப் போடுதான் முடித்திருக்கின்றார். நல்ல முடிவோடு முடித்திருப் பது கண்டு, அதன் மூலம் பல பெண்கள் திருந்தி நடக்க இது நல்ல கதையாக உள்ளது.

—தா. மனோகரன்,
சென்னை-13.

### நூற்றாண்டு விழா கொண்டாடியது எப்போது ?

தஞ்சை மாவட்டச் செய்தித் தொகுப்பில் வெளியாகியுள்ள தென்னகத்தின் கேம்பிரிட்ஜ் என்ற பெட்டிச் செய்தியில் 1954, 1968 என்று அச்சாகி யுள்ளது. அது தவறானதாகும் 1854, 1868 என்று அச்சாகி யிருக்க வேண்டும்.

சென்னைப் பல்கலைக் கழகம் நூற்றாண்டு விழா கொண்டாடு வதற்கு முன்னரே நூற்றாண்டு விழா கொண்டாடிய பெருமை குடந்தை அரசினர் கல்லூரிக்கு உண்டு.

—எஸ். பி. கிருஷ்ணகுமார்,
கும்பகோணம்.

### புகழ் மணக்கும் தஞ்சை !

புகழ் மணக்கும் தஞ்சையின் வளம் மணக்கும் வகையில், தஞ்சையின் வளர்ச்சி மணக்கச் செய்திருக்கும் பெருமை தமிழ ரசுக்கே உண்டு. நன்றி பல.

—தே.வ. சண்முகம்,
நாகப்பட்டினம்.

### நெஞ்சை அள்ளும் தஞ்சை !

'தமிழரசு' தஞ்சை மாவட்ட மலர் நெஞ்சை அள்ளும் விதத் தில் அமைந்திருந்தது. கண் ணைக் கவரும் படங்களும் சிந் தைக்கு விருந்தூட்டும் கட்டுரை யும் துணுக்குகளும் மலருக்கு அணி செய்தன. தமிழக அரசின் சாதனைகளை எடுத்துக் காட்டும் எழில் மலராகவும் திகழ்ந்தது.

—பொன். மறைமலை,
சென்னை-3.

### துள்ளாத மனமும் துள்ளும் !

மே 1, 1972 " தமிழரசு " இதழ் தஞ்சை மாவட்டத்தின் வளர்ச்சியைப் படம் பிடித்துக் காட்டியுள்ளது. வண்ணப் பக் கங்களில் வெளியாகியிருந்த பட மும், விளக்கமும் கண்டு தஞ்சை மாவட்டத்தில் சுற்றுலா மேற் கொள்ள வேண்டுமென்று என் மனைவி தொல்லை கொடுத்துக் கொண்டிருக்கிறாள். எனக்கும் அந்த ஆர்வம் ஏற்பட்டுள்ளது. அடுத்த மாதம் தஞ்சை மாவட் டம் செல்லலாம் என்று இருக் கிறேன்.

—தங்கவேல், விருத்தாசலம்.

### சொல்லாத கதைகள் சொல்லும்!

இரண்டு இலட்சம் ஏக்கரில் சூரிய காந்தி பயிரிடத் திட்ட மிட்டிருப்பதாகத் தமிழ்நாடு வேளாண்மை அமைச்சர் சட்ட மன்றத்தில் கூறியதை அடிப்படையாக வைத்துச் சூரியகாந்தி பயிரிடும் முறை யைக் கதைபோல் விளக்கி யுள்ளீர்கள். தமிழ் நாட்டில் தாவர எண்ணெய் உற்பத்தி யைப் பெருக்குவதற்கு அக் கட்டுரையில் வழி கூறியிருப் பதற்காக தமிழக மக்களின் சார்பிலும், உழவர்களின் சார்பிலும் நன்றியைத் தெரி துக் கொள்ளுகின்றேன்.

—வீராசாமி,
திருவண்ணாமலை.

### இல்லாத ஆசையைக் கிள்ளும் !

விகாரமான உணர்ச்சிச் சுவை யுடைய கதைகளால் மட்டுமே மக்களைக் கவர முடியும் என்ற தவறான கருத்தை வென்று நிற்பது தஞ்சை மாவட்டச் செய்தித் தொகுப்பு இதழ். வரலாற்றின் அடிப்படையில் கற்கத் தகுந்தவற்றை மக் களுக்கு அறிவிக்கும் இனிய அறிவுக் களஞ்சியம் ; நாட்டின் வளர்ச்சி காட்டும் கண்ணாடி; இளைஞர்களுக்கும் பெரியோர்க் கும் செய்திவழங்கும் இனிய கரு வூலம் ; இது போன்ற அரசிதழ் கள் அனைத்தும் வரவேண்டும் என்பது என் ஆசை.

—இராமலட்சுமி,
கன்னியாகுமரி.

### தொடர்க இச் செய்தித் தொகுப்பு !

சட்டமன்ற பேரவையில் அமைச்சர்கள் ஆற்றிய பதி லுரைகளைச் சுருக்கி வெளியிட் டிருக்கிறீர்கள். இந்த முயற்சி யைத் தொடர்ந்து செய்திட வேண்டுகிறோம். இதனால் பய னுள்ள பல செய்திகளை அறிந்திட முடிகிறது.

—சோமநாதன்,
திருச்சிராப்பள்ளி.

# புலியோ புலி !

இந்தியப் புலி மிகவும் வலிவுயுடைய விலங்காகும். இதன் உடலில் பழுப்பு நிறம் கொண்ட மண் வண்ணத்து மீது கருப்பு வரிகள் காணப்படும். இதன் வயிற்றுப் பாகமும், உதடுகளும் வெண்மை நிறமுடையவை. ஆறுகள் அல்லது ஏரிகளின் அருகிலுள்ள காடுகளில் இவை வாழ்கின்றன. சில சமயங்களில் இவை நீரில் நீந்திச் செல்வதையும் காணலாம். புலிகள் , வழக்கமாகச் சூரியன் மறைவதற்கு முன்னும், மறைந்த பின்னும் உணவைத் தேடி வேட்டையாடச் செல்லும். மான்கள், காட்டுப் பன்றிகள், குரங்குகள், காட்டு நாய்கள், ஆடு மாடுகள், ஆகியவை புலியின் உணவாகும்.



வயதான புலிகள் மனிதனைத் தின்னப் பழகினால், சிங்கத்தை விட மிகவும் கொடுமையானவைகளாக மாறும். புலி பதுங்கியிருந்து இரையின் மேல் பாயும் ; பெண் புலி ஒரு முறையில் 2 முதல் 4 குட்டிகளை ஈன்றெடுக்கும். புலிக்குட்டிகள் 6 வாரங்கள் கழித்துத் தாயுடன் செல்லும் ; 6 மாதங்களுக்குப் பிறகு அவை வேட்டையாடத் தொடங்கும் ; புலியின் ஆயுட்காலம் 12 முதல் 20 ஆண்டுகளாகும். இந்தியாவில் இராசபுதனம், பஞ்சாப், கட்ச், சிந்து ஆகிய இடங்களைத்தவிர, இமயம் முதல் குமரி வரை புலிகளைக் காணலாம்.

படத்தில் காணப்படும் இந்தப் புலி, சென்னை விலங்குக் காட்சிச் சாலையில் முன்பு ஒரு புலிக்குப் பிறந்த 4 குட்டிகளில் ஒன்றாகும். இது இறந்த பொழுது சுமார் 4 வயதிருக்கும்.

# உயில் உருவான கதை !

இறக்குந் தறுவாயில் இருக்கும் ஒருவர், தம் அன்புக்குப் பாத்திரமான ஒருவருக்குத் தம் சொத்துகளை எழுதி வைப்பதே உயில் என்பது நமக்குத் தெரியும். இந்த உயில் உருவான கதை தெரியுமா ?

உயில் முறையை உண்டாக்கிய பெருமை ரோமானியரையே சாரும். ரோமானியருள் பிளீபியர் என்னும் பாமர மக்கள் கையாண்ட முறையே இன்று உயில் எழுதப் படுவதற்கு முன் மாதிரியாகத் திகழ்கிறது. நாளடைவில் இம்முறை இங்கிலாந்து முதலான ஐரோப்பிய நாடுகளில் வளர்ந்தது. உயிலை 'மரண சாசனம்' என்றும் வழங்கி வந்தனர். இந்தியாவில் உயில் முறை வங்காளத்திலேயே முதன் முதல் தோன்றியது. இதற்குப் பிறகு சென்னையிலும், பம்பாயிலும் அது வழக்கத்துக்கு வந்தது.

முஸ்லீம் சட்டமானது உயிலை விரிவாகக் கூறுகிறது. பன்னிரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த சேக்பர்காம் உத்பீன் அலி என்பவரால் எழுதப்பட்ட ' இதாய ' என்ற நூல் உயில் முறையைத் தெளிவாகக் கூறுகிறது. இதனை விளக்கும் இன்னொரு நூலின் பெயர், பத்தாவா ஆலம் கிரி.

இந்துக்களின் உயில் பற்றிய விவரங்கள் சரியாக இல்லாத குறையினைப் போக்க 1870-ல் சட்டமன்றம் ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தது. பின் அது பல மாறுதல்கள் அடைந்தது. 1881-ல் உருவாக்கப்பட்ட உயில் உறுதிப் பத்திரம், உயில் நிருவாகப் பத்திரம் என்ற சட்டமும், 1827-ல் இயற்றப்பட்ட இந்திய வாரிசு உரிமைச் சட்டமும், உயில் சட்ட நிலைமைக்கு ஆதாரமாக விளங்கி வருகிறது.

உயிலை விலக்கவோ, கூட்டவோ, குறைக்கவோ, செய்யக் கூடிய பத்திரம் துணை உயில் ( CODICIL ) எனப்படும். இது உயிலின் ஓர் அங்கமாகும்.

உயில்களில்தான் எத்தனை வகை! வாய்ச்சொல் உயில், எழுத்து உயில், நிபந்தனை உயில், கூட்டு உயில், பரஸ்பர உயில், இரட்டைப் பிரதி உயில், இரகசிய உயில், உடன் நிகழ் உயில்...... இன்னொரு உயிலும் உண்டு. அது மோசடி உயில்.

இதில் வாய்ச்சொல் உயில் அல்லது சலுகை உயில் என்பது போர் வீரர்களுக்கே செல்லக் கூடியதாகும். போரில் ஈடுபட்டிருக்கும் தரைப் படை, கடற்படை, விமானப் படை, வீரர்கள் மட்டும் இதைப் பயன்படுத்த முடியும். இதை எழுத்து மூலமாகவோ வாய்ச்சொல் மூலமாகவோ செய்யலாம். உயில் செய்பவர் இரண்டு சாட்சிகளின் முன்னிலையில், தமது விருப்பத்தைச் சொன்னால் கூடப் போதுமானதாகும்.

# அரிசனங்களின் முன்னேற்றத்திற்கு



## அரசு அளிக்கும் பெருஞ்சலுகைகள்!

**மா**நில அரசைப் பொறுத்த வரையில், கல்வித் துறையாக இருந்தாலும் சரி, பொருளாதார முன்னேற்றத் திட்டமாக இருந்தாலும் சரி, மதம் மாறியவர்களுக்குச் சலுகை காட்டுவதற்கு என்றைக்கும் தயங்காது என்பதை முதலில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

வீடுகள் கட்டுவது பற்றி அதிகமாகக் குறிப்பிடப்பட்டது. இது வரையிலும், ரூ. 940-ல் தான் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டு வந்தன. ஆனால், இந்தத் தொகை போதுமானதாக இல்லை என்று இச்சட்ட மன்றத்திலும் வேறு பல இடங்களிலும் குறைகள் சொல்லப்பட்டதன் காரணமாக இந்த ஆண்டிலிருந்து ரூ. 940-க்குப் பதிலாக ரூ. 1,500-ல் வீடுகளைக் கட்டித்தருவது என்று அரசு முடிவெடுத்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் யாரும் இதைக் கவனிக்கவில்லை என்றே கருதுகிறேன். இது பற்றி மத்திய அரசுக்கும் பலர் புகார்கள் அனுப்பியதன் விளைவாக, அவர்கள் அப்படிப்பட்ட புகார்களை மாநில அரசுக்கு அனுப்பி, ரூ. 940-ல் வீடுகளைக் கட்டினால் போதாது; ரூபாய் 5,000-க்கு வீடுகளைக் கட்டித்தர வேண்டும் என்றும் அதற்குரிய வரைவை அனுப்புங்கள் என்றும், இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு கேட்டார்கள். நாங்களும் அப்படிப்பட்ட வரைவுடன் மத்திய அரசுக்குப் பதில் அனுப்பியிருந்தோம். ஆனால் இன்றுவரையில் அதற்குப் பதில் கிடைக்கவில்லை. மத்திய அரசில் வரைவினைக் கேட்டார்களே தவிர, ரூபாய் 3,000, ரூ. 5,000 செலவில் அவர்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று சொன்னார்களே தவிர, நாம் அனுப்பிய வரைவினை அவர்கள் ஏற்றுக் கொண்டதாகத் தெரியவில்லை. வீடுகளுக்கான தொகையினை உயர்த்த வேண்டும் என்று சொன்னால், அதற்காக ஆகும் கூடுதல் செலவுகளை நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்'' என்று கேட்ட போது அதை அவர்கள் கொடுக்க மறுத்துவிட்டார்கள்.

வீடு கட்டுவது எப்படி என்று திட்டம் கொடுப்பவர்கள் அதற்காகும் கூடுதலான தொகையினையும் கொடுத்தால் நலமாக இருக்கும். இதை விடுத்து மாநில அரசுகளின் திட்டங்களில் மத்திய அரசு குறுக்கிட்டு, 'இப்படிக் கட்ட வேண்டும். அப்படிக் கட்டக் கூடாது' என்று சொன்னால் இது மத்திய அரசின் குறுக்கீடு அல்லவா என்றுதான் இந்த நேரத்தில் நான் சுட்டிக் காண்பிக்க விரும்புகிறேன்.

இச் சந்தர்ப்பத்தில் இன்னும் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். கேரளத்திலிருந்தும், ஆந்திரத்திலிருந்தும், தாழ்த்தப்பட்ட மக்களுக்காகத் தனியான தொரு வீடுகட்டும் கழகத்தினை ஏற்படுத்தி, அதற்கு ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் மூலம் கடன்தொகை பெற்று, பன்னிரண்டு கோடி, ஐந்து கோடி என்ற அளவில் நிதி உதவியைப் பெற்று அதற்கான முறையில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுத்துக் கொண்டு வருகின்றார்கள்.

அதைப் பரிசீலிக்க இங்கிருந்து அதிகாரிகளைக் கேரளத்திற்கும், ஆந்திரத்திற்கும் அனுப்பி வைத்து, அதற்குப் பின்னர், அத்திட்டத்தின் பயனறிந்த பின்னர் ''தமிழ்நாடு அரிசன—மலைவாசி மக்கள் வீட்டு வசதிக் கழகம்'' என்று ஒன்றை நிறுவுவதற்கு இன்றையத் தினம் அரசு ஒப்புக் கொண்டு இருக்கிறது. ரூ. 1,500 மதிப்பில் வீடுகளைக் கட்டுவதற்கு என்று 9.42 இலட்சம் ஒதுக்கப்பட்டிருப்பது போக, இப்படி ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து கடன் உதவி பெற்றுத் தமிழ்நாடு அரிசன—மலைவாசி மக்கள் வீட்டு வசதிக் கழகம் ஒன்றினை நிறுவி அவர்களிடம் இத்தொகையினை அளித்து அவர்கள் மூலம் மாவட்ட வாரியாகப் பல நிறுவனங்கள் அமைத்து மாநில அளவில் மத்திய நிறுவனத்தினை நிறுவி, இதன் மூலம் வீடுகளைக் கட்டிக் கொடுத்து மாதத் தவணைகள் முறையில் அத்தொகையினை மீண்டும் பெறுவதற்கான திட்டத்தினை அரசு பரிசீலனை செய்து வருகிறது.

இதிலே கூட அவர்கள் பெறும் ஊதியத்திற் கேற்ற முறையில் ரூ. 125 மாத வருமானம் உள்ளவர்களுக்கு என்று ஒரு அமைப்பான வீடும், அதற்கு மேலே வருமானம் உள்ளவர்களுக்கு என்று ஒரு அமைப்பான வீடும், இப்படிச் சம்பளத்

தின் அடிப்படையில் திட்டமிட்டு. இரண்டாயிரம், மூவாயிரம் என்று ரூபாய் பதினாயிரம் வரையில் கடன்களைக் கொடுப்பதற்கு இந்த வீடு கட்டும் கழகத்தின் மூலம் உதவி செய்யலாம். கடன் தொகையினைத் திருப்பித் கட்டுகின்றவர்களுக்குத்தான் இந்தத் திட்டத்தின் கீழ் உதவியளிக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது. ஆயுள் காப்பீட்டுக் கழகமும் இதை ஏற்றுக்கொண்டிருக்கிறது கொள்கையளவில். அவர்களும் இப்படிப் புதிதாக ஏற்படுத்தப்படும் நிறுவனத்திற்கு ரூபாய் ஒருகோடி கடனாகக் கொடுப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கடனைத் திருப்பிக் கட்ட முடியாத நிலையிலுள்ள ஏழை அரிசன மக்களுக்கு, மாநில அரசின் செலவிலேயே ரூபாய் 1,500 வரையில் கட்டிக் கொடுக்கத் திட்டமிட்டு, இத்தொகையில் 75 சதவிகிதத்தினை மானியமாகக் கொடுக்கவும், மிச்சமுள்ள 25 சதவிகிதத்தினைக் கடனாகக் கொடுக்கலாம் அல்லது அவர்களுடைய உடல் உழைப்பின் மூலம் ஈடு செய்யலாம் என்ற வகையில் முடிவினை எடுத்திருக்கிறோம். இந்த இரண்டு திட்டங்கள் நீண்டகாலமாக , மக்கள் மத்தியில் ஒரு குறையாகச் சொல்லப்பட்டு இப்போது ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. இந்த இரண்டு திட்டங்கள் இந்த ஆண்டில் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, 'கல்விக்கெனச் செலவழித்திடும் ஐந்தரைக் கோடி ரூபாயைக் கல்வி இலாக்காவே செலவழிக்க வேண்டும்; இந்த இலாக்காவில்செலவழிக்கப்படவேண்டாம்' என்று திரு துரைராஜ் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்தத் தொகையினை நாமே ஏற்றுச் செலவழிப்பதால்தான் இவ்வளவு செலவழிக்க முடிகிறது. இவர்கள் இப்படிச் சொல்லுகின்றார்கள். ஆனால், மதிப்பிற்குரிய உறுப்பினர் பாண்டுரங்கன் அவர்கள் கல்விக்கே அந்தத் தொகையினைச் செலவழிக்க வேண்டும் என்று வாதாடுகிறார்கள். மற்றச் செலவுகளைக் குறைத்துக் கொண்டால் கூட இதில் அதிகமாகச் செலவிட வேண்டும் என்று குறிப்பிடுகின்றார்கள். கல்வியளிப்பதன் மூலம்தான் இந்தச் சமுதாயத்தின் முன்னேற்றத்தினைத் துரிதப் படுத்த முடியும். கல்வியளிப்பதன் மூலம் தான் பல்வேறு துறைகளில் இவர்களுக்கு வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தித் தர முடியும். படிக்காதவர்கள் அதிகமாக இருக்கும் கிராமங்கள் தோறும் இவர்கள் சென்று அவர்களுடைய கல்விக்காகவும், மற்ற மற்றச் சமுதாயப் பணிகளுக்காகவும் இவர்களை ஈடுபடுத்த முடியும். எனவே, இவர்களுடைய கல்விக்கென அதிக நிதி ஒதுக்குவதுதான் சாலச் சிறந்தது என்று இந்த அரசு கருதுகிறது.

அடுத்து, பட்டா அளிப்பதைப் பொறுத்த வரையில், சிற்சில இடங்களிலே ஒருசில தவறுகள் ஏற்பட்டிருக்கலாம். பல இடங்களிலே அரிசனங்கள் பயிரிட்டுக் கொண்டு வந்த நிலங்களை மற்றவர்கள் பிடுங்கிக் கொண்டு விட்டது போன்ற நிகழ்ச்சிகள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டு அவ்வப்பொழுது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. குறைகள் இருப்பின் இங்கே எடுத்துக் காண்பிப்பதுடன் அவ்வப் போது உரிய நேரத்தில், உரிய இடத்தில் புகார்களை அனுப்பினால் தக்க நடவடிக்கைகள் துரிதமாக எடுத்துக்கொள்ள இயலும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்துச் சொல்லப்பட்டது 'பெல்ட் ஏரியா' அதாவது சென்னை நகரில் எல்லையினை ஒட்டியுள்ள இடங்களில் மனைகளுக்கு என்று இடம் ஒதுக்கித் தரப்படுவதில்லை என்பதாகும். இப்போது சென்னை நகரினை 'கிரேடர் மெட்ராஸ் ஸிடி' என்ற முறையில் விரிவுபடுத்தும் திட்டம் அரசிடம் இருப்பதால், அப்படிப்பட்ட நேரத்தில் பெரும் தொழிற்சாலைகள் போன்றவற்றை அமைப்பதற்கு இடம் தேவைப்படும் என்ற காரணத்தினால்—சென்னை நகரில் 20 மைல் சுற்று வட்டாரத்திற்கு யாருக்கும் நிலத்தைப் பட்டா செய்து தரக்கூடாது என்று அரசு முடிவெடுத்து இருக்கும் காரணத்தினால்—அங்கெல்லாம் பட்டா கொடுக்கக் கூடாது என்று நான் கருதுகிறேன். இதர இடங்களிலே அவர்களுக்கு நிச்சயமாகப் பட்டாக்கள் வழங்கப்பட்டு, வீடுகளைக் கட்டிக் கொள்ளவும், அவர்களுக்குக் குடிநீர் வழங்கவும் அரசு கவனம் செலுத்திக் கொண்டு வருகிறது என்பதை நான் கூறிக்கொள்கிறேன்.

அடுத்து, திரு ஜேம்ஸ் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். ''கல்லூரிகளில் மாணவர்களுக்கு அதிகமான இடம் தரப்படவில்லை ; அவர்கள் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருக்கிறது ; 1970–71-ல் 8,136 பேர் கல்லூரியில் படித்தார்கள் ; 1971–72-ல் அது குறைந்திருக்கிறது என்று சொன்னார்கள். இது, 1971 பிப்ரவரி மாதம் வரையில் வந்த கணக்கு. இன்னும் சில மாவட்டங்களில் இருந்து விவரம் வரவில்லை. நீலகிரி, இராமநாதபுரம், இன்னும் தென்னார்க்காடு போன்ற மாவட்டங்களிலிருந்து புள்ளி விவரம் வரவில்லை. இன்னும் ஒரு மாதத்திற்குள் வந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆக, அதையும் சேர்த்துப் பார்க்கின்றபோது அதிகமாகத்தான் இருக்குமே தவிர, குறையாது. அந்த விவரத்தையும் நான் மன்றத்திற்கு அளிக்கத் தயாராக இருக்கிறேன்.

மாணவர்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகை விகிதத்தை எடுத்துக் கொண்டால் அதிகமாக இருப்பது தெரியவரும். முன்னால், 82.55 இலட்சம் ஒதுக்கப்பட்டிருந்தது ; இப்போது 94.82 இலட்சம் ரூபாய்



ஒதுக்கப்பட்டிருக்கிறது. பள்ளி மாணவர்கள் அதிகமாக இருப்பதையே இது காட்டுகிறது. அதேமாதிரி மலைவாசிப்பள்ளி மாணவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்திருப்பதை அவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் உதவித்தொகை காட்டும்.

18 சதவிகிதம் கல்லூரிகளில் இடம் ஒதுக்கப்பட வேண்டுமென்று வகை செய்யப்பட்டிருக்கிறது. சில இடங்களில் 18 சதவிகிதமும் பூர்த்தி செய்யப்படவில்லை என்று சொல்லப் படுகிறது. இம்மாதிரிக் குறைகளைப் போக்க, நலத்துறைக் கல்வி இலாகா மூலமாக ஏற்பாடு செய்யும். 18 சதவிகிதமும் பூர்த்தியாக வேண்டுமென்று வலியுறுத்தும்—குறைகளைக் களைய அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, வேலை வாய்ப்புகளில் மத்திய அரசாங்கம் 22 சதவிகிதம் இடம் ஒதுக்கியிருக்கிறது. மாநிலத்தில் 18 சதவிகிதம் ஒதுக்கியிருக்கிறது. அதை 22 சதவிகிதம் ஆக்க வேண்டுமென்று சொன்னார்கள். இப்போது இருக்கின்ற 18 சதவிகிதத்தையே நம்மால் பூர்த்தி செய்ய முடியுமா என்பதை நாம் சற்று யோசித்துப் பார்க்க வேண்டும். அதிக இடத்தைப் பூர்த்தி செய்யக்கூடிய வாய்ப்பு இருந்தால் அதிக விழுக்காடு ஒதுக்கலாம். ஒரே நேரத்தில் 100 இடம் 25 இடம் என்று வந்தால் ஒதுக்கப்பட்டிருக்கும் விழுக்காட்டின் அடிப்படையில் பூர்த்தி செய்யலாம். அவ்வப்போது 2, 3, 4, 5 என்ற அளவில் தேவைப்பட்டால் அரிசனங்களுக்கு அல்லது பிற்பட்டவர்களுக்கு என்று பார்க்க முடியாது. தகுதி அடிப்படையில் நியமித்து விடுகிறார்கள். புதுத் தொழிற்சாலைகள், அல்லது புது அலுவலகங்கள் திறக்கப்பட்டு, நூற்றுக் கணக்கான பேர் தேவைப்பட்டால், நிச்சயமாகக் குறிப்பிட்ட விழுக்காடு அளவினை நிறைவு செய்துவிட முடியும். அதை உத்தேசித்துத்தான் இன்றைக்குச் சில இலாக்காக்களில் பயிற்சி அளித்துத் தமிழ்நாடு பப்ளிக் சர்விஸ் கமிஷன் தேர்வுக்கு அனுப்பப்படுகிறார்கள். தனிப் பயிற்சி அளிக்கப்படுவதால் நிறையப் பேர்களுக்கு வெற்றி வாய்ப்புக் கிட்டுகிறது. அந்த முறையில் மாணவர்கள் 10-வது அல்லது 11-வது வகுப்புப் படித்த பிறகு அவர்களுக்குத் தட்டச்சு, சுருக்கெழுத்துப் போன்றவற்றில் பயிற்சி அளித்து, குருப் 4 சர்வீஸுக்கு அனுப்பப் படுகிறார்கள்.

இன்றைக்கும் குரூப் 4 சர்வீஸுக்குத் தட்டெழுத்து, சுருக்கெழுத்தில் பயிற்சி கொடுப்பதற்குச் சில மாவட்டங்களில் 20 இடங்களில் பயிற்சி இல்லங்கள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. ஆயிரம் பேர்கள் பயிற்சி பெற்று வருகிறார்கள். அவர்களில் 200 பேர்களுக்காவது வேலை வாய்ப்பை அளிக்க முடியும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, தாழ்த்தப்பட்ட மக்கள் குழந்தைகளுக்குச் சத்துணவு இந்த இலாக்காவின் மூலமாகக் கொடுக்கப்படுகிறது. சுகாதார மானியத்தின் மீது பேசுகிற போது, சரியான முறையில் குழந்தைகளின் எடைகள் எடுத்துப் பார்க்கப்படுவதில்லை என்றார்கள்; சத்துணவுப் பங்கீட்டுக் கார்டுகள் எல்லாம் முன்னால் அச்சிடப்பட்டவை; அப்போது இரண்டாயிரம், மூவாயிரம் பேர்களுக்கே கொடுக்கப்பட்டு வந்தது. இன்றையத் தினம் சுமார் இலட்சத்துச் சொச்சம் பேர்களுக்குத் சத்துணவு வழங்கப் படுகிறது. எல்லாக் குழந்தைகளையும் அவ்வப் போது எடை எடுத்துப் பார்ப்பது என்பது எல்லாம் முடியாத காரியம். செலவும் காலமும் அதிகமாகும் என்று கருதிய காரணத்தினால் இன்றைக்கு மங்காபுரத்தில் மட்டும் 300 குழந்தைகளுக்கு முதலில் எடை எடுத்துப் பார்த்து, இந்தச் சத்துணவு கொடுக்கப்பட்டு அதன் மூலம் அந்தக் குழந்தைகள் எப்படி வளர்கிறார்கள் என்று பார்த்து, அது போல மற்ற இடங்களிலும் வளர்வார்கள் என்கிற அடிப்படையில் இந்த இலாக்கா மங்காபுரத்தில் மட்டும் பரீட்சார்த்தமாக நடத்தி வருகிறது. மன்றத்தில் இதுபோன்ற குறைகளை எடுத்துச் சொல்வதன் காரணத்தினால்தான் இந்த விளக்கங்களை அளிக்க முடிகிறது என்பது குறித்து நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

அடுத்து, கோயில்களில் அறங்காவலர்கள் போடும் போது 5 பேர்களுக்கு ஒருவர் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர் போடப்பட வேண்டும் என்று தெரிவித்தார்கள். அதுபற்றி அமைச்சரவையிலும் சொல்லியிருக்கிறேன். அறங்காவலர் குழுவில் அப்படிக் கட்டாயமாகப் போடுவதற்குச் சட்டமே கொண்டு வருவதாக அத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அர்ச்சகர்கள் நியமனமாக நாம் சட்டம் கொண்டு வந்ததை எதிர்த்துச் சுப்ரீம் கோர்ட்டுக்குப் போனது போல, வைதிக மனப்பான்மை உடையவர்கள் இந்தச் சட்டத்தையும் எதிர்க்கலாம். ஆயினும் சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்பு நமக்குச் சாதகமாகவே இருக்கிறது. ஆகவே, இப்படிப் பட்ட புரட்சிகரமான சட்டத்தையும் நம்மால் கொண்டு வந்து நிறைவேற்ற முடியும் என்றே கருதுகிறேன்.

அடுத்த படியாக, உணவு விடுதியில் மாணவர்களுக்கு அளிக்கப்படும் உதவி 20 ரூபாயிலிருந்து 25 ரூபாயாக உயர்த்திக் கொடுத்திருக்கிறோம். இப்பொழுது அதிகமாகக் கொடுக்கும் 5 ரூபாய்க்கு

## பரமக்குடியில் காகிதத் தொழிற்சாலை!

இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள பரமக்குடி அருகில் சுமார் 10 கோடி ரூபாய் செலவில் காகிதத் தயாரிப்புத் தொழிற்சாலை ஒன்றை அமைப்பதற்காகத் தமிழ்நாடு அரசுக்கு மத்திய அரசு அனுமதி வழங்கியிருக்கிறது. கூட்டுறவுத் துறையில் ஏற்படுத்தப்படவிருக்கும் இந்தப் புதிய தொழிற்சாலை ஆண்டு தோறும் 30 ஆயிரம் டன் காகிதத்தை உற்பத்தி செய்யும். காகித உற்பத்திக்கு பரமக்குடி வட்டாரத்தில் கிடைக்கும் கச்சாப் பொருட்களே பயன்படுத்தப்படும். இந்தத் தொழிற்சாலை இயங்கத் துவங்கினால் சுமார் 620 பேர்களுக்கு வேலை கிடைக்கும்

முட்டையும் பாலும் கொடுக்கச் சொன்னதைப் பின்தங்கிய துறையில் உள்ளவர்களுக்கும் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று திரு முத்தையா அவர்கள் கூறினார்கள். 20 ரூபாய் போதவில்லையென்று கூறப்படுகிறது. 20 ரூபாயிலே சத்தான உணவு கொடுக்க முடியவில்லையென்று சொல்லப்பட்டது. மேலும் 5 ரூபாய் கொடுத்தாலும் அவர்கள் முருங்கைக்காய் வாங்கினோம், கத்தரிக்காய் வாங்கிப் போட்டோம் என்று தான் கணக்குக் காட்டுவார்கள். அதற்காகத்தான் மேற்கொண்டு தரப்படும் 5 ரூபாய்க்கு முட்டை கிடைக்கிற இடத்தில் முட்டையும், பால் கிடைக்கிற இடத்தில் பாலும் வாங்கித் தர வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். இந்த இரண்டிலேயும் நல்ல சத்து இருக்கிறது. மேலும் இதைக் கண்காணிக்கவும் முடியும். தினமும் பால் கொடுக்கப்பட்டதா, முட்டை கொடுக்கப்பட்டதா என்பதை அறிந்து கொள்ளவும் முடியும். கணக்கு வைப்பதும், காட்டுவதும் சுலபம்.

அடுத்த படியாக, மத்திய அரசாங்கத்தின் மூலமாக திரு இளைய பெருமாள் குழு ஒன்று தீண்டாமை ஒழிப்புக்காக என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்பது குறித்துச் சிபாரிசுகள் செய்திருக்கிறது. பொருளாதார வளர்ச்சிக்கு என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் குறிப்பிட்டிருக்கிறது. அந்தத் திட்டங்களையெல்லாம் இந்த அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது. தீண்டாமை ஒழிப்புக்காகக் கடந்த ஆண்டில் கூறியது போல் ஒரு குழுவை அமைத்திருக்கிறோம். தாலுகா வாரியாக—மாவட்ட வாரியாகக் குழு அமைத்துக் குழுவிலே இருப்பவர்கள் முழுக்க முழுக்கத் தீண்டாமை ஒழிப்புச் சட்டம் எந்த அளவிற்கு நிறைவேற்றப்படுகிறது என்பதைக் கண்காணிக்க வகை செய்யப்பட்டிருக்கிறது. பல குழுக்கள், எல்லா மாவட்டங்களிலும் போடப்படவேண்டும் என்று ஏற்பாடு செய்திருக்கிறோம்.

அடுத்த படியாக ''போலீஸ் ஸ்குவாட்'' ஒன்று தீண்டாமை ஒழிப்புக்காகத் தனியாக அமைக்கப்பட்டு, 6 மாவட்டங்களுக்கு அந்தப் போலீஸ் படை அனுப்பப்பட்டிருக்கிறது. சென்னையிலே கூட அப்படிப்பட்ட போலீஸ் படை அமைக்க முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறோம். பிறகு எல்லா மாவட்டங்களிலும் அந்தப் போலீஸ் படை பற்றிக் கவனிக்க 6 அதிகாரிகள் இருந்து செயல்படுகிறார்கள்.

அடுத்து, தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தை மீறுகிறவர்களுக்கு முன்னாள் அரசு ஏற்கெனவே 50 ரூபாய் அபராதம் என்றும், அப்படி ரூபாய் 50 கட்டத் தவறினால் 6 மாதம் கடுங்காவல் என்றும் தண்டனை விதித்திருந்தது. இப்பொழுது அதை உயர்த்தி, 200 ரூபாய் வரையில் அபராதம் என்றும், அபராதம் கட்டத் தவறினால் 6 மாதம் கடுங்காவல் சிறைத் தண்டனை என்றும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இரண்டாவது முறையாக அதே குற்றத்தைச் செய்தால் 6 மாதத்திற்கு மேல் கட்டாயமாகச் சிறைத்தண்டனையும் 200 ரூபாயிலிருந்து 500 ரூபாய் வரையில் அபராதமும் கட்ட வேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. மூன்றாவதாகவும் அந்தக் குற்றத்தைச் செய்தால் ஓராண்டுக் காலம் வரை கடுங்காவல் தண்டனையும் இல்லாவிடில் ஆயிரம் ரூபாய் வரைக்கும் அபராதமும் என்று தண்டனைகளைக் கடுமையாக உயர்த்தியிருக்கிறார்கள். தீண்டாமை ஒழிப்புக்காகப் போலீஸ் படை வைத்து, சட்டம் போட்டு, சமுதாய நலக் குழுக்களும் அமைத்திருக்கிறோம். இவையெல்லாம் ஒழுங்காகச் செயல்பட நல்ல வழிவகைகள் செய்யப்படும்.

இப்படிப்பட்ட நல்ல காரியங்களையெல்லாம் அரசு செய்துகொண்டிருக்கிறது. எனவே, இப்படிப்பட்ட நல்ல திட்டங்களையெல்லாம் நிறைவேற்ற எல்லாச் சமூக மக்களும் ஒத்துழைப்புத் தந்தால்தான் நிறைவேற்ற முடியும். அரசு போடுகிற சட்டம், திட்டம் இவையிருந்தாலும், எல்லாருடைய ஒத்துழைப்பும் இல்லாவிட்டால் எத்தனை இலட்ச ரூபாய்கள் இதிலே செலவழித்தாலும் முன்னேற முடியாது. எனவே, இந்தத் திட்டங்களுக்கு எல்லாம் நல்ல முறையிலே மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் ஒத்துழைப்புத் தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, வெட்டுத் தீர்மானங்களைத் திருப்பிப் பெற்றுக் கொண்டு இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

**[20—3—1972-ல் சட்டமன்றத்தில் அரிசன நலத்துறை அமைச்சர் அவர்கள், மானியக் கோரிக்கை விவாதத்திற்குப் பதிலளித்து ஆற்றிய உரையிலிருந்து.]**

## எழுத்துப் பொறிக்கும் இயந்திரம்

மின்-இரசாயன முறை மூலம் உலோகப் பொருட்களில் எழுத்துக்களையும், வடிவங்களையும் பொறிக்கத் தக்க இயந்திரம் ஒன்றைக் காரைக்குடியிலுள்ள மத்திய மின்-இரசாயன ஆராய்ச்சிக் கழகம் கண்டுபிடித்திருக்கிறது.

தற்காலத்தில், மின்-இரசாயன முறையை உபயோகித்து, உலோகப் பொருட்களின் மீது பெயர்களையும், வடிவங்களையும், குறி எண்களையும் பொறித்து வருகிறார்கள். இதன் மூலம் இப்பொருட்களைச் சுலபமாக இனங்கண்டு கொள்ள இயலும். தரச் சான்றிதழ், விளம்பரச் சொற்கள் ஆகியவையும் உலோகப் பொருட்களின் மீதுபொறிக்கப்படுகின்றன. மின்-இரசாயன முறையைப் பயன்படுத்துவதால் உலோகப் பொருட்களின் மீது எழுத்துக்களையும், வடிவங்களையும் மிக விரைவிலும், தெளிவாகவும், பொருளுக்குச் சேதமேற்படாத வகையிலும் பொறிக்க முடியும்.

உலோகப் பொருட்கள் மீது எழுத்துக்களைப் பொறிப்பதற்கான சாதனங்களும், நுட்ப அறிவும் தற்போது நமது நாட்டில் கிடையாது.




# சங்கர் சிமெண்ட்

தயாரிப்பாளர்களுக்கு 1968-69-ம் ஆண்டில் ஏற்றுமதியில் சிறப்புற்று விளங்கியதற்காக இந்திய அரசின் பாராட்டு இதழ் கிடைத்துள்ளது.

தரம், நீண்டகால சேவை, பாறை போன்ற உறுதி ஆகிய சிறப்பு அம்சங்கள் பொருந்திய சங்கர் சிமெண்ட் நாட்டின் அந்நியச் செலாவணி வருவாயைப் பெருக்குவதிலும் முன்னணியில் நிற்கிறது.

IS:269 ISI மார்க்குடன் உத்தரவாதம் கொண்டது

**இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட்**

தன் பில்டிங், சென்னை-2

25 ஆண்டுகள் நிலைத்து, இன்னும் வளர்ந்து கொண்டே போகிறது!

FDSIC1753TM

இலவசத் தொழில் நுட்ப ஆலோசனைக்கு: சிமெண்ட் சர்வீஸ் பீரோ, குரோவ், சென்னை-18



# கேளுங்கள் கொடுக்கப்படும்!

**வினா :** எங்கள் பகுதியில் ஆண்டிற்கு ஒருமுறை மானுவாரியில் காய்கறி பயிரிடுகிறோம். எங்களுக்கும் காய்கறி பயிரிட கடன் கிடைக்குமா? அல்லது ஆண்டு முழுவதும் காய்கறி பயிரிடுவர்களுக்குத்தானு? எவ்வளவு கடன் கிடைக்கும்? யாருக்கு மனுச் செய்ய வேண்டும்?

—பெ. நாகேஷ்,
பெரியம்மாபாளையம்,

**விடை :** காய்கறி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், காய்கறி பயிரிடுவோருக்கு ஏக்கருக்கு ரூபாய் 120 வீதமும், தனிப்பட்ட ஒருவருக்கு அதிக அளவாக ஒரு பருவத்திற்கு ரூபாய் 240 வீதமும் குறுகிய காலக் கடன் வழங்கப்படுகிறது. இரு பருவங்களில் காய்கறி பயிரிட்டால் தனிப்பட்ட ஒருவருக்கு உச்ச அளவாக ரூபாய் 480 கடன் கொடுக்கப்படும். இக் கடன் வசதி காய்கறி மேம்பாட்டுத் திட்டம் செயல்படும் இடங்களில் மட்டுமே கிடைக்கும். இக் கடன் வசதி தங்கள் பகுதியில் கிடைக்குமா என்பதை அறிய உங்கள் ஊராட்சி ஒன்றிய துணை வேளாண்மை அலுவலர் (வளர்ச்சி) அவர்களை அணுகவும்

* * *

**வினு :** முந்திரி பயிரிட வட ஆர்க்காடு மாவட்டம் ஏற்றதா? குறிப்பாக செங்கம் வட்டத்தில் பயிரிடலாமா? விதைகள் எங்கிருந்து பெற வேண்டும்? எந்த மாதத்தில் நடவேண்டும்?

—சி, இராசாமணி,
மேல் செங்கம்,
செங்கம் வட்டம்.

**விடை :** தங்கள் பகுதியில் 4 முதல் 6 அடி ஆழத்திற்குக் குறையாமல் மண் கண்டம் இருக்குமானுல் முந்திரி பயிரிடலாம். விதைகளைப் பெற ''மாவட்ட வேளாண்மை அலுவலர், போளூர்'' அவர்களுக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

## திருச்செந்தூரில் கனிவளம்

திருச்செந்தூர் கடற்கரைப் பகுதியிலுள்ள புஞ்சிகாடு, நாலுமாவடி ஆகிய பகுதிகளில் உள்ள மணல்களில் இல்மனேட்டும், கார்னெட்டும் அடங்கியிருப்பதை அணுசக்தி கனிவளப் பிரிவு கண்டு பிடித்திருக்கிறது. இந்த மணலில் 4.9 சதவிகிதம் முதல் 8.2 சதவிகிதம் வரையில் இல்மனேட் காணப்படுகிறது. இந்தப் பகுதியில் சுமார் 46,16,458 டன் இல்மனேட் இருக்குமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

கார்னெட் 0.005 சதவிகிதம் தான் காணப்படுகிறது.

மொத்தம் 2,724 டன் கார்னெட் இப்பகுதியில் இருக்குமென்று கணக்கிடப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு அரசும் இந்தப் பகுதியில் கனிவள ஆராய்ச்சியை நடத்தி வருகிறது. மணவாளக்குறிச்சியிலும், கேரளத்திலுள்ள சாவராவிலும் உள்ள மணலில் இந்தப் பொருள்கள் அதிக அளவில் காணப்படுவதால் இந்தப் பகுதியில் உள்ள மணலே வணிக ரீதியில் பயன்படுத்தப்படுகிறது.

ஆவணி, புரட்டாசி மாதங்களில் முந்திரி நடலாம். முந்திரி சாகுபடி பற்றிய முழு விவரமும் அறிய நவம்பர் 16, 1971 நாள் ''தமிழரசு'' இதழைப் பாருங்கள்.

* * *

**வினு :** தானியப் பயிர்களின் கதிர்களில் தெளிக்கும் மருந்து சிறந்ததா? தூவும் மருந்து சிறந்ததா? தெளிக்கவும் செய்யலாமா?

—இரா. ச. கதிர் மணி,
குனியமுத்தூர் அஞ்சல்,
கோயம்புத்தூர்-8.

**விடை :** தானியப் பயிர்களின் கதிர்களில் மருந்து தூவுதலே சிறந்தது. மருந்து தெளிப்பதைப் பொதுவாகப் பூ பூப்பதற்கு முன் போடு நிறுத்திக் கொள்வதே நல்லது. கதிர்களில் மருந்து தெளித்தால், மருந்தில் உள்ள நஞ்சு மணிகளில் கலந்து தீங்கு விளைவிக்கும் என்பதனுலேயே, தூவும் மருந்து மட்டுமே பரிந்துரைக்கப்படுகிறது.

* * *

**வினு :** ஜனவரி, பிப்ரவரி மாதத்தில் நெல் வயலில் பயிர் செய்ய ஏற்ற உளுந்து, பாசிப் பயறு வகைகள் என்ன? வயது என்ன? விதை எங்குக் கிடைக்கும்?

—கொடரை வானொலி
மன்றம்.
திருச்சி மாவட்டம்.

**விடை :** ஜனவரி, பிப்ரவரியில் நெல் அறுவடைக்கு 10 நாட்களுக்கு முன்பாக, வயலில் ஈரம் இருக்கும் பொழுதே, ஆடுதுறை 1-உளுந்து, ஆடுதுறை-1 பச்சைப் பயறு ஆகியவைகளை விதைக்கலாம். ஆடுதுறை-1 உளுந்தின் வயது 90 நாட்கள். ஆடுதுறை-பச்சைப் பயறு 80 நாட்கள் வயதுடையது. உங்கள் ஊராட்சி ஒன்றியத் துணை வேளாண்மை அலுவலர் (வளர்ச்சி) அவர்களை அணுகி விதைகளைப் பெறலாம். ''பைசாகி'' பச்சைப் பயறு ரகத்தையும் விதைத்துப் பார்க்கலாம். இதன் வயது 60 முதல் 65 நாட்களே.

* * *

# சென்னையில் பால் ஆறு!

பால் மிகச் சிறந்த உணவு என்பது நமக்குத் தெரியும். குழந்தைகள் முதல் பெரியவர்கள்வரை அதன் பலனை அனுபவித்து வருவதைப் பார்க்கிறோம். வசதி உள்ளவர்கள் சொந்தத்தில் பால் மாடுகளை வைத்து வேண்டிய பாலைப் பெறுகின்றனர். வசதியற்றவர்கள் 'பால்மாறாமல்' பால் கடைக்குச் சென்று பால் வாங்குகின்றனர்; அப்படியும் ஒரு சிலர் பால் கிடைக்காமல் வெறுங்கையோடு திரும்புகின்றனர். இந்த அவல நிலையைப் போக்கவும், பால் பற்றாக் குறையைத் தீர்க்கவும் இப்போது வழிவகை ஏற்பட்டிருக்கிறது. ஆம்! சென்னை மாதவரம் பால் பண்ணை வளர்ச்சித்துறைதான் இன்று பாலில்லாக் குறையைப் போக்கி நிறை செய்து வருகிறது.

சென்னை நகரம் முழுவதுக்கும் காலையும், மாலையும் வேளை தவறாமல் பால் வழங்குவதென்பது எளிதான செயலா என்ன? அப்படி வழங்குவதற்கு எவ்வளவு பெரிய அமைப்பும், இயந்திரச் சாதனங்களும் வேண்டும்! ஆம். இதற்கான அத்தனை வசதிகளைப் பெற்றுப் பெரும் நிறுவனமாகத் திகழ்கிறது மாதவரம் பால்பண்ணை வளர்ச்சித்துறை. இங்கு ஒரு நாளைக்குத் தயாராகும் பால் எவ்வளவு தெரியுமா? 72,000 லிட்டர்! மா தவத்தால் வரம் பெற்றால் கூட நாம் இவ்வளவு பாலைப் பெறமுடியாது! ஆனால், மாதவரம் பால் ஆறு போல் பாலைப் பொழிந்து கொண்டேயிருக்கிறது!

முன்பு, பால் விநியோகத்தில் பல கோளாறுகள் இருந்ததால், சுத்தமான பால் முறையாக வழங்குவதற்காக, 1953-ல் ஒரு குழு ஏற்பட்டது. 1956-ல் பம்பாய் பால் வழங்குதுறை ஆணையாளரிடம், இக்குழுவின் ஆய்வை வைத்துச் சரியான திட்டம் தரும்படி கேட்டுக் கொள்ளப்பட்டது. இதன் விளைவாகச் சென்னைப் பால் பண்ணைத் திட்டம், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தோடு இணைக்கப்பட்டது. பால் வழங்கும் ஆணையாளரின் பொறுப்பில் 1958 முதல் இதற்கென ஒரு தனித்துறை அமைக்கப்பட்டது.

அப்போது இங்கு ஏராளமான கால்நடைகள் பால் வழங்குவதற்காக வளர்க்கப்பட்டன. 1964-ம் ஆண்டில் ஒரு வித நோய் வந்து பல கால்நடைகள் மாண்டன. பிறகு தான் அதிகப் பால் வழங்குவதற்காக மேலை நாட்டுக் கால்நடைகள் தருவிக்கப்பட்டன. கலப்பின முறையில் இன்று ஏராளமான கால்நடைகள் இங்கே உள்ளன. சுமார் 4,000 கால்நடைகள் தங்குவதற்கான வசதி இப்போதுள்ளது.

பால்பண்ணை வளர்ச்சித்துறை மதுரை, ஈரோடு ஆகிய இடங்களிலும் உள்ளன. இவை எல்லாவற்றையும் விட, மாதவரம் பால் பண்ணையே மிகப் பெரியது. அதிக அளவில் பால் வழங்கக்கூடியது. சென்னை நகரில் தற்போது 222 பால் விற்பனை நிலையங்கள் இருக்கின்றன; மலிவு விலையில் பால் வழங்கப் பத்து நிலையங்களும் இயங்கி வருகின்றன. விரைவில் தென் சென்னையில் ஒரு பால்பண்ணை அமைக்கவும், அதன் மூலம் பால் பற்றாக் குறையைத் தீர்க்கவும் திட்டமிடப்பட்டிருக்கிறது.

இங்குத் தயாராகும் பாலோடு, நாகர்கோவில், மதுரை, விருதுநகர், ஊட்டி, கோவை முதலிய நகரங்களிலிருந்தும் வரும் பாலும் சேர்ந்துதான் சென்னை மாநகரத்துக்கு விநியோகிக்கப்படுகிறது. பாலைத் தேக்கி வைப்பதற்காக பிரம்மாண்டமான பாத்திரங்கள் உள்ளன. இவற்றில் 52 மணி நேரம் பாலைக் கெடாமல் வைத்திருக்கலாம்.

கறந்த பாலை முதலில் பதப்படுத்திச்சுத்தப்படுத்துகின்றனர். முற்றிலும் இயந்திரங்கள் மூலம் சுகாதாரமான முறையில் பால் தயாரிக்கப்படுவதைக் குறிப்பிட வேண்டும். பால் புட்டிகளைக் கழுவுவது முதல் புட்டியில் பாலை நிரப்புவதுவரை இயந்திரமே மிக ஒழுங்காகச் செய்து

புட்டிகளில் பால் நிரப்பப்படுகிறது.



வருகிறது. பாலிலிருந்து வெண்ணெய் எடுக்கவும் ஓர் இயந்திரம் இருக்கிறது.



பால் புட்டிகளை மூடும் கருவி

இப்பண்ணையில் பொருத்தப்பட்டிருக்கின்ற இயந்திரங்கள் நியூசிலாந்து அரசாலும், மக்களாலும் அன்பளிப்பாக வழங்கப்பட்டவை ஆகும். பால் பண்ணை வளர்ச்சித் துறை, சென்னையிலும், மதுரையிலும் நிறுவப்பட்டுள்ள பால் வழங்கு திட்டங்களைச் செவ்விய முறையில் நிருவகிப்பதோடு, மாநிலம் முழுவதிலும் உள்ள பால் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களை நிருவகிக்கும் பொறுப்பையும் மேற்கொண்டுள்ளது. சென்னை மாதவரத்திலுள்ள பால்பண்ணை, தொடக்கத்தில் நாள் ஒன்றுக்கு 50,000 லிட்டர் பால் வழங்குவதற்கேற்றவாறு அமைக்கப்பட்டது. இப்பண்ணை இப்போது நாள் ஒன்றுக்கு 72,000 லிட்டர் பாலை வழங்கி வருகிறது. இங்குக் கூடுதலாகச் சாதனங்கள் நிறுவப்பட்டு, 1972-73-ஆம் ஆண்டில் நாள் ஒன்றுக்கு 1,00,000 லிட்டர் பால் வழங்கக் கூடிய அளவுக்கு இப்பண்ணையின் திறன் உயர்த்தப்பட்டு, சென்னை மாநகரில் பால் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

சென்னை பால் பண்ணை, மருத்துவமனைகளுக்கும், மாணவர் விடுதிகளுக்கும், வணிக முறையில் பாலைப் பயன்படுத்துவோர்க்கும் செய்யும் மொத்த விற்பனை தவிர, பொதுமக்களுக்கும் பால் விற்பனை நிலையங்கள் மூலமாகப் பாலை வழங்குகிறது. மதுரையில் நாள் ஒன்றுக்கு 20,000 லிட்டர் பால் வழங்கப்படுகிறது. உபரியாக உள்ள பால் சென்னைக்கு அனுப்பப்படுகிறது.

மாதவரத்திலிருந்து சென்னை மாநகரிலுள்ள பால் விற்பனை நிலையங்களுக்குப் பால் கொண்டு செல்வதில் பெருமளவு கால தாமதம் ஏற்படுகிறது. இதனால் பால் வெப்பம் அடைந்து அதன் தரம் பாதிக்கப்படுகிறது. எனவே, சென்னை மாநகரில் குளிர் பதன நிலையம் ஒன்றை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மாநகரில் பால் விற்பனை செய்யப்படுவதற்காகப் புட்டியில் அடைக்கப்பட்ட பால் குளிர்பதன நிலையத்திற்குக் கொண்டு செல்லப்படும். அங்கிருந்து சிறு வண்டிகளில் விற்பனை நிலையங்களுக்குக் கொண்டு செல்லப்படும். தற்போது குறுகிய கால அளவிற்குள், பால் விற்பனை நிலையங்கள் அனைத்திற்கும் மாதவரத்திலிருந்து பால் விரைவாகக் கொண்டு செல்லப்பட வேண்டியுள்ளது. சென்னை மாநகரில் குளிர்பதன நிலையத்தை ஏற்படுத்துவதனால், மாதவரத்திலிருந்து பால் கொண்டு செல்வதைச் சீர் செய்ய இயலும். இந்தக் குளிர்பதன நிலையத்திற்கு மாதவரத்திலிருந்து பாலைக் குறைந்த வெப்ப நிலையிலேயே கொண்டு செல்வதற்காகச் சோதனை நடவடிக்கையாகக் குளிர் பதன வசதியுடன் கூடிய வண்டி ஒன்று வாங்கக் கருதப்பட்டுள்ளது.

பால்வள முனைப்புத் திட்டத்தின் (Operation Flood) கீழ், பால் பெருக்குத் திட்டங்களுக்காக இம்மாநிலத்திற்கு ரூ. 8.87 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. பாலைச் சேகரித்துப் பதப்படுத்தி வழங்குவதற்காக, பால் பண்ணைகளில் திறனைப் பெருக்குதல், பால் உற்பத்தியைப் பெருக்குவதற்குத் தேவையான தொழில் நுட்ப வசதிகளை அளித்தல், சென்னை மாநகரிலுள்ள கால்நடைகளுக்கு நகர்ப்புறங்களில் குடியிருப்பு வசதிகளை அமைத்தல் ஆகிய வளர்ச்சித் திட்டங்களும் மேற்கூறிய பால்வள முனைப்புத் திட்டத்தில் அடங்கும்.

சென்னை மாநகரின் உள்ளேயே மாடுகளை வைத்து வளர்த்து வருவதனால் கையாளப்படும் நடைமுறைகள், கால் நடைகளின் நீண்டகால வளர்ச்சிக்குத் தடையாக உள்ளதாலும், மாடுகளை இங்கு வளர்ப்பதால் செலவும் அதிகமாகிறது என்பதனாலும் பால் வற்றிய மாடுகளையும், இளங் கன்றுகளையும் நல்ல முறையில் பேணி வளர்க்கப் போதிய கவனம் செலுத்த முடியவில்லை. ஆகையால் உயர் தரக் கால்நடைகள் பயனற்றவையாகி அவைகளின் தரம் உயர்வது தடைபடுகிறது. ஆகவே, நகரில் கால்நடைகளை வளர்ப்பதற்கு வேண்டிய ஊக்கத்தைக் குறைப்பதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

கிராமங்களில் அதிகப்படியாக உற்பத்தி செய்யப்படும் பாலைக் கொண்டுதான் சென்னை மாநகரின் தேவையை நிறைவு செய்ய முடியும் என்றாலும், உலக உணவுத் திட்டத்தின் கீழ் இலவசமாக அளிக்கப்படும் பால்மாவு, தூய வெண்ணெய் ஆகியவற்றைப் பயன்படுத்திப் பால் வழங்கு நிலையை மேம்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும். இப்பொருள்களைப் பயன்படுத்தித் தயாரிக்கப்படும் தரமான பாலை விற்பதனால் கிடைக்கும் வருவாய் மூலம் பால் பெருக்கும் திட்டத்திற்குத் தேவையான நிதி பெறப்

படுகிறது. தரமான பாலும் ஏறக்குறைய கறந்த பாலுக்குரிய விலையிலேயே விற்கப்படுகிறது.

பால்வள முனைப்புத் திட்டத்தின் முதல் கட்டமாகக் கூடுதலாகப் பாலைச் சேகரித்து வழங்குவதற்கேற்றவாறு பால் பண்ணையை விரிவுபடுத்தும் நடவடிக்கை தொடங்கப்பட்டுள்ளது. இதற்காகத் தேவைப்படும் பொறியும், சாதனங்களும் பெறப்பட்டு அவை நிறுவப்பட்டு வருகின்றன. பாலைப் பதப்படுத்தும் இயந்திரம், பால்மாவைப் பாலாகக் கலக்கும் சாதனம் ஆகியவற்றை மதுரை பால் பண்ணையிலிருந்து மாதவரத்திற்குக் கொண்டு வந்து உபயோகித்ததன் மூலம் 72,000 லிட்டர் பால் வழங்க முடிந்தது.

பாலைச் சேகரித்தல், அதனைப் பதப்படுத்துதல் இவற்றிற்குத் தேவையான வசதிகளை அதிகரிப்பதற்கு ரூ. 2.13 கோடி செலவில் செயற் குறிப்புகள் வகுக்கப்பட்டுள்ளன. மதுரையில் பால் மாவு தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதற்கு வகை செய்வதும் இதில் அடங்கும். இதனால் ஆண்டுதோறும் சில திங்களில் கிடைக்கும் உபரிப் பாலை மாவாக்கிப் பின்னர் பயன்படுத்திக் கொள்ள முடியும். பால் உற்பத்தியைப் பெருக்கத் தேவைப்படும் வசதிகளை நான்காண்டுக் கால அளவில் ரூ. 2.93 கோடி செலவில் ஏற்படுத்துவதற்குத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. இதன்படி கிராம அளவில் இனப் பெருக்க வசதிகள் உட்பட, கால்நடை மருத்துவத்திற்கும் பால்பண்ணை வளர்ச்சிப் பணிகளுக்கும் வகை செய்வதற்கான நிலையங்களைத் தொடர்ச்சியாக ஏற்படுத்தி, ஒருங்கிணைந்த மேற்பார்வை அமைப்பும் நிறுவப்படும். பால் உற்பத்தி விற்பனை குறித்து உற்பத்தியாளர்களுக்குத் தேவையான எல்லாவிதத் தொழில்நுட்ப உதவியையும் ஏனைய உதவியையும் அளிக்க இந்த மேற்பார்வைஅமைப்புவகை செய்யும்.

பால் உற்பத்தியும் விற்பனையும் செவ்விய முறையில் நடைபெற வேண்டுமானால், இத்திட்டம் ஒரே அமைப்பின் வாயிலாக ஒருங்கிணைந்த முறையில் நிருவகிக்கப்பட வேண்டும். அப்போதுதான், உற்பத்தியாளர் தமது எல்லாத் தேவைகளுக்கும் ஒரே அமைப்பையே அணுக ஏதுவாக இருக்கும். எனவே, பால்வள



பால் புட்டிகளைக் கழுவும் இயந்திரம்

முனைப்புத் திட்டங்களைச் செயல்படுத்தும் பணியை மேற்கொள்ளும் பொருட்டு, தமிழ்நாடு பால் வளர்ச்சிக் கழகத்தை ஏற்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. பால் வளர்ச்சித் துறையின் வணிக நடவடிக்கையாகிய பாலைச் சேகரித்தல், அதனைப் பெரு நகரங்களில் விற்பனை செய்தல் 'பால்வள முனைப்புத்' திட்டத்துடன் ஒருங்கிணைந்த நடவடிக்கையாக இருக்கும் என்பதால் இதுவும் இக் கழகத்திற்கு மாற்றப்படும்.

இம் மாநிலத்தில் 2,278 பால் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களும், 23 கூட்டு அமைப்புகளும் இருக்கின்றன. 1970—71-ல் இவை நாள் ஒன்றுக்குச் சராசரியாக 2.13 இலட்சம் லிட்டர் பால் வழங்கியது. 1971—72-ல் நாள் ஒன்றுக்குச் சராசரியாக 2.33 இலட்சம் லிட்டர் பால் வழங்கியது. நொடித்தும் செயல்படாமலும் உள்ள பால் வழங்கு சங்கங்களைச் சீரமைத்து, அவற்றைத் தனித்து இயங்கக் கூடிய பிரிவுகளாக அமைக்கும் பொருட்டு, இச்சங்கங்களைச் சீரமைக்கவும், இவற்றிற்குப் பங்கு மூலதனம் அளிக்கவும், நிருவாக உதவி செய்யவும் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 1,100 பிரிவுகள் அமைக்கப்படும். இதுவரை, 172 பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன. பால் பண்ணைகளுக்கான கட்டடங்கள் கட்டவும், வண்டிகள் வாங்குவது உட்படப் பாலைச் சேகரித்துப் பதப்படுத்த வசதிகள் செய்யவும் நிதிதேவைப்படும் சங்கங்களைத் தெரிந்தெடுத்து, அவற்றிற்குக் கடன்கள் வழங்குவதன் மூலம் அரசும் உதவி செய்கிறது. இவை ஒவ்வொன்றுக்கும் 1972—73-ல் ரூ. 4 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. பால் உற்பத்தியாளர்கள் கறவை மாடுகள் வாங்குவதற்காக அவர்களுக்குக் கடன் வழங்க ரூ. 25,00,000 நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மாதவரம் பால் பண்ணையில் திங்கள் ஒன்றுக்கு ரூ. 200-க்குக் குறைவாக அடிப்படைச் சம்பளம் பெறும் பணியாளர்களுக்கு ரூ. 75 வீதமும், திங்கள் ஒன்றுக்கு ரூ. 300-க்குக் குறைவாக அடிப்படை சம்பளம் பெறும் பணியாளர்களுக்கு ரூ. 100 வீதமும் கருணைத் தொகை கொடுக்க 1972 சனவரித் திங்களில் அரசு அனுமதி வழங்கியுள்ளது.

ஒவ்வொரு துறையிலும் அரசு ஆற்றிவரும் செயற்கரிய திட்டங்கள் பலப்பல. அதேபோல் பால் பண்ணை வளர்ச்சித் துறையிலும் பாங்கான பணியாற்றி, நகர்முழுவதும் பால்மணம் கமழும் வண்ணம் இயங்கி வருகிறது. மக்களின் தேவை உணர்ந்து, சேவை மனப்பான்மையோடு அரசு ஆற்றிவரும் அரும்பணிகளுக்கு எடுத்துக்காட்டாய்த் திகழ்கிறது மாதவரம் பால்பண்ணை !

# அறநிலையங்கள் ஆற்றும் அரும் பணிகள்! அறப் பணிகள்!



இந்து சமய அறக்கட்டளைகள் (நிருவாக) துறை 10,865 அறநிலையங்களைத் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுள்ளது. இவைகளின் வருவாய் ரூ. 5,55,78,000 என்று மதிப்பிடப்படுகிறது. இந்த அறநிலையங்களில் 157 மடங்களும், 9,876 கோயில்களும், 832 குறிப்பிட்ட அறக்கட்டளைகளும் அடங்கியுள்ளன. கோயில் நிலங்களுக்காக நியமிக்கப்பட்ட சிறப்புப் பணியாளர்களின் ஆய்வின் பலனாக இத்துறையின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப் பெற்ற ஒரு மடமும் 824 கோயில்களும் இதில் அடங்கும்.

இத்துறையை நடத்தி வருவதற்கான வருவாய், உதவித் தொகைகளிலிருந்தும், தணிக்கைக் கட்டணங்களிலிருந்தும் கிடைக்கின்றது. இப்பிரிவின்படி ரூ. 200-க்குக் குறையாத வருவாய் உள்ள ஒவ்வொரு அறநிலையமும் குறிப்பிட்ட உதவித் தொகையினை இத்துறைக்குச் செலுத்த வேண்டும். ரூ. 10,000-க்கு மேற்பட்ட வருவாய் உள்ள 561 கோயில்களும் ரூ. 4,680 கோயில்களும், ரூ. 1,000-க்குக் குறைவாக வருவாய் உள்ள 6,624 கோயில்களும் உள்ளன. ஆண்டுதோறும் கிடைக்கும் துறை வருவாய் ரூ. 49 இலட்சம் என்று கணக்கிடப்பட்டுள்ளது. 1971—72-ஆம் ஆண்டில் மேலே சொல்லப்பட்ட 825 புதிய அறநிலையங்கள் சேர்க்கப்பட்டதன் காரணமாக இந்தத் துறை பெறும் வருவாய் ரூ. 18,562 இந்த ஆண்டில் கூடுதலாகி உள்ளது. கோயில்களின் வருவாயைப் பெருக்கவும், நிதி தவருகப் பயன்படுத்தப்படுவதைத் தடுக்கவும் வேண்டிக் கோயில்களின் நிருவாகம் இந்து சமய அறக்கட்டளைத் (நிருவாக) துறையின் முழுக் கட்டுப்பாட்டில் உள்ளது.

• • •

பொதுமக்களுக்குக் கல்விக்காகத் தன்னுலான சிறப்பு முறையில் இந்தத் துறை பணியாற்றி வருகின்றது. சமய நிறுவனங்களின் நிதிகளிலிருந்து கீழ்க்கண்ட கல்வி நிலையங்கள் பராமரிக்கப்படுகின்றன.

பழனியில், பழனி ஆண்டவர் கலைக் கல்லூரி, பழனி ஆண்டவர் செந்தமிழ்ப் பெண்கள் கல்லூரி, பழனி ஆண்டவர் பெண்கள் கலைக் கல்லூரி, கன்னியாகுமரி மாவட்டம் குழித்துறையிலுள்ள தேவி குமாரி பெண்கள் கல்லூரி, குற்ருலத்தில் உள்ள பராசக்தி பெண்கள் கல்லூரி. திருத்தணி சுப்பிரமணிய சுவாமி கோயில், திருத்தணி சுப்பிரமணியசுவாமி கலைக் கல்லூரிக்கு ரூ. 5 இலட்சம் நன்கொடையாகக் கொடுக்க முன் வந்துள்ளது.

இந்தியப் பண்பாட்டுக் கல்லூரிகள் இரண்டு உள்ளன. அவை: 1. இந்தியப் பண்பாட்டு பழனி ஆண்டவர் கல்லூரி, பழனி. 2. பூம்புகார் பேரவைக் கல்லூரி மேலையூர், தஞ்சாவூர் மாவட்டம்.

மாணவர் மற்றும் பெண்டிர் உயர்நிலைப் பள்ளிகள் பல கோயில்களால் நடத்தப் பெறுகின்றன. 1. இராமேசுவரம் தேவஸ்தானத்தினுல் இராமேசுவரத்தில் நடத்தப்பெறும் பர்வதவர்த்தினி அம்பாள் உயர்நிலைப்பள்ளி, 2. திருமலை குமாரசாமி பெண்கள் உயர்

நிலைப்பள்ளி, குற்றாலம். இது திருநெல்வேலி மாவட்டம், புணபொழி, திருமலை குமாரசுவாமி கோயிலினால் நடத்தப்படுகிறது. 2. காந்திமதி அம்பாள் பெண்கள் உயர்நிலைப்பள்ளி, பாளையங்கோட்டை; திருநெல்வேலி சுவாமி நெல்லையப்பர் தேவஸ்தானத்தினால் நடத்தப்படுவது. 4. மீனாட்சி சுந்தரேசுவரர் தேவஸ்தான பெண்கள் உயர்நிலைப்பள்ளி, மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் தேவஸ்தானத்தினால் நடத்தப்படுவது, 5. சுவேதாரண்யேசுவரர் பெண்கள் உயர்நிலைப் பள்ளி, தஞ்சாவூர் மாவட்டம், திருவெண்காடு சுவேதாரண்யேசுவரர் கோயிலினால் நடத்தப்பெறுவது. 6. கலியுக வரதராசப்பெருமாள் தேவஸ்தான பெண்கள் உயர்நிலைப் பள்ளி, அரியலூர்; கள்ளக்குறிச்சி, கலியுக வரதராசப் பெருமாள் தேவஸ்தானத்தினால் நடத்தப்பெறுவது. 7. சாமளாபுரத்தில் உள்ள உயர்நிலைப்பள்ளி, அய்யம் பாளையம்; வாழைத் தோட்டத்து அய்யன் கோயிலினால் நடத்தப் பெறுவது. 8. பெண்கள் உயர்நிலைப் பள்ளி, கோவிலூர்; தஞ்சாவூர் மாவட்டம், கோவிலூர், மந்தபுரீசுவரர் கோயிலினால் நடத்தப்பெறுவது.

• • •

கோயில்களில் கலை மற்றும் சிற்பக்கலை காட்டும் தொல்பொருட் களஞ்சியங்களைக் கீழ்க்காணும் சமய நிலையங்கள் பேணி வருகின்றது:—

1. திரு அரங்கநாத சுவாமி கோயில், திருவரங்கம். 2. திரு மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில் மதுரை. 3. திரு ஜம்புகேசுவரர் கோயில் திருவானைக் கோவில், திருச்சி.

ஆயிரக்கால் மண்டபங்கள் உள்ள கோயில்கள், கலைக்கூடங்களைப் பேணி வர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

• • •

இந்த மாநிலத்தின் மக்கள் நலனுக்காகவும், இத்துறை தன் பங்கினைச் செலுத்தி வருகின்றது. அனாதைகளுக்காக அனாதை இல்லங்களை, சமய நிறுவனங்களின் உபரி நிதியிலிருந்து நடத்தி வருகின்றது. பல ஆண்டுகளாக இவைகள் நடத்தப் பட்டு வந்தாலுங் கூட, அவைகளைப் பேணுதல் போன்றவைகளில் அதிகக் கவனம் செலுத்தியும், கூடுதலான எண்ணிக்கையில் சிறுவர்களைச் சேர்ப்பித்தும் புத்துயிர் கொடுக்கப்பட்டுள்ளது. கீழே சொல்லப்பட்டுள்ள கோயில்கள் அனாதை இல்லங்களைப் பேணிவருகின்றன :

1. சுப்பிரமணிய சுவாமி கோவில், திருத்தணி நகர் வட்டம், செங்கற்பட்டு மாவட்டம். 2. நவநீதேசுவரர் கோயில், சிக்கல், நாகப்பட்டினம் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம். 3. வைத்தியநாத சுவாமி கோயில், வைத்தீஸ்வரன் கோயில், சீர்காழி வட்டம்.




கும்மிடிப் பூண்டியில் பர்மாத் தமிழர்களுக்குப் பாங்கான குடியிருப்புகளைக் கட்டிக் கொடுத்து அவர்களை வாழவைக்கும் நல்ல திட்டங்களைத் தீட்டியிருக்கிறது மத்திய அரசு.

அண்ணா, நேதாஜி, இந்திரா பெயரில் குடியிருப்புகள் கட்டப்படுகின்றன. இப்போது 87 குடியிருப்புகளில் 600 பேர் வசிக்கின்றனர். இதனைக் கட்ட ரூ. 25,000 செலவாகியிருக்கிறது. இவர்கள் பர்மாவிலிருந்து வந்ததும், முதலில் தங்குவதற்காக ஓர் இடம் இப்பகுதியிலேயே ஒதுக்கப்பட்டிருக்கிறது. பிறகு அவர்கள் எங்கெங்குப் போய் வாழ விரும்புகிறார்களோ அந்தந்த இடத்திற்கு அனுப்ப மத்திய அரசு தக்க ஏற்பாடு செய்துகொடுக்கிறது. பர்மாத் தமிழர்கள் குடியிருப்புக்கும், தொழில் செய்து பிழைப்பதற்கும் கடனுதவி தருகிறது. இந்தத் தொகையை இவர்கள் தவணை முறையில் கொடுக்கலாம். இப்பகுதியில் பள்ளி, மருத்துவமனை எல்லாம் இருக்கின்றன.

இவர்கள் குடும்பம் ஒன்றுக்குத் தொழில் செய்ய ரூ. 2,000 தரப்படுகிறது. இதுவரை இவர்களுக்காக ரூ. 8,52,542 செலவாகியிருக்கிறது. இவர்களுக்காக இந்தக் குடியிருப்பில் ஒரு குடி நீர்த் தொட்டியும் கட்டப்பட்டிருக்கிறது. தாயகம் நாடி வந்த அகதிகளுக்கு ஆதரவு தந்து ஆவன செய்ய மத்திய அரசு சிறிதும் சளைக்காமல் பணிபுரிந்து வருகிறது.

தஞ்சாவூர் மாவட்டம். 4 சீனுவாச பெருமாள் கோயில், நாச்சியார் கோயில், கும்பகோணம் வட்டம். 5. மீனாட்சி சுந்தரேசுவரர் தேவஸ்தானம், மதுரை. 6. தண்டாயுதபாணி சுவாமி தேவஸ்தானம், பழனி. 7. நெல்லையப்பர் தேவஸ்தானம், திருநெல்வேலி. 8. சுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானம் திருச்செந்தூர்.

* * *

1971—72-ஆம் ஆண்டில், இரு புதிய அனாதை இல்லங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அவை: 1. வாழைத்தோட்டத்து அய்யன் கோயில், அய்யன்பாளையம், பல்லடம் வட்டம், கோயம்புத்தூர் மாவட்டம். 2. திருமலைக் குமாரசாமி கோயில், பண்பொழி, தென்காசி வட்டம், திருநெல்வேலி மாவட்டம். அதிக எண்ணிக்கையில் அனாதை இல்லங்களைத் துவக்கத் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அறநிலையங்களின் உபரி நிதியிலிருந்து குழந்தைகள் காப்பகங்கள் நடத்தப்பட்டு, அவற்றில் பள்ளிப் பருவத்திற்கு முற்பட்ட குழந்தைகள் சேர்க்கப்படுகின்றனர். இவற்றில் இந்து சமய நெறிமுறைகளில் போதனை அளிக்கப்படுகின்றது.

* * *

குழந்தைகள் காப்பகங்கள் இந்த அறநிலையங்களால் நடத்தப்பட்டு வருகின்றன: 1. வேதநாராயண பெருமாள் கோயில், திருநாராயணபுரம், முசிறி வட்டம், திருச்சி மாவட்டம். 2. சுப்பிரமணியசுவாமி கோயில், குமார வயலூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம். 3. அரங்கநாதசுவாமி தேவஸ்தானம், காரமடை, அவினாசி வட்டம், கோயம்புத்தூர் வட்டம். 4. மாரியம்மன் கோயில், இளம்பிள்ளை, சேலம் மாவட்டம்.

சமயபுரம், மாரியம்மன் கோயில் நிதியிலிருந்து 1971-ஆம் ஆண்டு நவம்பர்த் திங்களில் ஒன்றும், பழனி தண்டாயுதபாணி சுவாமி தேவஸ்தானம் நிதியிலிருந்து 1972-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் மற்றொன்றும் ஆக இரண்டு ஊமை-செவிடர் பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

1970-ஆம் ஆண்டு வரை, 14 சித்த மருத்துவ மனைகளைப் பல திருக்கோயில்கள் தங்களது உபரி நிதியிலிருந்து நடத்தி வந்தன. வழிபாட்டுப் பயணிகள் உட்பட வழிபடும் பொது மக்கள் பயன்பெறுவதற்காக அதிக மருத்துவ மனைகளும், மருந்தகங்களும் துவக்கி வைக்கப்பட்டுள்ளன. இது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட தீவிர நடவடிக்கையின் காரணமாக 1971-ம் ஆண்டில் 24 புதிய சித்த மருத்துவ மனைகளை ஆரம்பிக்க அனுமதித்ததில் 5 சித்த மருத்துவ மனைகள் செயல்படத் துவங்கியுள்ளன. பொதுமக்களுக்குச் சமய நிறுவனங்கள் செய்யும் மாபெரும் தொண்டாக இதனைப் பொதுமக்கள் பாராட்டுகின்றனர்.

* * *

வழிபாட்டுப் பயணிகள் மற்றும் வழிபடுபவர்களின் பயனுக்காக ஓய்வு விடுதிகளையும், வழிபாட்டுப் பயணிகள் விடுதிகளையும் கட்டும் ஒருங்கிணைப்புத் திட்டம் ஒன்று இருந்து வருகின்றது. இது குறித்துச் சீரான முன்னேற்றம் காணப்படுகிறது.

### ஊர் பிறந்த காரணம்

தொண்டை நாட்டில் திரையர் குலத்தைச் சேர்ந்த ஒருவன் பெயரால் திரையனேரி என்னும் ஓர் ஊர் இருக்கிறது. அது இப்பொழுது தென்னேரி என்று வழங்குகின்றது. இது செங்கற்பட்டு வட்டத்தில் உள்ளது. அக்காலத்தில் ஒரு அரசுக்கு இளந்திரையன் என்ற பெயரும் இருந்தது.

மாமல்லன் என்னும் பெயருடைய நரசிம்மவர்மன் பண்டைத் துறைமுகமாகிய கடல் மல்லையைத் திருத்தி அமைத்தான். கடற்கரையில் கற்கோயில்களை எழுப்பினான். அவன் ஆண்ட காலத்தில் மல்லை நகரம் மாமல்லபுரம் என்று பெயர் பெற்றது.

திருச்செந்தூர், சுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானம் ரூ. 6 இலட்சம் செலவில் 96 அறைகளைக் கொண்ட புதிய கட்டடம் ஒன்றைக் கட்டிக் கொண்டிருக்கிறது. திருமணம் முதலியவற்றிற்காகத் திருமண மண்டபங்களைப் பொதுமக்கள் குறைவான அளவில் வாடகைக்கு எடுத்துக்கொள்ள வசதி செய்யும் பொருட்டுத் திருமண மண்டபங்களைக் கட்டும் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த மண்டபங்கள் வழிபாட்டுக் கூடங்களாகவும் பயன்படுத்தப்படலாம்.

* * *

வருவாயற்ற, வறிய கோயில்களுக்கு அவைகளில் அவசரமாகச் செய்ய வேண்டிய பழுது பார்த்தல் மற்றும் அதிக அளவிலான பழுது பார்த்தலுக்கும் அரசு மானியங்கள் அளிக்கப்படுகின்றன. கோயில்களின் நிருவாகிகள் கோயிலைப் புதுப்பிக்க, திருப்பணிக்குழுக்கள் அமைத்துப் பொதுமக்களிடமிருந்து நன்கொடைகள் திரட்டியும், இதர சமய நிறுவனங்களிலிருந்து நிதி மாற்றம் மூலம் நிதிகள் பெற்றும் நடவடிக்கை மேற்கொள்ள அரசு மானியம் ஊக்கமளிப்பதாக உள்ளது.

1972—73-ஆம் ஆண்டிற்கு ரூபாய் ஐந்து இலட்சத்தினை மானியமாகக் கொடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

வில்லிப்புத்தூரிலுள்ள வடபத்திரசாயி கோயிலின் பெரிய கோபுரத்தை ரூபாய் நான்கு இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் செப்பனிட்டுப் புதுப்பிப்பதற்கான திட்டம் ஒன்றுக்கு அரசு அனுமதித்துள்ளது. இப்பணி பொதுப்பணித்துறையிடம் பிறர்க்கான பணியாக ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்து சமய அறக்கட்டளைகள் ஆணையாளரின் பொதுநல நிதியிலிருந்து இதற்கென மொத்தம் ரூ. 3 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. மீதியுள்ள தொகை கோயில் நிதியிலிருந்தும், பொது மக்களிடமிருந்து நன்கொடையாகவும் திருப்பணிக் குழுவினால் வழங்கப்படும்.

நடப்பு ஆண்டில் கோபுரம் அருகிலிருந்து மிகத் தூரமான இடத்திற்குக் கழிவுநீர்களைத் திசை மாற்றும் வேலை முடிக்கப்பெற்றுள்ளது. கோபுரத்தின் ஐந்தாவது அடுக்கு வரையில் உள்ள பழைய மர உத்திரங்கள் அகற்றப்பட்டுப் புதிய உத்திரங்கள் அமைக்கும் வேலை முடிவுற்று, பிற அடுக்குகளிலும் இப்பணி நடைபெற்று வருகிறது. கோபுரத்திலுள்ள வெடிப்புகளை அடைக்கும் வேலைக்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. இதுவரை ரூ. 60,000 வரை செலவிடப்பட்டுள்ளது.

பழனி தண்டாயுதபாணி சுவாமி கோயிலில் திட்டமிட்டபடி செய்ய இருக்கும் திருப்பணிக்கான தலைசிறந்த திட்டத்தின் உத்தேச மதிப்பீடு ரூ. 40 இலட்சமாகும். ரூ. 3 இலட்சம் மதிப்புள்ள வேலைக்கான பிரகாரங்களை அகலப்படுத்துதல், தெற்கு, மற்றும் வடக்குக் கோபுரங்களைப் புதுப்பித்தல் ஆகிய வேலைகள் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டுள்ளன.

* * *

மாநிலத்தில் உள்ள கோயில் நிலங்களைப் பொறுத்த எல்லாப் பொருள்கள் பற்றியும் நடவடிக்கை மேற்கொள்ளச்சிறப்புப் பணியாளர்களாக மாவட்ட வருவாய் அதிகாரி மட்டத்தில் ஒரு தனி அதிகாரி, மற்றும் 4 தனித் துணை ஆட்சியாளர்களையும் அவர்களுக்குரிய பணியாளர் தொகுதியினையும் பணியில் அமர்த்திக்கொள்ள அரசு அனுமதி அளித்துள்ளது. ஆய்வுப் பணியினை விரைவு படுத்துவதற்காக 1971-ஆம் ஆண்டில் கூடுதல் பணியாளர்களை நியமனம் செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சமய நிறுவனங்களுக்கு, அவைகளின் பெயரில் பதிவாகி உள்ள எல்லா அசையாப் பொருட்களும் அவைகளின் சொத்து விவரப் பதிவேட்டில் குறிக்கப்பட்டும் சமய நிறுவனங்களில் உடைமையில் இல்லாத சொத்துக்கள் அனைத்தும் அவைகளின் உடைமையாக்கப்பட்டும் கணக்கில் கொண்டுவரப்பட்டும் அந்தச் சொத்துக்களின் வருமானம் முறையாகக் கணக்கிடப்பட்டும் வருவதைச் சரிபார்ப்பதற்காக இவ்விதம் ஏற்படுத்தப்பட்டது. நிலங்கள் முறையாகக் குத்தகைக்கு விடப்பட்டுள்ளதா என்றும் ஆக்கிரமிப்புகள், அனுமதியில்லாத இருப்பு அல்லது உடைமை முதலியன இருக்கின்றதா என்பதனைச் சரிபார்ப்பதற்காகக் கோயில்களுக்குச் சொந்தமாக உள்ள நிலங்கள், கட்டடங்கள், மனைகள் முதலியவற்றின் விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. முதல் நிலை ஆய்வின் பலனைச் சிறப்புப் பணியாளர்கள், 1,59,322·27 ஏக்கர் நிலங்களுடைய 32·450 சமய நிறுவனங்களைக் கண்டுபிடித்துள்ளனர். இவைகள் துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டிற்குள் இல்லாதவை. இந்தக் கோயில்களை நிருவாகக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவதற்காக நிருவாக இலாகாவின்கீழ் சிறப்புப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

**ஆலயங்கள் வழிபாட்டுக்கு மட்டுமின்றி, மக்கள் நல்வாழ்வுக்கும் பெருமளவில் உதவி வருகின்றன. தமிழகத்தில் உள்ள ஆலயங்களின் மூலமாக அரசுக்கு வருவாய் வருவதுடன் அதனால் பள்ளிகள், கல்லூரிகள், அனாதை இல்லங்கள், குழந்தைக் காப்பகங்கள் முதலியன சிறந்த முறையில் நடந்து வருகின்றன. இந்து அறநிலையத் துறை இச்செயற்கரிய செயலுக்கு ஊக்கந் தரும் வகையில் திறம்பட இயங்கி வருகிறது. கோயில்கள் மக்களுக்கு ஆற்றி வரும் அருந்தொண்டுகளை இக்கட்டுரை எடுத்துரைக்கிறது.**

* * *

1970—71-ஆம் ஆண்டு முடிய கிழக்குக் கோபுரம், மற்றும் ஆயிரக்கால் மண்டபம், சேசராயர் மண்டபம் மேல் தளம் ஆகியவை பழுதுபார்த்தல் வேலை முடிக்கப்பெற்றுள்ளது. 1971—72-ஆம் ஆண்டில் சேசராய மண்டபத்தில் நீர்க்கசியும் மேல்தளம் பழுதுபார்த்தல் மற்றும் சேசராயர், ஆயிரக்கால் மண்டபங்களின் தூண்களைச் சுத்தப்படுத்துதல், வெள்ளைக் கோபுரச் சுதை வேலைகள் பழுது பார்த்தல், அடைப்பு அமைத்தல் மற்றும் பென்காப்சுலா தெளித்தல் ஆகிய வேலைகள் முடிக்கப்பெற்றுள்ளன.

இராமேசுவரத்திலுள்ள இராமநாதசுவாமி கோயில் ''யுனெஸ்கோ'' நிறுவனத்தின் உதவி பெறுவதற்காக இரண்டாவது கோயிலாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. ''யுனெஸ்கோ வல்லுநர், திரு ஜி. ஆர். எச். ரைட் என்பவர் இக்கோவிலை வந்து பார்வையிட்டு, தனது அறிக்கையினைக் கொடுத்துள்ளார். இந்தக் கோவிலுக்குத் தேவையான பொருட்கள் ''யுனெஸ்கோ'' நிறுவனத்தால் வழங்கப்படவிருக்கிறது. பொருட்கள் ஆகியவற்றின் பட்டியலும் கொடுக்கப்பட்டுள்ளன. இதுவரை ''யுனெஸ்கோ' இந்தக் கோவிலுக்குத் தனது உதவியினை வழங்கவில்லை. இது குறித்து, புது டெல்லி, இந்திய அரசு கல்வி, மற்றும் சமூக நல அமைச்சகத்துடன் கடிதப் போக்குவரத்து இருந்து வருகின்றது.

மாநில யுனெஸ்கோ குழு, காஞ்சிபுரத்திலுள்ள வரதராசசுவாமி கோயிலையும், சிதம்பரத்திலுள்ள நடராசர் கோயிலையும் மூன்றாவது நான்காவது கோயில்களாக ''யுனெஸ்கோ' நிறுவனத்தின் உதவித் திட்டத்தின் கீழ்த் தேர்ந்தெடுத்துள்ளது. இது குறித்தும், புது டெல்லி இந்திய அரசு கல்வி, மற்றும் சமூகநல அமைச்சகத்துடன் கடிதப் போக்குவரத்து இருந்து வருகிறது.

பொதுமக்களின் நலனுக்காக இம் மாநிலத்திலுள்ள கோயில்களின் நிருவாகத்தினை மேன்மையுறச் செய்யும் நோக்கத்தோடு இத்துறை தனது செயல்களை விரைவுபடுத்த, தொடர்ந்து முயற்சித்து வருகின்றது.



# காவல் துறை: ஒரு கண்ணோட்டம்

சட்டத்தையும் ஒழுங்கையும் பேணிக் காத்து நிலைநாட்ட வன்மையும் திண்மையும் படைத்த ஒரு காவற்படை மிகவும் தேவையாகும். பயனும் திறனும் கலந்த பாங்குடன் திறமையாகப் பணியாற்றி நமது நாட்டில் மிகச் சிறந்த ஓர் அமைப்பாகத் திகழ்ந்து வரும் பெருமையினைத் தமிழ்நாட்டுக் காவற்படை தொடர்ந்து காப்பாற்றி வருகிறது.

காவல்துறையின் சட்டஞ் சார்ந்த அறிவியல் ஆய்வுக் கூடம், அண்மையில் 'லேசர்' நுண்கதிர் வண்ணப்பட்டைப் பகுப்பாய்வுக் கருவியொன்றை ரூ. 3.25 இலட்சத்துக்கும், ஒப்புமை நுண்ணோக்காடி ஒன்றை ரூ. 1.8 இலட்சத்துக்கும் வாங்கியுள்ளது. வாங்கியுள்ள 'லேசர்' கருவித் தொகுதி, இந்தியாவில் உள்ள சட்டம் சார்ந்த அறிவியல் ஆய்வுக்கூடம் ஒன்றால் வாங்கப் பட்டுள்ள இவ்வகைக் கருவியில் இக் கருவியே முதலாவதாகும். வண்டி விபத்துக்களில், மோதி விட்டு ஓடிவிடுகிற சமயங்களில், வண்ணப் பூச்சுத் துகள்கள், உலோகத் துகள்கள் முதலியவற்றைப் பகுப்பாய்வு செய்வதில் இந்த 'லேசர்' சாதனம் பெரிதும் பயன்படுகின்றது.

* * *

சொத்து குறித்து 1970-ஆம் ஆண்டில் பதிவான குற்ற வழக்குகளின் எண்ணிக்கை 24,898. அதற்கு மாறாக, அவ்வகையில் 1971-ல் புகார் பதிவு செய்யப் பட்ட குற்ற வழக்குகளின் எண்ணிக்கை 25,830 ஆகும். முந்திய ஆண்டைக் காட்டிலும் இவ்வாண்டில் வழக்குகளின் எண்ணிக்கை 3.1 சதவீதம் உயர்ந்துள்ளது; அதாவது, 932 வழக்குகள் அதிகமாகப் பதிவு செய்யப் பட்டுள்ளன. இந்தச் சிறிய அளவு குற்றங்களின் எண்ணிக்கை உயர்வு எதிர் பார்த்ததே; எவ்வாறெனில், உலகெங்கிலும், முன்னேறிய நாடுகளிலும் சரி, வளர்ச்சி பெற்றுவரும் நாடுகளிலும் சரி, குற்றங்கள் பொதுவாகப் பெருகி வருவது காணப்படுகிறது.

கடந்த ஆண்டில் சொத்து குறித்த குற்றங்களில் துப்பறிதல் தரம் உயர்நிலையை எட்டியது. அவ்வாண்டில் 64.2 சதவீதம் குற்றங்கள் துப்பறியப் பட்டன. 1971-ல் துப்பறிதல் தரம் மேலும் மேம்பட்டது. இவ்வகைத் துப்பறிதல் இவ்வாண்டில் எய்திய சாதனை அளவு 66.8 சதவீதம் ஆகும்.

* * *

தொன்மை மிக்க தென்னிந்தியாவை ஆண்ட தமிழரசர்கள் பல கோவில்களைக் கட்டி எழில் கொஞ்சும் தெய்வச் சிலைகளை அங்கு வைத்து அவற்றிற்குக் கலை வண்ணமூட்டினர்; இவை தெய்வத்தை ஆர்வத்தோடு வழிபடுபவர்களைக் கவர்ந்ததோடு மட்டுமன்றிக் கலைவல்லுநர்களையும் கவர்ந்துள்ளன. கபட நெஞ்சமுள்ள சிலர் வழிபடும் சாக்கை வைத்து இந்தச் சிலைகளை இரகசியமாகக் கடத்திச் சென்று விற்பதன் மூலம் பெரும் ஆதாயம் ஈட்டலாம் என்கிற நோக்குடன் இந்தச் சிலைகளைக் கண்டனர். இவ்வாறு விலை மதிப்பற்ற சிலைகளையும், பிற கலைப் பொருட்களையும் கோவில்களிலிருந்து திருடிச் சென்றனர். பழமை வாய்ந்த கோவிலையும், அங்குள்ள விலை மதிப்பற்ற சிலைகளையும், கலைப் பொருட்களையும் பாதுகாப்பது பெரிய பிரச்சினையாகும். உண்மையில் குறைவாக மதிப்பிட்டால் கூடப் பத்தாயிரம் கோவில்கள் இந்து சமய அறக்கட்டளை வாரியத்தின் கட்டுப்பாட்டில் உள்ளன. இதன் கட்டுப்பாட்டில் வராத கோவில்களும் இதே அளவில் தமிழ்நாடு முழுவதிலும் உள்ளன.

குற்றப்புலனாய்வுத் துறையுடன் இணைக்கப்பட்ட காவல் துறை ஆராய்ச்சி நிலையம், இப்பிரச்சினை குறித்து விரிவாக ஆய்வு செய்து பலகருத்துக்களைத் தெரிவித்தது. இவை, பாதுகாப்பு ஏற்பாடுகளை வலுப்படுத்தும் நோக்கத்துடன் காவல் நிலையங்களுக்கும் சம்பந்தப் பட்ட பிற துறைகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளன. சிலை திருட்டுக்களைக் கண்காணிக்கும் பொருட்டு இன்ஸ்பெக்டர் இருவர், சப்-இன்ஸ்பெக்டர் இருவர், தலைமைக் காவலர் இருவர் ஆகியோரை நியமிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவர்கள் குற்றப் புலனாய்வுத் துறையின் தமிழ்நாடு குற்றப் பிரிவில் பணியாற்றி வருகின்றனர். குற்றப் புலனாய்வுத் துறையில் உள்ள சிறப்புப் பிரிவில் கூடுதல் பணியாளர்களை நியமித்து மேற்படி பிரிவை வலுப்படுத்துவது குறித்து இந்திய அரசுடன் கடிதத் தொடர்பு கொள்ளப்பட்டிருக்கிறது.

* * *

மாவட்டங்களிலும், சென்னை மாநகரிலும் 1959-ல் சிறுவர் சங்கங்கள் திறக்கப்பட்டன. இவைகளைக் காவல்துறை நிருவகிக்கிறது. சிறுவர் சங்கங்கள் மத்தியக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. குற்றவியல் புலனாய்வுத் துறையின் துணை இன்ஸ்பெக்டர் ஜெனரல் அதன் தலைவராவார். தமிழ்நாட்டில் 30 சிறுவர் சங்கங்கள் உள்ளன. இதனைக் காக்க 1971—72-ல் ரூ. 53,800 வழங்க அரசு முன் வந்துள்ளது. 1972—73-ஆம் ஆண்டில் சிறுவர் சங்கங்களுக்காக ரூ. 65,000 நிதி ஒதுக்கத் திட்டமிடப் பட்டுள்ளது.

காவல்துறை ஆணைக்குழுவின் பரிவுரைகளில், பெரும் மாறுதல்களை ஏற்படுத்தக் கூடிய பரிவுரைகளை அரசு ஏற்று, அவற்றைச் செயல்படுத்தி வருகிறது. ''தொழில்நுட்பச் சீரமைப்பு'' குறித்த பரிவுரைகள் அவை எனச் சொல்லலாம். இத் தலைப்பின் 1971—72-ஆம்

ஆண்டிலிருந்து ஆரம்பமாகக் கூடிய, விரிவான ஐந்தாண்டுத் திட்டம் ஒன்றைக் காவல் துறை ஆணைக்குழு கொடுத்துள்ளது. இத்திட்டமானது, தமிழ்நாடு காவற்படையை, நவீன, அறிவியல் அடிப்படையில் அமைக்க வகை செய்கிறது. 1971—72-ஆம் ஆண்டில் ரூ. 50.5 இலட்சம் செலவில் செயல்படுத்தத் திட்டமிட்டுள்ளது. இத் திட்டமானது, தமிழக அரசால், ஏற்கெனவே ஏறத்தாழ முழுதும் செயல்படுத்தப்பட்டுள்ளது.

அடுத்த ஆண்டில் (1972—73ல்) ரூபாய் ஒரு கோடி செலவில், தமிழ்நாடு காவற்படையைத் தற்காலத்திற் கேற்றவாறு சீரமைப்பதற்கான செயற்குறிப்புகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இச் செயற்குறிப்புகளுக்குக் கடன் மானியத் திட்டத்தின் கீழ் நிதி உதவி செய்வதற்காக, இவை மைய அரசுக்கு விரைவில் அனுப்பி வைக்கப்படும். அவர்கள் தேவையான நிதி உதவியை அளிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

* * *

"தமிழ்நாட்டுக் காவல்துறை நூற்றாண்டு விழாப் படிப்பு உதவித் தொகைத் திட்டம்" ஒன்று உள்ளது. இத் திட்டத்தின்கீழ், காவல்துறை அரசிதழ்ப் பதிவு பெறாத நிருவாக அதிகாரிகளின் தகுதியுள்ள குழந்தைகளுக்குக் கல்லூரிகளில் உயர் படிப்புக்கும், தொழில் நுட்பப் படிப்புக்கும் படிப்பு உதவித்தொகை ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது. நன்கொடையாளரிடமிருந்து பெறப்பட்ட நன்கொடை மூலம் இந் நிதி உருவாக்கப்பட்டுள்ளது. 1970—71-ஆம் ஆண்டில், ரூ. 20,000 படிப்பு உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

* * *

ஊர்க்காவல் படை, இம் மாநிலத்தில் ஆர்வத்தோடும், திறமையோடும், தொடர்ந்து பணி புரிந்து வருகிறது. முதலில் இப்படையில் சேர விரும்பியவரின் எண்ணிக்கை 12,430. ஆனால், 1972-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் இப்படையிலுள்ளோரின் எண்ணிக்கை 10,731 ஆகும்.

* * *

1971-ஆம் ஆண்டில், காவல் துறை மற்றும் தீயணைப்புத் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் மற்றும் காவலர்கள் பேருக்குக் குடியரசுத் தலைவர் காவல் தீயணைப்புப் பதக்கங்கள், காவல் பதக்கங்கள் வழங்கப்பட்டன. 1971-ஆம் ஆண்டில், 28 பேருக்குத் தமிழ்நாடு முதலமைச்சர் காவல் பதக்கங்கள் வழங்கப்பட்டன.

காவல்துறையினருக்கும், பொது மக்களுக்குமிடையேயான நல்லுறவு தொடர்ந்து வளர்ந்து வருகிறது. கிராமக் கண்காணிப்புக் குழு, காவல் துறையினருக்குத் தொடர்ந்து உதவி புரிந்து வந்தது. சிறுர் சங்கம், ஊர்க்காவல்படை, சென்னை மாநகர் காவல்துறைப் பொது மக்கள் தொடர்பு அதிகாரி, சென்னை மாநகர் காவல்துறை துணை ஆணையாளர் அலுவலகத்தில் உள்ள சிறுர் போக்குவரத்துப் பூங்கா, போக்குவரத்து மரியாதை வாரத்தைக் கடைப்பிடித்தல், பத்திரிகையாளர்களின் பிரதிநிதிகளுடன் அவ்வப்போது கலந்தாலோசித்தல்—இவை போன்றவை காவல் துறையினருக்கும் பொதுமக்களுக்குமிடையே நல்லுறவு வளர்வதற்கு உதவி செய்து வருகின்றன.

உறுதிக்கும்
உழைப்பிற்கும்

CHETTINAD BRAND

செட்டிநாடு
சிமெண்ட்
எங்கும் கிடைக்கிறது.

தயாரிப்பாளர்கள் :
செட்டிநாடு சிமெண்ட்
கார்ப்பரேஷன் லிமிடெட்
6, அரண்மனைக்காரன் தெரு, சென்னை-1
தந்தி : 'BESTCEMENT' போன் : 27256
பாக்டரி : புலியூர் (கரூர்), திருச்சி மாவட்டம்.
தந்தி : 'CEMENT' போன் : 144.

சட்டமும் காசும்
தங்கத் தமிழ்க் குழந்தைகளுக்குத்
தித்திக்கும் கதைப் புத்தகம்
எழுதியவர் :
கவிஞர் அழகனர்
விலை ரூ. 3-00
விவரங்களுக்கு :
கதிரவன் பதிப்பகம்,
13/38, Kallai Road,
Calicut-2.



# உண்மையின் சந்நிதி

சோம. மகாதேவன்

## 1

## அம்மன் கோவில் கிணறு

கிழக்கு வெளுத்து விட்டது.

வைகை நதிக் கரையின் இரு மருங்கிலும், நெடிதுயர்ந்த தென்னைகள், இருளின் பிடியிலிருந்து விடுபட்டு, மெள்ள மெள்ள ஒளி வட்டத்தினுள் தலையாட்டுகின்றன.

பின் பனி நீரில் நனைந்து மஞ்சள் பூத்துக் கிடக்கும் பரந்த மணற் பரப்பில், குறுக்கு வசமாக வடக்கு நோக்கி நடக்கிறோம்.

குளிர்ந்த தென்றல் தழுவிச் செல்கிறது.

வடகோடியில், முழங்கால் அளவு சலசலக்கும் தெளிந்த நீரோட்டம், உடலையும் உள்ளத்தையும் குளிரச் செய்கிறது.

எதிரே, கரையோரமாக மண்டிக் கிடக்கும் தாழம்புதர் இடையிடையே, தழை மலர்கள் மடல் விரித்து, காலையொளி வெள்ளத்தில் திளைத்து அசைந்தாடுகின்றன.

கரையேறி நிற்கிறோம். தென்றலோடு தாழம்பூவின் மணம் கலந்து வருகிறது. நெஞ்சு நிறைகிறது.

எங்கே திரும்பினும் பசுமை கொழிக்கும், இந்தத் கரையோரம் வாழப் பிறந்த மக்கள் கொடுத்து வைத்தவர்கள். நெடுந்தூரத்தில் — வானளாவி நிற்கும் மலைப்பகுதியில், இயற்கை பொய்க்காத வரையில் இங்கு வளம் குன்றாதல்லவா ?

வண்டிப் பாதை வழியே நடக்கிறோம்.

முல்லைக் கால்வாய் குறுக்கிடுகிறது. கால்வாயைக் கடந்து செல்ல ஒடுக்கமான இரண்டு கண் பாலம்.

பாலத்திலிருந்து கால்வாயைக் குனிந்து பார்க்கிறோம்.

வைகையில் பெருகியோடி, கடலில் சங்கமமாகிக் கொண்டிருந்த புது வெள்ளம்—இப்போது இந்தக் கால்வாயில் ஓடிச் சுற்றியுள்ள நிலத்தையெல்லாம் வளப்படுத்துகிறது.

ஆள் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்குக் கால் ரூபாய் கூலி என்றிருந்த காலத்தில் வெட்டப்பட்டதாம் இந்த முல்லைக் கால்வாய். புன்செய்—நன்செய் ஆகியது. முப்போகம் விளைகிறது.

ஊரை நோக்கி நடக்கிறோம்.

இடது பக்கம் மாந்தோப்பு—பெரிய கூடாரங்களைப் போல ஆதிகாலத்து மரங்கள். வலது பக்கம் மந்தைக்காடு. தோப்பு மறையும் போது, ஊரின் எல்லையில், வெள்ளையும் செங்காவியுமாக முத்தாளம்மன் கோவிலின் சுற்றுச் சுவர் தெரிகிறது.

கோவிலுக்குத் தெற்கே, தென் மேற்கு மூலைச் சாயலில் பிள்ளையார் கோவில் படித்துறைக்குச் செல்லும் பாதையோரமாகவே இருக்கிறது அம்மன் கோவில் கிணறு.

இந்தக் கோவிலும், ஊரும் தோன்றிய காலத்திலிருந்து, குடிநீருக்காகப் பயன்படுவது இந்தக் கிணறு. தரை மட்டத்திலிருந்து நான்கடி உயரத்தில், பத்துக்குப் பத்து கருங்கல் கட்டடம். ஆழம் பதினைந்து அடிகள்தான் இருக்கும். ஆனால், ஆள் மட்டத்துக்கு மேல் எப்பொழுதும் நீர் இருக்கும். சோதனைக்காகவே விடாது இயந்திரத்தைக் கொண்டு இறைத்தும் பார்த்தார்கள். நீர் மட்டம் குறைவதே இல்லை. அடியில் அப்படியொரு நீரோட்டம் இருக்கிறதாம் ! இந்தத் திகட்டாத நீரில் எந்தப் பருப்பும் நொடிப் பொழுதில் வெந்து மலர்ந்து விடுமே.

நாளை மூளப் போகும் போராட்டத்துக்கு அடிப்படையாகப் போகும், இந்த ஊர் மக்களின் உயிரோடு கலந்திருக்கும் அம்மன் கோவில் கிணற்றை, சற்று நேரம் பார்த்துக் கொண்டே நிற்கிறோம்.

பகலில் வீட்டிலிருந்து வெளியேறாத பெண்கள், இந்த அதிகாலைப் பொழுதிலேயே, முல்லைக் கால்வாயில் குளித்து விட்டு, ஒளி வீசும் குடங்களோடு, இங்கே, குடிநீர் எடுத்துச் செல்லக் கூடி விடுகிறார்கள். இன்றைக்கு அவர்களிடையே தனிப் பரபரப்பும் இருக்கத்தான் செய்கிறது.

பொழுது புலர்ந்ததுமே, தெருவிலும் திண்ணைகளிலும் நிறைந்திருக்கும் இந்தப் பேச்சு, நாலு பெண்களுக்கு மேல் கூடியிருக்கும் இந்த இடத்தில், எடுபடாமல் இருக்குமா ?



"இனிமே இவ்வளவு தூரத்துக்கு வரப்போறம்மா. தெருவிலேயே அம்மன்கோவில் கிணத்துத் தண்ணியைப் பிடிச்சுக்கலாம்." என்கிறாள் இளம் பெண்ணொருத்தி.

எதிர் சாரியில், நீர் நிறைந்த மண் குடத்தை இடுப்பில் தூக்கி வைத்த கிழவி, 'பொசுக்' கென்று திரும்புகிறாள்.

"மகராசன் வெட்டி வச்ச கிணறு. தலை முறைக்கு ஊருக்கே உதவுது. இப்பப்பெரிய நினைப்பு நினைச்சு உள்ளதும் போகப் போகுது." என்று சொன்னவள் திரும்பாமல் ஊரை நோக்கிப் போகிறாள்.

அவளைத் தொடர்ந்தே ஊருக்குள் நுழைகிறோம்.

எங்குத் திரும்பினாலும் இந்தப் பேச்சாகத்தான் இருக்கிறது. 'செய்ய வேண்டிய பொதுக் காரியமென நினைத்து, குழாய் மூலமாக அம்மன் கோவில் கிணற்று நீரை ஊருக்குள் கொண்டு வர முயலும் போது, ஏற்படப் போகும் சிக்கல் மீண்டும் புகையைக் கிளப்பி விடக் கூடாதே' என்ற பயம் எங்கும் பரவலாக இருக்கத் தான் இருக்கிறது!

இன்றைக்கு, இந்தக் குடிநீர்த் திட்டத்தின் தொடர்பாக, ஊராட்சியின் தலைவரான முத்துப்பாண்டியன், பெரிய வீட்டுக் குருபாதத்தைச் சந்தித்துப் பேசப் போகிறான் என்பது, இருக்கும் சூழ்நிலையில் நம்பக் கூடியதாகவும் இல்லையே.

இளங்கன்று பயமறியாது என்பார்கள். இந்த இளம் வயதில் முத்துப் பாண்டியன் யாரையும் எதிர்பார்த்தா பேசுகிறான்.

"இப்போதைக்கு இந்தப் பேச்சு வேண்டாம்" என்று தலைவரிடம் கேட்டுக் கொள்ள, ஊராட்சி மன்றத்துக்கு வந்தவர்கள், சற்று நேரம் பாண்டியன் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்து, மறுத்துச் சொல்ல முடியாமல், பெரிய வீட்டுக் குருபாதத்தைக் கண்டு



பேச, கூடவே மேலத் தெருவுக்கும் புறப்பட்டு விட்டார்கள்.

நேற்று நடந்ததையும், இன்று நடப்பதையும், நாளை நடக்கப் போவதையும் நினைத்து, முத்துப் பாண்டியனை வியப்போடு பார்க்கிறார்கள் தெருவெங்கும் கூடி இருப்பவர்கள்.

* * *

முத்தாளபுரத்திலேயே குருபாதம் செயலான புள்ளி. கிராமத்து மந்தைகளில் பெரும் பகுதி அவரது பட்டாவுக்கு உட்பட்டது. எல்லையிலிருக்கும் முத்தாளம்மன் கோவிலே அவரது முப்பாட்டன் கட்டியதாம். கோவிலும், அம்மன் கோவில் கிணறும் அவருக்கே சொந்தம்.

செல்வாக்கும், சொல்வாக்கும் நிறைந்திருந்தாலும், குருபாதம், ஊருக்குள் நடக்கும் மற்றப் பொதுக்காரியங்களில் அவ்வளவாகத் தலையைக் கொடுப்பதில்லை. அண்ணனின் செல்வாக்கைப் பயன்படுத்தி, எதற்கும் தலைமை தாங்கவே பிறந்தவர் போல், நேற்று வரை நின்றவர், குருபாதத்தின் ஒன்று விட்ட தம்பி வேலாயுதம்.

இப்பொழுது, ஊராட்சித் தலைவர் பொறுப்புக்கும் போட்டி என்று ஏற்பட்டு, நேற்றுப் பிறந்தவன் தலைவனென்று ஆகிவிட்ட பிறகு, அதற்கு முன்னும் பின்னுமாக நடைபெற்ற நிகழ்ச்சிகள் இடையிலே பகை நெருப்பைக் கிளறி விட்டு, முகம் நோக்கச் சகிக்காத நிலையில் உள்ள போது, பொதுக் காரியத்தை முன் வைத்து, அந்தப் பெரிய வீட்டிலே நுழையப் போகிறான் முத்துப்பாண்டியன்.

* * *

மேலத் தெருவுக்குள் நுழைந்ததும், முகனையில் இருக்கும் இரட்டை மாடிக் கட்டடம் குருபாதத்தினுடையது. முன்பக்கம் கெட்டிக் கட்டடத்தின் கீழேயே, இரு பக்கங்களிலும் அகலமான திண்ணைகளோடு தலைவாசல்.

முத்துப் பாண்டியன் தனக்கானவர்களோடு வந்து, முற்றத்தில் தயங்கி நின்ற போது, வலப்பக்கத்துத் திண்ணையிலே வேலாயுதம் மட்டும் உட்கார்ந்திருப்பது தெரிந்தது.

இந்த விரும்பாத வருகையை முன்னிட்டு, பெரியவர், வேலாயுதத்தை இங்கே உட்காரவைத்திருப்பதை உணர முடிந்தது.

நாட்டாண்மையை முன்னுக்குத் தள்ளி உள்ளே நுழைந்தான் முத்துப் பாண்டியன். நாட்டாண்மை பொறுப்பானவர். இருவகையிலும் அவருக்கு மரியாதை உண்டு.

வேலாயுதம் திரும்பிப் பார்த்து, நிமிர்ந்து உட்கார்ந்து பொதுவாக எல்லாரையும் 'வாங்க' என்று வரவேற்றார்.

பாண்டியனும் மற்றவர்களும் எதிர்த் திண்ணையிலே உட்கார்ந்து கொண்டார்கள்.

## நாடும் மக்களும்

சமூகம் ஒரு குழந்தை மாதிரி. குழந்தை வளர்ந்து பெரியவனான பின் குழந்தைப் பருவத்துச் சட்டையையே அவனுக்கு அணிவிக்க முயன்றால் அந்தச் சட்டை கிழிந்து விடும். அதுபோல் சமூகமும் காலத்திற்கு ஏற்ப வளர்ந்து புதிய பழக்க வழக்கங்களை ஏற்றுக் கொள்கிறது. இதை அனுமதிக்க மறுத்தால் புரட்சி வந்து சமூகத்தை மாற்றியே தீரும். உலகம் மாறிக் கொண்டிருப்பதால் எந்த நாடும் மாறாமல் ஒதுங்கி நிற்க முடியாது.

நேரு

சற்று நேரம் வரையிலும் அமைதி தவழ்ந்தது.

"அம்மன் கோவில் கிணறு விஷயமா பேச வந்திருக்கோம்" என்று மெதுவாக ஆரம்பித்தார் நாட்டாண்மை.

"ஆமா, கிணறு இருக்கு. அதுக்கென்ன?" என்று திரும்பாமலே கேட்டார் வேலாயுதம்.

பாண்டியனே மேலே தொடர்ந்தான்.

"அம்மன் கோவில் கிணத்துத் தண்ணீரை மேலே சோதனைக்கு அனுப்பி இருந்ததிலே, எல்லா வகையிலும் சிறப்பானதுன்னு பதில் வந்திருக்கு. மேல் நிலை குடிநீர்த் தொட்டி கட்டி, தெருவுக்கும், வீடுகளுக்கும் குழாய் போடுறதுக்குத் திட்டமும் ஒப்புதலாகி இருக்கு" என்று சொல்லி நிறுத்தினான்.

வேலாயுதம் சாவதானமாகத் திரும்பினார்.

"எல்லாமே ஒப்புதலாயிட்ட பிறகு இங்கே கேட்க வேண்டியது என்ன இருக்கு" என்றார் கிண்டல் தொனிக்க.

"மன்றத்திலே தீர்மானம் போட்டுத்தான் இந்தக் காரியத்தை ஆரம்பிச்சோம். நீங்க கூட்டத்துக்கு வரலே." என்றான் பாண்டியன்.

"அப்படியா ......"

"நம்ம ஊருக்கு முத்தாளம்மனோட பிரசாதம்தான் இந்தத் தண்ணின்னு கருதிக் கிட்டிருக்கோம்." என்று சொல்லிப் பக்குவமாக இடையிலே நுழைந்தார் நாட்டாண்மை.

"அதானேயா அந்தக் கிணத்திலே தண்ணின்னு எடுக்கிறதை யாரும் தடுக்கலையே. போன வருஷம் கூட ஆயிரத்தைச் செலவழிச்சுத் தளம் போட்டிருக்கு. இதெல்லாம் ஊர் நன்மையை நினைக்காமலா நடந்திருக்கு" என்றார் வேலாயுதம் படபடப்பாக.

"அதோட குழாயும் போட்டுட்டா, குடிநீர்ப் பிரச்சினை நல்ல முறையிலே இருக்கும்ன்னு நினைச்சுத்தான் இந்த வேலையைத் தொடங்கி இருக்கோம்.' என்றான் பாண்டியன் அமைதியாகவே.

"திட்டமெல்லாம் போட்டதுக்குப் பிறகு, இங்கே வந்து கேட்க வேண்டிய அவசியமே இல்லையே" என்றார் வேலாயுதம்.

"கிணறு ஊருக்குப் பொதுவானதா இருக்கணும்ன்னு சர்க்காரிலே கேட்குறாங்க."

"அதுக்கு."

"கிணறு ஊருக்குப் பொதுவானதுன்னு எழுதிக் கொடுத்தாப் போதும். முப்பதாயிரம் ரூபா மதிப்பீட்டிலே இந்தக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றிப் போடலாம்." என்று தொடர்ந்தான் பாண்டியன்.

வேலாயுதத்தின் நெற்றி சுருங்கியது.

"அப்படி எதையும் எழுதிக் கொடுக்க முடியாது. எது ஊருக்கு நன்மையான காரியம்ன்னு எங்களுக்குத் தெரியும்.'' என்றார் கோபமாக.

சற்று அமைதி நிலவியது. இடையிலே வேறுயார் பேச முடியும்?

'' ஊருக்குப் பயன்படுற ஒரு சொத்து, உங்களதுன்னு உரிமை கொண்டாடுறதனுலே, இந்த நல்ல திட்டத்துக்கே குறுக்கே நிக்கிறீங்க'' என்றான் பாண்டியன் மேலும்.

வேலாயுதத்தின் முகம் சிவந்து விட்டது.

'' இருக்கிற உரிமைகளின் பேரில் உனக்குச் சந்தேகமிருக்கா ? '' என்று கடுமையான குரலில் கேட்டார்.

'' சந்தேகத்தோட வரலே. காரியம் முடியணும்ங்கிறதுக்காகத்தான் வந்திருக்கோம்.'' என்றான் பாண்டியன்.

'' அப்படித் தெரியலேயே.'' என்று சொல்லி வந்திருந்தவர்களைக் கண்ணோட்டமாகப் பார்த்தார் வேலாயுதம்.

'' வேறே எப்படித் தெரியுது? '' என்று பாண்டியனும் கேட்டிருக்கக் கூடாதுதான்.

அந்தக் கணத்தில், வீட்டிற்குள்ளிருந்து படபடப்புடன் அங்கு வந்து நின்றார் குருபாதம்.

நல்ல உயரத்துக்கான உடற்கட்டு—பரந்த நெற்றி, சிவந்த முகத்துக்குக் கம்பீரத்தைக் கொடுக்கிறது.

தமையனைக் கண்டதும் வேலாயுதம் எழுந்தார்.

அவரைத் தொடர்ந்து வந்திருந்த அனைவருமே எழுந்தனர்.

பாண்டியனும் எழுந்தான்.

கொந்தளிக்கும் கோபத்தோடு பாண்டியனைத் திரும்பிப்பாராமலே குருபாதம் சொன்னார்.

'' எழவே விழுந்தாலும் இங்கே வாராதேன்னு சொல்லி இருக்கேன். உன் முகத்திலே விழிக்கவே விரும்பலே.'' என்றார் படபடப்புடன்.

'' பொதுக் காரியத்தை நினைக்கும் போது வரத்தான் வேண்டியிருக்கு.'' என்று அச்சமின்றியே சொன்னான் பாண்டியன்.

'' இங்கே நின்னு எதுவும் பேச வேண்டியதில்லே. போடா வெளியே.'' என்றார் குருபாதம் கோபத்தினால் உடல் பதற.

உடன் வந்தவர்கள், பேசுவதற்கு வாயற்றவர்களாக, திகைப்போடு படிகளில் இறங்கி விட்டார்கள்.

தனித்து நின்ற பாண்டியன், வீட்டின் உள்பக்கமாகத் திரும்பிப் பார்த்தான்.

திண்ணையை ஒட்டிய சன்னலுக்கு உட்புறமாக நின்று, இதுவரையில் நடந்தவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த, குருபாதத்தின் இல்லத்தரசி மீனாட்சியம்மாள், கண்களில் நீர் வழிய நின்று கொண்டிருப்பது தெரிந்தது.

திருமதி மீனாட்சியம்மாளின் வயிற்றில் தனித் திருமகனாகப் பிறந்து, செல்வம் கொழிக்கும் இந்த வீட்டிலே தவழ்ந்து, பெற்றவர்கள் சீராட்ட வளர்ந்த மகனாகிய பாண்டியனின் கண்களும் கலங்கின.

கோபத்தோடு முகம் திரும்பி நிற்கும் தந்தையையும், துணையாக நிற்கும் சிற்றப்பனையும் ஏறெடுத்துப் பார்க்காமலே திண்ணையை விட்டிறங்கித் தெருவோடு நடந்தான் பாண்டியன்.

(வளரும்)

---




சென்னை நகருக்குக் குடிநீர் வழங்கும் 'கொடையாளி' யார் தெரியுமா ? திருவாளர் பூண்டியார் தான்! பூண்டிக்கு நீர் எங்கிருந்து கிடைக்கிறது ?

காவேரிப்பாக்கத்திலிருந்து கொற்றலையாறு மூலமாக வரும் தண்ணீர் பூண்டியில் தேக்கி வைக்கப்படுகிறது. செப்டம்பர், அக்டோபர், நவம்பர் மாதங்களில் இங்குத் தண்ணீர் நிறைந்திருக்குமாம். 1940–44-ல் 65 இலட்சம் செலவில் கட்டப்பட்ட இந்த நீர்த்தேக்கத்தின் நிலப்பரப்பு 760 சதுர மைல்கள். நீளம் 770 அடி. ஆழம் 33 அடி. இங்கு 14 மதகுகளும் இரண்டு மணல் வாரிக் கதவுகளும் உள்ளன.

உச்ச வெள்ளப்போக்கு ஒரு விநாடிக்கு 1,20,000 கன அடி.

இங்குள்ள தண்ணீர் இங்கிருந்து தாமரைப்பாக்கம் அணைக்கட்டுக்குச் சென்று, அங்கிருந்து புழலேரிக்குப் போகிறது. பிறகு கீழ்ப்பாக்கத்தில் சுத்தம் செய்யப்பட்டுச் சென்னைக்குக் கிடைக்கிறது.

பூண்டியிலிருந்து புழலேரிக்குத் தண்ணீர் போக இரண்டு நாள் ஆகிறது.

புழலேரியின் பரப்பளவு 7·83 சதுர மைல்கள். ஆழம் 25 அடி. இங்குத் தண்ணீர் குறைந்தால், பூண்டியிலிருந்து நீர் அனுப்பி வைக்கப்படும்.

# அஞ்சலக சேமிப்பு வங்கி மூலம்
# சேமியுங்கள்!

- எந்த வங்கியும் இதுவரை அளிக்காத அளவுக்கு நடப்புக் கணக்கு – 4 சதவீத வட்டியுடன்
- வேண்டும்போதெல்லாம் பணம் எடுத்துக்கொள்ளலாம்; செலுத்தலாம்; எந்தத் தடையும் இல்லை
- காசோலை வசதிகள் உண்டு
- முற்றிலும் பாதுகாப்பு உடையது
- அஞ்சலகங்கள் அனைத்திலும் இந்த வசதி உண்டு

இப்போது சொல்லுங்கள் சேமிப்பதற்காக
அஞ்சலகச் சேமிப்பு வங்கியை
நான் தேர்ந்தெடுத்தது நியாயம்தானே!



தமிழ்நாடு அரசு
சிறு சேமிப்பு இயக்குநரால்
வெளியிடப் பெற்றது.

# இதோ ஒரு சமய சஞ்சீவி!



சின்கோனாத் துறை தமிழ்நாடு அரசின் தொன்மை வாய்ந்த வணிக நிறுவனங்களில் ஒன்றாகும். நீலகிரி மாவட்டத்திலும், கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த ஆனை மலைப் பகுதிகளிலும் இந்தத் துறைக்குச் சின்கோனா, பிற மூலிகைச் செடிகள், நறுமணத் தைலங்கள் நல்கும் செடிகள் முதலியன உள்ளன. ஆனை மலைப் பகுதியில் கொய்னாப் பொருட்கள் தயாரிப்புத் தொழிற்சாலை ஒன்றையும், மருத்துவப் பயனுள்ள நீலகிரித் தைலம், ஜெரேனியம் தைலம், கற்பூரத் தைலம், யூகலிப்ட்ஸ் சிட்ரியோடோரா தைலம், ஜாவா தைலம் போன்ற தைலங்களைத் தூய்மையாக்கிச் சோதித்துத் தரப்படுத்தும் வேலைக்காக நடுவட்டத்தில் மற்றுமொரு தொழிற்சாலையையும் இத்துறை நடத்துகிறது.

சின்கோனா பயிரிடுதல், சின்கோனாப் பட்டை எடுத்தல், பல்வேறு கொய்னாப் பொருட்களைப் பிரித்தெடுத்தல், தயாரித்தல், அவ்வுற்பத்திப் பொருட்களை வெளிநாட்டு, உள்நாட்டுச் சந்தைகளிலும் விற்பனை செய்தல் ஆகியவை இத்துறையின் தலையாய பணியாகும். இதன் தொடர்பாக, இத்துறையின் வருவாயைப் பெருக்கவும், இந்நாட்டில் மருந்து மணங்கமழ் தைலங்களுக்கு அதிகரித்து வரும் தேவையினைக் கருத்தில் கொண்டும், மருந்து மணங்கமழ் பொருட்களை நல்கும் பல்வேறு வகையான செடிகளை இத்துறை பயிரிடுகிறது. இவற்றிலிருந்து கிடைக்கின்ற பொருட்களைச் செய்முறைப்படுத்தி, இந்நாட்டிலுள்ள மருந்துத் தொழிற்சாலைகள், நறுமணப் பொருட்கள், ஒப்பனைப் பொருட்கள், சோப்புகள், முதலியன தயாரிக்கும் தொழிற்சாலைகளில் கொள்முதல் செய்வோருக்கு விற்பனை செய்து வருகிறது. இத்துறையில் உற்பத்தி செய்யப்படும் கொய்னாப் பொருட்கள், அவற்றின் உயர் தரத்தின் காரணமாக வெளிநாடுகளில் நன்மதிப்பைப் பெற்றுள்ளதுடன் அவை வளர்ச்சி அடைந்துள்ள ஜெர்மனி, ரஷ்யா போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.



மலேரியா நோயைக் குணப்படுத்தும் சஞ்சீவியாகிய கொய்னா, சின்கோனா மரப்பட்டையிலிருந்து தயாரிக்கப்படுகிறது. சாதாரண தடுமன், காய்ச்சல் முதலிய நோய்களுக்குச் சிகிச்சை அளிப்பதற்குப் பயனாகும் பல்வேறு மருந்துகள் தயாரிப்பதற்கும் கொய்னா தற்பொழுது பயன்படுத்தப்படுகிறது. இதய நோய்க்குச் சிகிச்சை அளிப்பதற்கும் கொய்னா பயன்படுகிறது. சின்கோனா மரம் தென் அமெரிக்காவைச் சேர்ந்தது. இது முதன் முதலில் 1859-ம் ஆண்டு இந்தியாவிற்குக் கொண்டு வரப்பட்டது. தென்னிந்தியாவில் சின்கோனா மரங்கள் சுமார் 3,000 அடி உயரத்தில் தான் செழித்து வளர்கின்றன. இம்மரத்தில் கொய்னா மருந்து தயாரிப்பதற்குத் தகுதியுள்ள முதிர்ந்த பட்டை பிடிப்பதற்கு எட்டு முதல் பத்தாண்டுக் காலம் ஆகிறது.

தேயிலை, காப்பி, ரப்பர் முதலிய செடிகளைப்போல், சின்கோனா மரங்கள் அவ்வளவாக ஆதாயம் தராத காரணத்தால், தனிப்பட்ட மலைத் தோட்டக்காரர்கள் பெரும் பரப்பில் இதைப் பயிர் செய்வதில்லை. இருப்பினும் கொய்னாவின் நோய்த் தடுப்பு ஆற்றலைக் கருத்தில் கொண்டு, மலேரியா நோய்த் தடுப்பில் இந்தியாவின் கொய்னாத் தேவையை நிறைவு செய்யத் தமிழ்நாடு அரசு இதனைப் பயிரிட வேண்டியதாயிற்று. இந்தியாவில் தமிழ்நாட்டைத் தவிர, கொய்னா உற்பத்தி செய்யும் ஒரே மாநிலம் மேற்கு வங்காளம் தான்.

மருந்து மற்றும் நறுமணச் செடிகளைப் பயிரிட்டுப் பதப்படுத்துவது தவிர, பல்வேறு மருந்து மற்றும் நறுமணப்பயிர்களைச் சாகுபடி செய்யும் முறை, பதப்படுத்துதல் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான ஆராய்ச்சியையும் இத்துறை செய்து வருகிறது.

நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் பணிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

1. மருந்து மற்றும் நறுமணப் பயிர்களைப் பெரும் அளவில் சாகுபடி செய்வதை விரிவுப் படுத்துதல்.
2. மருந்து மற்றும் நறுமணச் செடிப் பொருட்களை முன்னோடி அளவில் பதப்படுத்துதல்.
3. மருந்து மற்றும் நறுமணச் செடிகள் பற்றி மும்முரமான ஆராய்ச்சியையும், வளர்ச்சி முறைகளையும் மேற்கொள்ளுதல்.
4. அதிக அளவில் கொய்னாவையும் குவினிடினையும் தரவல்ல மேம்பாடான சின்கோனாச் செடிவகைகளை முளைக்க வைத்து இனம் பெருக்கும் முறைகளைக் கொண்டு பெருக்கும் திட்டம்.
5. இத்துறையின் அதிகாரிகள், அலுவலர், தொழிலாளர் ஆகியோருக்குச் சாலைகள், கட்டடங்கள் மற்றும் இதர வசதிகள் வழங்குவதற்கான திட்டம்.

1971-ம் ஆண்டு இத்துறையின் மொத்த இருப்புக்களின் மதிப்பு ரூபாய் 2,73,52,791 ஆகும்.

இத்துறையின் பொதுவான வளர்ச்சித் திட்டம் என்னென்ன?

சின்கோனா பயிரிடப்படும் பரப்பளவை 2,330 ஹெக்டேரிலிருந்து 2,630 ஹெக்டேருக்கு அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இத் துறையில் நடத்தப்பட்ட ஆராய்ச்சி வேலைகளின் சில முக்கியமான சாதனைகள் வருமாறு :—

1. சின்கோனா ஃபெப்ரிப் பூஜிலிருந்து குவினைன் சல்பேட்டையும், குவினிடின் சல்பேட்டையும் தயாரித்தல்.

2. மருந்து தயாரிக்கப்பட்டபின் சக்கையான சின்கோனா பட்டையிலிருந்து வீரிய கரியம் (Activited Carbon) முன்னோடித் திட்ட அளவில் தயாரித்தல்.

3. சின்கோனைன், சின்கோனைடைன், அல்காலாய்டுஸ் ஆகியவற்றை முன்னோடித் திட்ட அளவில் பிரித்தெடுத்தல்.

4. யூகலிப்ட்ஸ் சிட்ரியோடோரா, சிம்பபோகன், விண்டெரியானஸ் ஆகிய தைலங்களிலிருந்து சிட்ரோனெல்லால் ஆய்வுக்கூட அளவில் தயாரித்தல்.



5. மேலும், திறன் மிக்க முறைகொண்டு B.P., P.I., தர யூகலிப்ட்ஸ் தைல வகைகளைத் தயாரித்தல்.

6. பெர்பரிஸ் அரிஸ்டாடாவிலிருந்து தரமிக்க பெர்பரின் ஹைட்ரோ குளோரைடு தயாரித்தல்.

7. சிம்போபோகன் விண்டேரியானஸ் புல், பைரீத்ரெம், டியஸ்கோரியாப் பயிர் வகைகள் ஆகியவற்றிலிருந்து தேர்வு செய்யப்பட்ட செடி வகைகளை மேலும் தனிப்படுத்தி எடுத்தல்.

மருந்து மற்றும் நறுமணத் தைலச் செடிகளில் மும்முரமான ஆராய்ச்சியையும், வளர்ச்சி முறைகளையும், மேற்கொண்டுள்ள திட்டம் நீடிக்கப்படும்.

1972–73ஆம் ஆண்டுக்கு மதிப்பிடப்பட்ட வருவாய் ரூபாய் 59·14 இலட்சமாகும். இத்துறையின் கணக்குகள், ரூபாய் 8 இலட்சம் நிகர இலாபத்துடன். முடிவு பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

உள்நாட்டுப் பயனுக்காகவும், ஏற்றுமதி செய்வதற்காகவும், உயர்ந்த மருந்துகளையும் நறுமணத் தைலங்களையும் தயாரித்து இத்துறை நாட்டுக்கு அந்நியச் செலாவணியை ஈட்டித் தருவதுடன், பயிற்சி பெற்றவர், ஓரளவு பயிற்சி பெற்றவர் மற்றும் தொழில் நுட்பப் பணியாளர் பலருக்கு எல்லா நிலைகளிலும் பெருமளவு வேலை வாய்ப்பும் வழங்குகிறது. இலங்கையிலிருந்தும், பர்மாவிலிருந்தும் தாய்நாட்டிற்குத் திரும்பியுள்ளவர்களுக்கு மறுவாழ்வு வசதி வழங்குவதற்காகப் புதிய சின்கோனா தோட்டங்கள் அமைக்கும் ஒரு திட்டம் உருவாக்கப்பட்டு இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அவர்களின் ஒப்புதல் கிடைத்தவுடன் இத் திட்டம் நிறைவேற்றப்படும்.

## விசைச் செங்கல் சூளை

விசைச் செங்கல் சூளை, தமிழ்நாட்டின் மற்றொரு பெரிய அரசுத் துறைத் திட்டமாகும். இது பூவிருந்தவல்லிக்கு அண்மையில் திருமழிசையில் 1968-ல் அமைக்கப்பட்டுள்ளது. இச்செங்கல் சூளை தற்போது தொழில் வணிக இயக்குநர் அலுவலகத்தால் நடத்தப்படுகிறது. இச்சூளை யூகோஸ்லாவிய நாட்டின் ஒத்துழைப்புடன் அமைக்கப்பட்டது. இதன் மூலதன முதலீடு சுமார் ரூ. 71 இலட்சமாகும்.

இச்சூளையின் உற்பத்தியும் விற்பனையும் கணிசமான அளவுக்கு உயர்ந்திருக்கிறது. இச்சூளையின் உற்பத்திக் குறிக்கோள் அளவு நாளொன்றுக்கு 66 ,000 செங்கற்களாகும். இன்றுள்ளவாறு இப்பிரிவு அதன் உற்பத்தித் திறனளவில் 60 சத வீதத்தை எட்டியுள்ளது. தரமான செங்கற்களின் அளவுடன் மெட்ரிக் அளவிலான செங்கற்களையும், துளையிடப்பட்ட செங்கற்களையும், இப்பிரிவு உற்பத்தி செய்கிறது. கல்பாக்கத்திலுள்ள அணுசக்தி நிலையத்திற்கு மேற்கூரை ஓடுகள் அதிக அளவில் வழங்குகிறது. இதே வகை ஓடுகளை ஆந்திரம் ஸ்ரீஹரி கோட்டாவில் உள்ள அணுசக்தி குழுவின் திட்டத்திற்கு அனுப்புவதற்கான அதிக அளவிலான தேவைக்குறிப்பை இப்பிரிவு பெற்றிருக்கிறது.

தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், வீட்டுவசதி-வாரியம் ஆகியவற்றின் தேவையின் பெரும் பகுதியையும் இப்பிரிவு நிறைவு செய்கிறது. 30–9–1971 அன்றுள்ளவாறு, இப்பிரிவு, ரூ. 25 இலட்சம் மதிப்புள்ள செங்கற்களை உற்பத்தி செய்து அனுப்புவதற்கான ஆணைகளைப் பெற்றுள்ளது. இப்பிரிவில் சுமார் 150 தொழிலாளர்கள் பணியாற்றுகின்றனர்.

விசைச் செங்கல் சூளை ஒன்றை அமைப்பதற்கான இதே போன்ற திட்டம் ஒன்று வீட்டு வசதி வாரியத்தினால் திட்டமிடப்பட்டுள்ளது. இது தற்போது தொழில்-வணிக இயக்குநரால் செயல்படுத்துவதற்காக மாற்றப்பட்டுள்ளது. இச் சூளை செக்கோஸ்லோவாகியா நாட்டின் உதவியுடன் அமைக்கப்படும். இயந்திரத்தின் ஒரு பகுதி முன்னரே வந்து விட்டது. இச்சூளையை அமைப்பதற்குச் சுமார் ரூ.79 இலட்சம் செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.




## 32. பாரில்லா நாடாகும் பார்

● 'போர்' அறிவுக் கொவ்வாப் பொருபடையும், பூமிதனில்
'ஏர்' அறிவுக் காகா இருநிலமும் - சேர றிவுக்
கூரில்லா மக்களும்உட் கொண்டிடும்நா டாரும்வேட்
பாரில்லா நாடாகும் பார்.

—மு. பாரூக், கோட்டாறு.

நாடே திருக்கோயில்; நற்றமிழே நந்தெய்வம்;
ஏடே மலர்க்குவியல்; எண்ணத்தை - ஈடேற்றும்
நேரில்லாச் செய்யுள்தான் நெய்விளக்காம்; நம்நாடொப்
பாரில்லா நாடாகும் பார்.

—சிவ. கிருட்டிணன், கணியூர்.

புன்னைப்பூஞ் சோலைகள் பூத்துக் குலுங்கிடத்
தென்னையின் கீற்றினிலே தென்றல்சேய் - மென்மையாம்
தூரிகையால் பூமித்தாய் தீண்டுமெழில் தன்னைரசிப்
பாரில்லா நாடாகும் பார்.

—கா. கோதண்டரெட்டி, சென்னை-35.

ஊரெல்லாம் ஒன்றே; உலகெல்லாம் நம்கேளிர்;
நேரில்லாச் சொல்லை நிறுவிடடா! - பாரெல்லாம்
போரில்லா நாடாகப் போகுமடா; நம்மைஎதிர்ப்
பாரில்லா நாடாகும் பார்.

—சோ. முத்துமாணிக்கம், பி. எஸ். சி., அலங்கானூர்.

இல்லார் படுதுயரை இன்றுள்வோர் கண்டுலைந்து
வல்லே மணிக்கொன்றாய் வல்வீடு - நல்வசதி
வாரியத்தார் கட்டுதலால் வார்குழலாய் வீடிலையென்
பாரில்லா நாடாகும் பார்.

—புலவர் துரை. பிச்சை, சொரகுளத்தூர்.

ஏரில்லா ஊரும், எழிலில்லா நங்கையும்,
காரில்லாக் காலப் பயிரதுவும் - நேரில்லா
தாரில்லா ஊரில் அமைவுள யாவுந்துய்ப்
பாரில்லா நாடாகும் பார்.

—உமை. இராஜேஸ்வரி, நாகர்கோவில்-3.

அங்கமெலாம் புண்ணாகி, ஆற்றாதார் ஆற்றலுற
தங்க மறுவாழ்வு தந்ததனால் - எங்கோமான்
காரிருளைப் போக்கும் கதிரானார்; இந்நாடேற்
பாரில்லா நாடாகும் பார்.

—புலவர் வீ. கந்தசாமி, செங்கவல்லி.

ஏழ்மை அகற்றுகின்ற இன்பத் திருநாடே
வாழ்வை வளப்படுத்தும் நன்னாடாம் - காழ்ப்பின்றி
ஓர்குலமாய் ஒற்றுமையாய் வாழ்கின்ற நாடுபகைப்
பாரில்லா நாடாகும் பார்.

—எஸ். ஏ. கேசவன், கு. கழுகாசலபுரம்.

கட்டிலில் தூங்கும் கவிஞனைக் கண்டுதன்
தொட்டில் மகவாய்த் தொழுதங்கு - மட்டிலாஇன்
மாரியெனச் சாமரை வீசிய வேந்தர்க்கொப்
பாரில்லா நாடாகும் பார்.

—கா. கோதண்டரெட்டி, செங்கை.

---

● பரிசு பெற்ற வெண்பா எழுதியவர் :—

திரு பாரூக்,
'பாரூக் மன்ஸில்', மேலப்புதுத் தெரு,
கோட்டாறு அஞ்சல், நாகர்கோவில்—2.

வெண்பாப்போட்டி வெண்பாப்போட்டி வெண்பாப்போட்டி வெண்பாப்போட்டி வெண்பாப்போட்டி
வெண்பாப்போட்டி வெண்பாப்போட்டி வெண்பாப்போட்டி வெண்பாப்போட்டி வெண்பாப்போட்டி வெண்பாப்போட்டி வெண்பாப்போட்டி
வெண்பாப்போட்டி வெண்பாப்போட்டி வெண்பாப்போட்டி வெண்பாப்போட்டி வெண்பாப்போட்டி வெண்பாப்போட்டி

வெண்பாப்போட்டி வெண்பாப்போட்டி வெண்பாப்போட்டி வெண்பாப்போட்டி வெண்பாப்போட்டி வெண்பாப்
வெண்பாப்போட்டி வெண்பாப்போட்டி வெண்பாப்போட்டி வெண்பாப்போட்டி வெண்பாப்போட்டி வெண்பாப்
வெண்பாப்போட்டி வெண்பாப்போட்டி வெண்பாப்போட்டி வெண்பாப்போட்டி வெண்பாப்போட்டி வெண்பாப்

ஒன்றிரண்டு பிள்ளை, ஒழிந்திடின் மூன்றேதான்;
என்றதிட்டம் கொண்டுவந்த எம்மரசால் - இன்றுதான்
பாரின் தொகைகுறையப் பார்த்தோம் இனிநகைப்
பாரில்லா நாடாகும் பார்.

—ச. கருணாநிதி, அருப்புக்கோட்டை.

நாடும் மொழியும் நமதுயிரா யெந்நாளும்
பாடு படுதலே பண்பாகி - வாடுதுயர்
வேரில்லா வாழ்வாகி வீறுபெறின், போரிலெதிர்ப்
பாரில்லா நாடாகும் பார்.

—புலவர் கோம்பைச்சிரான், கோம்பை.

நெஞ்சத்துள் வீரம்; நெறிதவறு நற்பண்பு;
அஞ்சுவ தஞ்சலுடன் அஞ்சாமை; - அஞ்சுகமே!
சீரளக்குஞ் செவ்வினையார் சேர்ந்திருக்கக் கண்டுபழிப்
பாரில்லா நாடாகும் பார்.

—ஜெ. மலர்விழி, செந்துறை.

காடு கரம்பெல்லாம் கன்னலுடன் செந்நெல்லும்
நீடு வளரவே நீயுழைத்தால் - தேடுகின்ற
சீரெல்லாம் சேர்ந்துவிடும்; செங்கரத்தால் ஈங்கிரப்
பாரில்லா நாடாகும் பார்.

—புலவர் ந. கருணாநிதி, செங்கை.

வாட்டும் பசிவறுமை, வாழ்வழிக்கும் வேலையின்மை,
ஓட்டும் பணிபுரிவார் உண்டானால் - நாட்டிடையே
போரில்லாக் கொள்கையைப் பூண்டாலுந் நம்மையெதிர்ப்
பாரில்லா நாடாகும் பார்.

—கருவை. இயதா, கரூர்.

கற்பார் நறுந்தமிழைக்; காப்பார்தாய் நாட்டினையும்;
நிற்பார் குறள்வழியில்; நேசிப்பார் - நற்கவியைப்;
பூரிப்பார் நன்னிலத்தில் பொன்விளைப்பார் மற்றெதிர்ப்
பாரில்லா நாடாகும் பார்.

—வயி. அறிவுடைநம்பி, முகவை.

எண்ணில்லா இன்கலைகள்; ஏற்றமிகு வீரமொடு
மண்ணில் புகழ்வளர்த்த வண்டமிழா! - ஒண்மைசேர்
பாரில்நின் பாட்டால்நின் நாடு பிறர்பகைப்
பாரில்லா நாடாகும் பார்.

இரா. சண்முகம், பண்ணைக்காடு.

பொன்னைக் கொடுத்தல்; புதுமை மணம்பரப்பல்
அன்னையினும் மேலாய் அணைத்திடுதல் - இன்னபல
காரியங்கள் செய்வாய்; கடைசியிலே உன்னைநினைப்
பாரில்லா நாடாகும் பார்.

—செல்வி. கோதை, மதுரை—11.

விண்படையும் மண்படையும் வீங்குநீர்த் தன்படையும்
எண்படவே எண்டிசையும் ஆர்ந்திடினும் - பண்புடைத்தன்
னேரில்லாத் தானையர் இங்குண்டேல் நம்மையெதிர்ப்
பாரில்லா நாடாகும் பார்.

—எல். சி. செல்லம், களியங்காடு.

சாதிப் பிரிவினைச் சாக்காட்டை வேதமாய்ப்
போதிக்கும் பண்பில்லாப் புல்லர்கள் - பேதத்தைப்
பாரில் பரப்பினால் என்றென்றும் நீதிகாப்
பாரில்லா நாடாகும் பார்.

—அரச. மணியன், அன்னப்பட்டி.

எத்திப் பிழைப்பவரை எக்களித்து வாழ்வாரைப்
புத்தி புகட்டிடின் பூவுலகில் - சத்தியமாய்ப்
பாரிடத்தே நம்பெருமை பட்டொளிரும்; கையால், ஏற்
பாரில்லா நாடாகும் பார்.

—வ. துரைராசு, பட்டுக்கோட்டை.

ஏதடா வாழ்க்கை இனிநமக் கென்றெங்கும்
ஆதரவற் றோரை அரவணைப்போம் - பேதமில்லாச்
சீருலகை நாம்சமைப்போம்; செந்தமிழா! பிச்சைகேட்
பாரில்லா நாடாகும் பார்.

—க. ச. சூசை, போச்சம்பள்ளி.

கல்விக் கலையழகும் காவியச் சொல்லழகும்
நம்மாதர்க் கற்பழகும் நற்பண்பும் - தொல்புகழால்
பாரினுயர் நாடிங்குப் பாழ்பசியில் லாயினிரப்
பாரில்லா நாடாகும் பார்.

—வித்துவான் வெ. சி. குப்புசாமி, கோவிந்தபுரம்.

பாட்டெழுத ஏடெடுத்தேன் பாமரர்கள் நீர்சொரியக்
கூட்டமாய் முன்னின்றார் ஏனென்றேன் - தீட்டுமென்றார்
பாரறிய எம்நிலையைப் பல்லாண்டாய் இந்நிலைகேட்
பாரில்லா நாடாகும் பார்.

—கலையரசன், வெள்ளையூர்.

பிச்சையெனக் கேட்பார் பெருவாழ்வு பெற்றிடவே
இச்சையொடு தொண்டாற்றும் எம்மரசால்—இச்சகத்தில்
நேரில்லா நன்னுடாம் : நீள்தமிழ் நாடிரப்
பாரில்லா நாடாகும் பார்.

—த. ச. தவசிமணி, அருப்புக்கோட்டை.

ஏழைச் சிரிப்பில் இறைவனைக் காண்பதற்கு
வாழையடி வாழையாய் வாய்ப்பளித்தால்—ஏழையினம்
ஊரினிலே நாட்டினிலே ஓடேந்திப் பிச்சையெடுப்
பாரில்லா நாடாகும் பார்.

—புலவர் அ. வே. காசிநாதன், கோடாலிக் கருப்பூர்.

எல்லாரும் எல்லாமும் எய்தும்நற் கொள்கையால்
பொல்லாரும் இல்லாகிப் போற்றுவர்—நல்லாரே
யாரிடத்தும் கையேந்தி யாசித்துப் பிச்சைகேட்
பாரில்லா நாடாகும் பார்.

—மாதுராசி, மகிழங்கோட்டை.

சட்டந் தனைமதித்துச் சான்றோனே! மக்களெலாம்
திட்டமிட்டு வாழத் தெரிவரேல்—அட்டியின்றிக்
கோரியன கிட்ட, குறைகளையே விண்ணப்பிப்
பாரில்லா நாடாகும் பார்.

—சு. முத்துக்கருப்பன், பேரையூர்.

வள்ளுவன்செய் தேன்குறளும் வண்டமிழ்நூல் நாலடியும்
அள்ளும் சிலப்பதி காரமுமே—சொல்லுகின்ற
சீரிய நன்னெறியில் செல்வோ மெனில்கெடுப்
பாரில்லா நாடாகும் பார்.

—சரோஜா சுந்தரம், எருமப்பட்டி.

உழைப்பே உருவாய் உலவுங் கலைஞர்
அழைப்பின் வழியில் அயரா—துழைத்திட்டால்
நேரில்லா ஏற்றம் நிலவிடும் சோம்பரென்
பாரில்லா நாடாகும் பார்.

—புலவர் அ. ஆறுமுகம், இலப்பைக்குடிக்காடு.

ஏர்த்தொழில் கல்விநலம் ஏழ்மையிலா வாழ்வியல்
தேர்ந்தவிஞ் ஞானத் தெளிவறிவு—போர்முனையில்
மார்பிளக்கும் வன்மை மதிநலஞ் சூழ்ந்தால்ஒப்
பாரில்லா நாடாகும் பார்.

பி. சி. அசனல்லி, நாகவேடு.

மூவேந்தர் ஆண்டிருந்து முத்தமிழைக் கண்டிருந்து
பாவேந்தர் பாட்டில் பயின்றிருந்து—நாவேந்தர்
பூரிக்க வாழ்ந்திட்ட பூந்தமிழ் நாடேஒப்
பாரில்லா நாடாகும் பார்.

—அ. காந்தி, தேவத்தூர்.

பேரறிஞர் தந்தார் பெருந்திட்டம்—ஏழ்மையை
வேரறுக்க! ஆள்வார் வினைமுடிக்கின்—ஊரினிமேல்
ஊரின் அழகை உருக்குலைக்கும் பிச்சையெடுப்
பாரில்லா நாடாகும் பார்.

—ஆர். ஜோதி, குறிஞ்சிப்பாடி.

எல்லார்க்கும் செல்வங்கள், எல்லார்க்கும் இன்பங்கள்
எல்லார்க்கும் எல்லாமும் இல்லென்ப—தில்லாமல்
பாரில் பொருட்கள் பொதுவாகில் இங்கிரப்
பாரில்லா நாடாகும் பார்.

—பொருநைத்துறைவன், சென்னை-24.

கூழின்றி வாடும் கொடுமை அகலமறு
வாழ்வென்ற திட்டம் வகுத்தரசு—ஏழ்மையெனும்
பேரில்லா நாடாய்ப் பெருமைசெய இங்கிரப்
பாரில்லா நாடாகும் பார்.

—எஸ். சுந்தரம், திருச்சி.

எல்லாரும் ஒன்றாக ஏகமாய்ப் பாடுபட்டால்
கொல்லும் வறுமைநமைக் கூடாது—கல்லாக
ஊரிலெங்கும் உண்டுறங்கி ஓய்வாகக் காலமிறப்
பாரில்லா நாடாகும் பார்.

—புலவர் வெ. குமாரசாமி, பாலசமுத்திரம்.

உழைப்பை வணங்கிடுவோம் ஊக்கம் வளர்ப்போம்
இழைப்போம் தொழில்கோடி எங்கும்—மழைக்கண்ணாய்!
ஊரெல்லாம் பல்வளங்கள் ஓங்கிவரும் ஏங்கியிருப்
பாரில்லா நாடாகும் பார்.

—கி. ஆ. வளமதி, திருச்சி-4.

மாரி வறங்கூரின் மக்களொழுக் கங்குலைந்தே
சீரியோர் சொல்லும் செயலுமற—நேரிய
வேரில்லா நீண்மரம்போல் வீழ்ந்தெந்த நாடும்வேட்
பாரில்லா நாடாகும் பார்.

—இராச. ஆனந்தன், காட்டுமன்னார்கோவில்.

கங்கையும் காவிரியும் கூடிக் குலவியே
பொங்குங் குமரியில் போய்ச்சேர்ந்தால்—இங்குயர்
மாரிபொய்த்தா லென்னடியோ! மானே!கேள் பிச்சைகேட்
பாரில்லா நாடாகும் பார்.

—ஆ. இரா. சந்திரன், ஆந்தங்குடி.

நிலையான நல்லாட்சி, நேர்மையெதிர்க் கட்சி
இலையானுல் வன்கண்மை யெங்கும்—தலைதூக்கும்
ஊரெல்லாம் சட்டம் ஒழுங்கழியும், அந்தோகேட்
பாரில்லா நாடாகும் பார்.

—பூ. அண்ணுமலை, மேலச்சேரி.

ஏழ்மை அகற்றுகின்ற இன்பத் திருநாடே
வாழ்வை வளப்படுத்தும் நன்ருடாம்—காழ்ப்பின்றி
ஓர்குலமாய் ஒற்றுமையாய் வாழ்கின்ற நாடுபகைப்
பாரில்லா நாடாகும் பார்.

—க. தி. சண்முகசுந்தரி, புதுக்குடி.

நாடென்ப நாடா வளத்தென்ற வள்ளுவத்தின்
ஏடளிக்கும் பொற்கருத்தை ஏற்று—கோடாது
பார்போற்றும் பண்புள்ள நாடெதுவோ அஃதிரப்
பாரில்லா நாடாகும் பார்.

—ச. ஆ. கேசவன், புளியங்குடி.

காருண்டு, காலப் பயிருண்டு, காலமெல்லாம்
சீருண்டு செல்வச் சிறப்புண்டு ;—நேரிழையார்
ஆறிய கற்புண் டெனவமையும் நாடுபழிப்
பாரில்லா நாடாகும் பார்.

—வே. அரங்கராசன், தாராசுரம்.

நாடாண்டார், நந்தாய் மொழியாண்டார் ; நல்லரசு
பீடாண்டார் ; பண்பு முடியாண்டார்—கோடாது
வாரி வளனுண்டார் மன்னர் ; அதனுல்சாய்ப்
பாரில்லா நாடாகும் பார்.

—புலவர் எம். மண்ணு, உத்திரமேரூர்.

தொந்தி சரிந்துவிழத் தூக்கமும் தான்வெறுக்க
நந்திபோல் ஓரிடத்தில் நாளெல்லாம்—குந்தாது
சீராய் உழைத்திட்டால் சின்னுளில் உண்டுபருப்
பாரில்லா நாடாகும் பார்.

—வங்கனூரான், வங்கனூர்.

இலையென்று பல்லிளித்தே ஈயென நிற்பார்
நிலையுயர்த்தி வாழ்வளிக்கும் நேர்மைக்—கலையூர்தான்
நேரில்லாக் கொள்கையால் நந்தமிழ் நாடிரப்
பாரில்லா நாடாகும் பார்.

—தி. வெ. ஸ்ரீரங்கன், பெரணம்பாக்கம்.

ஊக்கமோ டாள்வினை உள்ளம் கலந்தநற்
சேர்க்கை இவைகொண்டால் செந்தமிழே !—ஆக்கத்திற்
காறில்லார் ஆகி அயலவர்முன் கைவிரிப்
பாரில்லா நாடாகும் பார்.

—கோ. நம்மாழ்வார், களக்காடு.

சீரார் நறுந்தேனும் செந்தமிழை இங்குள்ளார்
பாரா முகமாக்கி வாழ்வரேல்—பேரழிந்த
சீரில்லா வாழ்வேற்கும் தென்னகமே ; நம்மைமதிப்
பாரில்லா நாடாகும் பார்.

—சோ. சு. யுவராசன், அரக்கோணம்.

மக்கள் குறைகேட்டு மக்கள் நலனெண்ணி
மக்கள் உயர்வையே தம்முயர்வாய்—எக்காலும்
சீரெல்லாம் சேராட்சி செய்திடும் நாடுதோற்
பாரில்லா நாடாகும் பார்.

—பழமலைச் சீருரான், வேலூர்.

வீடெல்லாஞ் சாதி வெறும்பேச் சொழித்திட்டால்
நாடெல்லாம் ஓர்மதமே கண்டிட்டால்—ஏடெல்லாம்
சீரில்லாக் கட்டுரைகள் '' சீச்சீ ''யென் றிட்டாலொப்
பாரில்லா நாடாகும் பார்.

—ப. அறவாழி, கோவை.

புத்தம் புதியமலர் பூக்குமே வண்டினங்கள்
சித்தம் மகிழ்ந்ததைச் சேருமே—முத்தமிழர்
ஊரின் வளங்கள் உழைப்பால் பெருக்கஇரப்
பாரில்லா நாடாகும் பார்.

—புலவர் சி. துரைசாமி.

வீரமுண்டு தீரமுண்டு வேறுபா டெண்ணுத
ஈரமுண்டு யாவர்க்கும் வாழ்வளிக்கும்—ஓரமில்லாச்
சீர்மிகு மாட்சியுமுண் டென்னிலது தானெதிர்ப்
பாரில்லா நாடாகும் பார்.

—பி. செல்லத்துரை, கன்னியாகுமரி.



# பள்ளி விவரம்... பள்ளியைப் பற்றி!

பள்ளி செல்லும் வயதடைந்த சிறுவர்கள் அனைவருக்கும் கட்டாயமாகத் தொடக்கக் கல்வி அளிக்கும் பொறுப்பு சட்டப்படி அரசுக்கு விதிக்கப்பட்டுள்ள கடமைகளில் ஒன்றாகும். எனவே, கல்வி மொத்த நிதி ஒதுக்கீட்டில் 50 சதவீதத்திற்கு மேற்பட்ட தொகை தொடக்கக் கல்விக்குச் செலவிடப்படுகிறது.

1. அரசு நிருவாகத்தின் கீழ் உள்ள பள்ளிகள், 2. தனியார் நிருவாகத்தின்கீழ்உள்ளபள்ளிகள் எனப் பள்ளிகளைப் பொதுவாக இருவகைகளாகப் பிரிக்கலாம்.

ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள், நகராட்சிப் பள்ளிகள் மாநகராட்சிப் பள்ளிகள், நகரியப் பள்ளிகள், ஆகியவை அரசு நிருவாகத்தின் கீழ் வருகின்ற பள்ளிகளாகும். மானிய உதவி பெறும் பள்ளிகளும், மானிய உதவி பெறாத பள்ளிகளும் தனியார் நிருவாகத்தில் உள்ள பள்ளிகளாகும்.

* * *

அரிசன நலத்துறையாலும் ஏனைய துறைகளாலும் நடத்தப்படுகிற அரசு தொடக்கப்பள்ளிகளும் இருக்கின்றன. அரிசனங்கள், பழங்குடி மக்கள், பின்தங்கிய வகுப்பினர் ஆகியவர்களைச் சேர்ந்த மாணவர்களுக்காகவும், காட்டுப் பகுதிகளில் உள்ள மாணவர்களுக்காகவும் இப்பள்ளிகள் நடத்தப்படுகின்றன. இந்தப் பள்ளிகளுக்கு ஆகும் செலவு அரிசன நலத்துறைக்கு ஒதுக்கியுள்ள தொகையிலிருந்து செய்யப்படுகிறது.

* * *

தொடக்கக் கல்வித் துறையில் பள்ளி செல்லும் வயதுள்ள எல்லாச் சிறுவர்களையும் பள்ளிகளில் சேர்ப்பதே தலையாய குறிக்கோளாகும். 300 பேர் அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் வாழ்கிற ஒவ்வொரு பகுதியிலும் தொடக்கப்பள்ளி ஒன்றையேனும் ஏற்படுத்துவது நமது நோக்கமாகும். மாணவர்களைப் பள்ளிகளில் சேர்த்துக் கொள்ளும் சதவீதம் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. 1971—72 கல்வி ஆண்டில் பட்டியலில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை 52·31 இலட்சமாகும். 1972—73-ஆம் ஆண்டில் மேலும் ஒரு இலட்சம் மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதுடன், அவ்வாறு சேர்த்துக் கொள்ளும் மாணவர்களை முன்னிட்டும் கல்வியின் தரத்தினை மேம்படுத்துவதற்காகவும் மேற்கொண்டும் 1,600 ஆசிரியர்களை நியமிக்கவும் கருதியுள்ளது.

6—11 வயதுத் தொகுதியிலுள்ள சிறுவர்களை அதிக அளவில் சேர்த்துக் கொண்டதன் விளைவாக, பள்ளிகளில் படிக்கிற 11—14 வயதுத் தொகுதியிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கை உயர்ந்துள்ளது. புதிதாகத் தொடங்கப்பட்டுள்ள உயர்நிலைப் பள்ளிகளைத் தவிர, ஏராளமான பள்ளிகள் உயர் தொடக்கப் பள்ளிகளாகவும், இடைநிலைப் பள்ளிகளாகவும் மாற்றப்பட்டுள்ளன. இந்த வயதுத் தொகுதியிலுள்ள மாணவர்கள் 1971—72 கல்வி ஆண்டில் மொத்தம் 13·46 இலட்சம் பேர் பள்ளிகளில் படிக்கின்றனர். இவ்வாறு சேர்த்துக் கொள்ளப்பட்டவர்களின் சதவீதம் 55·6 சதவீதம் ஆகும். 1972—73-ஆம் ஆண்டில் மேலும் 50000 மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளவும். 1,000 ஆசிரியர்களை நியமிக்கவும் கருதியுள்ளது.

முனைப்பான கல்வி வளர்ச்சிக்காகவும், கற்ற கல்வி பயனன்றி வீணாவதைத் தடுக்கவும், சிறுமியர் கல்வியை வளர்க்கவும், இந்திய அரசு ஏதாவது ஒரு கல்வி மாவட்டத்தில் முன்னோடித் திட்டம் ஒன்றைக் கொண்டு வருவதற்கு ஆதரவளித்துள்ளது. இத்திட்டம் சைதாப்பேட்டை கல்வி மாவட்டத்தில் கொண்டுவரப் பட்டுள்ளது.

* * *

ஆசிரியப் பயிற்சி பெற்றவர் வேலையின்றி இருப்பதை நீக்குவதற்காக 900 இடைநிலைத்தர ஆசிரியர்களை நியமிப்பதற்குத் திட்டத்தின்கீழ் வராத தனி உதவியாக 100 சதவீத உதவி அளிப்பதற்கு இந்திய அரசு முன் வந்துள்ளது. இந்தத் திட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டு 1972 பிப்ரவரி முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

* * *

தொடக்கப் பள்ளிகளிலும் உயர் தொடக்கப் பள்ளிகளிலும் அறிவியல் கற்பிப்பதை மேம்படுத்துவதற்காக ஆய்வுக்கூடச் சாதனங்களை வாங்கும் திட்டம் 1966—67-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. முழுச் செலவு அடிப்படையில் தொடக்கப்பள்ளிக்கு ரூ. 300, உயர் தொடக்கப் பள்ளிக்கு ரூ. 1,000 என்ற அளவில் இந்த மானியம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 1970—71-ம் ஆண்டு இறுதி வரை 8,488 தொடக்கப்பள்ளிகளும், 1,950 உயர் தொடக்கப் பள்ளிகளும் பயன் அடைந்துள்ளன. 1971—72-ம் ஆண்டில் 2,000 தொடக்கப் பள்ளிகளும், 650 உயர் தொடக்கப் பள்ளிகளும் இத்திட்டத்தின் கீழ் உதவி மானியம் பெறும். 1972—73-ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் ரூ. 5 இலட்சம் செலவில் ஆயிரம் தொடக்கப் பள்ளிகளுக்கும், 200 உயர் தொடக்கப் பள்ளிகளுக்கும் மானிய உதவி அளிக்கக் கருதி உள்ளது.

பள்ளியில் கற்பிக்கப்படும் கல்வியின் தரத்தினை மேம்படுத்துவதற்காகத் தொடக்கப்பள்ளிகளிலும் உயர் தொடக்கப்பள்ளிகளிலும் சிறு அளவில் நூலகம் ஏற்படுத்துவதற்கென இணை மானிய அடிப்படையில் மானியம் வழங்கும் திட்டம் மூன்றாவது திட்டக் கால அளவில் செயல்படுத்தப் பட்டிருக்கிறது. 1967—70-ஆம் ஆண்டில், 10,000 தொடக்கப்பள்ளிகளுக்கும், 2,500 உயர் தொடக்கப்பள்ளிகளுக்கும் இவ்வாறு உதவித் தொகை அளிக்கப்பட்டுள்ளது. இணைமானிய அடிப்படையில் தொடக்கப்பள்ளி ஒவ்வொன்றுக்கும் ரூ. 30-ம், உயர் தொடக்கப்பள்ளி ஒவ்வொன்றுக்

கும் ரூ. 60-ம், உதவித்தொகை அளிக்கப்பட்டுள்ளது. பள்ளிகள் இம்மானியத்தைப் பெற வேண்டுமானால், அவை அதற்கு நிகரான தொகையைச் செலவிட முன்வரவேண்டும். 1967—70-ஆம் ஆண்டிற்குப் பிறகு இத்திட்டம் நடத்தப்படவில்லை.

* * *

கிராமப்புறங்களில் முக்கியமாகச் சிறுமியர்களை அதிக அளவில் பள்ளிகளில் சேர்ப்பதற்காகவும், ஆசிரியைகள் கிராமப் பகுதிகளில் குடியிருப்பதை ஊக்குவிப்பதற்காகவும், கிராமப்புறங்களில் ஆசிரியைகளுக்குக் குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகின்றன. 1970—71-ஆம் ஆண்டிலும், 1971—72-ஆம் ஆண்டிலும் இதற்கென ரூ. 5 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1972—73-ஆம் ஆண்டிலும் இவ்வாறே தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தைக் கிராம வளர்ச்சித்துறை இயக்குநர் நிறைவேற்றிவருகிறார்.

* * *

பள்ளிகளின் எண்ணிக்கையும் பள்ளிகளில் சேர்க்கப்படும் மாணாக்கர்களின் எண்ணிக்கையும் இப்போது உயர்ந்துள்ளது. அதனால் பல பள்ளிகளில் போதிய இட வசதி இல்லை. பள்ளிக்கூடக் கட்டடங்கள் கட்டுவதற்கு உள்ளாட்சி மன்றங்களுக்கும் மானிய உதவி பெறும் தனியார் நிருவாகப் பள்ளிகளுக்கும் உதவி செய்வதற்காகச் சமுதாய நலவளர்ச்சி வரவு-செலவுத் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 25·60 இலட்சம் உட்பட 1970—71-ஆம் ஆண்டில் ரூ. 62·60 இலட்சம் அரசு அனுமதித்துள்ளது. ஊராட்சி ஒன்றியம் இராத பகுதிகளிலும், நகராட்சிகளிலும் உள்ள மானிய உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளுக்குக் கொடுக்கப்படத்தக்க மானியம் ரூ. 8,000 ஆகும். சம்பந்தப்பட்ட கல்வி நிருவாகத்தினர் இதற்கு இணையாக ரூ.4,000 பங்குத்தொகை அளிக்க வேண்டும். உயர் தொடக்கப் பள்ளிகளைப் பொறுத்தவரை நிருவாகத்தினர் ரூ. 6,000 அளிக்க முன் வந்தால், அரசு மானியமாக ரூ. 13,000 அளிக்கிறது.

சமுதாய நல வளர்ச்சி வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 18·30 இலட்சம் ஒதுக்கி இருப்பதைத் தவிர, தொடக்கப்பள்ளிகளுக்குக் கட்டடங்கள் கட்டுவதற்காக 1971—72-ம் ஆண்டில் செலவிடுவதற்கென ரூ. 50·10 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1972—73-ஆம் ஆண்டில் இரண்டாம் நிலைக்குப் பிற்பட்ட வளர்ச்சி வட்டாரங்களுக்குத் தொகை ஒதுக்கியிருப்பது உட்பட, இவ்வகையில் ரூ. 50·06 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இது தவிர சமுதாய நல வளர்ச்சி வரவு-செலவுத் திட்டத்தின் கீழ் ரூ. 12·54 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

* * *

தொடக்கப்பள்ளிகளில் கற்பிக்கப்படும் கல்வியின் தரத்தினை மேம்படுத்துவதற்காக மூன்றாவது வகுப்பிலிருந்து ஆங்கிலம் கற்பிப்பதன் பொருட்டுத் தொடக்கநிலை ஆசிரியர் பதவிகளுக்குப் பதிலாக இடைநிலை ஆசிரியர் பதவிகள் ஏற்படுத்துவதற்கு அரசு அனுமதி அளித்துள்ளது. இதுவரை தொடக்க நிலைப்பதிவுகளில் பணியாற்றுகிற இடைநிலை ஆசிரியர்கள், இடைநிலைப் பதவிகளில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

* * *

நண்பகல் உணவுத் திட்டம் 1957-ஆம் ஆண்டிலிருந்து தமிழ்நாட்டில் செயல்பட்டு வருகிறது. சிறுவர்களுக்கு வழங்கப்படும் உணவு நகராட்சிப் பகுதிகளில் மைய இடத்திலும், பிற இடங்களில் தனிப்பட்ட பள்ளிகளிலும் சமைக்கப்படுகிறது. நண்பகல் உணவளிக்கும் நிலையங்கள் அனைத்திற்கும் சிறுவர் ஒருவருக்கு ஒரு வேளை உணவிற்கு 6 காசு என்ற விதிப்படி அரசு மானியம் அளிக்கிறது. பொதுமக்களிடத்திலிருந்தும், ஊராட்சிகளிடமிருந்தும் ரொக்கமாகவோ பண்டமாகவோ மேலும் 4 காசு அளவுக்கு உதவி பெற்று விரைவில் ஒவ்வொரு சிறுவருக்கும் ஒரு வேளை உணவிற்கு 10 காசு வீதம் செலவழிக்கப்படவிருக்கிறது.

அரிசன நலப் பள்ளிகளில் உள்ள மாணவர்கள் உட்பட தொடக்கப் பள்ளிகளிலும், உயர் தொடக்கப் பள்ளிகளிலும் 1 முதல் 8 வகுப்புகள் வரை படிக்கும் ஏழை மாணவர்களில் 18 இலட்சம் பேர் இத்திட்டத்தினால் பயன் அடைகின்றனர். நடப்பாண்டில் மேலும் 36,000 பேர் இத்திட்டத்தின் கீழ் பயன் அடைகின்றனர். 1972—73-ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் மேலும் 4,500 மாணவர்கள் பயன்பெறுவர்.

* * *

வழங்கப்படுகிற உணவின் அளவினையும் தரத்தினையும் உயர்த்துவதற்காக அமெரிக்க 'கேர்' நிறுவனத்தினர் தானியங்களையும், எண்ணெயையும், புரத உணவையும் இலவசமாக வழங்க முன் வந்துள்ளனர். அவர்கள் ஓராண்டுக் காலத்தில் 200 உணவு நாட்களில் 100 நாட்களுக்கு வேண்டிய உணவுத் தானியங்களை வழங்குகின்றனர். 200 நாட்களுக்கும் வேண்டிய எண்ணெயையும், புரத உணவுப் பொருட்களையும், பால்மாவையும் வழங்குகின்றனர். 1970—71 வரை 'கேர்' நிறுவனம் வழங்கிய பொருட்களின் மொத்த மதிப்பு ரூ. 23·60 கோடியாகும்.

* * *

பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியப் பகுதியில் பள்ளி மாணவர்களுக்கு நண்பகல் உணவு வழங்குவதற்காக 'கேர்' நிறுவனத்தின் உதவியுடன் முன்னோடித் திட்டமாக மையச் சமையற்கூடம் ஒன்றை இந்த அரசு 1967—68-ஆம் ஆண்டில் தொடங்கியது. மையச் சமையற்கூடத்தில்

## ஆவடியின் பெருமை

ஆவடியிலுள்ள கனரக வண்டிகள் தொழிற்சாலை 1961 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. போரிடுவதற்குப் பயன்படும் கவசப் பாதுகாப்புடைய எல்லா வகை வண்டிகளையும், இராணுவத்தினருக்குத் தேவைப்படும் ஏனைய கனரகப் பொறியியல் வண்டிகளையும் சாதனங்களையும் இது உற்பத்தி செய்யும் திறனுள்ளதாகும். இத்தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களினால் வெளிநாடுகளிலிருந்து பொருள்கள் இறக்குமதி செய்வது குறைந்தது. அதன் பலனாக 1969ஆம் ஆண்டிலே சுமார் 9½ கோடி ரூபாய் மதிப்புக்கு அந்நியச் செலாவணி மிஞ்சியது. 1971ஆம் ஆண்டில், இத் தொழிற்சாலையின் உற்பத்தி மதிப்பு மேலும் உயர்ந்துள்ளது.

## பிழைபட எழுதேல்!

குறிப்பாக — சிறப்பாக என்னும் இரு வேறு சொற்களையும் பலர் சரியாகப் பயன்படுத்துவதில்லை.

குறிப்பாக என்பது பொதுவான ஒரு சொல். சிறப்பாக என்பது, சிறப்பைக் குறிப்பது. ஆம் அவர் குறிப்பாகப் போரைப் பற்றிய பல்வேறு செய்திகளைச் சொன்னார். அவற்றுள் சிறப்பாக வங்க தேச விடுதலையை விளக்கினார் என்றே குறிப்பிட வேண்டும்.

* * *

தமிழ் நாட்டில் மக்கட் தொகைக் கணக்கெடுப்பில் தமிழர்கள் நாலரைக் கோடி என்று கணக்கிடப்பட்டது என்கிறோம். மக்கள் + தொகை என்பது சேரும்போது, மக்கட் டொகை என்றேயாகும். இதனை மக்கட் தொகை என்று குறிப்பது தவறு.

---

மின்சாரச் சாதனங்களின் உதவியுடன் துப்புரவான நிலையில் புறத்திலுள்ள பள்ளிகளுக்கு மூடப்பட்ட வண்டிகளில் உணவு எடுத்துச் செல்லப்படுகிறது. இத்திட்டம் வெற்றிகரமாகச் செயல்பட்டதால், 'கேர்' நிறுவனத்தினர் வாயு ஸ்டவ் அடுப்புடன் 30 மையச் சமையற்கூடங்களைச் செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு மாவட்டங்களிலுள்ள 30 ஊராட்சி ஒன்றியங்களில் 1969-ஆம் ஆண்டு கட்டியதுடன், ஒவ்வொரு மையச் சமையல் கூடத்திற்கும் ரூ. 2 இலட்சம் என்ற வீதப்படி உதவி அளித்தது. கடந்த ஆண்டில் மேலும் 30 சமையற்கூடங்களை அமைப்பதற்கு அனுமதி அளிக்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. 1971–72-ஆம் ஆண்டில் மேலும் 30 மையச் சமையற்கூடங்களை நிறுவுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. 1972–73-ஆம் ஆண்டில் 'கேர்' நிறுவனத்தின் உதவியுடன் 30 மையச் சமையற்கூடங்களைக் கட்டக் கருதியுள்ளது. 30 சமையற்கூடங்களைக் கட்டுவதற்கு மாநில அரசின் செலவுப் பொறுப்பு ரூ. 3 இலட்சமாகும்.

* * *

நண்பகல் உணவுத் திட்டத்தை மேலும் பரப்புவதற்காக, 'கேர்' நிறுவனம் அளிக்கும் உணவுப் பொருட்களைச் சேமித்து வைக்கும் பொருட்டுத் தமிழ் நாட்டில் 10 வட்டாரக் கிடங்குகளை ரூ. 30 இலட்சம் செலவில் கட்டத் தீர்மானித்துள்ளது. இச் செலவில் 90 சதவிகிதத்தைக் 'கேர்' நிறுவனம் தருகிறது. வட ஆர்க்காடு மாவட்டத்தில் திருவலம், கோயம்புத்தூர் மாவட்டத்தில் சேனைபுரைபாளையம், கவுண்டர் பாளையம், தருமபுரி ஆகிய இடங்களில் வட்டாரக் கிடங்குகள் இப்போது செயல்பட்டு வருகின்றன; வேறு இரண்டு இடங்களில் பணி நடைபெற்று வருகிறது.

* * *

1 முதல் 3 வகுப்புகளில் நண்பகல் உணவு பெறுகிற ஏழைச் சிறுவர்களுக்குப் பாடப் புத்தகங்களும், எழுது பலகைகளும் இலவசமாக வழங்கப்படுகின்றன. சுமார் 11 இலட்சம் சிறுவர்கள் புத்தகங்களை இலவசமாகப் பெறுகின்றனர். 1 முதல் 3 வகுப்பு வரை படிக்கிற ஏழை மாணவர்களில் மேலும் 33,000 பேர் 1972–73-ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் பயன் பெறுவர்.

* * *

சிறுவர் பள்ளிகள் மாவட்டக் கல்வி அதிகாரிகளின் பொறுப்பிலும், சிறுமியர் பள்ளிகள் சிறுமியர் பள்ளிகளின் ஆய்வாளர்கள் பொறுப்பிலும் இருக்கின்றன. மாநிலத்தில் சிறுமியர் பள்ளிகள் ஆய்வாளர்கள் ஆறுபேரும், மாவட்டக் கல்வி அதிகாரிகள் 46 பேரும் உள்ளனர்.

இம்மாநிலத்தில் 1,476 அரசுப் (வாரியம்) பள்ளிகள் இருக்கின்றன. பல்வேறு வகைப்பட்ட சுமார் 26,000 ஆசிரியர்களும், ஆசிரியரல்லாத சுமார் 5,600 பணியாளர்களும் இந்தப் பள்ளிகளில் பணியாற்றுகின்றனர்.

* * *

பயிற்சிப் பள்ளிகள்—(1) அடிப்படைப் பயிற்சிப் பள்ளிகள், (2) ஏனைய பயிற்சிப் பள்ளிகள் என இருவகைப் பயிற்சி நிறுவனங்கள் உள்ளன. ஒவ்வொன்றிலும் பயிற்சிக் கால அளவு இரண்டு ஆண்டுகளாகும். மாநிலத்தில் 5 பாலர் பள்ளிகள், ஒரு ஆங்கிலோ—இந்தியப் பயிற்சிப் பள்ளி நீங்கலாக, 133 பயிற்சிப் பள்ளிகள் இருக்கின்றன. அவற்றுள், 75 பள்ளிகள் அரசுப் பள்ளிகளாகும். 58 பள்ளிகள் மானிய உதவி பெறுபவை.

* * *

பார்வையற்றோர் அரசுப் பள்ளி, பூவிருந்தவல்லி: இந்தப் பள்ளியின் கல்வி, தொழிற் பிரிவுகளில் உள்ள மாணவர்களுக்குக் கல்வி வசதி, உறையுள் வசதி, உணவு, மருத்துவ வசதி, புத்தகங்கள் ஆகியவை இலவசமாக வழங்கப்படுகின்றன. கோடைக்கால விடுமுறையில் மாநில அரசுச் செலவில் பள்ளியிலிருந்து வீடு செல்வதற்கும், பின்னர் பள்ளிக்குத் திரும்பி வருவதற்கும் மாணவர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள். இப் பள்ளியில் தற்போது 325 பேர் படிக்கின்றனர். (சிறுவர்கள் 217, சிறுமியர் 188).

தென்னிந்திய மாநிலங்கள் நான்கின் தேவையை நிறைவு செய்ய, பூவிருந்தவல்லி, பார்வையற்றோர் அரசுப் பள்ளி முதல்வரின் நிருவாகப் பொறுப் பின்கீழ், வட்டார "பிரெயில் முறை" அச்சகம் ஒன்று பூவிருந்தவல்லியில் அமைக்கப்பட்டுள்ளது. தமிழ், கன்னடம், தெலுங்கு, மலையாளம் ஆகிய வட்டார மொழிகளில் "பிரெயில்" முறையில் பாட நூல்களை அச்சிட்டு வழங்கும் பணியை இந்த அச்சகம் மேற்கொண்டிருக்கிறது. மேற்சொன்ன பணிக்குத் தேவைப்படும் இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ளன. பணி முன்னேற்றம் அடைந்து வருகிறது. இந்த அச்சகம் குறித்து ஆகும் செலவில் பாதியை இந்திய அரசு ஏற்றுக் கொள்கிறது. தமிழ்நாடு, ஆந்திரம், மைசூர், கேரளம் ஆகிய நான்கு தென்னிந்திய மாநிலங்கள் எஞ்சிய பாதிச் செலவைச் சமமாக ஏற்றுக் கொள்கின்றன. இச் செலவு தொடக்கத்தில் தமிழ்நாடு அரசால் செய்யப்படுகிறது. பின்னர் ஏனைய 3 மாநிலங்களாலும் இந்திய அரசாலும் செலவுத் தொகை திருப்பிக் கொடுக்கப்படுகிறது.

தென்னிந்திய மாநிலங்கள் நான்கின் தேவைகளை நிறைவு செய்வதற்குப் பூவிருந்தவல்லி பார்வையற்றோர் அரசுப் பள்ளியில் வட்டாரப் பயிற்சி நிலையம் ஒன்று இந்திய அரசால் நடத்தப்பட்டு வருகிறது. இந் நிலையத்தில் ஏற்கெனவே 14 ஆசிரியர்கள் பயிற்சி பெற்றுள் ளனர். 9 ஆசிரியர்கள் தற் போது பயிற்சி பெற்று வரு கின்றனர்.

* * *

கீழ்த்திசை மொழிகளுக்கான பள்ளிகள்—கீழ்த்திசைப் பள்ளி கள் மூலம் சமஸ்கிருதம், அரபு மொழி போன்ற கீழ்த்திசை மொழிகள் கற்பிக்கப்படுகின்றன. சமஸ்கிருதத்திற்காக 10 கீழ்த் திசை உயர்நிலைப் பள்ளிகளும், 3 கீழ்த்திசை நடுத்தரப் பள்ளி களும் தனியார் அமைப்பு களால் நடத்தப்படுகின்றன.

* * *

ஆங்கிலோ—இந்தியப் பள்ளி கள்—சிறுபான்மையினரான ஆங்கிலோ—இந்திய வகுப்பின ருக்காக, 45 ஆங்கிலோ— இந்தியப் பள்ளிகள் (40 உயர், நிலைப்பள்ளிகள், 4 தொடக்கப் பள்ளிகள், 1 பயிற்சிப் பள்ளி) உள்ளன. இப்பள்ளிகள் தனிப் பட்ட நிறுவனங்களின் நிருவா கத்திலும், இந்திய இரயில்வே துறையின் நிருவாகத்திலும் நடத்தப்படுகின்றன.

* * *

படையினர் பள்ளிகள்:— கோயம்புத்தூர் வட்டம், அம ராவதி நகரில் 1962 சூலையில் இந்திய அரசு சென்னைப் படை யினர் பள்ளியை நிறுவியது. தேசியப் பாதுகாப்புக் கழகத் தில் அல்லது வாழ்க்கையில் பிற தொழில்களின் சேர்வதற்காக, மாணவர்களைக் கல்வி அறிவிலும் உளப் பாங்கிலும், உடற்பாங்கி லும் பொலிவு பெற்ற இளைஞர் களாகத் தயார் செய்வதே இப் பள்ளியின் நோக்கமாகும்.

இப்பள்ளி 55 மாணவர் களுக்குப் பயிற்சி அளிக்கிறது. இப்பள்ளியில் 5-வது வகுப்பு முதல் 11-வது வகுப்புவரை இருக்கிறது. 2 ஆண்டிற்கு ஒரு முறை சனவரி பிப்ரவரி திங்க ளில் நடத்தப்படுகிற அனைத் திந்திய நுழைவுப் பொதுத் தேர்வின் முடிவுகளை யொட்டி இப்பள்ளியில் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்ற னர்.

* * *

பொது மக்களுக்கு இலவச நூலகப் பணி செய்யவும், ஒவ்வொரு வருவாய் மாவட் டத்தின் தலைமை இடத்திலும் மாவட்ட மத்திய நூலகம் திறக்கவும், ஐயாயிரம் அல்லது ஐயாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் தொகையையுடைய நக ரில் அல்லது ஊரில் கிளை நூலகம் திறக்கவும், ஆயிரம் அல்லது ஆயிரத்துக்கு மேற் பட்ட மக்கள் வசிக்கும் கிராமத்தில் அல்லது ஊரில் புத்தகங்கள் வழங்கும் நிலையம் திறக்கவும், ஆயிரத்துக்கும் குறைந்த மக்கள் தொகை யுடைய மூன்று வட்டாரங் களைச் சேர்ந்த ஒரு தொகுதிக்கு ஒரு நிலையம் திறக்கவும், 1948-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது நூலகச் சட்டத்தின் விதித்துறைகளின்படியும், அதன் கீழ்ச் செய்யப்பட்ட விதிகளின் படியும் உள்ளாட்சி நூலக ஆணைக்குழுக்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் தமிழ் நாட்டில் தற்போது 13 மாவட்ட மத்திய நூலகங் களும் 1,437 கிளை நூலகங் களும், 1,882 புத்தகம் வழங் கும் நிலையங்களும் உள்ளன.

## ல்யூப் எண்ணெய்

இந்திய எண்ணெய்க் கழ கத்தின் கலவை 'ல்யூப்' எண் ணெய்த் தொழிற்சாலை, 1970 ஏப்ரல் திங்களில் அமைக்கப்பட் டது. இது மணலியில், ரூ. 1·2 கோடி செலவில் நிறு வப்பட்ட மோட்டார் இரசா யன எண்ணெய்க் கலவைத் (லூப்) தொழிற் சாலையாகும். இது 1·4 இலட்சம் டன் ல்யூப் கலவை எண்ணெய் உற்பத்தி செய்யும் திறனுடையதாகும். இது சுமார் 110 பேர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கிறது.

ல்யூப் எண்ணெய்யும் (Lube Oil) நிலக்கீல் கொண்டு தயாரிக்கப்பட்ட பொருட்களையும் வைத்திருப்பதற்கான பீப்பாய் களைத் தயாரிக்கும் தொழிற் சாலை ஒன்றும் நிறுவப்பட்டு வரு கிறது.

* * *

கிராமப் பகுதிகளில் இருந்து வரும் திறமை மிகுந்த மாணவர் களுக்குப் படிப்புதவித் தொகை கள் அளிக்கும் திட்டம் ஒன்றை இந்திய அரசு தொடங்கி வைத்துள்ளது. இத்திட்டத்தின் ஒவ்வொரு சமுதாய வளர்ச்சி வட்டாரத்திலும் அதாவது ஊராட்சி ஒன்றியப் பகுதியிலும் இரண்டு படிப்புதவித் தொகை கள் கொடுக்கப்படுகின்றன. பள்ளிக்கு வெளியே இருந்து வந்து படித்து விட்டுப்போகும் மாணவர்கள் ஒவ்வொருவருக் கும் ரூ. 500-ம் பள்ளி உறை விட மாணவர்களுக்கு ரூ. 1,000-ம் படிப்புதவித் தொகை அளிக்கப்படுகிறது. இவ்வாண்டிலிருந்து இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

* * *

சென்னை மாநிலக் கல்வி நிறுவனம் 1965 சூலை முதல் நாளன்று ஏற்படுத்தப்பட்டது. தேசிய நிலையில் தேசியக் கல்வி ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவ னத்தைப் போன்று மாநில நிலையில் அமைக்கப்பட்ட இந் நிறுவனம், கல்வி வளர்ச்சி பற்றியும் குறிப்பாகத் தொடக்கக் கல்வியின் தரமான சீரமைப்புப் பற்றியும் கவனித்து வருகிறது. பணியிருப்புப் பயிற்சிக் கருத்தரங்குகள், ஆராய்ச்சி, வெளியீடுகள் விரிவுப் பணிகள் ஆகியவற்றிற்கு ஏற் பாடு செய்வது இந்நிறுவனத் தின் அலுவலாகும். கல்விப் பயிற்சி அளித்தல் முதலியவை சம்பந்தப்பட்ட பல்வேறு பொருட்கள் குறித்து இந் நிறுவனத்தால் ஆராய்ச்சி நடத் தப்பட்டு வருகிறது.

இந்நிறுவனத்துடன் தொடக் கக்கல்வி விரிவுப் பணி நிலையம் ஒன்றும் இணைக்கப்பட்டுள்ளது. இந்நிலையத்தை நடத்துவதற் கான செலவு முழுவதையும் தேசியக் கல்வி நிறுவனம் ஏற்றுக் கொள்கிறது. தொடக்கக்கல்வி விரிவுப் பணிக்காகத் திருப்பெரும் பூதூர், பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியப் பகுதிகள் ஒவ்வொன் றிலும் 25 பள்ளிகள் தேர்ந் தெடுக்கப்பட்டுள்ளன.

# சத்துணவில் ஒரு சாதனை!



மக்களுக்குச் சத்தான உணவை வழங்குவதற்காகத் தமிழ்நாடு அரசு பல வகைகளில் பணியாற்றி வருகிறது; ஆடு, கோழி, பன்றி இறைச்சிகளைத் தரமாகவும், சத்துள்ளதாகவும் தர, பண்ணைகள் மூலம் மக்களுக்கு உதவி வருகிறது. இந்த வகையில், புரதச் சத்துக்கள் மிகுந்த மீன் உணவை மக்களுக்கு அளிக்கும் பொருட்டும், மீன் வகைகள் பற்றி ஆராய்ச்சிகள் செய்யவும், தமிழ்நாடு மீனளத் துறை சிறப்பாகச் செயலாற்றி வருகிறது. இத்துறை ஆற்றும் பணிகள் மீனைவிடச் சுவையானதாகும்! அவை என்னென்ன என்பதைத் தெரிந்து கொள்வோமா?

மீன்வளத்தை வணிக முறையில் மேம்படுத்துவதற்கேற்ற வாய்ப்புக் கூறுகளாகிய ஆழ்கடலையும், ஆறு, ஏரி, குளம் போன்ற அகநாட்டு நீர்நிலைகளையும் தமிழ்நாடு பெருமளவு பெற்றுள்ளது. மீன் பிடிப்பதற்கேற்ற 77,700 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுள்ள கடற்பகுதியுடன், தமிழ்நாட்டுக் கடற்கரை 1,000 கி.மீ. நீளமுள்ளதாக அமைந்துள்ளது. வரையறையற்ற ஆழ்கடல் பரப்புடன் தொலைகடல் பகுதி (60—240 அடி ஆழமுள்ள) 21,75,591·60 ஹெக்டேர் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அகநாட்டு நீர் நிலைகளின் பரப்பளவு 7,90,000 ஹெக்டேராகும்.

கடல் வளங்களை முழுதும் பயன்படுத்திக் கொள்ளும் நோக்கத்துடனும், மீன் உற்பத்தியைப் பெருக்கும் நோக்கத்துடனும் இத்துறை பல்வேறு மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்தி வந்துள்ளது. இதில் மிக முக்கியமான திட்டம், தவணைக் கொள்முதல் அடிப்படையில் மீன்பிடி விசைப்படகுகள், நைலான் வலைகள் ஆகியவற்றை வழங்குவதாகும். ஏனைய திட்டங்களில், மீன்களைக் கரை சேர்க்கும் முக்கியமான இடங்களில் பனிக்கட்டி இயந்திரங்கள், குளிர்பதனச் சாதனங்கள், மீன் உறைய வைக்கும் தொழிற்சாலை ஆகியவற்றிற்கு வகை செய்தல், மீன்களைக் கரை சேர்ப்பதற்கும், மீன்பிடி படகுகளை நிறுத்தி வைப்பதற்குமான வசதிகளுக்கு வகை செய்தல் போன்றவை அடங்கும்.

மீனவர்களின் நலனுக்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. மீனவர்கள் தங்களுக்குத் தேவைப்படும் மரக்கலங்களையும், கருவிகளையும் பெறுவதற்கும், தமது வருவாயை உயர்த்திக் கொள்ளவும் வாழ்க்கை நிலைமையை மேம்படுத்திக் கொள்ளவும் உதவும் வகையில், மீனவர்களுக்கு நிதி உதவியும், சாதனங்கள் உதவியும் அளிக்கப்படுகின்றன. மீனவர்க் குப்பங்களை முதன்மைச் சாலைகளுடன் இணைப்பதற்காக இணைப்புச் சாலைகள் அமைக்கப் பட்டுள்ளன.

அறிவியல் முறையில் மீன் குஞ்சுகளை வளர்த்து நீர்த் தேக்கங்களில் விடுவதற்கும், அவற்றைப் பாதுகாப்பதற்கும், பயன்படுத்துவதற்கும், உள்நாட்டுப் பகுதிகளிலுள்ள பெரிய நீர்த் தேக்கங்கள் அனைத்தும் இத்துறையினால் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

எல்லாத் திட்டங்களையும் நாம் மேற்கொண்டு வெற்றிகரமாக முடிக்கையில் மீன் உற்பத்தியில் பெருஞ்சாதனையை எய்த இயலும். வேளாண்மைத் துறையில் ''பசுமைப் புரட்சியை'' அடைந்திருப்பது போலவே, மீன் வளத்துறையில் ''கடல் வளப் புரட்சியைக்'' ( Blue Revolution ) கொண்டு வரும் பெருமை தமிழ் நாட்டிற்கே உரியதாகும்.

கடல் மீன் பிடிப்பின் ஆண்டு அளவு 1951-ல் 0·44 இலட்சம் டன்களிலிருந்து 1971-ல் 2·10 இலட்சம் டன்களாக ஒரே சீராக உயர்ந்துள்ளது. நான்காவது ஐந்தாண்டுத் திட்ட இலக்கு 3 இலட்சம் டன்னாகும். அடுத்து வரும் இரண்டாண்டுகளில் இந்த இலக்கை எய்த வேண்டியுள்ளது. இது போன்றே அக நாட்டு மீன் பிடிப்பு அளவும் 1951-ல் 0·34 இலட்சம் டன்னாக இருந்தது. 1971-ல் 1·20 இலட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. திட்டத்தின் இறுதிக் காலத்தில் இதன் அளவு 2·00 இலட்சம் டன்னாக உயரும்.

இம்மாநிலத்தில் மீன்பிடி தொழிலில் புது முறைகளை மேற்கொள்வதற்காக மீன்பிடி விசைப்படகுகளைப் பயன்படுத்துவதற்கும், மீன் உற்பத்தியைப் பெருக்குவதற்கும் அரசு முயற்சி எடுத்துள்ளது. புதிய படகு ஒவ்வொன்றும் மீன் பிடிக்கும் தொழிலுக்குப் பயன்படுத்தப்படும் போது, ஆண்டு ஒன்றுக்குச் சராசரி மீன் உற்பத்தி 75 டன் முதல் 100 டன் வரை அதிகரிக்கும். கடந்த 20 ஆண்டுகளில் மீனளத் துறை மேம்பாட்டுத் திட்டத்தின் முதன்மைப் பணி, மீன்பிடி விசைப்படகுகளைக் கொண்டு வருவதாகவே இருந்து வந்துள்ளது. மீனளத் துறைக்காக ஒதுக்கப்படும் திட்ட நிதி ஒதுக்கத்தில், ஒவ்வோர் ஆண்டும் இதற்காக 70 சதம் ஒதுக்கப் படுகிறது.

நான்காவது திட்டத்தில் மீனளத் துறையின் மூலம்

1,000 படகுகளைக் கட்டி வழங்கவும், வேளாண்மை மறு நிதி உதவிக் கழகத்தின் உதவியுடன் மீனவர் கூட்டமைப்புகள் மூலம் 275 படகுகளைக் கட்டி வழங்கவும் திட்டமிடப்பட்டிருக்கிறது. இத் திட்டத்தில் 1970–71-ல் ரூ. 116·59 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. தனியார் நிறுவனங்கள் மூலம் கட்டப்பட்ட 40 படகுகளைத் தவிர 146 படகுகள் துறையைச் சேர்ந்த படகு கட்டும் தளங்களில் கட்டப்பட்டன. மேலும் 40 படகுகள் கட்டும் பணி பல்வேறு நிலைகளில் இருந்தது. 1971–72-ஆம் ஆண்டில் துறையைச் சேர்ந்த படகு கட்டும் தளங்களில் 150 படகுகளும், தனியார் படகு கட்டும் தளங்களில் 50 படகுகளும் கட்டுவதற்கான திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளது. 1972–73-ல் 200 மரக்கலங்கள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. 1971, மார்ச்சு 31-ம்நாள் முடிய இத் திட்டத்திற்கு ரூ. 5·71 கோடி செலவிடப்பட்டுள்ளது; 1,198 படகுகள் கட்டப்பட்டு நமது மாநில நீர் நிலைகளில் இயங்கி வருகின்றன.

பதினைந்து அடி நீளமுள்ள இரும்பு-சிமிட்டி (Ferro-Cement) படகு ஒன்றையும், 38 அடி நீளமுள்ள மற்றொரு இரும்பு-சிமிட்டிப் படகு ஒன்றையும், வெற்றிகரமாக வெள்ளோட்டம் விட்டதன் மூலம் படகு கட்டுவதில் மலிவான மாற்றுச் சாதனங்களைப் பயன்படுத்துவதில் தமிழ்நாடு 1971–72-ல் மகத்தானதோர் சாதனையை எய்தியது. இந்த ஆண்டில் 38 அடி நீளமுள்ள 7 இரும்பு சிமிட்டிப் படகுகளை மேலும் கட்டத்திட்டமிடப்பட்டுள்ளது. 38 அடிநீளமுள்ள இரும்பு-சிமிட்டிப் படகு ஒன்றைக் கட்டி வெள்ளோட்டம் விட்டதில் வெற்றி கிட்டியதால், 1972–73-ல் 38 அடி நீளமுள்ள படகுகள் 25-ஐயும், 44 அடி படகுகள் 2-ஐயும், 54 படகுகள் 2-ஐயும் கட்டுவதற்கென முறையான படகு கட்டும் தளம் ஒன்றை நிறுவ முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்தியாவில் உள்ள கடல் சார்ந்த மாநிலங்கள் அனைத்திலும் தமிழ்நாடுதான் இப்பணியில் முதன்மை வகிக்கிறது. தற்போது நமது மாநிலம் பெரிய அளவிலான இரும்பு-சிமிட்டிப் படகுகளைப் பெருமளவில் கட்டும் பணியை மேற்கொண்டுள்ளது.

படகுகள் வழங்குவதில் ஏற்படும் தாமதத்தை நீக்குவதற்காகப்படகுகள் வழங்குவதற்காக முன்கூட்டியே சீட்டுக் குலுக்கிப் பார்க்குமாறு அரசு அண்மையில் ஆணை பிறப்பித்துள்ளது. இம் முடிவிற்கேற்ப, படகுகள் ஒதுக்கப் பெறுபவர்களின்பெயர்கள் நிதியாண்டின் தொடக்கத்திலேயே அதாவது, படகுகள் கட்டி முடிப்பதற்கு முன்னரே சீட்டுக் குலுக்கலின் வாயிலாகத் தேர்ந்தெடுத்துப்படகுகள் கட்டி முடிக்கப்பட்டவுடன் படகு ஒதுக்கப்பட்டவர்களுக்கு அவை அளிக்கப்படுகிறது.

---

### கல்லும் கதை சொல்லும்.

சானூர் என்னும் கிராமம், மதுராந்தகம் வட்டத்தில் சென்னை-திருச்சிச் சாலையில் அமைந்துள்ளது. அங்கே சாலையின் அருகில் பெருங்கற்கள் வட்ட வடிவமாக அமைந்துள்ளதைக் காணலாம். இவற்றை ஆங்கிலத்தில் 'Megalittic burial எனக் கூறுவார்கள்.

முற்காலத்தில் இறந்தவர்களைப் புதைப்பதற்காகக் குழி தோண்டிக் குழியின் நான்கு புறங்களிலும் கற்பலகைகளைச் செங்குத்தாக மண் சரியாமல் இருப்பதற்காக வைப்பார்கள். பிறகு இறந்த உடலுடன், இறந்தவன் உபயோகித்த மட்பாண்டங்கள், நகைகள் போன்றவைகளை வைத்து மூடிவிடுவார்கள். இதனை அயல் நாட்டு அறிஞர் வீலர் என்பவர் ஆராய்ச்சி செய்து கி. மு. 200-லிருந்து கி. பி. 5 வரைக்குள் இடைப்பட்ட காலத்தில் ஏற்பட்டு இருக்கலாம் என்று கூறுகிறார். இதைப் போன்ற கற்களின் அமைப்பை, பெரும்பேர் என்னும் கிராமத்திலும், சென்னைக்கு அருகில் உள்ள குன்றத்தூரிலும் காணலாம்.

---

இதுவரை, தெரிந்தெடுக்கப்பட்ட இரண்டொரு வகைப் பொறிமட்டும் பொருத்தப்பட்ட படகுகள் மீனவர்களுக்குச் சீட்டுக் குலுக்கலின் வாயிலாக வழங்கப்பட்டு வந்தன. 1972–73 முதற்கொண்டு படகு ஒதுக்கப் பெற்றவர் தம் விருப்பத்திற்கேற்றவாறு உள்நாட்டுப் பொறியைத் தெரிந்தெடுக்கும் வாய்ப்பினைப் பெறுவார். அவ்வாறு அவரால் தெரிந்தெடுக்கப்படும் பொறி, மீனளத் துறையால் வாங்கப்பட்டு அவருக்கு வழங்கப்படும் வாய்ப்பினைப் பெறுவார். அவ்வாறு அவரால் தெரிந்தெடுக்கப்படும் பொறி, மீனளத்துறையால் வாங்கப்பட்டு அவருக்கு வழங்கப்படும் படகில் பொருத்தப்படும். ஆனால், படகு ஒதுக்கப் பெற்றவர் அதிக விலையுள்ள பொறியைப் பெற விரும்புவாராயின், அவர் தெரிந்தெடுக்கும் பொறியின் விலைக்கும், ஏற்கெனவே குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலைக்கும் உள்ள வேறுபாட்டுத் தொகையை முழுவதும் செலுத்திவிட வேண்டும். இந்த வேறுபாட்டுத் தொகையைத் தவணைகளில் வசூலிப்பது குறித்தும் அரசு பரிசிலனை செய்துவருகிறது.

தனிப்பட்ட தொழில் முனைவர்களும், மீன்பிடிக்கும் இயந்திரப் படகுகளைப் பயன்படுத்துவதற்கு இயலும் ஒரு திட்டத்திற்கு அரசு அனுமதித்துள்ளது. இத் திட்டத்தின்கீழ், படகு வாங்குபவர் படகின் அடக்க விலையில் 20 சதவீதம் முதலீடு செய்யவேண்டும். அரசு 20 சதவீதம் வரை வட்டியில்லாக் கடனாகக் கொடுத்து உதவும். எஞ்சிய தொகை, தொழில் முனைவர்கள் கொடுக்கும் பிணையத்திற் கேற்ப வேளாண்மை மறுநிதி உதவிக் கழகம், வேளாண்மை நிதியுதவிக் கழகம், வணிக வங்கிகள் முதலிய நிதியுதவி நிறுவனங்களிடமிருந்து பெறப்படும். இத்திட்டத்தின்கீழ் 1971–72-ல், 30 அடி படகுகள் 40-க்கும், 32 அடி படகுகள் 10-க்கும் கடன் வழங்குவதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது. அனைத்து அளவு படகுகளுக்கும், இத் திட்டத்தை நீடிக்க அரசு ஆய்வு செய்து வருகிறது.

ஐம்பத்தேழு அடி நீளமுள்ள நான்கு உருக்கு இழுபடகுகள் (Steel Trawlers) கட்டப்படவிருக்

கிறது. தமிழ் நாட்டின் தொலை கடல் பகுதிகளில் மீன்பிடிப்பதற்காக இந்த இழுபடகுகள் ஆய்வுகள் நடத்தும். சென்னை, மண்டபம், தூத்துக்குடி ஆகிய இடங்களில் இந்த இழு படகுகள் இருக்கும். இரண்டு இழு படகுகள் துறையின் பொறுப்பில் எடுத்துக் கொள்ளப்பட்டு 1—3—1972-ல் சென்னைக்குக் கொண்டு வரப் பட்டன. ஏனைய இரண்டு படகுகளும், கல்கத்தாவில் மற்றொரு கப்பற் கட்டுந்தளத்தில் வெவ்வேறு உருவாகும் நிலையில் உள்ளன. இந்த ஆண்டின் பிற்பகுதியில் அவை இங்கு ஒப்படைக்கப்படும்.

மீனவர்களுக்கு விசைப்படகுகளுடன் வழங்கப்படுவதற்காக 1970—71ல், 14 டன் நைலான் நூல் வாங்கப்பட்டது. மீனவர்களுக்கு விசைப் படகுகளுடன் வழங்கப்படுவதற்காக, 1971—72-ல் ரூ. 7 இலட்சம் செலவில் 17 டன் நைலான் நூல் வாங்கப்படுவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. அவர்களுக்கு விசைப்படகுகளுடன் நைலான் நூல் ஈடு செய் விலையில் தொடர்ந்து வழங்கவும் தீர்மானித்துள்ளது. இதற்காக 1972—73-ஆம் ஆண்டிற்கு ரூ. 3 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களுக்கு ஈடு செய்விலையில் நைலான் நூல் வாங்கிப் பகிர்ந்தளிக்கப் படுவதற்காக, அச்சங்கங்களுக்கு மானியத் தொகை வழங்குவதற்கான திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. கூட்டுறவுச் சங்கங்களுக்கு, 1970—71க்கு ரூ. 1 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்க, அவை ரூ. 92,240-ஐ பெற்றுப் பயன்படுத்தின. உதவித் தொகை வழங்குவதற்காக 1971—72-ல் ரூ. 200 இலட்சத்திற்கு அரசு அனுமதித்துள்ளது. 1972—73-க்கும் ரூ. 1 இலட்சம் செலவில் இத்தகைய திட்டத்தைச் செயல்படுத்தப்படும். இரண்டு திட்டங்களின் கீழும் 20 சத வீதம் உதவித் தொகை வழங்குவது, 1972—73ல் ஆண்டிலும் தொடர்ந்து செயற்படுத்தப்படும்.

இயற்கை நீர்நிலைகளிலிருந்து மீன் சினைகளைச் சேகரிக்கும் திட்டத்தினல் பெரிய கெண்டை

### ஊர் பிறந்த காரணம்

கருநாடக நவாபுகளில் ஒருவன் முகம்மது அலி. இவனுக்கு வாலாஜா என்ற பெயரும் உண்டு. ஆர்க்காட்டிலுள்ள வாலாஜாபேட்டைக்கு இவன் பெயர் அமைந்துள்ளது. செங்கற்பட்டுப் பாலாற்றங் கரையிலுள்ள வாலாஜாபாத் என்னும் ஊர் இவன் பெயரால் அமைந்ததாகும். அபாத் என்றால் நகரமாகும்.

* *

மதுராந்தக வட்டத்திலுள்ள கருங்குழி, முன்பு குறுங்கோழி என்று இருந்தது. குறுங்கோழியூர்க் கிழார் என்னும் புலவர் இவ்வூரைச் சேர்ந்தவர் என்று கருதுகின்றனர்.

மீன் சினைகளைத் தூண்டுதல் முறையில் பொரிக்கச் செய்து ( Induced Corp Spawing ) மீன் குஞ்சுகளை நீர் நிலைகளில் விடுவதன் மூலமும் அக நாட்டு நீர் நிலைகளில் மீன் உற்பத்தி அதிகரித்துள்ளது. 1970—71-ம் ஆண்டில் 441 இலட்சம் மீன் குஞ்சுகளும், 984 இலட்சம் பொரித்த மீன் குஞ்சுகளும், உற்பத்தி செய்யப்பட்டன. 1971—72-ல் 600 இலட்சம் மீன் குஞ்சுகளைச் சேகரிப்பதும், 900 இலட்சம் பொரித்த மீன் குஞ்சுகளை உற்பத்தி செய்வதும் மேற்கொள்ளப்படுகின்றது.

1972—73-ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து நிறைவேற்றப்படும். தூண்டுதல் முறையில் மீன் குஞ்சுகளைப் பொரிக்கச் செய்யும் நீர் நிலைகளிலிருந்து மீன் சினைப் பெருக்கத்தை இரு மடங்காக்குவதற்கான அடங்கல் திட்டமொன்று வகுக்கப்பட்டிருக்கிறது இத்திட்டத்தைச் செங்கற்பட்டு மாவட்டத்தில் முதற்கண் செயற்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

1971—72-ம் ஆண்டில், சோலையாறு, மேல் அணைக்கட்டு, சத்தியாறு அணை ஆகியவிடங்களில் உள்ள நீர்த் தேக்கங்களில் மீன் பண்ணைகளை அமைப்பதற்கு அரசு முடிவு செய்துள்ளது. இதற்கான பணிகள் நடந்து வருகின்றன. 1972—73-ல் கோவை மாவட்டம் ஆழியாறு நகரிலும், அமராவதியிலும் தூண்டுதல் முறையில் கெண்டை மீன் முட்டைகளைப் பொரிக்கச் செய்யும் நிலையங்களை நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட திட்டத்தைத் தவிர, மீன் வளர்ப்புக்காகக் குளங்களைப் புதுப்பித்தல், ஊராட்சி ஒன்றியங்களின் மீன் குஞ்சு வளர்ப்புக் குளங்களைப் பேணுதல், ஊராட்சிகளுக்கு மீன் குஞ்சுகளைப் பகிர்ந்தளித்தல் முதலிய பணிகளை ஒவ்வொரு ஆண்டும் ரூ. 4 இலட்சம் செலவில் கிராம வளர்ச்சித் துறை இயக்குநர் செயல்படுத்தி வருகிறார்.

பயனளிக்கத் தக்க வகையில் மீன் பிடிப்பதற்காக மீன் விசைப் படகுகளை இயக்க, சென்னை, கடலூர், நாகைப்பட்டினம், மண்டபம், தூத்துக்குடி, குளச்சல் ஆகிய விடங்களில் ஒவ்வோர் பயிற்சி நிலையமாகக் கடல் மீனவர் பயிற்சி நிலையங்கள் 6 உள்ளன. மண்டபம் தவிர ஒவ்வொரு பயிற்சி நிலையத்திலும், 10 திங்கள் கால அளவில் ஒரு தடவையில் 50 மீனவர்களுக்குப் பயிற்சியளிக்கப்படுகிறது. மண்டபத்தில் ஒவ்வொரு முறையும் 60 மீனவர்களுக்குப் பயிற்சியளிக்கப்படுகிறது. மேட்டூர் அணையில் உள்நாட்டு மீனவர் பயிற்சி நிலையம் ஒன்று உள்ளது. இதுவரையில், 2,452 மீனவச் சிறார்கள், மீன் பிடி இயந்திரப் படகுகளை இயக்குதல், அடிப்படை நீர் வழிப் போக்குவரத்து, பல்வேறு மீன்பிடி கருவிகளைப் பயன்படுத்தும் புதிய மீன்பிடி முறைகள் ஆகியவற்றில் பயிற்சியளிக்கப் பட்டுள்ளனர். இந்நிலையங்கள் மீனவர்களுக்குத் தொடர்ந்து பயிற்சியளித்து வரும்.

1972—73-ல் புதிய மீன்பிடி வலைகளையும், பிற மீன்பிடி கருவிகளையும் மேம்படுத்த வேண்டி, கியர் பிரிவு ஒன்றை ஏற்படுத்துவதன் மூலம் ஆழ்கடல் மீனவர் பயிற்சி நிலையங்களை வலுப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. திட்டப் பணிகளை வெற்றிகரமாக நிறைவேற்றும் திறமையை மேம்படுத்தும் நோக்கத்துடன் அரசிதழ் பதிவு பெற்ற, அரசிதழ் பதிவு பெறாத அலுவலர்கள் பல

துறைகளிலும் பயிற்சி பெறுவதற்காகப் பல்வேறு மத்திய மீனவ நிலையங்களுக்கு முகமையில் அனுப்பப்படுகிறார்கள்.

உறைய வைக்கும் பிரிவுகள் 3 உட்பட, இத்துறை 32 பனிக் கட்டி உற்பத்திப் பிரிவுகளையும், பனியறைப் பிரிவுகளையும் இம் மாநிலத்தில் நிறுவியுள்ளது. பல்வேறு உற்பத்தித் திறன் கொண்ட ஏழு பனிக்கட்டி உற்பத்திப் பிரிவுகள் மேலும் அமைக்கப்படும். 1971—72-ஆம் ஆண்டில் ஆரம்பாக்கத்தில் ஒன்றும், சென்னையில் ஒன்றுமாக இரு பனிக்கட்டி உற்பத்திப் பிரிவுகள் அமைக்கப்படவிருக்கின்றன. இப்பிரிவுகள் 1972—73-ல் செயல்படத் தொடங்கும். இராமேஸ்வரத்திலுள்ள பனிக்கட்டி உற்பத்திப் பிரிவு, மீனவர்களின் தேவையைத் தற்போது முழுவதும் நிறைவேற்ற இயலாததால், அவை மூலம் கூடுதலான பனிக்கட்டி வழங்கப்படும் பொருட்டு இந் பிரிவு 1972—73-ல் ஏற்படுத்தத் திட்டமிடப் பட்டுள்ளது. இந்தப் பிரிவுகள் இரண்டும், 1972—73-ஆம் ஆண்டிலேயே தயாராகிவிடக்கூடும்.

தூத்துக்குடியில் அமைக்கப்பட்டு, 1966 ஜூனில் உற்பத்தியைத் தொடங்கிய, பதப்படுத்திய மீன்களை டப்பியில் அடைக்கும் தொழிற்சாலை 1969—70-ல் தனியார் ஒருவருக்குக் குத்தகைக்கு விடப்பட்டது. இந்திய-நார்வே திட்டத்தின் கீழ் உதவியாகப் பெறப்பட்ட இயந்திரத்தைப் பயன்படுத்தி, நாளொன்றுக்கு 50 டன் பதப்படுத்தாத மீன்களை, மீன் மாவாக்கும் திறனுள்ள மீன் மாவுத் தயாரிக்கும் தொழிற்சாலையொன்றும் 1971 மே திங்களில் செயல்படத் தொடங்கியது. இத் தொழிற்சாலை தொடங்கிய நிலையில் ரூ.1,70,000 மதிப்புள்ள 170·650 டன் அளவுள்ள மீன் மாவு தயாரிக்கப் பட்டது.

தனியார் தொழில் முனைவர்கள் மீன்பிடி தொழில் துறையில் ஈடுபடுவதை ஊக்குவிக்க, மீன் பதப்படுத்தும் தொழிற்சாலைகள், படகு கட்டும் தளங்கள் முதலியவற்றை நிறுவுவதற்கென, இம்மாநிலத்தின் பல்வேறு இடங்களில் உருவாகிவரும் மீன்பிடி துறைமுகங்களுக்கருகில் நிலங்களை வழங்க இத்துறை பெருமுயற்சி எடுத்து வருகிறது. இதற்காகக் கடலூரில் ஏற்கெனவே நிலங்கள் ஒதுக்கப்பட்டுவிட்டன. இதே நோக்கத்திற்காக ரூ. 1·60 இலட்சம் செலவில் கத்திய வாக்கம் கிராமத்திலுள்ள எண்ணூர் உப்பங்கழியில் 6·95 ஏக்கர் நிலம் ஒதுக்கப் பட்டுள்ளது. கடலூர் மீன்பிடி துறை முகத்தில், படகு கட்டும் துறை ஒன்று தனியார் தொழில் முனைவர் ஒருவரிடம், ஏற்கெனவே ஒரு பகுதியைக் குத்தகைக்கு விடப் பட்டுள்ளது. மீன்பிடி துறைமுகப் பகுதியில், பயன்படுத்தப்பட்ட நிலங்கள் கிடைக்கையில், இதுபோன்ற வசதிகள் தூத்துக்குடி, சென்னைத் துறைமுகங்களுக்கும் செய்து கொடுக்கப்படவிருக்கிறது.

### முயற்சி திருவினை ஆக்கும்

மேற்குவங்காளத்தில் பங்குரா மாவட்டத்தைச் சேர்ந்தவர் சுசில்ஷித். இவர் கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்றவர்; வேலை தேடிப் பல இடங்களில் அலைந்தார். வேலை கிடைக்கவில்லை. உடனே ஒரு யோசனை வந்தது. நிலத்தைக் குத்தகைக்கு எடுத்து அரசாங்கத்திடம் கடன் வாங்கிக் கத்தரிக்காய் பயிர் செய்தார். 5 ஏக்கர் நிலத்தில் இவர் விவசாயம் செய்தார்.

கத்தரிக்காய் நன்றாக விளைந்தது. 6 மாதத்தில் ரூபாய் 12 ஆயிரம் இலாபம் கிடைத்தது! இப்போது பட்டதாரி வாலிபர் சுசில்ஷித், 'வேறு வேலை வேண்டாம், கத்தரிக்காயே பயிர் செய்கிறேன்' என்று கூறுகிறார்.

பல ஆண்டுகளுக்குப் பிறகு 1968—69-ஆம் ஆண்டில் வீட்டு வசதித் திட்டத்தை அரசு மீண்டும் செயலுக்குக் கொண்டு வந்துள்ளது. மீனவர்களுக்காக 100 வீடுகள் கட்டுவதற்கு ரூ. 1 இலட்சம் செலவிடத் தீர்மானித்து, 1969—70-ல், மேலும் ரூ. 1 இலட்சம் செலவிட அரசு முன்வந்தது. அனுமதி வழங்கப்பட்ட இந்த 200 வீடுகளில் 100 வீடுகள், 1970—71ஆம் ஆண்டு இறுதியில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள வீடுகள், 1972-ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் இறுதிக்குள் கட்டி முடிக்கப்பட்டுவிடும். இத் திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்தவும் 1971—72ஆம் ஆண்டில், ரூ. 1.00 இலட்சம் செலவில், மேலும் 100 வீடுகளைக் கட்டவும் அரசு அனுமதி வழங்கியுள்ளது.

சென்னை மாவட்ட மீனவர் கூட்டுறவுக் கூட்டமைப்பின் ஆதரவுடனும், வேளாண்மை மறுநிதி உதவிக் கழகத்தின் நிதி உதவியுடனும், சென்னை-செங்கற்பட்டு மாவட்டங்களில் ரூ. 33·82 இலட்சம் செலவில் மீன்பிடி தொழில் மேம்பாட்டிற்கான திட்டம், மூன்று ஆண்டுகளாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதுபோன்ற திட்டம் ஒன்றை ரூ. 78·70 இலட்சம் செலவில், தூத்துக் குடியிலுள்ள திருநெல்வேலி மாவட்ட மீனவர் கூட்டுறவுக் கூட்டமைப்பு நிறைவேற்ற அரசு ஆவன செய்துள்ளது.

வேளாண்மை மறுநிதி உதவிக் கழகம் இத்திட்டத்திற்கு வழங்கும் கடன் ரூ. 59·02 இலட்சமாகும். மூன்று ஆண்டுக் காலத்தில் தூத்துக்குடியில், படகு கட்டும் துறை ஒன்றை அமைப்பதற்கும், 32 அடியுள்ள 75 படகுகளைக் கட்டுவதற்கும், இத்திட்டம் வகை செய்கிறது.

தமிழ்நாடு அரசின் விடா முயற்சியினால், இந்திய அரசு, ரூ. 210 இலட்சம் செலவில் தூத்துக்குடியில், மீன்பிடி துறைமுகம் ஒன்றைக் கட்டுவதற்கான திட்டத்தை, மத்திய அரசின் ஆதரவுத் திட்டத்தின் கீழ், நிறைவேற்ற முன் வந்தது. இத் துறைமுகப் பணி 1969 ஏப்ரலில் மேற்கொள்ளப்பட்டது. வடக்கு, தெற்கு, கிழக்கு அலைத்தடுப்புச் சுவர் அமைக்கும் பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டுள்ளன. அணுகு சாலைகள் (Approach Roads) பண்டகச் சேமிப்புக் கொட்டகைகள், அலுவலகக் கட்டடங்கள் போன்ற கட்டடப் பணிகள் யாவும் முடிக்கப்பட்டுள்ளன. தெற்குக் கப்பல்துறை மேடைச் சுவர் கட்டும் பணி அநேகமாக முடிக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசுத்துறைத் திட்டத்தின்கீழ் ரூ. 388 இலட்சம் செலவில் சென்னையில் மீன்பிடி துறைமுகம் ஒன்றைக் கட்ட இந்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. இப்பணி சென்னைத் துறைமுகப் பொறுப்புக் கழகத்தினால் நிறைவேற்றப்படும். துறைமுகத்திற்கான வடிவமைப்பு வரை படத்தின் மாதிரி, பூனாவில் உள்ள மத்திய நீர்-மின் ஆராய்ச்சி நிலையத்தில் பரிசோதிக்கப்பட்டு முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கு இறுதி வடிவம் கொடுக்கப்பட்டுள்ளது. சென்னைத் துறைமுகப் பொறுப்புக் கழகம் திருத்திய திட்ட அறிக்கை ஒன்றைத் தயாரித்து வருகிறது. இந்த அறிக்கைக்கு இறுதி வடிவம் கொடுத்து. இந்திய அரசின் அனுமதி கிடைத்தவுடன் கட்டுமானப் பணி தொடங்கப்படும்.

நார்வே நாட்டுத் தொழில் நுட்பம் மற்றும் பிறவகை உதவிகளுடன் மீனளத் திட்டம் ஒன்று 1963 நவம்பரில் தொடங்கி வைக்கப்பட்டது. படகு கட்டும் தளம், மீனளப் பயிற்சி நிலையம், பனிக்கட்டித் தொழிற்சாலை, குளிர்சாதன அறை, மீன்களை உறைய வைக்கும் பிரிவு, மீன் மாவுத் தொழிற்சாலை, மீன்பிடி படகுகளை நிறுத்தி வைப்பதற்கான வசதிகள், கடலோர, தொலை கடல் பகுதிகளில் ஆய்வு நடத்துதல், மீன் கிடைக்கும் இடங்களைக் கண்டுபிடித்தல், பணிமனை கட்டுதல் ஆகியவை இத் திட்டத்தில் அடங்கும் எல்லாப் பிரிவுகளும் பணி புரியத் தொடங்கியுள்ளன. மண்டபம் பிரிவு, மீனளப் பணிகளின் ஒருங்கிணைந்த நிலையமாகத் தற்போது பணி புரிந்து வருகிறது. இத் திட்டத்திற்காகத் தொடக்கத்தில் வழங்கப்பட்ட கப்பல் டீசல் பொறிகள் 81 உட்பட ரூ. 45·15 இலட்சம் மதிப்புள்ள பொறிகளை நார்வே நிறுவனம் இதுவரை வழங்கியுள்ளது.

கடந்த ஆண்டு வரையில், தூத்துக்குடியில், சங்கு குளிக்கும் தொழில் துறையால் இயக்கப்பட்டது. ஆனால், பிற மாவட்டங்களில் சங்கு குளிக்கும் தொழில் ஒரு சமயத்தில் மூன்று ஆண்டுகளுக்குக் குத்தகை விடப்பட்டது. இப்பொழுது திருநெல்வேலி மாவட்டம் நீங்கலாக ஏனைய மாவட்டங்கள் அனைத்திலும் கட்டணம் ஏதும் செலுத்தாமல் சங்கு குளிக்க அனுமதிக்கப் பட்டுள்ளது. இதனால், மீனவர்களைப் போன்று கடல் வளத்தை முழு அளவில் அனுபவிக்கத்தங்களுக்கும் உரிமை வேண்டும் என்றும், இடை ஆட்களை ஒழிக்க வேண்டும் என்றும், முத்துக் குளிப்பவர்கள் இடைவிடாமல் செய்துவரும் கோரிக்கை நிறைவேறுகின்றது. அரசு அண்மையில், திருநெல்வேலி மாவட்ட மீனளத்தின் பெரிய சங்குகள் வாங்கும் விலையை, சங்கு ஒன்றுக்கு ரூ. 1·25லிருந்து ரூ. 1·75 ஆக உயர்த்தியுள்ளது.

தூத்துக்குடியில் மீன் பிடி துறைமுகம் அமைக்கப்பட்டு, விசைப் படகுகள் மூலம் மீன் பிடிப்பது முனைப்பாக நடப்பதன் விளைவாக, வரும் ஆண்டுகளில் மீன்பிடி தொழில் கணிசமான அளவு பெருகும் என்று எதிர்பார்க்கலாம்.

வகை வகையான மரங்களைக் கொண்டு தொகை தொகையான பொருள்களைக் குவித்த வண்ணமுள்ளது, திருப் பெரும்புதூரிலுள்ள தச்சுத் தொழில் உற்பத்தி நிலையம்.

நவீன முறையில் அழகான மரச் சாமான்களைத் தயாரித்துத் தொழிலை இலாபகரமானதாக ஆக்கிப் புகழ் பெற்று வருகிறது இந்நிலையம். 1960-ல் ஐந்து பேரைக் கொண்டு பயிற்சி நிலையமாகத் துவக்கப்பட்ட இங்கு, இன்று நாற்பது பேர் வேலை செய்து, இத்தொழிலை மேலும் வளர்த்துள்ளனர். தொழில் வணிக இலாகாவின் மூலமாகத் தச்சுத் தொழில் பயிற்சி நிலையமாக இருந்த இதில் மாதம் ரூ. 30 விதம் உதவிச் சம்பளம் கொடுத்து மூன்று ஆண்டுகளில் 15 பேர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டது. பிறகு வணிக இலாகாவிடமிருந்து இவ்வூராட்சி ஒன்றியத்தின் மேற்பார்வையின் கீழ் மாற்றப்பட்டது. மெச்சத்தகுந்த இத்தச்சு நிலையம் 1964 முதல் உற்பத்தி நிலையமாக இயங்கி வருகிறது. இங்கு பயிற்சி




பெற்ற மாணவர்கள் இதே உற்பத்தித் தொழில் நிலையத்திலும், வேறிடத்திலும் பணி புரிந்து வருகிறார்கள்.

பூவேலைப்பாடு மிகுந்த மரச் சாமான்கள், மேசை, நாற்காலிகள், நவீன சோபாக்கள், முதலியன இங்குத் தயாரிக்கப்படுகின்றன. இங்குச் செய்யப்படும் மேசை, நாற்காலிகள் முதலியன செங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம், தலைமைத் தபால் தந்தி இலாகா, சென்னைத் தொலைபேசித் தொடர்பகம், மின்சார வாரியம், நகராட்சிப் பள்ளிகள், மருத்துவ மனைகள் முதலியவைகளுக்கு அனுப்பப் படுகின்றன.

1960–61-ல் உற்பத்தியான பொருள்களின் மதிப்பு ரூ. 4,765. ஆனால், இன்று உற்பத்தி ரூ. 58,872. விற்பனையானவை ரூ. 27,327. இந்தத் தொகையை மேலும் அதிகரிக்கும் வகையில் தீவிரமாக ஈடுபட்டுப் பணி செய்து வருவதை இங்குக் குறிப்பிடவேண்டும்.

## சாலை அமைப்பதில் உள்ள சங்கடங்கள்

தமிழகத்தின் நெற்களஞ்சியமாகத் திகழும் தஞ்சை மாவட்டத்தில் ஏறத்தாழ 3,200 கி.மி. நீளமுள்ள கப்பிச்சாலைகள் மட்டுமே உள்ளன. இதரச் சாலைகள் அனைத்தும் மண் சாலைகளே யாகும். அவைகள் மோட்டார் வாகனங்கள் செல்ல ஏற்றனவாக இல்லை. அதுவும் குறிப்பாகப் பருவமழைக் காலங்களில், அந்த மண்சாலைகளில் மாட்டு வண்டிகள் கூட வசதியாகச் செல்ல இயலாது. ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடும்போது தஞ்சை மாவட்டத்தின் இயற்கையமைப்பு நல்ல கப்பிச் சாலைகளை அமைக்க ஏற்றதாக இல்லை. தஞ்சை மாவட்டத்தின் பெரும்பகுதி காவிரி நதியின் கழிமுகப் பகுதியாகவும், பிசுபிசுப்பான களி மண் பூமியாகவும் அமைந்துள்ளது. இக்களிமண், சாலை அமைப்பதற்கு ஏற்றது அல்ல. ஏனெனில், இம்மண் மழைக் காலத்தில் சேறும், சகதியுமாக மாறி எவ்வித வாகனமும் செல்ல இயலாத நிலையை ஏற்படுத்துகிறது. சாலை அமைப்பதற்குத் தேவையான கருங்கல் ஜல்லி அண்டைய மாவட்டங்களில் இருந்து (திருச்சி, தென்ஆர்க்காடு) 50 கி. மீ. முதல் 100 கி. மீ. தூரம் வரை கொண்டுவர வேண்டிய சூழ்நிலை உள்ளது. இதனால் கருங்கல் ஜல்லி கொண்டு வருவதில் மிகுந்த காலதாமதம் ஆகிறது. மேற்கூறிய காரணங்களால் சாலை அமைக்கத் தேவையான கருங்கல் ஜல்லி, செம்மண் ஆகியவற்றிற்கான செலவினம் ஏனைய மாவட்டங்களைவிட இரண்டு மடங்கிற்கு மேல் ஆகிறது. முன் நாட்களில் சாலைகள் அமைக்க, சிங்களத் தீவினின்றும் கருங்கல் ஜல்லி வந்ததாகத் தெரிகிறது.

தஞ்சை மாவட்டத்தில் உள்ள பல சாலைகள் ஆற்றங்கரையின் மேல் அமைந்த காரணத்தாலும், பல்வேறு வயல்களின் வரப்புகளில் செல்வதாலும், நேர்பாடு சீராக இல்லாமல் எண்ணற்ற வளைவு, நெளிவு கொண்டனவாய் அமைந்துள்ளன. தஞ்சை மாவட்டத்தில் 36 பெரிய ஆறுகளும், 30,000 நீர்ப்பாசன வாய்க்கால்களும் உள்ளன. இவைகள் மாவட்டத்தின் பல பகுதிகளில் குறுக்கு நெடுக்காகச் சென்றும், ஒன்றோடு ஒன்று சேர்ந்தும் கடலில் கலக்கின்றன. இக்காரணங்களால் ஒவ்வொரு சாலையிலும் பல இடங்களில் ஆறுகளும் நீர்ப் பாசன வாய்க்கால்களும் குறுக்கிடுகின்றன. இதனால் ஆங்காங்கே பாலங்களும், மதகுகளும்கட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டுச்சாலை அமைத்தலுக்கான செலவு மிகவும் அதிகம் ஆகிறது.

இம்மாவட்டத்தில் 3,000-க்கு மேற்பட்ட கிராமங்கள் உள்ளன. இவற்றில் பாதிக் கிராமங்களுக்கு இணைப்புச்சாலை வசதிகள் இல்லை. போதிய சாலை வசதி இல்லாத காரணத்தால் இரு போகச் சாகுபடி, பரவலாகச் செய்ய இயலவில்லை. குறிப்பாகக் குறுவை நெல் அறுவடை மழைக் கால ஆரம்பத்தில்தான் நடைபெறுகிறது. அதே சமயத்தில் மாவட்டத்தில் உள்ள மண் சாலைகள் சேறும், சகதியுமாய் இருப்பதால் அறுவடை செய்த குறுவை நெல்லை அருகில் உள்ள விற்பனைக்கூடங்களுக்கு எளிதாகக் கொண்டு செல்ல இயலவில்லை. மழைக் காலமான படியால் குறுவை நெல்லை விளைந்த இடங்களிலேயே உலர வைத்துச் சேமித்து வைப்பது என்பது முடியாத ஒன்றாகும். ஆகவே, ஆற்றங் கரைச்சாலைகளையும், இதர மண் சாலைகளையும் மேம்பாடு செய்தும் ஆங்காங்கே பாலங்களையும், மதகுகளையும் கட்டி, எல்லாப் பருவக் காலங்களிலும் போக்குவரத்திற்கு ஏற்றதான சாலைகளை அமைப்பதன் மூலம், மழைக் காலங்களில் போக்குவரத்து இல்லாமல் துண்டித்துப் போகும் கிராமங்களை இதரக் கிராமங்களுடன் இணைக்க இயலுகிறது. மேலும், வேளாண்மை வளர்ச்சியைத் தூண்டுவதாகவும் அமைகிறது.

மேற்கூறியபடி சாலைகளை, மேம்பாடு செய்வதால் எல்லாக் கிராமங்களுக்கும் எல்லாக் காலங்களிலும், எவ்விதத் தங்கு தடையுமின்றி விதைகள், உரங்கள், பூச்சி மருந்துகள், வேளாண்மைக் கருவிகள் ஆகியவைகளைத் தேவையான அளவில், உரிய காலத்தில் கொண்டு செல்ல முடியும். அரசு மேற்கொண்டுள்ள பசுமைப் புரட்சித் திட்டம் முழு அளவில் வெற்றி அடைய, மேற்படி இணைப்புச் சாலைகளை மேம்பாடு செய்வது இன்றியமையாத ஒன்று ஆகும்.

தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில், சாலைகளின் மேம்பாட்டிற்காக ஒதுக்கப்படும் செலவினம் வேளாண்மைப் வளர்ச்சிக்கு முழு அளவில் வெற்றிபெறச் செய்யப்படும் முதலீடாகும். எனவே, தஞ்சை மாவட்டத்தின் சாலை வளர்ச்சிக்கான பெருந் திட்டம் (Master Plan) ஒன்று தயாரிக்கப்பட்டு, அரசின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### பொருட்காட்சியின் கதை

பொருட்காட்சியினுள் நுழைகிறோம். கலைவண்ணம் மிளிரும் பண்டைக்காலப் பொருள்களைப் பார்க்கின்றோம். எத்தனைவிதமான பொருள்கள்! இப்படிக் காண்பாரைக் கடந்த காலத்துக்கு அழைத்துச் செல்லும் அரும் பொருள்கள் நிறைந்த 'பொருட்காட்சிகள்' இன்று இந்தியாவில் ஏராளமாக இருக்கின்றன. அவை எப்படித் தோன்றின? அவை உருவாகக் காரணமாயிருந்தவர்கள் யார்? என்பன போன்ற பல அரிய செய்திகளைத் தாங்கி, உங்கள் சிந்தைக்கு விருந்தூட்டுகிறது, "பொருட்காட்சியின் கதை". அடுத்த இதழில் இந்தக் கட்டுரை வெளிவருகிறது.


வெளிநாட்டார் போற்றும்
ஜெயன்பொருள்
கலைக்கூடம்
குறளகம்
கதர் கைத்தொழில் அங்காடி, சென்னை-
கைவண்ணப் பொருள்களின்
களஞ்சியம்
20461
20462 20463
20464 20465

# உங்களுக்காகவே




# சிங்கிள் ஃபேஸ் மீட்டர்களை இந்தியா மீட்டர்ஸ் லிமிடெட் தயாரிக்கிறது

## மின்சார வாரியங்கள் மற்றும் முனிசிபாலிடிகளில் உபயோகிக்கப்படுபவை

இந்த மீட்டர்களையே நீங்கள் ஏன் தேர்ந்தெடுப்பீர்கள் என்றால்:

- இந்தியாவில் தயாராகும் சிங்கிள் ஃபேஸ் மீட்டர்களில் இந்தியா மீட்டர்ஸ் தயாரிப்புகள் மட்டுமே இரண்டு ஜுவல் பாட்டம் பேரிங் கொண்டிருக்கின்றன.
- இவை வருடக்கணக்கில் தடங்கலில்லாமல் வேலை செய்கின்றன.
- இதுவரை நான்கு லட்சத்திற்கும் மேலான மீட்டர்களைத் தயாரித்துள்ள கைதேர்ந்த பொறியாளர்களால் தயாரிக்கப்படுகின்றன.







இந்தியா மீட்டர்ஸ் தயாரிக்கும் மீட்டர்களையே தேர்ந்தெடுங்கள். அவை தனித்தன்மை வாய்ந்தவை — உடனே கிடைப்பவை.

இந்தியா மீட்டர்ஸ் லிமிடெட் ஸ்தாபனம், சிங்கிள் ஃபேஸ் தவிர பாலி ஃபேஸ், வார் அவர் மீட்டர், ஸ்விட்ச் போர்டு டைப் மீட்டர் மற்றும் மாக்ஸிமம் டிமாண்ட் மீட்டர்களையும் தயாரிக்கிறது.

IM

**இந்தியா மீட்டர்ஸ் லிமிடெட்**
அம்பத்தூர், சென்னை-58

FDSIM/1766TM

சிறப்பாக உணவு உற்பத்தியையும், பொதுவாக வேளாண்மை உற்பத்தியையும் பெருக்குவதில் முக்கியப் பங்கு வகிப்பவர்கள் உழவர்களே! ஆகவே, விழுமிய முறையில் வேளாண்மை செய்து, வேண்டிய அளவு இந்நாட்டில் உற்பத்தியைப் பெருக்க, உழவர்களுக்கு நவீனச் சாகுபடி முறைகளில் நேரடிப் பயிற்சி அளிக்க வேண்டியது மிகவும் இன்றியமையாததாக உள்ளது. இக்கருத்தை அடிப்படையாகக் கொண்டே தமிழ்நாடு அரசு, மைய அரசு உதவியுடன் உழவர் பயிற்சி நிலையங்களை நடத்தி வருகிறது.

நஞ்சை குலுங்கும் தஞ்சை மாவட்ட உழவர்களுக்கு நவீனச் சாகுபடி முறைகளில் பயிற்சி அளிக்க வேண்டுமென்பதற்காகவே 1968-ஆம் ஆண்டு பட்டுக்கோட்டையில் உழவர் பயிற்சி நிலையம் துவக்கப்பட்டது. அந்த உழவர் பயிற்சி நிலையம் 1969-ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் ஆடுதுறைக்கு மாற்றப்பட்டது. ஆடுதுறையில் உள்ள மண்டல வேளாண்மை ஆராய்ச்சி நிலைய எல்லைக்குள் உழவர் பயிற்சி நிலையம் அமைந்துள்ளது.

ஆடுதுறையில் உள்ள உழவர்பயிற்சிநிலையத்தில், தஞ்சை மாவட்ட உழவர்களுக்கு நவீன வேளாண்மை முறைகளைப் பற்றிய நிலையப் பயிற்சி அளிக்கப்படுகிறது. அது போலவே தஞ்சை மாவட்ட உழவர் குடும்பத்தைச் சார்ந்த பெண்களுக்கும் குடும்ப நலத்தில் வேளாண்மைப் பொருள்களின் உபயோகம் பற்றிய நிலையப் பயிற்சி அளிக்கப்படுகிறது. அத்துடன் உழவர்களின் வயல்களிலேயே ஆராய்ச்சி முடிவுகள் செயல் விளக்கங்களாகக் காட்டப்பட்டு, களப் பயிற்சிகள் கொடுக்கப்படுகின்றன.

### நிலையப்பயிற்சி

நிலையப் பயிற்சியின் மூலம் கிராமங்களில் ஆண்களிலும், பெண்களிலும், வேளாண்மையில் கிராமத் தலைவர்கள் உருவாக்கப்படுகிறார்கள்.

### ஆண்களுக்கு ஆரம்பப் பயிற்சி

கட்டுக் கோப்பான சாகுபடி முறைகளை முழுமையாக உழவர்களுக்குத் தெரிவிப்பதே இதன் நோக்கமாகும். இதன் மூலம் ஆராய்ச்சி முடிவுகளைப் பின்பற்றுவதற்கான செயல்முறை விளக்கங்கள் அளிக்கப்படுகின்றன.

ஒவ்வொரு பயிற்சிக் காலத்திலும் 25 உழவர்கள் வீதம் ஆண்டுக்கு 10 பயிற்சிகள் ஆடுதுறை உழவர் பயிற்சி நிலையத்திலே கொடுக்கப்படுகின்றன.

ஒவ்வொரு பயிற்சியும் ஐந்து நாட்கள் நடைபெறுகிறது. பயிற்சிக் காலத்தில் இவ்வலுவலகத்தில் தங்கும் வசதியோடு உணவுக்காக ஒவ்வொருவருக்கும் ரூபாய் 3·50 நாள்படியும்,




கொடுக்கப்படுகின்றது. இந்தப் பத்துப் பயிற்சிகளும் பரவலாக ஆண்டு முழுமையும், வட்டார வாரியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உழவர்களுக்காக நடத்தப்படுகிறது. உழவர் விவாதக் குழு அங்கத்தினர்களுக்கும் இப்பயிற்சி கொடுக்கப்படுகிறது.

### பெண்களுக்கு

உழவரது குடும்பப் பெண்களுக்கும், மேற்கூறிய வகையில் உழவுத் தொழில் சம்பந்தமாகவும், தவிர மனை இயல், குடும்ப நலம் போன்ற சமூக மேம்பாட்டுப் பணிகளிலும் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சிகளும், ஆடுதுறை உழவர் பயிற்சி நிலையத்தில் ஆண்டு ஒன்றுக்கு 10 வீதம் நடத்தப்படுகின்றன. ஒவ்வொரு பயிற்சிக்கும் 25 பெண்கள் அனுமதிக்கப்படுகின்றனர்.

பயிற்சியின்போது புதிய உயர் விளைச்சல் தானியங்களிலிருந்து சுவையான உணவுப் பொருள்கள் (பலகாரங்கள்) செய்வது பற்றிய செயல் விளக்கம் காண்பிக்கப்படுகின்றன. பயிற்சிக் காலம் 5 நாட்கள். தங்கும் வசதி உண்டு. உணவுக்காக நாட்படி ரூபாய் 3·50 ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்படுகிறது.

### மறு பயிற்சி

இது, ஆரம்பப் பயிற்சி பெற்றுத் தங்கள் ஊரில் உழவர் விவாதக் குழு அமைத்து இயக்குகிற அமைப்பாளர்களுக்கு மட்டுமே கொடுக்கப்படும் பயிற்சி ஆகும். ஆண்களுக்கு 4 பயிற்சிகளும், பெண்களுக்கு ஒரு பயிற்சியும் நடத்தப்படுகின்றன. பயிற்சிக் காலம் 3 நாட்கள். ஆரம்பப் பயிற்சியில் அளிக்கப்படுவது போல் தங்கும் வசதியும், நாட்படியும் கொடுக்கப் படுகிறது.

### உழவர் விவாதக் குழுக்கள்

உழவர் பயிற்சித் திட்டத்தின் கடைக்கால் உழவர் விவாதக் குழுக்களாகும். தஞ்சை மாவட்டத்தில் 300 விவாதக் குழுக்கள் உள்ளன. இவை 250 ஆண்களுக்கும், 50 மகளிர்களுக்குமாகும்.

தொடர்ந்து தொடர்பு கொண்டு பல்வேறு உழவுத் தொழில் நுணுக்கங்களையும் அறிந்து ஆய்ந்து, செயல்படுத்த உழவர்கள் தாங்களாகவே தங்கள் அனுபவங்களை விவாதித்துச் செயல்படத்தக்க நிலையில் கிராமங்களில் உழவர் விவாதக் குழுக்கள் அமைக்கப் பட்டிருக்கின்றன. விவாதக் குழுவின் அமைப்பாளர் வேளாண்மையில் ஒரு கிராமியத் தலைவராகக் கருதப் படுகிறார்.

உழவர் விவாதக் குழுவினர் வாரந்தோறும் செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் இரவு 7-30 மணி முதல் 8-00 மணி வரை திருச்சி வானொலி நிலையத்தாரால் ஒலி பரப்பப்படும் வேளாண்மை நிகழ்ச்சிகளைக் கேட்க வேண்டும். இந் நிகழ்ச்சிகளைப் பற்றிக் குறிப்பு வரைந்துகொண்டு விவாதிக்க வேண்டும். விவாத முடிவுகளைக் குறிப்புப் புத்தகத்தில்

குறித்துக் கொள்ள வேண்டும். இந்த விவாதக் குழுக்களுக்கு மலிவு விலையில் டிரான்சிஸ்டர்கள் வழங்கப்பட்டுள்ளன.

வானொலியில் கேட்கும் நிகழ்ச்சிகளில் எழும் சந்தேகங்களுக்குத் தீர்வு காணும் பொருட்டு வானொலி நிலையத்திற்கும், உழவர் பயிற்சி நிலையத்திற்கும் அஞ்சல் மூலம் தொடர்பு கொள்ளுகின்றனர். இதற்கான அஞ்சல் கடிதங்கள் இக்குழுக்களுக்கு முன்கூட்டியே வழங்கப்பட்டுள்ளன.

அந்தந்தப் பருவத்திற்கான சாகுபடிக் குறிப்புகள் உழவர் அரங்க மணிகளாக வெளிவருகின்றன. அவற்றை எல்லா உறுப்பினர்களுக்கும் படித்துக் காட்டி, விவாதித்து, முடிவெடுத்து அவற்றைப் பின்பற்றி உழவுத் தொழிலைச் சீரமைத்துக் கொள்கின்றனர்.

### களப்பயிற்சிகள்

ஆண்டிற்கு 120 செயல் விளக்கங்கள், களப்பயிற்சிகளாக விவாதக் குழுக்கள் வாயிலாக நடத்தப்படுகின்றன. ஒவ்வொரு செயல் விளக்கத்திற்கும் ரூ. 25 செலவிடப்படுகிறது. களப்பயிற்சியின் போது பக்கத்து உழவர்களுக்கு நேரிடை விளக்கம் செய்து காண்பிக்கப்படுகிறது.

மகளிர் மன்றங்கள் வாயிலாக 50 செயல்முறைகள் உயர் விளைச்சல் ரகத் தானியங்களாலான தின்பண்டங்கள் செய்து காண்பிக்கப்படுகிறது. இவை ஒவ்வொன்றிற்கும் ரூ. 25 செலவிடப்படுகிறது.

உழவர் விவாதக் குழுக்களின் சில்லரைச் செலவுகளுக்காக உதவிப்பணம் மாதம் ஒன்றுக்கு ரூபாய் 5 வரை கொடுக்கப்படுகிறது. சிறப்பாகச் செயல்படும் குழுக்களுக்கு ஒவ்வோர் ஆண்டும் 5 பரிசுகள் வழங்கப்படுகின்றன.

### சுற்றுலா

உழவர் விவாதக்குழு அமைப்பாளர்களும், இளம் உழவர்களும் அடங்கிய 50 பேர்கள் ஆண்டு தோறும் ஒரு முறை குடுமியான்மலை அண்ணா பண்ணை, கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலை கழகம், மற்ற ஆராய்ச்சி நிலையங்கள், தேசிய நிருபண வயல்கள் ஆகிய இடங்களுக்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர். தனியார் பண்ணைக்கும் அழைத்துச் செல்லப்படுகின்றனர். இதற்கான பேருந்துக் கட்டணமாக ரூபாய் 1,000 வரை உழவர் பயிற்சி நிலையத்தால் செலவு செய்யப்படுகிறது.

### விளக்கப்பண்ணைகள் அமைத்தல்

பல்வேறு புதுவகைப் பயிர் சாகுபடி முறைகளை விளக்குவதற்காகத் தேசிய விளக்கப் பண்ணைகள் அமைக்கப் படுகின்றன. இப்பண்ணைகளில் பல பயிர், தொடர்பயிர் சாகுபடி முறைகள், இரு போகம், முப்போகம் பயிரிட்டுக் காட்டப்படுகின்றன. நிலச் சீர்திருத்தம் பற்றிய ஒரு விளக்கப் பண்ணையும் அமைக்கப்பட்டிருக்கிறது.

தஞ்சை மாவட்டத்தில் 15 மூன்று போகப் பண்ணைகளும் 9 இருபோகப் பண்ணைகளும், ஒரு நிலச்சீர்திருத்த பண்ணையும் ஆண்டுதோறும் அமைக்கப்படுகின்றன. இந்த விளக்கப் பண்ணைகள் பெரும்பாலும் உழவர் விவாதக்குழு அமைப்பாளர்கள் வயல்களில் அமைக்கப்படுகின்றன.

இப்பண்ணைகள் விஞ்ஞான வேளாண்மையில் உழவர்களுக்கு மிக நம்பிக்கை யூட்டுவனவாக அமைந்துள்ளன. விதைத்தல், நடவு செய்தல், உரமிடல், பாசனம், பயிர்ப் பாதுகாப்பு அறுவடை, சேமித்து வைத்தல் போன்ற ஒவ்வொரு பணியும் உழவர்கள் முன்னிலையில் செய்து காட்டப்படுகிறது.

செயல் விளக்கப் பண்ணையை ஏற்று நடத்தும் உழவர்களுக்கு விதை, உரம், மருந்து வாங்குவதற்கு முதல் பயிருக்கு ரூ. 200-க்கு அதிகமில்லாமலும், இரண்டாவது, மூன்றாவது பயிர்களுக்கு முறையே ரூ. 150-க்கு அதிகமில்லாமலும் பொருள்கள் அளிக்கப்படுகின்றன. உழவர் பயிற்சி நிலையச் செலவில் அறிவிப்புப் பலகை நிறுவப்படுகிறது.

இவ்வாறு உழவர்களுக்குப் பயிற்சி அளித்து வரும் ஆடுதுறை உழவர் பயிற்சி நிலையம், தஞ்சை மாவட்ட உழவர்களின் வாழ்வு வளமாக உதவுகிறது.




சிறு துரும்பும் பல் குத்த உதவும் என்பார்கள். அது போலச் சிறுசிறு செடிகளும் மருந்து செய்ய உதவுகின்றன. இதனை ஆராய்வதற்காக மருந்துகள் சார்ந்த இரசாயன ஆராய்ச்சி நிலையம் 1970 முதல் முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. கோயம்புத்தூர் செங்கற்பட்டு மாவட்டங்களிலுள்ள பல்வேறு காடுகளிலிருந்து மருந்துச் செடிகள் சேகரிக்கப் பட்டுள்ளன. இவற்றில் சுமார் 50 சதவீதச் செடிகள் முறைப்படுத்தப் பட்டு அட்டையில் ஒட்டப்பட்டு வகைப்படுத்தப் பட்டுள்ளன. இவற்றில் பதினொரு மூலிகைச் செடிகள் இரசாயன ஆய்வுக்காக அனுப்பப்பட்டுள்ளன. இச்செடிகளில் அடங்கியுள்ள மருந்துப் பொருள்களில் முக்கியமானவை இவை:

1. சிமை அடியின் விதைகள் (Peganum Harmala) (கருப்பை சார்ந்த கருத்தரிக்காத் தன்மையும், கரு அழிக்கும் தன்மையும்உடையது)

2. காடலச்சி(Zuffa Tuberosa) (கருப்பை சார்ந்த நோய்களைத் தீர்க்கும் குணமுடையது).

3. தூதுவளை (Selamum Trillebatum) (பொதுவான நரம்பு மண்டலத்தையும், மென் தசைகளையும் சமனப் படுத்தும் தன்மையுடையது).

4. ஊவா முள் (Aristida Cleonei) (சிறுநீர்ப் பெருக்குக் குணமும்சிறுநீர்க் குழலை விரிவு படுத்தும் குணமும் கொண்டது).

5. வாலுளுவை (Celastous Pariculatus ) (பொது நரம்பு மண்டலத்தில் விளைவுகளை உண்டாக்கக் கூடியது).

6. நச்சுறுப்பன் (Tylophera Asthamatiea) (ஆஸ்த்துமா நோய்த் தடுப்பு மருந்தாகப் பயன்படுகிறது).

# இருதயச் சிகிச்சைக்கு இணையற்ற நிலையம்!

"மக்களுக்கு நல்ல பயன் தரக் கூடிய எந்தக் காரியத்துக்கும் தமிழ் நாடு அரசு உதவத்தயங்காது" என்று முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் சென்னைப் பொது மருத்துவமனையில் இருதய இயல் நிலையத்தைத் துவக்கி வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார். அது நூற்றுக்கு நூறு உண்மை என்பது எழுபத்தைந்து இலட்ச ரூபாய் செலவில் கட்டப்பட்ட எட்டடுக்கு மாடிக் கட்டடத்தைப் பார்க்கும்போது நன்கு புலப்பட்டது.

ஏப்ரல் ஏழாந் தேதி!

உலகச் சுகாதார நிறுவன நாள்!

அதே நாளில் இருதய இயல் நிலையத் துவக்க விழா! சென்னையில் முதன் முதலில் இருதய நோய்ச் சிகிச்சையை ஆரம்பித்து வைத்த மறைந்த டாக்டர் சதாசிவத்தின் நினைவாகக் கலை அரங்கம் ஒன்றும் அமைத்திருப்பது மிகவும் பொருத்தமாக இருந்தது.

நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் தலைமையில் நடந்த இவ்விழாவில், டாக்டர் சதாசிவம் அவர்களின் உருவச் சிலையையும், கலையரங்கையும் கல்வி அமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்தியாவிலேயே முதலாவதாகத் திகழும் இந்த இருதய இயல் நிலையத்தில் நவீன விஞ்ஞானக் கருவிகள் பல உள்ளன. இவை அமெரிக்கா, ரஷ்யா, ஹாலந்து ஆகிய நாடுகளிலிருந்து தருவிக்கப்பட்டன. இவற்றின் மொத்த மதிப்பு ரூ. 10 இலட்சம். மின் அணுச் சக்தியால் இயங்கக் கூடிய ஒரு விந்தைக் கருவி ஆறுவது மாடியில் பொருத்தப்பட்டுள்ளது. இதன் பணி வியக்கத்தக்கது.

அறுவைச் சிகிச்சை செய்யும் நேரத்தில் இந்தக் கருவி, மூன்று வேலைகளை ஒரே சமயத்தில் செய்கிறது. அதே நேரத்தில் இருதயத் துடிப்பை 'டேப் ரிக்கார்டில்' பதிவு செய்கிறது; இவை இரண்டும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதே 'டெலிவிஷன்' அமைப்புள்ள ஒரு கருவி, இருதயத்தின் ஒவ்வொரு பகுதியையும் திரைப்படமாகக் காட்டுகிறது!

இன்னும் சில கருவிகள், ஆபத்தான இருதய நோயாளிகளின் தன்மையையும், இருதயத்தில் எந்த இடத்தில் கோளாறுஇருக்கிறதுஎன்பதையும், இதயம், நாடித் துடிப்புகள் எப்படி இருக்கின்றன என்பதையும் கண்டு பிடித்து அறிவிக்கின்றன. இந்தக் கருவிகளையெல்லாம் பொருத்த, ஹாலந்து நாட்டிலிருந்து ஒரு பொறியாளர் வந்திருந்தார்.

இருபத்து நான்கு மணி நேரமும் பணியாற்றும் இந்த நிலையத்தில், குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை, ஏழை முதல் பணக்காரர் வரை, இருதய நோய்ச் சிகிச்சை செய்து கொள்ளலாம். 120 படுக்கை வசதிகள் கொண்ட இந்த நிலையத்தில் 'கட்டுப்பாட்டு அறை' (Control Room) ஒன்றிருக்கிறது. இங்கிருந்தே எந்த நோயாளி எப்படியிருக்கிறார் என்பதை இங்குள்ள கருவிகளின் மூலம் தெரிந்து கொள்ளலாம்.



இந்த நிலையத்தில் ஜூலைத் திங்களிலிருந்து இருதயச் சிகிச்சை மேற்பட்டப் படிப்பும் ஆரம்பிக்கப் படவிருக்கிறது. மிக்கப் பயனுள்ள நூலகம் ஒன்றும் இங்கு அமைக்கப் பட்டிருக்கிறது.

இருதய நோய் என்பது ஒரு புரியாத புதிரா? இந்தக் கேள்விக்கு ஆணித்தரமாக 'இல்லை' என்கிறது அறிவியல். அறிவியல் அதிக வேகமாக வளர்ந்து கொண்டு வரும் இந்த நேரத்தில், எந்த நோயையும் குணப்படுத்தலாம் என்ற உறுதி பிறந்திருக்கிறது. எதையும் தாங்கும் இதயத்தை இறுக்கி 'இறுதிப் பயணத்'துக்கு வழி வகுக்கும் இந்த இருதய நோய் அல்லது மாரடைப்பு எப்படி வருகிறது?

# நெய்வேலியும்...நமது நாடும்

**நெய்வேலி யூரியா:**
விவசாய, உணவு உற்பத்தியை உயர்த்தும்பொருட்டு உச்சபட்ச (46%) அளவுக்கு நைட்ரொஜன் ஊட்டப்பட்ட உரம் தமிழ்நாடு, மைசூர், கேரளம், ஆந்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் இப்போது விற்பனையாகிறது.

யூரியா: பார்மால்டிஹைட் போன்றவற்றைத் தயாரிக்கத் தேவையான தரமுடைய் யூரியாவும் உற்பத்தியாகிறது.

**மின்விசை:**
இந்தியாவின் மிகப்பெரும் அனல்மின்சாரநிலையங்களிலொன்றில் இது உற்பத்தியாகிறது. பழுப்பு நிலக்கரியைப் பயன்படுத்தும் வகையில் கீழ்த்திசையிலேயே இந்நிலையம்தான் முதலாவது.

சுட்டுக்கெட்டித்த பழுப்பு நிலக்கரி-லீக்கோ வீடுகள், ஓட்டல்கள், பலவேறு தொழில்களில் பயன்படுவதற்கு ஏற்ற எரிபொருள். புகையாத இந்தக் கரி சிக்கனமானது, திரம் மிக்கது—தமிழ்நாடு, மைசூர், கேரளம், ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் கிடைக்கிறது.






**தார்ப்பொருள்கள்:**
பல ரசாயன, பிளாஸ்டிக் தொழில்களில் உபயோகிக்கப்படும் கார்பாலிக் அமிலம், ஆர்த்தோ கிரிஸால், மற்றும் எம். பி. கிரிஸால், சைலினூல், பாலிவாலென்ட் ஃபினைல் கலவை.

**நெகோலின்:**
சானிடரி சாதனங்கள், பீங்கான் பாண்டங்கள், எந்தச் சக்தி மின்விசையையும் ஏந்தித் தரவல்ல இன்ஸுலேடர்கள் முதலியவற்றை உருவாக்க உதவும் உயர்தரமான வெள்ளைக் களிமண். ஜவுளி, ரப்பர், மருந்துத் தயாரிப்பு, காகிதத் தொழில்களிலும் இது பயன்படுகிறது

**நெய்வேலி லிக்னைட்
கார்ப்பொரேஷன் லிமிடெட்.,
நெய்வேலி–1**

FDSNLC946TM


---


# பசுமைப் புரட்சிக்கும் பச்சைச் சீருடைக்கும்...

என்பீல்டு இந்தியாவின் தயாரிப்புகளான வில்லியர்ஸ் என்ஜின்கள் வேளாண்மைத் துறையில் நீர்ப்பாசனத்துக்கும், பயிர்ப் பாதுகாப்பு மருந்துகளைத் தெளிக்கவும் உழவுப் பெருங்குடி மக்களின் உற்ற நண்பனாக உதவுகின்றன.

நாட்டின் எல்லைப் பகுதிகளில் பணிபுரியும் படைவீரர்களுக்கும் மற்றவர்களுக்கும் போக்குவரத்து ஊர்திகளாகப் பணி புரிகின்றன, என்பீல்டு இந்தியாவின் புல்லெட் மற்றும் குருசேடர் மோட்டார் சைக்கிள்கள்.

வேளாண்மை, தொழில், போக்குவரத்து ஆகிய துறைகள் வளம் பெற அரும்பணி ஆற்றும் நிறுவனம் என்பீல்டு இந்தியா.



**தி என்பீல்டு இந்தியா
லிமிடெட்
சென்னை-19**

FDSEI-1513TM

இருதய இரத்தக் குழாய்களில் குறிப்பாக இருதயத் தமனிகள் தடிப்படைவதனால் மாரடைப்பு ஏற்படுகிறது. உடல் முழுவதும் உள்ள தமனி இரத்தக் குழாய்கள் தடித்தாலும், மகாதமனி மற்றும் இருதயத் தமனிகள் தடித்தாலும் தீங்கு விளைகின்றன. இருதய இரத்தக் குழாய்கள் தடிக்கும் போது அக்குழாய்களின் வழியே இரத்தம் செல்ல முடியாத வகையில் அவை குறுகி விடுகின்றன. இதனால் இருதயத் தசைகளுக்கு இரத்தம் செல்வது தடைபடுகிறது. இவ்வாறு இருதயத்தின் ஒரு பகுதிக்கு இரத்த ஓட்டம் தடைபடும் போது, அங்குள்ள திசுக்கள் செயலற்று விடுவதால் தாங்க முடியாத வலியுடன் மாரடைப்பு ஏற்படுகிறது. இருதயத் தமனிகள் எவ்வாறு தடித்துப் பருமனாகின்றன என்பதற்குச் சரியான காரணம் இன்னும் கண்டறியப்படவில்லையென்றாலும், கொழுப்புப் பொருள்கள் தமனிகளின் உட்புறச் சுவர்களில் படிவதால் இரத்த ஓட்டம் தடை செய்யப்படுகிறது என்பது தெளிவாகிறது.

மாரடைப்பு, பெண்களைவிட ஆண்களுக்கே அதிகம் வருகிறது. பொதுவாக ஆண்களுக்கு மாரடைப்பு வரும் வயதிலிருந்து 10 அல்லது 20 ஆண்டுகள் கழித்தே பெண்களுக்கு வரும் வாய்ப்புகள் உள்ளன. இதற்குக் காரணம், பெண்கள் உடலில் சுரக்கும் 'ஈஸ்டோரஜன்' ஹார்மோன் என்று கருதுகின்றனர்.

ஒருவருடைய இரத்தத்தில் 'கொலஸ்டிரால்' எனப்படும் கொழுப்பு வகை அதிகமாக இருந்தால், அவருக்குத் தமனிகள் பருமனடைந்து மாரடைப்பு வர ஏதுவாகும். மிருகக் கொழுப்பும், வெண்ணெய் போன்ற பால்வகைக் கொழுப்பும் அதிகமாக உட்கொள்பவர்களுக்குக் 'கொலஸ்டிரால்' அளவு அதிகரிக்கிறது.

மாரடைப்பு நோய் வருவதற்குக் காரணங்கள் என்னென்ன?

சாதாரணமாக உள்ளவரை விடப் புகைபிடிக்கும் ஒருவருக்கு மாரடைப்பு வருவதற்கு இருமடங்கு அதிக வாய்ப்புகள் உண்டு. அதிகமாகப் புகைப்பவர்களுக்கு அந்த அளவுக்கு மாரடைப்பு நோய் வருகிறது. பருத்த உடல் உள்ளவர்களுக்கும் இரத்தக்கொதிப்பின் மூலம் இந்நோய் வருகிறது. நீடித்த மனக்கவலையும், சோர்வும் கூட இந்நோய்க்கு காரணங்களாகும். மற்றும் அடிக்கடி உணர்ச்சி வசப்படுதல், நீரிழிவு நோய்கள், மாரடைப்பு வந்தவர்களது பரம்பரையைச் சேர்ந்தவர்கள், உடல் உழைப்பின்றி இருப்பவர்கள் ஆகியோரையும் இந்நோய் பற்றும் என்று எச்சரிக்கிறது மருத்துவம்.



சரியான நேரத்தில் ஒரு பெரிய மருத்துவமனைக்குப் போய்ச் சேரவியலாத காரணத்தினால்தான் பெரும்பாலோர் இந்நோயினால் மரணமடைகின்றனர். பலர் இந்நோய் வருவதற்குரிய அறிகுறிகளை அசட்டை செய்து உடனடியாக மருத்துவர்களை அணுகாது அவதியுறுகின்றனர். தீவிர இருதயச் சிகிச்சைப் பிரிவுகள் ( Intensive Cardiac Case Units ) தோன்றிவிட்ட இக்காலத்தில், இந்நோயினால் உயிருக்குத் தீங்கு நேரிடுவது மிகவும் கணிசமாகக் குறைந்து விட்டது.



தீவிரச் சிகிச்சைப் பகுதி ஆறும் மாடியில் அமைக்கப்பட்டுள்ளது. குளிர் சாதன வசதி பெற்ற இது, இருதய நோயாளிகளுக்குத் தீவிரச் சிகிச்சை செய்ய வல்ல எல்லா வகைக் கருவிகளையும், மருந்துகளையும் தன்னகத்தே கொண்டு திகழ்கிறது. இந்தப் பகுதியில் விநாடிக்கு விநாடி மிகவும் ஆபத்தான நிலையிலுள்ள இருதய நோயாளிகளுக்கு, 24 மணி நேரத்திலும் தீவிரச் சிகிச்சை அளிக்கப்படுகிறது. அதில் பணி புரியும் மருத்துவர்களும், செவிலியர்களும், பிற அலுவலர்களும் இருதய இயலில் தேர்ந்த பயிற்சி பெற்றவர்கள். இதிலுள்ள கருவிகள் எல்லாம் இருதயம் இயங்குவதற்கு முக்கியமான நாடி, இரத்த அழுத்தம், இதயத் துடிப்பு ஆகியவை பற்றி

உடனுக்குடன் ஆய்ந்து அறிவிக்கும். இருதயம் இயங்கு முறையில் ஏதேனும் கோளாறோ அல்லது பழுதோ ஏற்படுமானால் விரைவில் அதன் காரணத்தை ஆராய்ந்து தக்கப் பாதுகாப்பு முறைகளை மேற்கொள்ள முடியும். சிற்சில சமயங்களில் இருதயமே நின்று விட்டால் கூட, அதை உடனே அறிந்து கொண்டு ஓய்ந்து விட்ட இருதயத்தையும் உயிர்பெறச் செய்யலாம்! அத்தகைய அரியபெரிய சாதனங்களெல்லாம் இப்பகுதி முழுமையாகப் பெற்றிருக்கிறது.



மாரடைப்பு நோயாளிக்கு மறுவாழ்வே கிடையாதா?

ஏன் இல்லை? 'மறுவாழ்வுத் திட்டம்' இதற்கு வழி வகுக்கிறது. ஒரு தொழில் செய்யும் போது, இருதய நோயுற்றவர்கள் திட்டமிடாது ஏராளமான ஆற்றலை வீணாக்குகிறார்கள். அவர்களுடைய தசைகள் போதிய பயிற்சி இன்மையால் திறமையாகச் செயல் புரிவதில்லை. அதனால் இதயத்துக்கு வேலைச் சுமை குறைகிறது. உடற் பயிற்சி மருத்துவத்தின் அடிப்படைத் தத்துவம் இதுதான். இந்த அடிப்படையில்தான் இருதய நோயாளிகளுக்கு 'மறுவாழ்வுப் பயிற்சித் திட்டம்' வகுக்கப்பட்டுள்ளது.

இத்தகைய மறுவாழ்வுத் திட்டத்தின்படி அமைந்துள்ள உடற் பயிற்சிகள் எல்லாம் விஞ்ஞான ரீதியாக வகுக்கப்பட்டுள்ளன. மெல்ல மெல்ல நோயாளிகள் உடற் பயிற்சித் திறனை அதிகப்படுத்த வேண்டும் என்ற அடிப்படையில் தான், இத்தகைய பயிற்சிகள் உருவாக்கப்பட்டுள்ளன. இத்தகைய மருத்துவம் பல திங்கள் வரை நீடிக்குமாதலால், மருத்துவமனையிலும், சிகிச்சை முடிந்ததும் வீட்டிலும் இந்தப் பயிற்சியினைச் செய்யலாம்.

இதற்கான யோசனைகளை இங்கே உள்ள மருத்துவர்கள் வழங்குகின்றனர்.

இருதய நோயாளிகள் நாம் இனி எந்த அலுவலையும் செய்யக் கூடாது என்று சோர்ந்து கிடக்கத் தேவையில்லை, இருதய நோய் மறுவாழ்வுப் பயிற்சித் திட்டத்தின்படி, அவர்கள் இயற்கையான தங்கள் வாழ்வைத் திரும்பப் பெறலாம். அதற்குப் போதிய மருத்துவ நல்லுரைகளை வழங்க இருதய இயல் நிலையம் முற்பட்டு வருகிறது. இருதய நோய் வந்தவர்கள் இனி எதிர்காலத்தில் நம்பிக்கையுடன் வாழ வகுக்கும் வகையில் வானளாவ உயர்ந்து, அரசின் செயற்கரிய செயலுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாய்த் திகழ்கிறது இந்நிலையம்.



# மண்டல வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தின் தொண்டு!

ஆடுதுறையில் உள்ள மண்டல வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் 1922-ஆம் ஆண்டு சுமார் 50 ஏக்கர் பரப்பளவில் துவக்கப் பட்டது. 1962-ஆம் ஆண்டிலிருந்து மற்றும் 47 ஏக்கர் நிலங்கள் சேர்க்கப் பட்டு மண்டல ஆராய்ச்சி நிலையமாக விரிவுபடுத்தப் பட்டது. சுமார் 15 இலட்சம் ஏக்கர்களில் நெல் பயிரிடப்படும் தஞ்சை மாவட்டத்தின் காவிரிப் பாசனப் பகுதிக்குத் தேவையான நெல் தினுசுகளை உற்பத்தி செய்யும் ஆராய்ச்சியில் இந்நிலையம் தன் முழுக்கவனத்தையும் செலுத்தி வருகிறது.

#### சாதனைகள்

**இன அபிவிருத்தி இயல்:** இனச் சேர்க்கை மூலமும் அயல் ஆராய்ச்சி நிலையங்களின் தரமுள்ள நெல் ரகங்களை நேரடியாகப் பரப்புவதன் மூலமும் உயர் ரக நெல் ரகங்கள் வெளியிடப்படுகின்றன. இந்த ஆராய்ச்சி நிலையம் இதுவரை 29 நெல் ரகங்களை வெளியிட்டுள்ளது. விரைவில் 30-வது ரகம் வெளியிடப்படவிருக்கிறது. இந்த ரகங்கள் அவ்வப்போது அதிக விளைச்சலைக் கொடுத்து வந்துள்ளன.

இந்த ரகங்களில் ஜப்பானிய ரகமான நாரின்-8 என்ற நெல்லையும், இந்திய ரகமான கிச்சிலி சம்பாவையும் (ஜி.இ.பி. 24) ஒட்டுச் சேர்த்து உருவாக்கப்பட்ட ஆடுதுறை 27 என்ற ரகம் தமிழ்நாட்டிலேயே ஒரு புதிய பசுமைப் புரட்சியை ஏற்படுத்தியது எனலாம்.

தஞ்சை மாவட்டத்தின் சராசரி மகசூலை 1·5 டன்னுகை ஆடுதுறை-27 உயர்த்தியுள்ளது. மேலும் தஞ்சை மாவட்டத்தில் குறுவைப் பட்டத்தில் 95 சதவிகிதம் இந்த ரகம் பயிரிடப் படுகிறது.

இதைத் தவிர பிலிப்பைன்ஸ் நாட்டிலிருந்து வந்துள்ள ஐ.ஆர். 8, ஐ.ஆர். 5 போன்ற ரகங்களும் இந்த ஆராய்ச்சி நிலையத்தில் பரிசோதிக்கப்பட்டு அதற்கான உரச் சிபாரிசுகளுடன் வெளியிடப்பட்டுள்ளன.

பயறு வகைகளில் ஆடுதுறை-1 என்ற பச்சைப் பயறும், ஆடுதுறை-1 என்ற உளுந்தும் வெளியிடப் பட்டுள்ளன. இதைத் தவிர கோடைக்காலத்தில் நெல் தரிசில் பயிரிட்டு,பருத்திஉற்பத்தியைப் பெருக்க பி.ஆர்.எஸ். 72 போன்ற குறுகிய காலப் பருத்தி வகைகளைப் பற்றிய ஆராய்ச்சியையும் இந்த நிலையம் மேற்கொண்டுள்ளது.

இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், அஸ்ஸாம், இந்தோனேசியா, ஜாவா போன்ற இடங்களிலிருந்து தருவிக்கப்பட்ட ரகங்களை நம் நாட்டு ரகங்களுடன் ஒட்டுச் சேர்த்து சிறந்த ரகங்களைப் பெற ஆராய்ச்சி செய்யப்பட்டு வருகிறது. இதன் பயனுகக் குறைந்த வயதும், அதிக உர மேற்கும் தன்மை, சாயாத் தன்மை, விரைவில் முளை விடாத்தன்மை, தரமுள்ள மணிகள் இவை யாவும் ஒருங்கே இணையப்பெற்ற நெல் ரகங்கள் கிடைக்கும் என்ற நம்பிக்கையுள்ளது.

#### உழவியல்

உழவியலைப் பொறுத்தவரை விதையளவு நடுவதற்குத் தகுந்த காலம், தக்க தருணத்தில் உரமிடுதல் யாவும் ஆராயப்பட்டு முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

#### மண் வள இரசாயன இயல்

தொழு உரம், பசுந்தாள் உரம், இரசாயன உரம் ஆகியவை பற்றி ஆராய்ந்து அவைகள் மண்ணையும், விளைச்சலையும் எவ்வாறு பாதிக்கின்றன என்பதை நன்கு ஆராய்ந்து, தொடர்ந்து இரசாயன உரம் இடுவதால், மண்ணின் தரமோ, விளைவோ பாதிக்கப்படுவதில்லை எனக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. மண் பரிசோதனை நிலையத்தாரால் சிபாரிசு செய்யப்படும் உர அளவுகள் எவ்வாறு சிறந்த முறையில் பலனளிக்கின்றன என ஆராய்ச்சி செய்து முடிவுகள் வெளியிடப் பட்டுள்ளன.

#### பூச்சி இயல் மற்றும் பூஞ்சாள இயல்

நெல்லின் விளைவைப் பூச்சிகளும், நோய்களும் பெரிதும் பாதிக்கின்றன. பலரகமான பூச்சிக் கொல்லி, நோய்க் கொல்லி மருந்துகளைப் பயன்படுத்திப் பார்த்து, பாலிடால், பி.எச்.சி., டயசினன் குறுணைகள் போன்ற பூச்சி கொல்லிகளும் பிளிட் 406, க்யூமான் போன்ற நோய்க் கொல்லி மருந்துகளும் திறமுள்ளவையெனக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. எலிகளைப் கொல்லக் கிட்டி வைத்தல், வரப்பைத் தோண்டிப் பிடித்தல், விஷ மருந்துகள் வைத்தல் ஆகிய வழி முறைகள் ஆராயப் பட்டுள்ளன. மின் சாரக் கம்பி அமைத்து எலிகளைக் கொல்லும் முறையும் ஆராய்ச்சியில் இருந்து வருகிறது.

#### இரட்டை வரிசை நடவு

இந்தப் புதியதொரு நடவு முறையை ஆடுதுறை ஆராய்ச்சி நிலையத்தில் சோதிக்கப்பட்டதில் கீழ்க்கண்ட நன்மைகள் இருப்பது தெரியவந்துள்ளன.

சேதமின்றிப் பயிர் உயிர் பிடித்துத் துரிதமாகக் கரும் பச்சை நிறமடைகிறது.

பயிரினுள் சென்று களையெடுத்தல், உரமிடுதல், மருந்து தெளித்தல் முதலிய சாகுபடிப் பணிகளை எளிதில் மேற்கொள்ள முடிகிறது.

எல்லா நாற்றுக்களும் நன்கு சூரிய ஒளி பெற்றுத் திரம்பட வளர்கின்றன.

பாசன நீரைச் சீராகக் கட்டுப் படுத்திச் சிக்கனமாக உபயோகிக்க முடிகிறது.

எலிகளினல் ஏற்படும் சேதம் குறைவு.

சுருள்பாய் நாற்றங்கால் இந்தப் புது முறை நாற்றங்கால் தயாரிப்பு பிலிப்பைன்ஸ் நாட்டிலும், இதர நாடுகளிலும் இருந்து வருகிறது. இம்முறை வங்காளத்திலும், ஆந்திரத்திலும், பயன்படுத்தப்பட்டு நல்ல விளைச்சல் தந்துள்ளது எனத் தெரிய வருகிறது. இதனால் எளிதாகவும், சிக்கனமாகவும், மிகச் சிறிய நிலப் பரப்பிலேயே குறுகிய காலத்தில் நாற்றுக்கள் தயார் செய்ய முடிகிறது. இதைப் பரிசோதித்து நடைமுறைக்குச் சிபாரிசு செய்துள்ளனர். இதனை ''தபாக்'' நாற்றங்கால் (Dapag Nursery) என ஆங்கிலத்தில் கூறுவர்.

**இந்த நாற்றங்காலின் அனுகூலங்கள்:** இம்முறைப்படி எங்கெங்கு வேண்டுமானாலும் நாற்று விடலாம். வயல்களிலும், வீட்டுத் தோட்டங்களிலும், களங்களிலும் இந் நாற்றங்காலைத் தயார் செய்யலாம்.

நாற்றங்காலுக்கு வேண்டிய இடம் வெகு குறைவாகும். சாதாரணமாக ஒரு ஏக்கர் நடவுக்கு வேண்டிய நாற்றுக்களை ½ சென்ட் நாற்றங்காலிலிருந்தே அடையலாம்.

நாற்று விட்ட 12 முதல் 14 நாட்களில் பறித்து நடுவதால் பத்துப் பதினைந்து நாட்கள் முன்னதாகவே நடவுசெய்யலாம்.

நாற்றங்கால் செய்வதற்கான உழவு, களையெடுத்தல், நாற்றுப் பறித்தல் முதலியன மிச்சமாகின்றன.

இந்நாற்றங்காலுக்கு உரமிட வேண்டிய அவசியமில்லை.

நாற்றுக்களைப் பாய்போல் சுருட்டி வெகு எளிதில் நடவு வயலுக்கு எடுத்துச் செல்லலாம்.

இந்த நாற்றங் காலுக்கு அதிகத் தண்ணீர் தேவையில்லை.

நாற்றின் வேர்கள் அறுந்து போவதில்லை. இதனால் நாற்றுக்கள் மிக, எளிதில் வேரூன்றிப் பச்சை பிடிக்கின்றன.

இம்முறையில் தயார் செய்யப்பட்ட நாற்றுகள் விரைவில் கிளைத்துச் செழித்து, வளர்ந்து அதிக மகசூல் தருகின்றன.

சேற்று நாற்றங்கால் (12 சென்ட்) தயார் செய்யச் சுமார் ரூபாய் 55 செலவாகிறது. ''தபாக்'' (சுருள் பாய்) முறையில் நாற்றங்கால் தயாரித்தால் ரூபாய் 35 தான் செலவாகிறது.

சாதாரணமாக இந்நாற்றங்காலில் பூச்சிகளோ, நோய்களோ காணப்படுவதில்லை.

**அகில இந்திய நெல் அபிவிருத்தித் திட்டம்:** இத்திட்டம் மத்திய அரசு நிதி உதவியுடன் 1969-ஆம் ஆண்டு முதல் ஆடுதுறையில் செயல்படத் தொடங்கியுள்ளது.

நெல் சம்பந்தப்பட்ட ஆராய்ச்சி நடக்கும் இந்தியாவிலுள்ள மற்ற நிலையங்களின் தொடர்புடன் நெல் வித்துக்களைப் பறிமாறிக்கொண்டு, உயர் ரகங்களைத் தேர்ந்தெடுத்து விநியோகம் செய்வது இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். பல முக்கிய ரகங்கள் இத்திட்டத்தின் கீழ் சோதனையில் இருந்து வருகின்றன. இது தவிர, உழவியல், பூச்சி, பூசணச் சம்பந்தப்பட்ட ஆராய்ச்சிகளும் இத்திட்டத்தின் கீழ் நடைபெற்று வருகின்றன.

# கரந்தைப் புலவர் கல்லூரி

வரலாற்றுச் சிறப்பும், கலைமுதலாம் பல வளனும் நிறைந்து சான்றோர் போற்ற விளங்கும் தஞ்சை மாநகரின் வடபால் மிளிரும் கருந்திட்டைக் குடியில் தமிழகத்தின் தொன்மையான தமிழ்க் கல்லூரிகளில் ஒன்றாகிய கரந்தைப் புலவர் கல்லூரி அமைந்துள்ளது. தமிழவேள் த. வே. உமாமகேசுவரம் பிள்ளை போன்ற தமிழ்ப் பேரன்பர்களுடைய முயற்சியால் 1938-ஆம் ஆண்டில் இக்கல்லூரி தோற்றம் பெற்றது. 1942-ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழகத்தார் இக்கல்லூரியை ஏற்றுக் கொண்டு தனித் தமிழ் வித்துவான் தேர்விற்குப் பயிற்றுவதற்குரிய ஒப்புதல் அளித்தனர்.

இக்கல்லூரியை 1949-ஆம் ஆண்டிலிருந்து நான்கு ஆண்டுகள் திருவாவடுதுறை ஆதீனத்தார் புரந்தனர். மீண்டும் 1953 முதல் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தாரே புரந்து வருகின்றனர். இக்கல்லூரியோடு உமாமகேசுவரர் உயர்நிலைப்பள்ளி, இராதாகிருஷ்ணத் தொடக்கப்பள்ளி, குழந்தைகள் இல்லம் ஆகியவற்றையும் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தார் நடத்தி வருகின்றனர். இக்கல்லூரியின் தொடக்க காலம் தொட்டே சிறப்பு மிக்க பெரும் புலவர்கள் பணியாற்றி வருகின்றனர். அவர்களுடைய பணியின் சிறப்பால் இக் கல்லூரியின் புகழ் நாடெங்கும் பரவியுள்ளது.

இக் கல்லூரியில் சென்னைப் பல்கலைக் கழகத்தின் புலவர் படிப்பிற்கு மாணவியர் பயிற்றுவிக்கப்படுகின்றனர்.

கரந்தைத் தமிழ்ச்சங்கம் ஒரு நூல் நிலையத்தையும் திக்கற்ற மாணவரில்லத்தையும் நடத்தி வருகிறது. கரந்தைத் தமிழ்ச் சங்கம் அதனுடைய மணிவிழாவை அண்மையில் கொண்டாடவிருக்கிறது.

''கன்னல் மொழி பேசும் சின்னக் குழந்தைகளின் அழகுப் போட்டி கலைவாணர் அரங்கில் நடைபெறுகிறது'' என்று ஒருவர் சொல்லிக்கொண்டிருந்ததைக் கேட்டவுடன், என் கால்கள் கலைவாணர் அரங்கை நோக்கி விரைந்தன. நான் அங்குச் சென்றபோது, போட்டிகள் முடிந்துவிட்டிருந்தன. பரிசு அளிக்கும் நிகழ்ச்சிக்கு மேடையில் ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. வண்ண வண்ண விளக்கொளியில் சின்னஞ் சிறு குழந்தைகள் மேடையில் தோன்றி அழகு காட்டிய காட்சியைக் காணும் வாய்ப்பை இழந்து விட்டோமே என்ற மனக் குறையுடன் ஓர் ஒதுக்குப் புறமாக நின்று கொண்டிருந்தேன்.

''முல்லை என்ற பெயருடைய குழந்தை முதற் பரிசு பெற்றுள்ளது. அக் குழந்தைக்கு ஒரு தங்கப் பதக்கமும், முந்நூறு ரூபாயும் பரிசாக அளிக்கப்படும். முல்லை மேடைக்கு வந்து பரிசைப் பெற்றுச் செல்லலாம்'' என்று ஓர் அம்மையார் அறிவித்தார்.

சற்று நேரத்திற்குப் பிறகு ஒரு குழந்தை மேடையை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. பலத்த கையொலி எழுந்து கொண்டிருந்தது. மேடையை அடைந்தவுடன் அந்தக் குழந்தை, விழா மேடையில் இருந்தவர்களை வணங்கிவிட்டுக் கூட்டத்தினரை நோக்கி வணங்கியது. அந்தக் குழந்தை என் நண்பன் மணியின் குழந்தையாக இருப்பது கண்டு மகிழ்ச்சியுற்றேன்.

''உன் மேனி எழிலின் ரகசியம் என்ன?'' என்று விழாத் தலைவர் முல்லையைக் கேட்டார்.

''என் மேனி எழிலுக்கு மேற்கிந்தியச் செர்ரிப் பழமே காரணம்'' என்று மழலை மொழிகளை உதிர்த்தாள் முல்லை. அவள் அவ்வாறு கூறியது திரைப்பட நடிகைகள் கூறுவது போல் இருக்கவே எல்லாரும் மகிழ்ந்து கையொலி செய்தனர். நானும் எல்லையில்லா மகிழ்ச்சியுடன் கையொலி எழுப்பினேன்.




பரிசுப் பதக்கத்தை விழாத் தலைவர் முல்லையின் கழுத்தில் அணிவித்து விட்டுப் பரிசுப் பணத்தையும் கொடுத்தார். அதைப் பெற்றுக் கொண்ட முல்லை விழாத் தலைவருக்கு வணக்கம் செலுத்தி விட்டுக் கூட்டத்தை நோக்கியும் வணக்கம் செய்து விட்டு, அழகு இராணி போல் அன்னநடை நடந்து, மேடையை விட்டுக் கீழே இறங்கினாள். நான் என் மகிழ்ச்சியைத் தெரிவிக்க விரும்பி, என் நண்பனும், அவன் மகள் முல்லையும் இருக்கும் இடத்தை நோக்கிச் செல்ல முயன்றேன். ஆனால், கூட்ட நெருக்கடியில் என்னால் முன்னே செல்ல இயலவில்லை. விழா முடிந்ததும் அவர்கள் இருக்குமிடத்திற்குச் சென்று என் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டிருந்தேன். அதற்குள் என் நண்பனையும், முல்லையையும் பத்திரிகை நிருபர்கள் சூழ்ந்து கொண்டனர்.

''என் மேனி எழிலுக்கு மேற்கிந்தியச் செர்ரிப் பழமே காரணம் என்று உங்கள் குழந்தை கூறியதே, அதைப் பற்றிக் கொஞ்சம் விளக்கமாகச் சொல்வீர்களா?'' என்று ஒரு பத்திரிகை நிருபர் என் நண்பனைக் கேட்டார்.

''இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு என் மனைவி இறந்து விட்டாள். அதன்பின் என் குழந்தை எலும்பும் தோலுமாக ஆகிவிட்டது. நானும் ஏதேதோ மருந்து வாங்கிக் கொடுத்தும் பயனில்லை. அப்பொழுது ஒரு நாள் என் வீட்டிற்கு வந்த என் நண்பன் அருள் ''குழந்தைக்கு மேற்கிந்தியச் செர்ரிப் பழம் கொடுத்து வந்தால் குழந்தை நோய் நொடியின்றி நன்கு வளரும்'' என்று கூறி விட்டு என் வீட்டுத் தோட்டத்தில் அவனால் நடப்பட்டிருந்த மேற்கிந்தியச் செர்ரி மரத்தில் இருந்த பழங்களைப் பறித்துக் கொடுத்தான். என் குழந்தை

யும் அப் பழங்களைத் தின்றது. அது முதல் அவ்வப்போது கிடைக்கும் மேற்கிந்தியச் செர்ரிப் பழங்களை என் குழந்தைக்கே கொடுத்து வருகின்றேன். என் குழந்தையும் நோய் நொடியின்றி அழகாக வளர்ந்து வருகிறது. அந்த நண்பர் இவர் தான்! இவர் யோசனையைக் கேட்டு நடந்ததாலேயே முல்லை அழகாக வளர்ந்தாள். இவர் வேளாண்மைத் துறையில் பணி யாற்றுகிறார்.'' என்று கூறி என்னை அறிமுகப்படுத்தி வைத்தான் மணி.

''மேற்கிந்தியச் செர்ரிப் பழத்தின் சிறப்பு என்னங்க?'' என்று ஒரு நிருபர் என்னைக் கேட்டார்.

''எல்லாப் பழங்களையும் விட மேற்கிந்தியச் செர்ரிப் பழத்தில் அதிக அளவு வைட்டமின் 'சி' உள்ளது. 100 மில்லி கிராம் மேற்கிந்தியச் செர்ரிப் பழங்களில் 1,300 மில்லி கிராம் வைட்டமின் 'சி' உள்ளது. கொய்யா, நெல்லிக்காய், ஆகியவைகளில் 100 கிராம் எடையில் முறையே 300 மில்லி கிராம், 600 மில்லி கிராம் வைட்டமின் 'சி' சத்து மட்டுமே அடங்கியுள்ளது. மேற்கிந்தியச் செர்ரிப் பழங்களில் வைட்டமின் 'சி' அதிகமாக இருப்பதனாலேயே, அவைகளைத் தொடர்ந்து சாப்பிட்டு வந்த முல்லையின் மேனி அழகு பெற்றது'' என்றேன்.



''மேற்கிந்தியச் செர்ரி தமிழ் நாட்டிற்கு எப்படி வந்ததுங்க? அது எப்படி உங்களுக்குக் கிடைத்ததுங்க?'' என்று கேட்டார் மற்றொரு நிருபர்.

''மேற்கிந்தியச் செர்ரிக்குப் 'பார்படோஸ் செர்ரி' என்றும், 'போர்டோ ரீகன் செர்ரி' என்றும் மறுபெயர்கள் உண்டு. இது தமிழ் நாட்டின் பழ வளத்திற்குப் புதிய சேர்ப்பாகும். மேற்கத்தியச் செர்ரிக் கன்றுகள் அமெரிக்காவிலிருந்து கொண்டு வரப்பட்டு கோயம்புத்தூரில் உள்ள வேளாண்மைக் கல்லூரிப் பழப்பண்ணையில் 1958-ஆம் ஆண்டில் நடப்பட்டன. அக்கன்றுகள் நன்கு வளர்ந்து காய்க்க ஆரம்பித்தவுடன், அவைகளை இனப்பெருக்கம் செய்து விற்கின்றனர். நான் சில கன்றுகளை வாங்கி வந்தேன். அதில் ஒன்றை என் நண்பன் மணி வீட்டில் நட்டு வைத்தேன். அந்தக் கன்று, வளர்ந்த பின் கொடுத்த பழங்களே முல்லையைப் பரிசுபெறும் அளவுக்கு அழகியாக்கியது'' என்றேன்.

''மேற்கிந்தியச் செர்ரிப் பழம் தித்திக்குமா? பயன் படுத்துவது எப்படி?'' என்றார் மற்றொரு நிருபர்.

மேற்கிந்தியச் செர்ரிப் பழங்களில் அமிலத்தன்மை இருப்பதால், அவை சற்றுப் புளிப்பாக இருக்கும். இப்பழங்களை பழச்சாறு ஆகவும், நல்ல நிறமும் சுவையும் மிக்க பழப் பாகு ஆகவும், உலரவைத்த பழங்களாகவும் தயாரிக்கலாம் என்று தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் பழ ஆராய்ச்சிப் பிரிவில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. அன்னாசிப் பழச்சாறு, பலாப் பழச் சாறு போன்றவைகளுடன், மேற் கிந்தியச் செர்ரிப் பழச்சாறையும் கலந்தால், நல்ல மணமும் குணமும், வைட்டமின் 'சி' சாறும் நிறைந்த பழச்சாறு கிடைக்கும் என்பது ஆராய்ச்சி மூலம் தெரிய வந்துள்ளது. மேற்கிந்தியச் செர்ரிக் காய்களை உப்பில் போட்டு ஊறு காய்களாகவும் தயாரிக்கலாம். அவ்வாறு தயாரிக்கப்பட்ட ஊறு காய்கள் நல்ல சுவையுள்ளதாய் இருக்கும். 100 கிராம் செர்ரி ஊறுகாயில், ஓர் ஆண்டு கழித்தும் 800 மில்லி கிராம் வைட்டமின் 'சி' சத்து உள்ளது. வயது வந்த ஒவ்வொருவருக்கும் ஒரு நாளைக்கு 50 மில்லி கிராம், சிறு குழந்தைகள் ஒவ்வொருவருக்கும் ஒரு நாளைக்கு 30 முதல் 50 மில்லி கிராம் வைட்டமின் 'சி' சத்து தேவை. எனவே, நாளொன்றுக்கு ஒரு மேற்கிந்தியச் செர்ரிப் பழத்தையோ அல்லது அதன் ஊறுகாய் சிறு அளவையோ சாப்பிட்டால் போதும். தேவையான வைட்டமின் 'சி' சத்து கிடைத்துவிடும். மேற்கிந்தியச் செர்ரி மரம் சிறிதாக வளருவதால் அதை வீட்டுத் தோட்டத்தில் கூட வளர்க்கலாம்'', என்றேன்.




செறிந்து கிடக்கின்ற செர்ரிப் பழத் தோட்டம்
நிறைந்து மணக்கின்ற நேர்த்தி மிகு காட்சி

மேற்கிந்தியச் செர்ரிக் கன்று எங்குக் கிடைக்கும் என்றார் மற்றொரு நிருபர்.

'' கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகப் பழப் பண்ணையிலிருந்து மேற்கிந்திய செர்ரிக் கன்றுகளைப்பெறலாம்'' என்றேன்.

நிருபர்கள் அனைவரும் என் நண்பன் மணிக்கும், முல்லைக்கும், எனக்கும்நன்றிதெரிவித்துவிட்டுப் புறப்பட்டனர். மணியையும் முல்லையையும் வீட்டிற்கு அனுப்பிவிட்டுப் புதிய பழச் செடியைப் பரப்புவதற்கு ஒரு வாய்ப்புக் கிடைத்த மகிழ்ச்சியில் அலுவலகத்தை நோக்கிப் புத்துணர்வுடன் திரும்பினேன்.

## கன்னிமாராவின் கதை!

1886—1891-ல் சென்னை ஆளுநராக இருந்த கன்னிமாரா பிரபுவின் பெயரில் தொடங்கப்பட்ட கன்னிமாரா பொது நூலகம் 1896 டிசம்பரிலிருந்து செயல்படத் தொடங்கியது.

1950 ஏப்ரல் திங்களிலிருந்து தமிழ்நாடு 1948-ஆம் ஆண்டு பொதுநூலகச் சட்டத்தின் கீழ் இந்நூலகம் மாநில மத்திய நூலகமாக மாறியது. 1955 செப்டம்பர் 10-ஆம் நாளிலிருந்து இந்நூலகம் இந்தியாவிலேயே உள்ள மூன்று பொது நூலகங்களில் ஒன்றாக அறிவிக்கப்பட்டு, 1954 மே 10-ஆம் நாள் தொடங்கி வெளியாகும் எல்லா வெளியீடுகளையும் பெறுதற்குரியதாயிற்று. மேலும், இந்நூலகம் 1965 செப்டம்பர் 15-ஆம் நாளிலிருந்து யுனஸ்கோ செய்தி நிலையமாகவும் பணியாற்றுகிறது. 1966 மார்ச்சு 21-லிருந்து நூலக அறிவியல் நிறுவனம் ஒன்று இதன் பிரிவுகளில் ஒன்றாகச் சேர்க்கப்பட்டது. ஐக்கிய நாடுகள் சங்கம் அதன் அமைப்புகள் ஆகியவற்றின் வெளியீடுகள் அதன் பத்திரிகைகள் வைத்துவரப்படும் நிலையமாகவும் இது உள்ளது.

புத்தகங்கள் அடுக்கி வைப்பதற்காக 20,080 அடி இடமும் 27,000 சதுர அடி பரப்பளவும் கொண்டுள்ள இந்நூலகம் ஒரே சமயத்தில் 250 வாசகர்கள் படிக்கும் வசதி பெற்றுள்ளது. தற்போது இந்நூலகம் 5,689 இதழ்களையும், 280 பத்திரிகைகளையும் பெறுகிறது. 1963 சனவரியிலிருந்து குழந்தைகள் இலக்கியத்தில் தமிழில் திங்கள் நூல் விவரப் பட்டியலும், 1964 ஜூலையிலிருந்து தமிழ்நாடு திங்கள் நூல் விவரப் பட்டியலும் வெளியிடுகிறது.

1970–71-ல் நாள் ஒன்றுக்குச் சராசரி 479 பேராக 1,45,692 வாசகர்கள், 5,60,753 புத்தகங்களைப் பயன்படுத்தியுள்ளனர். நாள் ஒன்றுக்குச் சராசரி 406 புத்தகங்கள் ஆக 7,581 உறுப்பினர்களுக்குப் படித்துக் கொடுக்கப்பட்ட 1,23,677 புத்தகங்கள் இதில் அடங்கும். இதனால் நாள் ஒன்றுக்குக் கொடுக்கப்பட்ட புத்தகங்களின் எண்ணிக்கை 1,844 ஆகிறது. இந்நூலகத்தில் இப்போதுள்ள புத்தகங்களின் இருப்பு 2.30 இலட்சம் ஆகும்.

## வெண்பாப் போட்டி-35

முறிப்படி : கைக்காக வாழ்தல் கடன்

முடிவு நாள் : 1—6—1972

பரிசு : ஓராண்டு 'தமிழரசு' அன்பளிப்பு

வெண்பா அனுப்பவேண்டிய முகவரி :—

ஆசிரியர் (வெண்பாப் போட்டி),
"தமிழரசு" அலுவலகம்,
அரசினர் தோட்டம், சென்னை-2.

---

குறிப்பு

அஞ்சல் அட்டையில் வரும் வெண்பாக்களே ஏற்றுக்கொள்ளப்படும்.

அடுத்த இதழிலிருந்து!
நாளையத் தலைமுறை பகுதியில்
'பூங்கொடி' எழுதும்
நீதிக்கு ஒரு கதை
என்னும் தலைப்பில்
சிறு கதைகள்
தொடர்ந்து
வெளிவருகின்றன!
ஒவ்வொரு
கதையும்
ஒரு நீதி சொல்லும்
சிறுவர் கதைகள்
பெரியவர்களும்
படிக்கலாம்!

# ஏழை வள்ளல் ஆனார்

சுமார் 18 வயதுடைய ஒரு தமிழ் மாணவர் தண்டையார்ப் பேட்டையிலிருந்து மயிலாப்பூரிலுள்ள ஒரு தமிழ் ஆசிரியரிடம் தமிழ் பயில நாள்தோறும் கடற்கரையோரமாகவே செல்வார். அவர் வழிநடை தெரியாமல் இருக்க ஒரு காலணாவுக்கு (அக்கால நாணயம்) ஏதாவது சுண்டல் வாங்கிக் கொள்வார். ஒரு நாள் மயிலையில் தம் தமிழாசிரியரிடம் பாடங் கேட்டுவிட்டு, அன்று மாலை மயிலைக் கடற்கரையில் தன் தோழனோடு சிறிது நேரம் வீற்றிருந்தார். இத் தமிழ் மாணவர் தன் தோழனிடம், '' **நண்பா** ! இக் கடற்கரையின் எழிலும், காற்றின் இனிமையும், எவ்வளவு இதமாக இருக்கின்றது. இங்கு ஒரு பெரிய வீடு கட்டி வாழ்வோமானால் எவ்வளவு நலமாக இருக்கும் !'' என வியந்து கூறினாராம். நண்பரும் இந்த அரிய ஆசைக்கு ஆதரவு காட்டி மகிழ்ந்தாராம்.



ஆம்! எவ்வளவு பேராசை இந்த இளைஞருக்கு என்பது நண்பனின் எண்ணம். இந்தப் பேராசையும் பலித்தது. காலப் போக்கில் சில ஆண்டுகள் கழித்து, அதே மயிலைக் கடற்கரையில், மைசூர் மன்னர் மாளிகைக்குப் பின் பக்கலில், '' கடலகம் '' என்ற தமிழ் மாளிகையை எழுப்பி எழிலுடன் வாழ்ந்தார் இந்தத் தமிழ் மாணவர். இவர்தான் பேராசிரியர் கா. நமச்சிவாயர் ஆவார்.

இவர் வட ஆர்க்காடு மாவட்டம் காவேரிப்பாக்கம் எனும் ஊரில் வேளாண் குடியில் இராமசாமிக்கும், அகிலாண்டவல்லி அம்மைக்கும் 1876—ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 20 ஆம் நாள் பிறந்தார். சிறு வயதில் தந்தையிடமே கல்வி கற்றார். பின் மயிலையில் வாழ்ந்த மகாவித்துவான் சண்முகம் பிள்ளை அவர்களிடம் பல தமிழ் இலக்கண இலக்கிய நூல்களைப் பயின்றார்.

கா. நமச்சிவாயர் தம் 16ஆம் வயதில் தொடக்கப் பள்ளி ஆசிரியராய் அமர்ந்தார். பின்னர் பல உயர்நிலைப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் தமிழ்ப் புலமை நடத்தினார். கடைசியில் சென்னை மாநிலக் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவரானார். அது மட்டுமா ? பல்கலைக் கழகத் தமிழ்ப் பாடநூல் குழுவின் தலைவரானார். தனித் தமிழ் வித்துவான் பாடத்தை வகுத்துத் தந்தார். தமிழ்ப் புலவர்களும் பி. ஏ., பட்டதாரிகள் போல் அங்கி ( Gown ) பெறும் வாய்ப்பினை உண்டாக்கினார்.

பேராசிரியர் கா. நமச்சிவாயர் குழந்தைகளுக்குப் பல பாட நூல்கள் எழுதினர். தொடக்கப் பள்ளி மாணவர் முதல் கல்லூரி மாணவர் வரை படிக்கும் தமிழ் நூல்களைத் தயார் செய்தார். மிகச் சிறந்த முறையில் அறநெறியில் பொருள் ஈட்டினர். சென்னைக் கடற்கரை மாளிகையோடு நிற்கவில்லை, நீலகிரியிலும் ஒரு மாளிகை அமைத்தார்.

இனிப்பான சுவையுடைய பொருளை ஈ மொய்ப்பது போலப் பண்பாலும், அறிவாலும், ஆராய்ச்சியாலும், அருள் உள்ளத்தாலும், இந்தத் தமிழ் ஆசிரியரைச் சுற்றிப் பல தமிழ் ஆசிரியர்கள் எப்பொழுதும் இருப்பார்கள். இவரது வீட்டில் நாள் தோறும் திறனாய்வுகள் நடைபெறும். நாள்தோறும் வரும் புலவர்களுக்கு விருந்தும் இருக்கும். இத்துடன் நின்றார் இல்லை.

பேராசிரியர் கா. நமச்சிவாயர் வறுமை என வாடித் தன்னை நாடி வந்த புலவர்களுக்குக் கை பதிலாகப் பல ஆயிரம் வெண்பொற் காசுகள் வழங்கியுள்ளார். அதுவல்லாது ரூ. 100, 200, 500, 1,000 எனக் கடன் பத்திரம் மூலம் சுமார் ரூ. 35,000 வரை வழங்கி இருந்தார். ஒரு நாள் மாலை அந்தக் கடன் பத்திரங்களைக் கிழித்தெறியச் சொன்னார். அவைகளைக் கிழித்துக் கொண்டிருந்த இவரது நண்பர், ''இதோ இந்த இரண்டு பத்திரங்கள் காலங் கடக்கவில்லை, சட்டப்படி இவைகளை வசூலிக்கலாமே'' என்றார். அதற்கு இவர், ''ஐயா, நான் கொடுக்கும்பொழுதே அது மீண்டும் கிடைக்காது என்று தெரிந்து கொடுத்தேன். சரியாகப் பார்! அந்தப் பத்திரங்களுக்கு உரியவர்களும் நம் தமிழ் அன்பர்கள். அவர்களிடமா வசூலிப்பது! வேண்டாம்! அவைகளையும் கிழித்து எறி'' என்றார். என்ன வியப்பு. ஏழைத் தமிழ் ஆசிரியர், பேராசிரியர் வள்ளலாய் வாழ்ந்த விதம் வியப்பை அளிக்கவில்லை! பெருமையை அளிக்கிறது.

இந்தப் பேராசிரியர் குழந்தைகளுக்காகப் பாடிய பாடல் ஒன்றினைச் சுவைப்போம்.

''நாய்களைக் கல்லால் அடிக்காதே
—ஒரு
நாளும் பூச்சியைப் பிடிக்காதே;
மாய அவற்றை மடிக்காதே—
மாட்டின்
வாலை முறுக்கி ஒடிக்காதே.

எறும்பைத் துரும்பாய் மதிக்
காதே—அதை
எங்கேயும் காலால் மிதிக்காதே
குறும்புகள் பேசிக் குதிக்காதே—
பிற
குற்றத்தைநெஞ்சில் இருத்தாதே
ஏழையைக் கண்டு சிரியாதே—
அறி
வீணரைக் கூடித் திரியாதே;
வாழ்வாரைக் கண்டால் எரி
யாதே—சிறு
வஞ்சனை யேதும் புரியாதே.''

இந்தப் பாடலில் உள்ள இனிய கருத்துக்களின் படியே தானும் நடந்து காட்டினர் நமச்சிவாயர்.

நமச்சிவாயர் போன்று முயற்சியும், உழைப்பும், ஊக்கமும் உடையவர்களாய் நாம் இருத்தல் வேண்டும். நமச்சிவாயர் போன்று மொழி அறிவும், நாட்டுப் பற்றும் உடையவர்களாய்த் திகழ வேண்டும். நமச்சிவாயர் போன்று ஏழைகளிடம் அன்பு செலுத்தவேண்டும்.

நமச்சிவாயர் குழந்தைப் பாடல்களோடு நிற்கவில்லை. திருக்குறள், தொல்காப்பியம், நன்னூல் ஆகிய நூல்களைப் பதிப்பித்தார். பொங்கல் திருநாளைத் ''தமிழ்த் திருநாளா''கக் கொண்டாடச் செய்தார். சிறந்த தமிழ்ப் பேச்சாளராக, இலக்கியத் திறனாய்வாளராக இருந்தார். இத்தனைக்கும் மேலாக நாள் தோறும் ஏழைகளுடன் பழகும் ஒரு வள்ளலாக வாழ்ந்து, 1936—ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் மறைந்தார். பல்கலைக்கழக நூல் நிலையத்தில் அவரது நினைவுச்சின்னம் இன்றும் பசுமையாக நிலவுகிறது. அது மட்டுமன்று. சென்னைப் பல்கலைக்கழக இன்றையத் துணைவேந்தரின் அருமை ஆசிரியர் கா. நமச்சிவாயர். பேரறிஞர் அண்ணா அவர்கள் உள்ளத்தில் நிறைந்து இருந்தன நமச்சிவாயரின் தொண்டுகள்.

—**சிறுவை மோகனசுந்தரம்.**


## விற்பனையாளர்கள் தேவை

**கீழ்க்கண்ட ஊர்களுக்குத் 'தமிழரசு' இதழுக்கு விற்பனையாளர்களாக விரும்புவோர் விண்ணப்பிக்கவும்:—**

**செங்கல்பட்டு மாவட்டம்.**

1. திருத்தணி.
2. அச்சிறுபாக்கம்.
3. கும்மிடிப்பூண்டி.
4. ஸ்ரீபெரும்புதூர்.
5. அம்பத்தூர்.
6. சோத்துப்பாக்கம்.
7. பள்ளிப்பட்டு.
8. அய்யம்பேட்டை.
9. திருப்போரூர்.
10. கூடுவாஞ்சேரி.

**தென் ஆர்க்காடு மாவட்டம்.**

1. புவனகிரி.
2. பண்ருட்டி.
3. மரக்காணம்.
4. திருப்பாப்புலியூர்.
5. எல்லேரி (லால்பேட் வழி)
6. நெல்லிக்குப்பம்.
7. கிரப்பாளையம்.
8. வண்டிப்பாளையம்.
9. கணை.
10. கண்டாரக்கோட்டை.
11. கொச்சேரிப்பாளையம்.
12. கண்டமங்கலம்.
13. மயிலம்.
14. தெங்கநாதம் (கடத்தூர்)
15. புதுப்பேட்.
16. காட்டுமன்னார்குடி.
17. கள்ளக்குறிச்சி.
18. அவலூர்ப்பேட்டை.



அரை மணி நேரம் கழித்துக் குரலை மாற்றிக் கொண்டு மணி கதவை தட்டினான்.
மிஸ்டர் திருஞானம்! மிஸ்டர் திருஞானம்...
ஆராய்ச்சி மணி
கதை: இளவல்
படம்: கோபண்ணா
3
கயல்விழி, யாரோ கூப்பிடுறாங்க! யாருன்னு பாரு
யார் சார் வேணும்?
அக்கா, எப்படி வந்தேன் பார்த்தியா? என் ஐடியா ஐடியாதான்
இதிலே மட்டும் புத்திசாலித் தனத்துக்குக் குறைச்சல் இல்லே!
ஆனால், ஊர் வம்பு இழுக்கிறதிலே படு முரடனா இருக்கே! ஏன்டா எங்க பேரை இப்படிக் கெடுக்கிறே!
என் அப்பா இப்படித் தப்பா சொல்றீங்க!



நானா தப்பாப் பேசறேன், முரட்டுப் பயலே! எங்காவது போய்த் தொலையேன்! தலை முழுகிடறேன்!
என் அப்பா அப்படிச் சொல்றீங்க,
அக்கா, என் வருத்தப்படுறே! அப்பா சொன்னா நான் போய்விடுவேனா?
போகமாட்டே, போக வைக்கிறேன்!
ஐயோ.. ஐயோ! அப்பா! அடிக்காதீங்க!
உங்க பையன் மணியை, கமிஷனர் உடனே கூட்டி வரச் சொன்னார்!
தொடரும்


கதர் கிராமத் தொழில்கள்
கதர், கதர்ப்பட்டு, சோப்பு, தேன்
செக்கெண்ணெய்,
தோல்பொருள்கள்,
பனைவெல்லம், சர்க்கரை,
மண்பாண்டம், வார்ப்படங்கள்,
பனைப்பொருள்கள்,
பித்தளை, வெண்கலப்
பாத்திரங்கள்
பற்பல கைநுட்பப் பொருள்கள்
தயாராகின்றன!
கதர் கிராமத் தொழில்களை ஆதரிப்பது உணவு உற்பத்திக்கு உழைக்கும் கிராம மக்களுக்கு உதவுவதாகும்

# ஒப்பந்தப் புள்ளி அறிவிப்புகள் (டெண்டர்கள்)
# வேலை வாய்ப்பு விளம்பரங்கள்

## சிறைத்துறை

1972–73-ஆம் ஆண்டின் எஞ்சியுள்ள காலத்திற்குத் திருச்சிராப்பள்ளி மத்திய சிறைச்சாலையின் உற்பத்திப் பிரிவிற்குத் தேவைப்படும் ஒரு சில கச்சாப் பொருட்கள் வழங்குவதற்காக மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 30–5–1972 பிற்பகல் 3 மணி வரையில் தமிழ்நாடு ஆளுநர் அவர்களுக்காகவும், அன்னாரின் சார்பாகவும் வரவேற்கப்படுகின்றன. விலைகள் மெட்ரிக் அளவைகளில் மட்டுமே குறிப்பிடப்பட வேண்டும்.

ஒப்பந்தப் புள்ளிகள் மூடி முத்திரையிடப்பட்ட உறைகளில் ஒப்புகைப் பதிவஞ்சலில் ( By Registered Post Ack-due ) மட்டுமே அனுப்பப்பட வேண்டும். உறையின் மேல் "திருச்சிராப்பள்ளி மத்திய சிறையின் உற்பத்திப் பிரிவுக்குக் கச்சாப் பொருட்கள் வழங்குவதற்கான ஒப்பந்தப் புள்ளிகள்" என்று தவறாமல் எழுதி தமிழ்நாடு சிறைத்துறைத் தலைமைப் பார்வையாளரின் பெயருக்கு அனுப்ப வேண்டும்.

ஒப்பந்த நமூனாக்கள், விதிகள், வழங்க வேண்டிய பொருள்களின் குறிப்பீடுகள் முதலியன திருச்சி மத்திய சிறையின் கண்காணிப்பாளரிடமிருந்து மட்டுமே, நிர்ணயிக்கப்பட்ட கட்டணமான ரூ. 5-ம் அதற்கான விற்பனை வரியும் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். இவ்வாறு செலுத்தப்பட்ட கட்டணம் திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது.

ஒப்பந்தப் புள்ளிகள் சிறைத்துறைத் தலைமைப் பார்வையாளரின் அலுவலகத்தில் 31–5–72 முற்பகல் 10-30 மணிக்குத் திறக்கப்படும்.

**ப. குப்புசுவாமி,**
சிறைத்துறைத் தலைமைப் பார்வையாளர்,
குறளகம் 5-ஆம் மாடி, சென்னை-1.

(த. 2)

---

## மின்சார வாரியம்

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பாக, மின்சார வாரியத்தின் 100 (நூறு) வகையான நமூனாக்களையும், புத்தகங்களையும் அச்சடித்துக் கொடுப்பதற்கான முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 22–6–1972 பிற்பகல் 3 மணிவரை கீழே கையொப்பமிட்டவரால் வரவேற்கப்படுகின்றன.

விண்ணப்பங்களும், விவரங்களும் அடங்கிய பிரதிகளை 22–5–1972 தேதிக்குப் பிறகு ரூ. 10 (ரூபாய் பத்து மட்டும்) விற்பனை வரியுட்பட கட்டணத்தை நேரிலோ அல்லது பணவிடை (மணியார்டர்) மூலமாகவோ செலுத்தி, அவருடைய அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

காலம் கடந்தது வரும் ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. எவ்விதக் காரணமும் இல்லாமல், ஒப்பந்தப் புள்ளிகளைத் தள்ளுபடி செய்யவோ, அல்லது பகிர்ந்து கொடுக்கவோ, கீழே கையொப்பமிட்டவருக்கு பூரண உரிமையுண்டு.

**மேற்பார்வைப் பொறியாளர்,**
இராமநாதபுரம் மின் திட்டம்,
மதுரை-7.

(த. 5)

---

## மின்சார வாரியம்
## சுருளியாறு நீர் மின் திட்டம்

தமிழ்நாடு மின்சார வாரியம்-சுருளியாறு நீர் மின் திடடம். Supply of junglewood planks and scandlings at Suriliyar upper camp stores-

குறிப்பு எண். PS—SUR-2

தமிழ்நாடு மின்சார வாரியத்திற்காகவும், வாரியத்தின் சார்பிலும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள குறிப்புகளுடன், ஒப்பந்ததாரரின் பெயரும் மேலுறையில் எழுதப்பட்டு, மூடி, அரக்கு முத்திரையுட்ட ஒப்பந்தங்களை கீழே கையொப்பமிட்டுள்ளவரால் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியால் அவரது அலுவலகத்தில் 7–6–1972 பிற்பகல் 3 மணி வரையில் பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தங்கள் அதே நாளில் இவ்வலுவலகத்தில் பிற்பகல் 4 மணிக்கு வந்திருக்கும் ஒப்பந்ததாரரின் அல்லது அவர்கள் பிரதிநிதிகளின் முன் திறக்கப்படும்.

(2) ஒப்பந்தப் பிரதிகள் வேண்டுவோர் ஒவ்வொரு பிரதிக்கும் ரூ. 2-10 (ரூபாய் இரண்டும் காசு பத்து மட்டும், விற்பனை வரி உட்பட) வீதம் செலுத்தி கீழே கையொப்பமிட்டுள்ளவரின் அலுவலகத்திலிருந்துப் பெறலாம். இத் தொகையானது எக்காரணத்தை முன்னிட்டும் திருப்பித் தரப்பட மாட்டாது.

(3) மேலே குறிப்பிட்டுள்ள சப்ளைக்கான கட்டுத் தொகை (Earnest Money Deposit) ரூ. 1,500 (ரூபாய் ஆயிரத்து ஐநூறு மட்டும்) கீழே கையொப்பமிட்டுள்ளவரின் அலுவலகத்தில் செலுத்தப்பட்டு அதற்கான செலுத்துச் சீட்டு ஒப்பந்தத்துடன் இணைக்கப்பட வேண்டும். எக்காரணத்தை முன்னிட்டும் காசோலைகள் (cheques) ஏற்கப்படமாட்டா. கட்டுத் தொகையின்றி சமர்ப்பிக்கப்படும் ஒப்பந்தங்கள் கட்டாயமாக நிராகரிக்கப்படும். டிராப்ட் (Bank demand draft) அனுப்புவதானால் ஒப்பந்தம் கொடுப்பதற்கு முன்னதாகவே அனுப்பப்பட வேண்டும். இந்த ஒப்பந்தத்திற்கான கட்டுத் தொகையை ஒப்பந்தத்துடன் செலுத்தாமல் வேறு ஒப்பந்தத்திற்கான ஒப்பந்ததாரர் கட்டப்பட்ட தொகையையோ ஈடு செய்யக் கோரும் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

(4) ஒப்பந்தம் ஒப்புக் கொள்ளப்பட்டவுடன் ஒப்பந்தத்திற்குரியவர் இவ்வலுவலகத்தால் குறிப்பிட்ட நாட்களுக்குள் பிணைவைப்புத் தொகையை ( Security deposit) செலுத்த வேண்டும். இப் பிணைவைப்புத் தொகை கட்டுத் தொகையுடன் சேர்ந்து சப்ளை செய்ய வேண்டிய பொருளின் மதிப்பில் 5 சதவீதம் இருக்கும். இந்த பிணைவைப்புத் தொகைக்கும் கட்டுத் தொகைக்கும் வட்டி தரப்பட மாட்டாது. இந்த மொத்தத் தொகையும் ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்படி பொருட்களை திருப்திகரமாகச் சப்ளை செய்த பிறகு திருப்பித் தரப்படும்.

ஒப்புக் கொள்ளப்பட்ட ஒப்பந்தத்திற்குரியவர் குறிப்பிட்ட தினங்களுக்குள் பிணைவைப்புத் தொகையைச் செலுத்தத் தவறினாலும் ஒப்பந்தம் ஒப்புக் கொள்ளப்பட்ட பிறகு ஒப்பந்தப்படி சப்ளை செய்ததிலிருந்து பின் வாங்கினாலும் கட்டுத் தொகை திருப்பித்தரப்பட மாட்டாது.

(5) இவ்வலுவலகத்தின் மனு பாரத்தில் இல்லாத ஒப்பந்தங்களும் குறித்த காலம் தள்ளி வரும் ஒப்பந்தங்களும் கண்டிப்பாக ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா. மேலே குறிப்பிட்ட பொருட்கள் சப்ளை செய்தலை சில அல்லது எல்லா ஒப்பந்ததாரர்களுக்கு பகிர்ந்து வழங்குவதற்கோ அல்லது சில ஒப்பந்தங்களையோ அல்லது எல்லா ஒப்பந்தங்களையோ காரணம் தெரிவிக்காமல் நிராகரிக்கவோ கீழே கையொப்பமிட்டுள்ளவருக்கு உரிமையுண்டு.

(6) ஒப்பந்தப் பிரதிகள் சாதாரணத் தபாலிலேயே அனுப்பப்படும். தபால் போக்கு வரத்தில் கால தாமதம் ஏற்படினும் ஒப்பந்தப் பிரதிகள் தொலைந்து போனாலும் இவ்வாரியம் பொறுப்பல்ல. ஒப்பந்தப் பாரங்கள் ஒருவர் பெயரிலிருந்து மற்றொருவர் பெயருக்கு மாற்றுதலுக்குரியதல்ல.

**மேற்பார்வைப் பொறியாளர்,**
கோதையாறு நீர் மின் திட்டம்,
34-எ, பெருமாள்புரம்,
திருநெல்வேலி.

(த. 7)

## மின்சார வாரியம்

கோதையாறு நீர் மின் திட்டம்

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பாக கீழே கொடுக்கப்பட்டுள்ள வேலைக்கு அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தங்களை அதன் முக உறையின் மேல் எழுதப்பட்டு அவைகளை மேற்பார்வைப் பொறியாளர், கோதையாறு நீர் மின் திட்டம், 34-எ, பெருமாள்புரம், திருநெல்வேலி-7என்று முகஉறை இட்டவரால் அங்கீகரிக்கப்படுவதால் அவர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட அவர் பிரதிநிதியால் அவருடைய அலுவலகத்தில் கீழ்க்கண்ட வேலைக்கு எதிரில் குறிப்பிட்டுள்ள தேதியில் மாலை 3-00 மணி வரையில் பெற்றுக் கொள்ளப்படும். அவைகளை அதே நாளில் மாலை 4 மணிக்கு அங்கு வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் முன்னால் திறக்கப்படும்.

எண்—1.

குறிப்பிடுகை எண்—கே.சி. 296 எ.

வேலையின் பெயர்—கோதையாறு மேல்தலங்கலில் உள்ள சின்னக் குட்டியாறு அணையில் Ch 500 முதல் 640 வரை அஸ்திவாரத்திற்கு மண் தோண்டுதலும் (Excavation for foundation) VI-வது பிளாக்கு Ch 504' முதல் Ch. 604' முடிய அணைக் கட்டு மேல் தளம் வரை கட்டுமான வேலை செய்தல் (Building masonry upto top of dam)

ஒப்பந்த செட்டின் விலை (விற்பனை வரி உட்பட)—ரூ. 10·35.

கட்டுத் தொகை—ரூ. 16,000.

ஒப்பந்தம் பெற்றுக்கொள்ளும் கடைசி தேதி --2-6-1972.

(2) ஒப்பந்தச் செட்டுகளின் நகல்களை (மாற்றத்தக்கவை அல்ல)குறிப்பிட்டுள்ள அதன் விலையே கீழே கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். எக்காரணத்தைக் கொண்டும் இத்தொகையைத் திருப்பித்தரப்பட மாட்டாது.

(3) இவ்வலுவலகத்தின் மனு பாரத்தில் இல்லாத ஒப்பந்தங்களையும் குறிப்பிட்ட நேரத்திற்குப் பிறகு வரும் ஒப்பந்தங்களையும் கட்டுத் தொகை (Earnest money deposit) மீது இணைக்கப்படாத ஒப்பந்தங்களையும் கண்டிப்பாக நிராகரிக்கப்படும். கட்டுத் தொகையைக் கீழே கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் செலுத்தி அதற்கான ரசீதைப் பெற்று ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் செக்குகள் (Cheques) ஏற்றுக்கொள்ளப் பட மாட்டாது. கட்டுத் தொகைக்கான டிமாண்ட் டிராப்டை (demand draft) முன்னதாகவே அனுப்பி வைக்க வேண்டும். அதற்கு ரசீதைப் பெற்று ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் ஒப்பந்தங்களுடன் அனுப்பக்கூடாது.

(4) தாமதமாக அனுப்பப்படும் ஒப்பந்தங்களுள் குறிப்பிட்ட நிபந்தனைகள்படி அல்லாத ஒப்பந்தங்கள் முழுமை பெறாத ஒப்பந்தங்கள் கட்டுத் தொகை கட்டப்படாத ஒப்பந்தங்கள் மேற்படி கட்டுத் தொகை கட்டாததின் காரணத்துடனும், வேறு வேலைகளுக்குக் கட்டிய கட்டுத்தொகை இந்த ஒப்பந்தத்திற்கு இணைத்துக் கொள்ளும்படி கூறப்படும் ஒப்பந்தங்களும் கண்டிப்பாக ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(5) மேலே குறிப்பிட்ட வேலையை காரணம் தெரிவிக்காமல் சில அல்லது எல்லா ஒப்பந்ததாரர்களுக்கும் பகிர்ந்து கொடுக்கவோ அல்லது ஒரு ஒப்பந்தத்தையோ அல்லது எல்லா ஒப்பந்தங்களையோ நிராகரிக்கவோ கீழே கையொப்பமிட்டவருக்கு பூரண உரிமையுண்டு.

(6) ஒப்பந்தப் பிரதிகள் அஞ்சலில் அனுப்பப்படும்போது இடையில் உண்டாகும் காலதாமதம் அல்லது காணமல் போவது முதலியவைகளுக்கு இவ்வாரியம் பொறுப்பல்ல.

**மேற்பார்வைப் பொறியாளர்,**

கோதையாறு நீர்மின் திட்டம்,
34-எ, பெருமாள்புரம்,
திருநெல்வேலி-7.

(த. 9)

## திருவாரூர் நகராட்சி

திருவாரூர் நகராட்சியில் கீழ்க்கண்ட சாலைகளின் பராமரிப்பு வேலைக்கு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 26-5-1972-ஆம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணி வரையில் பெற்றுக்கொள்ளப்படும்.

| | | மதிப்பீடு தொகை. ரூ. |
|---|---|---|
| 1. | காரைக்காட்டுத்தெரு | 5,900 |
| 2. | கிழக்குச் சன்னதித்தெரு | 7,500 |
| 3. | ஐ.பி. கோவில் வடக்கு, மத்திய, மேற்கு வீதி | 8,000 |
| 4. | ஐ.பி. கோவில் தெற்குச் சன்னதித்தெரு | 7,600 |

முழு விவரங்களுக்கு அலுவலக நேரங்களில் நேரிலோ அல்லது கடிதம் மூலமாகவோ எழுதி தெரிந்துகொள்ளலாம்.

**க. பெ. அன்பானந்தன்,**

ஆணையர்.

(த. 20)

## கால்நடை பராமரிப்புத் துறை

தமிழகத்திலுள்ள, கால்நடை இலாகாவின்கீழ் இயங்குகின்ற கீழ்க்கண்ட, கால்நடை பண்ணைகளுக்கும், இதர நிலையங்களுக்கும், கால்நடைத் தீவனம், கால்நடைகள், 1972–73-ம் ஆண்டுக்கு, ஒப்பந்தம் அங்கீகரிக்கப்பட்ட தேதியிலிருந்து ஒரு வருடத்திற்குப் பொருள்கள் வழங்க முத்திரை இடப்பட்ட ஒப்பந்தங்களை, தமிழகக் கால்நடை இலாகா இயக்குநர் அவர்களால், மத்திய அலுவலகங்களின் இரண்டாவது பிரிவில் சென்னை 6-ல் உள்ள அவரது அலுவலகத்தில், வெள்ளிக்கிழமை இந்த ஆண்டு மேத் திங்கள், இருபத்தி ஆறும் நாள் 1 மணிவரை வரவேற்கப்படுகின்றது.

1 கால்நடை மருத்துவக் கல்லூரி, வேப்பேரி, சென்னை-7.
2 தீவன கலவை, நிலையம், நந்தனம், சென்னை-35.
3 ஆட்டுப்பண்ணை, காட்டுப்பாக்கம், செங்கை மாவட்டம்.
4 கோழிப்பண்ணை, காட்டுப்பாக்கம், செங்கை மாவட்டம்.
5 கால்நடை தொத்துநோய்த் தடுப்பு ஆராய்ச்சி நிலையம், இராணிப்பேட்டை (வட ஆர்க்காடு).
6 மாவட்ட கால்நடைப் பண்ணை, ஒசூர், தருமபுரி மாவட்டம்.
7 மாவட்ட கால்நடை பண்ணை, ஒரத்தநாடு, கொருக்கை (தஞ்சை மாவட்டம்).
8 மாவட்ட கால்நடைப் பண்ணை, புதுக்கோட்டை, (திருச்சி மாவட்டம்).
9 மாவட்டக் கால்நடைப் பண்ணை, செட்டிநாடு, (முகவை மாவட்டம்).
10 மாவட்டக் கால்நடைப் பண்ணை, அபிஷேகப்பட்டி (நெல்லை மாவட்டம்).
11 மாவட்டக் கால்நடைப் பண்ணை, உதகமண்டலம்.
12 ஆட்டின ஆராய்ச்சி நிலையம், காமராஜசாகர், உதகமண்டலம்.
13 ஆட்டுப் பண்ணை, சின்னசேலம் (தென் ஆர்க்காடு மாவட்டம்).
14 ஆட்டுப்பண்ணை, சாத்தூர் (முகவை மாவட்டம்).
15 தீவன கலவை நிலையம், ஈரோடு (கோவை மாவட்டம்).

ஒப்பந்த விவர நிபந்தனைகள், அளவுகளின் பட்டியல் கூடிய ஒப்பந்த விவர படிவங்கள், இரண்டு கொண்ட தொகுப்பு ஒன்றுக்கு ரூபாய் 50-ம் (ரூபாய் ஐம்பது மட்டும்) இதன் விற்பனை வரியாக ரூ. 1-75ம், இதற்கு மேல் வரியாக ரூ. 0-08 காசாகவும், தமிழகத்திலுள்ள எந்தக் கருவூலத்திலாவது, இந்திய அரசு வங்கியிலாவது கீழ்க்கண்ட தலைப்பில் தனித்தனியே செலுத்தி அதற்குரிய சீட்டை (சலான்), தமிழ்நாடு கால்நடை இலாகாவின் இயக்குநர் அலுவலகத்திற்கு எல்லா அலுவலக நாட்களிலும் மாலை 2 மணி வரை 25-5-1972 முடிய செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

ரூ. 50-க்கு தலைப்பு.—XXVII Animal Husbandry —Other Receipts.

ரூ. 1-75—S.T.
ரூ. 0-08 S.C. } XII. Other Taxes and Duties Sales Tax.

இந்தத் தொகை எக்காரணத்தை முன்னிட்டும் திருப்பித்தரப்பட மாட்டாது என்பதுடன், ஒப்பந்த விவரப்படிவங்களும், மாற்றப்படக் கூடியவையல்ல.

வரவேற்கப்பட்ட, ஒப்பந்தங்கள், அரசால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு குழுவினரால் திறக்கப்படும்.

இந்த ஒப்பந்தங்களின் முடிவு வரவேற்கப்பட்ட ஒப்பந்தங்களுக்கான மாதிரி தீவன வகைகள், பரிசீலிக்கப்பட்டு முடிவு செய்யப்படும்.

**டாக்டர் க. வெங்கடாசலம்,**

இயக்குநர்,

கால்நடை பராமரிப்புத் துறை.

(த. 23)

## ஒப்பந்தப் புள்ளி

### பொள்ளாச்சி நகராட்சி

கீழ்க்காணும் வேலைகளுக்கு ஒவ்வொரு வேலைக்கும் தனித்தனி உறைகளில் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் நகராட்சி ஆணையர் அவர்களால் அவரது அலுவலகத்தில் 27—5—1972 மாலை 4-00 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும். அவை அன்றே மாலை 4-30 மணிக்குத் திறக்கப்படும். ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் வேண்டுவோர் முதல் வேலைக்கு ரூ. 10-ம் மற்ற வேலைகளுக்கு ஒவ்வொரு வேலைக்கும் ரூ. 5-ம் விற்பனை வரி ரூ. 3½ சதவிகிதமும் நகராட்சி கருவூலத்தில் செலுத்திச் செல்லுச் சீட்டுடன் நகராட்சி பொறியர் அவர்களுக்கு விண்ணப்பித்து 25—5—1972 தேதி முடிய பெற்றுக்கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு நகராட்சி மராமத்துப் பொறியர் அவர்களிடம் அலுவலக நேரங்களில் விசாரிக்கவும்.

| வரிசை எண், கட்டின் நடப்பு எண். (1) | வேலை விவரம். (2) | மதிப்பீட்டுத் தொகை. (3) ரூ. | முன்வைப்பு தொகை. (4) ரூ. | வேலை செய்து முடிக்க வேண்டிய காலம். (5) |
|---|---|---|---|---|
| 1 இ1/23452/70 .. .. .. | காந்தி சந்தையில் மாடுவதை செய்யும் கட்டடம் கட்டுதல். | 20,387 | 510 | 3 மாதம். |
| 2 இ1/8859/71 .. .. .. | கோட்டாம்பட்டி வீதி எண் 4-க்கு தார் தளம் போடுதல் மற்றும் சாக்கடை மராமத்து செய்தல். | 7,198 | 180 | 2 மாதம். |
| 3 இ1/1591/72 .. .. .. | குமரன் நகர் மெயின் ரோடுக்கு சாக்கடைத் தடுப்பு சுவர் கட்டுதல் | 14,090 | 353 | ஷை |
| 4 இ1/7386/71 .. .. .. | கோட்டூர் வழி நடுநிலைப்பள்ளி இடத்தில் மேல் புறத்தில் சிமெண்ட் கான்கிரீட்–பலகைக் கற்களால் சுற்று சுவர் கட்டுதல். | 15,144 | 379 | 3 மாதம். |
| 5 இ1/6995/70 .. .. .. | உடுமலை ரோடிலுள்ள நகரமன்ற குறைந்த வருவாய் ஊழியர் குடியிருப்பு இடத்தில் முன் புறம் சுற்றுச் சுவர் கட்டுதல். | 13,472 | 462 | 3 மாதம். |
| 6 இ1/1906/7 .. | பல்லடம் ரோடு ச. எண். 523-ல் உள்ள தோட்டிகள் குடியிருப்பில் சுற்று சுவர் கட்டுதல். | 13,538 | 339 | ஷை |
| 7 இ1/2/72 .. .. .. | நகராட்சி ஆண்கள் உயர்நிலைப் பள்ளி விளையாட்டு மைதானத்தில் நேதாஜி ரோடு பக்கமுள்ள தென்வடல் பாகத்திற்கு சிமெண்ட் கான்கிரீட் பலகைக் கற்களால் சுற்று சுவர் கட்டுதல். | 19,104 | 478 | ஷை |
| 8 இ1/13888/71 .. .. .. | மிருக ஆஸ்பத்திரி வீதி சந்திப்பிலிருந்து கள்ளுக் கடை இட்டேரி ரோடு வரை நேதாஜி ரோடுக்கு சாக்கடை தடுப்பு சுவர் கட்டுதல் மற்றும் சாக்கடை மராமத்து செய்தல். | 19,528 | 263 | 2 மாதம். |
| 9 இ1/19133/69 .. .. .. | தோட்டிகள் காலனி குடியிருப்பில் உள்ள வீடுகளுக்குக் குளியலறைக் கதவுகள் பொருத்துதல் மற்றும் சன்னல்களுக்கு சன்சேடு பொருத்துதல். | 9,172 | 230 | 1 மாதம். |

பி. கே. முகமது அலி,
ஆணையர்.

(அ.22)

### மின்சார வாரியம்

மின்சார வாரியம் கீழ்க்கண்ட மாவட்டங்களிலுள்ள துணை மின் நிலையங்களில் குடியிருப்புக் கட்டடங்கள் "லம்ப்ஸம்" ஒப்பந்த முறையில் கட்டுவதற்கான தனித் தனியாக முத்திரையிட்ட ஒப்பந்த விவரங்கள் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பில் கோரப்படுகின்றன.

| எண். | துணை நிலையத்தின் பெயரும் வேலையும். | செலுத்த வேண்டிய முன்பணம் (திருப்பித் தரத் தக்கது அல்ல). ரூ. | தர விவர எண். | ஒப்பந்த விவரங்கள் வரை படங்களுடன் ஒன்றின் விலை (திருப்பித் தரத் தக்கது அல்ல). ரூ. | ஒப்பந்த விவர அறிக்கை அட்டவணை மட்டும் ஒன்றின் விலை (திருப்பித் தரக் தக்கது அல்ல.) ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | மதுரை மாவட்டத்தில் உத்தமபாளையம் 110/22 ஆயிரம் வோல்ட் துணை நிலையத்தில் குடியிருப்பு வீடுகளும் அதன் சார்பான வேலைகளும் கட்டுதல். | 2,000 (ரூபாய் இரண்டாயிரம் மட்டும். | ஜி.வி.வி. 225. | 28 (ரூபாய் இருபத்தி எட்டு மட்டும்.) | 8 (ரூபாய் எட்டு மட்டும்.) |
| | திருநெல்வேலி மாவட்டத்தில் ஆறுமுகநேரி 110/33/11 ஆயிரம் வோல்ட் துணை நிலையத்தில் குடியிருப்பு வீடுகள் கட்டுதல். | 1,200 (ரூபாய் ஆயிரத்து இரு நூறு மட்டும்). | ஜி.வி.வி. 243. | 22 (ரூபாய் இருபத்தி இரண்டு மட்டும்). | 7 (ரூபாய் ஏழு மட்டும்). |
| 3 | மதுரை மாவட்டத்தில் ஒட்டன்சத்திரம் 110/11 ஆயிரம் வோல்ட் துணை நிலையத்தில் மின் கட்டுப்பாடு கேந்திர அறை மற்றும் அலுவலகங்கள் கட்டுதல். | 1,600 (ரூபாய் ஆயிரத்து அறு நூறு மட்டும்.) | ஜி.வி.வி. 244. | 12 (ரூபாய் பனிரெண்டு மட்டும்.) | 5 (ரூபாய் ஐந்து மட்டும்.) |

தமிழ்நாடு மின்சார வாரியம், குடியிருப்புக் கட்டடங்களும் அதன் சார்பான வேலைகளும் கட்டுதல் என்பதுடன் துணை நிலையத்தின் பெயர், தர விவர எண் (ஸ்பெசிபிகேஷன்) நெ. ஒப்பந்ததாரரின் பெயர் ஆகியவற்றையும் மேல் உறையில் எழுதி முத்திரை செய்த ஒப்பந்த விவரங்கள் கீழ்க் கையொப்பமிட்டவரால் 29—5—1972 பிற்பகல் 3 மணி வரை அவரது அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்படும். அன்றே பிற்பகல் 3-30 மணியளவில் ஒப்பந்தங்கள் திறக்கப்படும்.

மேற்கண்ட வேலைகளுக்கான ஒப்பந்த விவரங்களும் வரை படிவங்களும் வேண்டுவோர் உரிய தொகையைச் செலுத்தி கீழ்க்கண்டவர்களின் அலுவலகங்களில் 6—5—1972 தேதிக்குமேல் பெற்றுக்கொள்ளலாம். இந்தத் தொகை எக்காரணத்தைக் கொண்டும் திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது.

1. கீழ்க் கையொப்பமிட்டவரின் அலுவலகம் (மேற்கண்ட 3 ஒப்பந்தப் புள்ளி விவரங்களுக்கு).

2. நிருவாகப் பொறியாளர்-கட்டுமானம்-டிரான்ஸ்மிஷன், எண். 83, பெருமாள்புரம், திருநெல்வேலி-7. (கன்ஸ்ட்ரக்ஷன்), (மேற்கண்ட ஒப்பந்தப் புள்ளி விவரங்கள் 1-ம் 3-ம்).

3. நிருவாகப் பொறியாளர், கட்டடங்கள், 4, ஹை கிரௌண்ட்ஸ் ரோடு, திருநெல்வேலி-2. (மேற்கண்ட ஒப்பந்தப் புள்ளி விவரங்கள் 2-க்கு மட்டும்).

இலாகா ஒப்பந்தப் பாரங்களில் எழுதாத, முன்பணம் கட்டாத, குறித்த காலத்தில் வராத ஒப்பந்த விவரங்கள் கண்டிப்பாய் நிராகரிக்கப்படும்.

கீழ்க் கையொப்பமிட்டவர் வேலைகளைப் பிரித்துக் கொடுப்பதற்கும் குறிப்பிட்ட (அல்லது) எல்லா ஒப்பந்த விவரங்களையும் காரணம் கூறுமல் நிராகரிப்பதற்கும் உரிமை பெற்றவராவார்.

தபால் பெட்டி எண். 86,
மன்னார்புரம், திருச்சிராப்பள்ளி-1.

**மேற்பார்வைப் பொறியாளர்,**
பொது நிர்மாண வட்டம்.

(த. 62)

---

## குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் கீழ்க்காணும் வேலைக்கென, மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மேற்பார்வைப் பொறியாளர் (தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்)) 17, பி.டி. இராசன் சாலை, மதுரை-2, அவர்களால் 22—5—1972 திங்கட்கிழமை பிற்பகல் 3 மணி வரை வரவேற்கப்படுகின்றன. அவை அன்று பிற்பகல் 3-30 மணிக்குப் பொறியாளராலோ அல்லது அவரால் நியமிக்கப்பட்டவராலோ வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

வ. எண். 1—

வேலையின் பெயர்—காரைக்குடி குடிநீர் அபிவிருத்தி திட்டம்—இரண்டாம் நிலை—பகிர்மான முறை—கீழ் மட்ட பகுதி பிரிவு 1-ல் சி.ஐ., மற்றும் பி.வி.சி. குழாய்களைப் பதித்தலும், இணைத்தலும் சம்பந்தமாக.

ஒப்பந்த வடிவம்—கே. 2.

முன்வைப்புத் தொகை—ரூபாய் 470,

வேலையின் முடிப்பதற்குரிய கால அளவு—ஆறு மாதங்கள்.

ஒப்பந்தப் படிவங்களின் விலை—ரூ. 5·18 (விற்பனை வரி உட்பட).

வ. எண். 2—

வேலையின் பெயர்—காரைக்குடி குடிநீர் அபிவிருத்தித் திட்டம்—இரண்டாம் நிலை—பகிர்மான முறை—கீழ்மட்ட பகுதி பிரிவு 2-ல் சி.ஐ., மற்றும் பி.வி.சி. குழாய்களைப் பதித்தலும், இணைத்தலும்.

ஒப்பந்த வடிவம்—எல்.எஸ். (மொத்தத் தொகை).

முன்வைப்புத் தொகை—ரூ. 2,200.

வேலையினை முடிப்பதற்குரிய கால அளவு—எட்டு மாதங்கள்.

ஒப்பந்தப் படிவங்களின் விலை—ரூ. 10·35 (விற்பனை வரி உட்பட).

வ. எண். 3—

வேலையின் பெயர்—காரைக்குடி குடிநீர் அபிவிருத்தித் திட்டம்—இரண்டாம் நிலை—பகிர்மான முறை—நடுமட்ட பகுதியில் சி.ஐ. மற்றும் பி.வி.சி. குழாய்களைப் பதித்தலும், இணைத்தலும்.

ஒப்பந்தப் படிவம்—மொத்தத் தொகை.

முன்வைப்புத் தொகை—ரூ. 4,440.

வேலையினை முடிப்பதற்குரிய கால அளவு—பன்னிரண்டு மாதங்கள்.

ஒப்பந்தப் படிவங்களின் விலை—ரூ. 10·35 (விற்பனை வரி உட்பட).

வ. எண். 4—

வேலையின் பெயர்—காரைக்குடி குடிநீர் அபிவிருத்தித் திட்டம்—இரண்டாம் நிலை—பகிர்மான முறை—உயர் மட்ட பகுதிகளில் சி.ஐ. குழாய்களைப் பதித்தலும், இணைத்தலும்.

ஒப்பந்த வடிவம்—கே. 2.

முன்வைப்புத் தொகை—ரூ. 1,160.

வேலையினை முடிப்பதற்குரிய கால அளவு—ஆறு மாதங்கள்.

ஒப்பந்த வடிவங்களின் விலை—ரூ. 5·18 (விற்பனை வரி உட்பட).

முன்வைப்புத் தொகை,கருவூலச் செலான், அல்லது பண உத்தரவுச் சீட்டு அல்லது ஏதாவது ஒரு தேசிய வங்கியின் உத்தரவாதம் மூலம் காரைக்குடி (தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்) நிருவாகப் பொறியாளர் பெறும்வகையில் செலுத்தப்பட்டு, அதற்கான அத்தாட்சி ஒப்பந்தப் படிவங்களுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

உறையின்மீது வேலையின் பெயர் குறிக்கப்பட்டிருக்க வேண்டும்.

ஒப்பந்தப்படிவங்கள் வேண்டுவோர், காரைக்குடி (தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்) நிருவாகப் பொறியாளரிடமிருந்து 42, கல்லூரி சாலை, காரைக்குடி எனும் முகவரியில் உள்ள அவர்தம் அலுவலகத்தில், படிவங்கட்குரிய விலையினைச் செலுத்தி 19—5—1972 வெள்ளிக் கிழமை மாலை 5-00 மணி வரை பெற்றுக் கொள்ளவும்.

**மேற்பார்வைப் பொறியாளர்,**
குடிநீர் வடிகால் வாரியம், மதுரை-2.

(த. 33)

---

## மின்சார வாரியம்

தமிழ்நாடு மின்வாரியம் பைக்காரா மின்திட்டத்திற்குத் தேவையான பட்டியல்களை அச்சடித்துக் கொடுப்பதற்கு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 25—5—1972-ம் நாள் பிற்பகல் 4-00 மணி வரை கீழே கையொப்பமிட்டவரால் வரவேற்கப்படுகின்றன.

விவரங்கள் அடங்கிய விண்ணப்பப் பிரதிகளைப் பெற ரூ.3 (ரூபாய் மூன்று மட்டும், வரிகள் உட்பட) கட்டணத்தை நேரிலோ அல்லது காசுக் கட்டளைகள் மூலமாகவோ தலைமைக் கணக்காயர், செலவினப்பகுதி, மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம், பைக்காரா மின் திட்டம், கோயம்புத்தூர்-12. அவர்களுக்குச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

பிரதிகள் அனைத்தும் சாதாரண அஞ்சல் மூலமாகவே அனுப்பப்படும் அஞ்சலில் தவறு ஏற்பட நேரிட்டால் இவ்வலுவலகம் பொறுப்பு ஏற்காது.

காலம் கடந்து வரும் ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. எவ்விதக் காரணமும் இல்லாமல் ஒப்பந்தப்புள்ளிகளைத் தள்ளுபடி செய்யவோ அல்லது பகிர்ந்து கொடுக்கவோ, கீழே கையொப்ப மிட்டவருக்கு முழு உரிமை உண்டு.

**மேற்பார்வைப் பொறியாளர்,**
பைக்காரா மின்திட்டம், கோயம்புத்தூர்-12.

(த. 30)

---

## பொதுப்பணித் துறை

அறிக்கை எண் 10.

கீழ்க்காணும் பொருள் வழங்குவதற்காக மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 25—5—1972 பிற்பகலில் 1 மணி வரை கீழ்க் கையொப்பமிட்டவரால் வரவேற்கப்படுகின்றன.

**Cast Iron Scrap—50 MT.**

கீழ்க்கையொப்பமிட்டவரின் நேர்முக உதவியாளரிடம் ஒப்பந்தப் புள்ளிப் படிவம் மற்றும், நிபந்தனைகள், விண்ணப்ப மூலம் இலவச மாகப் பெற்றுக் கொள்ளலாம்.

**பொது கண்காணிப்பாளர்,**
பொ. ப. பணிமனை & பண்டகசாலை

(த-11)

அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்!

# இதோ இன்னொரு சாதனை!

தமிழக அரசின் ஆக்கப் பணிகளுக்கு அடித்தளம்!

நாளையத் தலைமுறையின் "நல்வாழ்வுக்குப் புதியபாதை!"

## தமிழ் நாட்டில் உருவாகிறது!

தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள பூத்துறை என்ற சிற்றூர் குடும்ப நலத்திட்டப் பணியில் எடுத்துக்காட்டாக விளங்கும் சிற்றூர்!

குடும்ப நலத்திட்ட முனைப்பு இயக்கத்தில் தமிழ்நாடு முன்னணியில் நிற்கிறது!

பூத்துறை போன்று பல ஊர்களைத் தமிழகத்தில் உருவாக்குவோம்.




இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்!!

தமிழரசு

குடும்பநலத்துறை

## அறிவிப்பு

### சென்னை மருத்துவக் கல்லூரி, சென்னை

கோவை விடுமுறைக்குப் பிறகு; 1—6—1972 அன்று சென்னை மருத்துவக் கல்லூரி (Clinical and Non-clinical) மாணவர்களுக்கு மீண்டும் திறக்கப்படும். அனைத்து (Clinical and Non-clinical) மாணவர்களும் தவறாது 1—6—1972 அன்று வருகை தரவேண்டும்.

முதல்வர்.

(த.10)

## விளம்பரம்

### மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம், தஞ்சாவூர்

நக. எண் ........ 2981/72 எப்.3.
நாள் : 25—4—1972

தஞ்சாவூர் மாவட்டத்தில் நடப்பு (1972–73) நிதியாண்டில் அரிசன நல இலாகாவினரால் அரிசனங்களிடமிருந்து நீர்ப்பாசன கிணறு வெட்ட மானியம் வழங்க 31—5—1972-க்குள் விண்ணப்பங்கள் கோரப்படுகிறது. இந்த திட்டத்தின் கீழ் ரூ. 2,000 மானியம் கிணறு வெட்ட 3 தவணைகளில் அளிக்கப்படும். மேற்படி திட்டத்தின் படி கிணறுமானியம் வழங்க கீழ்க்கண்டவாறு தகுதி இருக்கவேண்டும்.

(1) விண்ணப்பதாரர் இந்து அரிசன வகுப்பைச் சார்ந்தவராக இருக்கவேண்டும்.

(2) ஒரு ஏக்கர் நஞ்சை (அல்லது) புஞ்சை நிலம் சொந்தமாக கிணற்று உபயோகத்திற்கு லாயக்காக சேர்ந்தாற்போல் ஒரே இடத்தி லிருக்கவேண்டும்.

(3) சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினரிடமோ பாராளுமன்ற உறுப்பினரிடமோ அல்லது தாலுக்கா அலுவலக துணை தாசில்தாரி டமோ சாதி சான்று பெற்று மனுவுடன் இணைக்கவேண்டும்.

(4) மனுதாரருக்கு ஒரு ஏக்கருக்கு குறையாமல் ஒரே இடத்தில் கிணறு பாசனத்திற்கு லாயக்காக சொந்த நிலமிருக்கிறது என்பதற்கு கர்ணத்திடம் சான்று பெற்று மனுவுடன் இணைக்கவேண்டும்.

(5) மனுதார் இந்த மானிய திட்டத்தின் கீழோ அல்லது அரிசன இலாகாவினால் செயல்படுத்தப்படும் வேறு எந்த திட்டத்தில் கீழும் இதற்கு முன்பு மானியம் பெற்றவராக இருத்தல் கூடாது.

(6) மனுவில் மனுதார் பெயர், தகப்பனார் பெயர், அல்லது கணவர் பெயர், வசிக்கும் கிராமம், எந்தந்த சர்வே எண்களில் சொந்த நிலமிருக்கிறது அஞ்சல் நிலையம், எந்த பஞ்சாயத்து கட்டு மன்றத்தை சேர்ந்தது என்பதற்கான விவரம் மனுவில் குறிக்கவேண்டும்

31—5—1972-க்கு மேல் வரும் மனுக்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

மாவட்ட ஆட்சித் தலைவர்.

(த.26)

### மாவட்ட ஆட்சியர் அலுவலகம்
### தஞ்சாவூர்

நக. எண். 26140/299/72, எப்.3 நாள் 25—4—1972

தஞ்சாவூர் மாவட்டத்தில் நடப்பு நிதியாண்டில் (1972–73) அரிசன நல இலாக்காவினரால் அரிசனங்களுக்கு மானியமாக உழவுமாடு களும், விதைகளும், விவசாயக் கருவிகளும் ரூ. 500 மதிப்பிற்கு வழங்க 31—5—1972-க்குள் தஞ்சாவூர், பாபநாசம், திருத்துறைப் பூண்டி தாலுக்காவிலுள்ள இந்து அரிசன விவசாயிகளிடமிருந்து மனுக்கள் கோரப்படுகிறது.

கீழ்க்கண்ட தகுதியுடையவர்கள் 31—5—1972-க்குள் தஞ்சாவூர் மாவட்ட நல அதிகாரிக்கு மனு செய்து கொள்ளலாம்.

(1) ஒரு ஏக்கர் புஞ்சை (அல்லது) ½ ஏக்கர் நஞ்சையோ சொந் தத்திலோ (அல்லது) 3 ஆண்டுகளுக்குக் குறையாமல் குத்தகை, வார சாகுபடி மூலம் சொந்த சாகுபடியில் இருக்கவேண்டும்.

(2) விண்ணப்பதாரர் இந்து அரிசன வகுப்பைச் சார்ந்தவராக இருக்கவேண்டும்.

(3) மனுதார், சம்பந்தப்பட்ட தொகுதி சட்டமன்ற உறுப்பினர் (அல்லது) பாராளுமன்ற உறுப்பினர் அல்லது தாலுகா அலுவலகம் துணைதாசில்தார் பதவிக்குக் குறையாத அலுவலரிடமிருந்து சாதிச் சான்று பெற்று மனுவுடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

(4) மனுதார் இதற்கு முன்பு அரிசன நல இலாக்காவினுல் செயல்படுத்தப்படும் எந்த மானியத் திட்டத்தின் கீழ் மானியம் பெற்றவராக இருக்கக் கூடாது.

(5) மனுதார் மனுவில் பெயர், தகப்பனார் பெயர் (அல்லது) கணவன் பெயர், வசிக்கும் கிராமம், எந்த கிராமத்தில் நிலமிருக்கிறது என்ற விவரம் அஞ்சல் நிலையம், எந்த பஞ்சாயத்து கட்டுமன்றத்தைச் சேர்ந்தது என்ற விவரங்களைத் தெளிவாக எழுத வேண்டும்.

31—5—1972-க்கு பிறகு வரும் மனுக்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

மாவட்ட ஆட்சித் தலைவர்.

(த.25)

### கரூர் நகராட்சி

கரூர் நகரம் மேற்கு பிரதட்சணம் சாலை விரிவு நகரமைப்புத் திட்டத்திற்கு நடுவர் நியமிக்க, கோட்டாட்சித் தலைவரின் தகுதிக்குக் குறையாத ஓய்வுபெற்ற வருவாய்த் துறை அதிகாரிகளிடமிருந்தும், ஓய்வுபெற்ற முதல் நிலை நகர் மன்ற ஆணையர்களிடமிருந்தும், இத் தகுதிக்குட்பட்ட மற்ற ஓய்வுபெற்ற அதிகாரிகளிடமிருந்தும் விண்ணப்பங்கள் நகர்மன்ற ஆணையர் அவர்களால் 30—5—1972 வரை வரவேற்கப்படுகின்றன. இதற்கு அரசினரால் நிர்ணயிக்கப்பட்ட ஊதியம் கொடுக்கப்படும்.

வி. டி. உமாபதி,
ஆணையர்.

(த.21)

## ஏல விளம்பரம்

### சேலம் நகராட்சி
### சேலம் பொருட்காட்சி

1972-ம் ஆண்டு ஆகஸ்டு-செப்டம்பர் மாதங்களில் 43 நாட்களுக்குச் சேலம் போஸ் மைதானத்தில் பொருட்காட்சி நடத்தும் உரிமையை நகராட்சி அலுவலகத்தில் 27—5—1972ஆம் நாள் சனிக்கிழமை காலை 11 மணிக்கு இந்நகராட்சி ஆணையரால் பொது ஏலத்தில் குத்தகைக்கு விடப்படும்.

அதற்கான ஏல நிபந்தனைகளை நகராட்சி ஆணையரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பி. ஹமீதலி,
ஆணையர்.

(த.24)

தென்னார்க்காடு மாவட்டம் திருக்கோவிலூர் கோட்டத்தைச் சார்ந்த திருநாவலூர் ஊராட்சி ஒன்றிய பழைய ஜீப் MSY 7789 தற்போது உள்ள நிலைமையில் உள்ளது உள்ளபடி 12—6—1972 தேதி பகல் 3 மணிக்குத் திருநாவலூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் பொது ஏலத்தில் விற்கப்படும் என அறிவிக்கப்படுகிறது. ஏலம் கேட்க விருப்பமுடையோர் ஏல நிபந்தனைகளுக்கு கீழ்க்கண்ட விலாசத்திற்குத் தொடர்பு கொள்க.

கோட்ட ஆட்சியாளர்,

(த.17)

## ஒப்பந்தப் புள்ளி

### இராஜபாளையம் நகராட்சி

இ. 746/72. நாள் : 29—4—1972

இந்நகராட்சி எம்.டி.ஆர். 3234 பெர்குசன் டிராக்டர், எம்.டி.ஆர். 3235 பெர்குசன் டிரெய்லர், எம்.டி.ஆர். 6056 டாங்கர் ஆகிய வாகனங்களில் தகுதிச்சான்று பெறத் தேவையான வேலைகள் செய்ய மே மாதம் 22-ம் தேதி மாலை 4-00 மணி வரை மூடி முத்திரை யிடப்பட்ட ஒப்பந்தங்கள் அடியிற் கையொப்பமிட்டவரால் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் பெற்றுக்கொள்ளப்படும். அன்று மாலை 4-15 மணிக்கு அதுபோது வந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் ஒப்பந்தங்கள் திறக்கப்படும். ஒப்பந்தக் கட்டுத்தொகை ரூ. 50 கட்ட வேண்டும்.

இதர விவரங்களை மன்றப் பொறியாளரிடம் அலுவலக நேரங்களில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

டி. எஸ். சுப்பையா,
ஆணையர்.

(த.27)

## கரூர் நகராட்சி

1972-ஆம் ஆண்டு மே மாதம் 26-ம் தேதி மாலை 4 மணி வரை கீழ்க்கண்ட வேலைகளுக்கும், சாமான்கள் வழங்குவதற்கும் தனித் தனியாக ரூ. 25 ஒப்பந்த முன் பணம் தொகை செலுத்தி முத்திரை யிட்ட ஒப்பந்தங்கள் 26-5-1972-ம் தேதி மாலை 4 மணி வரை ஆணை யரால் பெற்றுக் கொள்ளப்படும்.

1. கரூர் நகராட்சி பொதுச் சுகாதாரத் துறை துப்புரவு லாரி எம்.டி.ஜி. 3588 பர்கோ 1970 மாடல் லாரிக்கு பிரேக் சர்டிபிகேட் புதுப்பிக்கத் தேவையான பழுதடைந்த சமான்களைப் புதுப்பிக்கச் சாமான்கள் மட்டும் வழங்க.

2. அலுவலகம் மூலம் சப்ளை செய்யப்படும் சாமான்களை ஷை லாரியில் பொருத்தி ரிப்பேர்களை பழுது பார்த்துக் கொடுக்க லேபர் சார்ஜுக்கு மட்டும்.

சாமான்கள் மட்டும் வழங்க ஒப்பந்தம் கொடுப்பதற்கான பட்டி யலும், லேபர் சார்ஜுக்கான ஒப்பந்தம் கொடுப்பதற்கான பட்டியலும் அலுவலக நோத்தில், நேரிலோ, கடித மூலமோ பெற்றுக் கொள்ளலாம்.

**ஆணையர்,**

(த. 28)

## அறிவிப்பு

### தொழில் வளர்ச்சிக் கழகம்

(வரையறுக்கப்பட்டது).

(தமிழநாடு அரசு பொறுப்பு.)

மத்திய நூலகக் கட்டடம், 150-எ, அண்ணாசாலை, சென்னை-2.

கவனம் : வெட்டுத்துண்டுகள் வழங்குவோர்.

அரக்கோணம் எஃகு உருக்கு ஆலைக்குத் தேவையான எஃகு வெட்டுத் துண்டுகள் ( scrap ) விலைக்கு வாங்குவதற்கு ஆர்வமுள்ளவர்கள் உடனடியாகப் பதிவு செய்து கொள்வதற்குத் தளவாடப் பிரிவு மேலாளருடன் மேற் கூறியுள்ள முழு முகவரியில் தொடர்பு கொள்க.

(த. 8)

**பிரிவு மேலாளர்**

## பயிற்சி

### தொழிற் பயிற்சி

தொழில் நுட்பக் கல்வித்துறை.

சென்னை-20.

மத்திய தொழில் நுட்பக் கல்லூரி, சென்னை-20-ல் நடத்தப்படுகின்ற மீன் பண்ணைத் தொழிற் பயிற்சியுடன் கப்பலோட்டுதல் தொழிற் பயிற்சியிலும் உரிய காலத்தில் டிப்ளமா பட்டம் பெற சேருவதற்கான விண்ணப்பப் படிவங்கள் வரவேற்கப்படுகின்றன. இப்படிப்பிற்குரிய காலம் மூன்றுண்டுகள்.

தமிழ்நாடு விண்ணப்பதாரர்களின் சேர்க்கைக்குரிய விண்ணப்பப் படிவங்களே கவனிக்கப்படும்.

சேருவதற்கான கல்வித் தகுதி—

1. தமிழ்நாடு மாநிலத் தொழில் நுட்பக் கல்வி பயிற்சிக் கழகத்தால் நடத்தப்படுகின்ற தொழில் நுட்ப உயர்நிலைப் பள்ளியில், இறுதியாண்டுத் தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். (அல்லது)

2. எஸ்.எஸ்.எல்.சி.யில் தேர்ச்சி பெற்றுப் பல்கலைக் கழகப் பாடத் திட்டத்தில் சேருவதற்குத் தகுதியுடையவர்களாக இருக்க வேண்டும். (அல்லது)

3. தமிழ்நாடு அரசு பள்ளிக் கல்விக் கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட அதற்குச் சமமான எந்த ஒரு கல்வித் தகுதியும் பெற்றிருக்க வேண்டும்.

4. இப்பிரிவில் சேருவதற்கு வயது வரம்பு கிடையாது.

விண்ணப்பப் படிவங்களையும் இதர பிற விவரங்களையும், " முதல்வர், மத்திய தொழில் நுட்பக் கல்லூரி, சென்னை-20 " என்ற முகவரிக்குக் குறிப்பிட்டுக் கடிதம் எழுதி, அம்முகவரியின் தலைப்பில் ரூபாய்1 குறுக்கே கோடிட்ட அஞ்சல் ஆணையையும், (அஞ்சல் ஆணை 25-5-1972 முன்பு வாங்கியதாக இருக்கக்கூடாது). சுய விலாசமிட்ட 22 செ. மீ. × 9.5 செ.மீ. நீளமுள்ள 50 காசு வில்லையும் அதனுடன் 5 காசு அகதிகள் வில்லையும் ஒட்டிய உறையையும் அனுப்பி விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பதாரர்கள் விண்ணப்பப் படிவங்களை, " தலைவர், மத்திய தொழில் நுட்பக் கல்லூரி, சென்னை-20 " அவர்களிடம் 21-6-1972 மாலை 5 மணிக்கு முன்னதாகச் சமர்ப்பிக்க வேண்டும்.

**தலைவர்,**

மத்தியத் தொழில் நுட்பக் கல்லூரி.

(த. 14)



## மதுரை வீட்டு வசதிப் பிரிவு

(வீட்டுவசதி வாரியம்.)

1972-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 7-ம் தேதி பிற்பகல் 3 மணி வரை, பணியின் பெயர் ஒப்பந்ததத்தார் பெயர் முதலிய விவரங்களுடன் தனித் தனியாக மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்தப் புள்ளிப்படிவம் முதலியன 25-5-1972 முதல் 6-6-1972 வரை அலுவலக வேலை நாட்களில், காலை 11 மணி முதல் 3 மணி வரை படிவம் ஒன்றுக்குக் கட்டணம் ரூ. 15+3.68 எஸ்.டி. வீதம் செலுத்திப் பிரிவு அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| வரிசை எண்ணும் வேலையின் பெயரும். | வேலை மதிப்பீடு. | முன்பணம். |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| 1. T.D. 124/70-ன் படி 4 தொகுதி எம்.ஐ.ஜி. கட்டடம், தல்லாகுளம், மதுரையில் கட்டுதல். | 3,20,000 | 5,000 |

1972-ம் ஆண்டு ஜூன் மாதம் 7-ம் தேதி பிற்பகல் 3-30 மணிக்குச் செயற் பொறியாளர் மற்றும், நிருவாக அலுவலரால் வருகை தரும் ஒப்பந்ததாரர்கள் அல்லது அவர்களின் முகவர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

**நிருவாகப் பொறியாளர்.**

ஜவகர் தெரு (நீட்டிப்பு),

காந்தி நகர், மதுரை-20.

(த. 16)

## பயிற்சி

பிஸியோதரபி பயிற்சிப் பள்ளி—அரசினர் பொது மருத்துவமனை, சென்னை-3, 1-7-1972 முதல் துவங்கும் பயிற்சிக்கு ஆட்களைத் தேர்ந்தெடுத்தல்.

தமிழ்நாடு அரசினர் பொது மருத்துவமனை, சென்னை-3-ல் உள்ள பிஸியோதரபி பயிற்சிப் பள்ளியில் 1-7-1972 முதல் துவங்கப்பட இருக்கும் பயிற்சிக்குக் கீழ்க்கண்ட தகுதி பெற்ற ஆண், பெண் மனு தாரர்களிடமிருந்து, 1972-ஆம் வருடம் மே மாதம் 25-ஆம் தேதி மாலை 5 மணிவரை விண்ணப்பங்கள் குறிப்பிட்ட நமூனுக்களில் வர வேற்கப்படுகின்றன.

(1) மனுதாரர்கள் புகுமுக வகுப்பில் பௌதிகத்தையும் ஒரு பாடமாகப் பயின்று தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

(2) மனுதாரர்கள் 1-7-1972 அன்று 18 வயதிற்குக் குறைந்தோ அன்றி 21 வயதிற்கு மேற்பட்டோ இருக்கக் கூடாது.

(3) விண்ணப்பத்தாள்களை, 1972-ம் வருடம் மே மாதம் 15-ம் தேதி மாலை 5 மணி வரை, தலைவர், பிஸியோதரபி பயிற்சி தேர்வுக் குழு, அரசினர் பொது மருத்துவமனை, சென்னை-3 என்ற முகவரிக்கு ஒரு ரூபாய் மதிப்புள்ள அஞ்சல் ஆணையை ( Postal order ) குறுக்குக் கோடிட்டு ( crossed ) 40 காசு (35 காசு 5. காசு அகதிகள் வில்லை) அஞ்சல் வில்லை ஒட்டிய தன் முகவரியிட்ட நீண்ட உறையுடன் எழுதிப் பெற்றுக் கொள்ளவும். அஞ்சல் ஆணை, 1972-ம் வருடம், மே மாதம் முதல் தேதிக்குப் பின்பு வாங்கப்பட்டதாக இருக்க வேண்டும். விணணபத்தாள்களை நேரிலும் பெற்றுக் கொள்ளலாம்.

அஞ்சல் ஆணை இணைக்கப்படாமலோ அன்றித் தன் முகவரியிட்ட உறையுடன் இல்லாத விண்ணப்பத் தாள்கள் கவனிக்கப்படமாட்டாது. குறித்த தேதிக்குப்பின்போ அன்றிச் சம்பந்தப்பட்ட சான்றிதழ்கள் இல்லாமலோ வரும் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டாது.

**தா. அரிராசன், எம்.பி.,**

தலைவர், பிஸியோதரபி தேர்வுக்குழு, அரசினர் பொது மருத்துவமனை, சென்னை-3.

(த. 29)

## ஆட்சித் தலைவர் அலுவலகம்

தஞ்சாவூர்

இதனால் தெரிவிப்பது என்னவென்றால் தஞ்சாவூர் மாவட்டம், நாகப்பட்டினம் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கில் அரசினர் கணக்கில் உள்ள கீழ்க்கண்ட அளவு குருணை அரிசியை விற்பனை செய்ய மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஒவ்வொரு ரகக் குருணைக்கும் தனித் தனியாகக் கோரப்படுகின்றன.

| | மூட்டை. | கிலோ. |
|---|---|---|
| ஏ. டி. டீ. 27 .. .. .. | 234 | 06 |
| சி. ஓ. 33 .. .. .. .. | 82 | 14 |
| வாடன் சம்பா .. .. .. | 787 | 15 |
| ஐ. ஆர். 8 .. .. .. | 683 | 00 |
| ஏ. டி. டீ. 8 .. .. .. .. | 293 | 48 |
| சி. ஓ. 25 .. .. .. .. | 952 | 00 |
| | 3,032 | 08 |

குருணை அரிசையை வாங்க விரும்புகிறவர்கள் கட்டுத் தொகை ரூ. 500 "Personal Deposit accounts of the Commissioner of Civil supplies" என்ற தலைப்பில் செலுத்திப் பாங்க் டிராப்ட் வாங்கி அதை ஒப்பந்தத்துடன் இணைத்து தங்கள் ஒப்பந்தத்தை மூடி முத்திரையிட்டு 3-6-1972 மாலை 2-00 மணிக்குள் தஞ்சாவூர் மாவட்ட வருவாய்த்துறை அலுவலர் அவர்களிடம் சேரும்படி நேரிலோ அல்லது அஞ்சல் மூலமாகவோ கொடுக்கலாம். குறிப்பிட்ட நேரத்திற்குப் பிறகு வரும் ஒப்பந்தம் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. ஒப்பந்தம் நடக்கவிருக்கும் நாள் அரசு விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு அடுத்த அலுவலக நாளில் அதே நேரத்தில் ஒப்பந்தம் பெற்றுக் கொள்ளப்படும்.

கட்டுத் தொகை ரூ. 500 கட்டுவது எல்லா ரக குருணைக்கும் ஒப்பந்தம் போட உரிமையுண்டு.

3-6-1972-ம் தேதி மாலை 3,00 மணிக்கு ஒப்பந்தங்கள் கொடுத்திருக்கும் நபர்கள் ஆஜராக இருப்பின் அவர்கள் முன்னிலையிலோ அல்லது அவர்கள் அங்கீகாரம்பெற்ற நபர்கள் முன்னிலையிலோ பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

ஒப்பந்தம் கொடுக்க விரும்புகிறவர்கள் ஒப்பந்த சம்பந்தமான விவரங்களுக்கான ஷெட்யூல் பெற மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ரூ. 5 ஒப்பந்தப் பாரத்திற்கும், 0-18 காசு விற்பனை வரிக்காகவும்; ஆக ரூ. 5·18 செலுத்திப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

உயர்ந்த பட்சத் தொகை குறிப்பிட்ட ஒப்பந்தம் சென்னை குடிமைப் பொருள் வழங்கு துறை ஆணையர் அவர்களால் ஏற்றுக் கொள்ளப்படும். ஆனால் எக்காரணமும் அன்றி உயர்ந்த பட்ச தொகை குறிப்பிட்ட ஒப்பந்தத்தையோ அல்லது மற்ற ஒப்பந்தத்தையோ தள்ளுபடி செய்யக் குடிமைப் பொருள் வழங்கு துறை ஆணையருக்கு அதிகாரம் உண்டு.

குடிமைப் பொருள் வழங்கு துறை ஆணையரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒப்பந்ததாரர்கள் ஊர்ஜித உத்தரவு கிடைத்த் ஒரு வாரத்திற்குள் குறிப்பிட்டுள்ள கிரயத்தொகையைக் கட்டி குருணை அரிசியை எடுத்துச் செல்ல வேண்டும். தவறினால் முன் பணம் பறி முதல் செய்யப்படுவதுடன் மறு ஒப்பந்தம் போட ஆகும் செலவையும் அவர்களிடமிருந்து வசூலிக்கப்படும்.

குருணை அரிசையைக் கோடவுன் கண்காணிப்பாளர் அனுமதியுடன் வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் பார்வையிடலாம்.

ஒப்பந்தங்கள் திருப்தியானபடி இல்லாவிடில் மறு தேதிக்கு வேறு ஒப்பந்தங்கள் அழைக்க சென்னை குடிமைப் பொருள் வழங்கு துறை ஆணையருக்கு அதிகாரமுண்டு.

குருணை அரிசியை வெளி மாவட்டங்களுக்கு எடுத்துச் செல்வதற்கு லெவி கொடுத்த குடிமைப் பொருள் வழங்கு ஆணையர் உத்திர விட்டால் லெவி கொடுத்துதான் எடுத்துச் செல்ல வேண்டும்.

மாவட்ட வருவாய் அலுவலர்.

(த. 46)



## வனத் துறை

18-5-1972-ம் தேதி காலை 10-00 மணியிலிருந்து நவக்கரை விற்பனைக் கிடங்கில் மத்திய கோவை மாவட்ட வன அலுவலராலோ அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற வேறு அலுவலராலோ கீழ்க் காணும் தடிமரத்தூண்கள் ஏலமிடப்படும்.

| | கன மீட்டர். |
|---|---|
| (1) ஈட்டி .. .. .. .. .. | 7·592 |
| (2) தேக்கு .. .. .. .. .. | 125·391 |
| (3) வெண் தேக்கு .. .. .. .. | 24·219 |
| (4) பில்ல மருது .. .. .. .. | 33·502 |
| (5) தடசு .. .. .. .. .. | 4·940 |
| (6) வேங்கை .. .. .. .. .. | 16·173 |

19-5-1972-ம் தேதி காலை 10-00 மணியிலிருந்து இருட்டுப்பள்ளம் விற்பனைக் கிடங்கில் மத்திய கோவை மாவட்ட வன அலுவலராலோ அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற அலுவராலோ கீழ்க்காணும் தடிமரத்தூண்கள் ஏலமிடப்படும்.

| | கன மீட்டர். |
|---|---|
| (1) ஈட்டி .. .. .. .. .. | 5·308 |
| (2) வெண் தேக்கு .. .. .. .. | 0·369 |
| (3) பில்லமருது .. .. .. .. | 5·240 |
| (4) வேங்கை .. .. .. .. .. | 59·323 |
| (5) செலவாகை .. .. .. .. | 1·207 |
| (6) தேங்காய் கால்கள் .. .. .. | 20822 |
| | 1723 |
| (7) அட்டி விறகுகள் .. .. .. | அட்டிகள். |

மற்ற விவரங்களுக்கு மத்திய கோவை மாவட்ட வன அலுவலர், கோவை அல்லது வனச்சரக அலுவலர் போலாம்பட்டி சரகம் (வழி) ஆலாந்துறை எழுதிப்பெறவும்.

எம். ஏ. அப்துல்கரீம்,
மாவட்ட வன அலுவலர், கோவை மத்திய பிரிவு, கோவை-18.

(த. 50)

## ஒப்பந்தப் புள்ளி

## தூத்துக்குடி துறைமுக வாரியம்

"கரிப் பாலத்தில் லைனிங் காங்கிரீட் போடும்" வேலைக்கு (காண்டிராக்டின் உத்தேச மதிப்பு ரூ. 19,000) ஒப்பந்தங்கள் 3-6-1972 மாலை 4 மணி வரை தூத்துக்குடி துறைமுக வாரியம், தலைவரால் வரவேற்கப்படுகின்றன. தூத்துக்குடி துறைமுக வாரியத்தில் பதிவு செய்யப்படாதவருடைய ஒப்பந்தம் அங்கீகரிக்கப்பட்டால், அவர் வேலை உத்தரவு கிடைத்த 30 தினங்களுக்குள் துறைமுக வாரிய விதிகளின் படி துறைமுக வாரியத்தில் பதிவு செய்யப்பட்ட காண்டிராக்டராக வேண்டும். அப்படிச் செய்யத்தவறினால்; அவருக்குக் கொடுக்கப்பட்ட வேலை உத்தரவு ரத்துச் செய்யப்படும். அத்துடன் அவர் கட்டிய கட்டுத் தொகையும் திருப்பித் தரமாட்டாது. ஒப்பந்தக் குறிப்புகள் வேண்டுவோர் 1972-ம் வருடம் மே மாதம் 31-ம் தேதி வரை ரூ. 10 (ரூபாய் பத்து மட்டும்) செலுத்திக் கீழ்க் கையொப்பமிட்டிருப்பவரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

காப்டன் D. T. ராமச்சந்திரன்,
துறைமுக அதிகாரியும் காரியதரிசியும்.

துரை முகக் காரியாலயம்,
(த. 48)

## வேலை வாய்ப்பு

## பவானி ஊராட்சி ஒன்றியம்

பவானி ஊராட்சி ஒன்றியத்தின் பராமரிப்பில் உள்ள ஓடத்துறை கிராம மருத்துவ மனைக்கு "எம்.பி.பி.எஸ்., எல்.ஐ.எம்., ஜி.சி.ஐ.எம்." தகுதி பெற்ற மருத்துவர் ஒருவர் தேவை. கௌரவ ஊதியம் மாதம் ரூ. 120 வழங்கப்படும். தகுதியுள்ளவர்கள் கீழ்க்கண்ட முகவரிக்கு 30-5-1972-க்குள் விண்ணப்பிக்க வேண்டியது.

ஆணையர்,
பஞ்சாயத்து யூனியன்,
பவானி,
கோவை மாவட்டம்.

(த. 1)

## ஆசிரியர் பயிற்சி

## ஆசிரியர் கல்லூரி

## சைதாப்பேட்டை

[சைதாப்பேட்டை ஆசிரியர் கல்லூரி கைவினை ஆசிரியர் பயிற்சி வகுப்புச் சேர்க்கைப் பற்றிய விளக்கக் குறிப்புகள்].

1972 ஜூலைத் திங்களில் தொடங்கும் பின்வரும் பயிற்சி வகுப்புகளில் மாணவர்கள் சேருவதற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன :

(1) இரு கல்வியாண்டு தச்சுக் கைவினை ஆசிரியர் பயிற்சி (16 இடங்கள்).

(2) ஒரு கல்வியாண்டு—நெசவுக் கைவினை ஆசிரியர் பயிற்சி (20 இடங்கள்) பெண்கள் நெசவுப் பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம்.

பொதுக்கல்வித் தகுதி—உயர்நிலைப்பள்ளி இறுதித் தேர்வுச் சான்று.

வயது வரம்பு—1972 ஜூலை முதல் தேதியில் 15 வயதுக்குக் குறையாமலும் 25 வயதுக்கு மிகாமலும் இருக்க வேண்டும்.

வகுப்பில் சேர்க்கப்பட்ட மாணவருக்கு மாநில நிதியிலிருந்து மாதம் ரூ. 18 உதவித்தொகை வழங்கப்படும். தமிழ்நாடு கல்வி நிறுவனங்களில் பயிற்சி முடிந்த 6 ஆண்டுக் காலத்திற்குள் 3 ஆண்டுகள் கைவினை ஆசிரியராகப் பணிபுரிந்த ஒப்பந்தம் ஒன்றை மாணவர் எழுதிக் கொடுக்க வேண்டும். நல்ல ஆரோக்கியமுடையவர்களே விண்ணப்பிக்கலாம். தச்சு வகுப்பு மாணவர்கள் கூடுதலாக இயந்திர இயக்கப் பயிற்சி பெற நேரிடும்.

பின்னிலை வகுப்பைச் சார்ந்தவரோ அட்டவணைக்குட்பட்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவரோ அல்லது அட்டவணைகுட்படுத்தப்பட்ட பழங்குடி விண்ணப்பதாரரோ இந்நிலையை உறுதிப்படுத்துவதற்கான ரெவின்யூ துணைத் தாசில்தார் தகுதிக்குத் குறையாத அலுவலர் வழங்கிய சான்றைப் பெற்று அனுப்ப வேண்டும்.

அனுபந்தத்தில் விண்ணப்பப் படிவம் கொடுக்கப்பட்டுள்ளது. விண்ணப்பப் படிவத்தைக் கைப்பிரதியாக தயாரித்துக் கொள்ளலாம். சான்றிதழ் படிகளுடன் விண்ணப்பங்களை "முதல்வர், சைதாப்பேட்டை ஆசிரியர் கல்லூரி, சென்னை-15" என்ற முகவரிக்கு 1—6—1972க்குள் வந்து சேரும்படி அனுப்ப வேண்டும்.

விண்ணப்பத்துடன் கீழே குறித்துள்ள சான்றிதழ்களின் படிகள் அரசினர் பதிவு பெற்ற அலுவலரின் ஒப்புதல் செய்யப் பெற்று அனுப்பப்பட வேண்டும்.

1. உயர்நிலைப்பள்ளி இறுதித் தேர்வுச் சான்றிதழ் முதல் பக்கம் ;

2. உயர்நிலைப்பள்ளி இறுதித் தேர்வில் பாடவாரியாகப் பெற்ற மதிப்புப் புள்ளி ;

3. வகுப்புமாற்றச் சான்று ;

4. தலைமை ஆசிரியர் வழங்கிய நடத்தைச் சான்று;

5. பொறுப்புமிக்க அலுவலரால் 15—2—1972க்கு பிறகு அளித்த நடத்தைச் சான்று.

6. கைவினை ஆசிரியர் பணிச்சான்று (உண்டெனில்) ;

7. விண்ணப்பதாரின் நிலச் சொத்துச் சான்று—(கிரும முனிசீப்பும், துணைத் தாசில்தாரும் சான்றிட்டது) ;

தற்காலிகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அவர்களின் சொந்தப் பயணச் செலவில் குறிப்பிட்ட நாளன்று நேர்முகத் தேர்வுக்கு வர வேண்டும் என்று அறிவிக்கப்படுவார்கள். அப்போது அவர்கள் மேலே குறித்த உண்மைச் சான்றுகளையும்—தமிழ்நாடு கல்வி விதியின்படித் தக்க மருத்துவரால் வழங்கப்படும் உடல் நலத்தகுதிச் சான்றிதழினையும் பார்வைக்குக் கொடுக்க வேண்டும். நேர்முகத் தேர்வுக்குக் குறிப்பிட்ட தேதியில் வராதவர்களின் பெயர் பட்டியலிலிருந்து நீக்கப்படும்.

நேர்முகத் தேர்வில் தேர்ந்து எடுக்கப்பட்டவர்கள் அது போழ்து உடனே வகுப்பில் சேருவதன் பொருட்டு மேலே சுட்டப்பட்ட உண்மைச் சான்றிதழ்களை இவ்வலுவலகத்தில் ஒப்படைப்பதுடன் கீழ்க்கண்ட கட்டணங்களையும் உடனடியாகச் செலுத்த வேண்டும்.

| | ரூ. |
|---|---|
| காப்புத் தொகை .. .. .. | 10·00 |
| சிறப்புக் கட்டணம் .. .. .. | 8·00 |
| கல்லூரிச் சின்னம் .. .. .. | 0·50 |
| கல்லூரி நாட்காட்டி .. .. .. | 5·00 |
| படிப்பகம் .. .. .. | 1·00 |

காப்புத் தொகை செலவாகி விட்டால் அதனை ஈடு செய்ய மாணவர் கோரப்படுவார். பயிற்சியின் இறுதியில் காப்புத் தொகை திருப்பிக் கொடுக்கப்படும். ஆசிரியர் கல்லூரி உணவில்லத்தில் இம்மாணவர்கட்கு இடவசதியில்லை.

முதல் ஐம்பது வேலை நாட்கள் மாணவர்களின் தகுதிதான் பருவமாக அமையும். மாணவர் பயிற்சியில் ஆர்வம் காட்டாமல் இருந்தாலோ, அவர் நடத்தை திருப்தியளிக்காவிட்டாலோ அவர் பயிற்சியினின்றும் நீக்கப்படுவதுடன் தாம் பெற்ற உதவித் தொகையையும் திருப்பிச் செலுத்த உத்தரவிடப்படலாம்.

தமிழ் பயிற்று மொழியாகும். மாணவருக்குப் பயிற்றும் பயிற்சி உண்டு.

முதலாண்டு வகுப்பில் இருந்தும் இரண்டாம் ஆண்டு வகுப்பிற்குத் தேர்வு பெறவும் பயிற்சியின் இறுதி பொதுத் தேர்வுக்கு செல்ல மாணவர் தகுதி பெறவும் 75 சத விகிதம் வருகைப் பதிவு தேவை. பயிற்சியின் முடிவில் நடைபெறும் பொதுத் தேர்வில் வெற்றி பெற்ற மாணவருக்கு அரசாங்கத் தேர்வு ஆணையரால் அதற்கான சான்றிதழ் வழங்கப்படும். தேர்வு பெறுதவர்கள் அடுத்துவரும் தேர்வுக்குக் கட்டணம் செலுத்தித் தேர்வில் ஆஜராக வேண்டும்.

தமிழ்நாடு கல்வித்துறை கட்டுப்பாடுகட்குட்பட்டுப் பயிற்சிக்குரிய பொறுப்பினைச் செம்மையாக நிறைவேற்றவும் உண்மையுடன் உழைக்கவும் நல்லொழுக்கத்துடன் வகுப்புக்கு வருகை தரவும் தம்பயிற்சிக்காக ஒப்படைக்கப்பட்ட கருவி—சாதனங்களை முறையாகக் காக்கவும் ஆசிரியர் கல்லூரி முதல்வரின் அனுமதியின்றிப் பிற தேர்வுகளுக்குச் செல்லாமலும் மாணவர் தம் கடமையை நிறைவேற்ற வேண்டும்.

கே. ஆர். மாணிக்கம்,

சைதாப்பேட்டை,

முதல்வர்,
சைதாப்பேட்டை ஆசிரியர் கல்லூரி,
சென்னை-15.

அனுபந்தம்

அலுவலகக் குறிப்புக்காக.

பதிவு எண்.

சென்னை-15, சைதாப்பேட்டை, ஆசிரியர் கல்லூரி தச்சு/நெசவு—கைவினை ஆசிரியர் பயிற்சிக்குச் சேர்க்கை விண்ணப்பம்.

1 விண்ணப்பதாரரின் பெயர் ..
(கொட்டை எழுத்துக்களில்).

பால் .. .. ஆண்/பெண்

2 பெற்றோரின் பெயர் .. ..

பெற்றோரின்/பாதுகாவலரின் முகவரி.

3 தேசிய இனம் .. .. ..

(குறிப்பு—விண்ணப்பதாரரின் இனம் பிற்பட்டோர் நலத்துறை, அரிசன நலத்துறை ஆகியவை வெளியிட்டுள்ள பட்டியலில் இடம் பெற்றிருப்பின் அந்த இனத்தைக் குறிக்கவும்].

4 பிறந்த தேதியும் நிறைந்த வயதும்.

5 சொந்த ஊர், வட்டம், மாவட்டம், மாநிலம்.

6 இக்கால முகவரி .. ..

| | |
|---|---|
| 7. பொதுக்கல்வித் தகுதி .. (உயர்நிலைப்பள்ளி இறுதித் தேர்தலில் பாடவாரியாகப் பெற்ற மதிப்புப் புள்ளிகள்) | |
| 8 பயில விரும்பும் கைவினையின் பெயர். | தச்சு/நெசவு. |
| 9 பள்ளி இறுதித் தேர்வுச் சான்றின்படி பழகிய கைவினையின் பெயரும் தேர்ச்சித் திறமும். | |
| 10 கைவினை ஆசிரியராகப் பணியாற்றியிருந்தால் பணியாற்றிய பள்ளியின் பெயரும் ஊரும் பணிக்கால அளவும். | |
| 11 இப்போது புரியும் பணி (ஏதேனுமிருந்தால்). | |
| 12 விண்ணப்பிப்பவர் பெண்ணாக இருப்பின்— | |
| திருமணத் தேதி .. .. | |
| குழந்தைகளைப் பெற்ற தேதிகள். | |
| கணவரின் மாதவருமானம். | |
| 13 விண்ணப்பிப்பவருடைய நிலம் முதலிய அசையாத உடைமைகளும் அவற்றின் விலையும், அவை அமைந்துள்ள ஊர், வட்டம், மாவட்டம் முதலியன விளக்கமும். | |

விண்ணப்பத்தில் குறிக்கப்பட்ட தகவல்கள் உண்மை என்று உறுதி செய்கிறேன்.

விண்ணப்பிப்பவரின் கையொப்பம்.

உறுதி மொழி

............................ என்னும் நான் விண்ணப்பித்த பயிற்சிப் படிப்பிற்குச் சேர்க்கப்பட்டபின் குறிப்பிட்ட பயிற்சிக் காலத்தை முடிக்கத் தவறினால் தமிழ்நாடு கல்விபற்றிய விதிகளின்படி மாணவர்கள் செலுத்த வேண்டிய பயிற்சிக் கட்டணத்தைக் கல்விக்கூடத் தலைவர் வேண்டும்போது செலுத்தி விடுவேன் என்பதற்கும், இப்பொறுப்பை ஏற்றுக் கொள்வதற்காகவே பயிற்சிக் கட்டணம் இல்லாமல் சேர்க்கப்படுகிறேன் என்பதற்கும் இதன்படி தமிழ்நாடு ஆளுநர் அவர்கட்கு என்னைக் கட்டுப்படுத்திக் கொள்கிறேன்.

இடம் :

விண்ணப்பிப்பவரின் கையொப்பம்.

நாள் :

குறிப்புகள் :—

(1) அரசிதழ் பதிவு பெற்றவரின் ஒப்பம் பெற்ற சான்றிதழ்ப்படிகளையே அனுப்ப வேண்டும். மூலச் சான்றிதழ்களை அனுப்பக் கூடாது. சான்றிதழ்ப்படிகளை இணைக்காத விண்ணப்பங்கள் மறுதலிக்கப்படும்.

(2) விண்ணப்பங்கள் "முதல்வர், ஆசிரியர் கல்லூரி, சைதாப்பேட்டை, சென்னை-15" என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

(3) ஒருவரே இரண்டு விண்ணப்பங்களை இப்பயிற்சியில் சேர அனுப்பக் கூடாது ; அவ்வாறு அனுப்பினால் இரண்டு விண்ணப்பங்களும் தள்ளுபடி செய்யப்படும்.

(4) விண்ணப்பங்கள் சரியாக நிறைவு செய்யப்பெறாவிடினும் தவறாக நிறைவு செய்யப்பட்டிருப்பினும் அவை தள்ளுபடி செய்யப்பெறும்.

(5) தமிழ்நாட்டைச் சார்ந்தோரின் விண்ணப்பங்களே ஏற்றுக்கொள்ளப்படும்.

த. 38)

## ஒப்பந்தப் புள்ளி

### எழுதுபொருள் அச்சுத் துறை

தமிழக ஆளுநருக்காக கீழே கையொப்பமிட்டவரால் முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் 5–6–1972 பிற்பகல் 3 மணி வரை அரசு அச்சகத்திற்கு தேவையான பலவிதமான பொருள்கள் வழங்குவதற்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. மற்ற விவரங்களுக்கு இயக்குநர், எழுதுபொருள் அச்சுத் துறை, சென்னை-1 அவர்களுக்கு எழுதவும்.

ஜி. ரங்காராவ்,
இயக்குநர்.

(த. 52)

## ஒப்பந்தப் புள்ளி

### திருப்பூர் நகராட்சி

திருப்பூர் நகராட்சிக்குத் தேவையான கீழ்க்குறிப்பிட்டுள்ள பொருள்கள் வழங்க மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 27–5–1972-ம் தேதி மாலை 4 மணி வரை வரவேற்கப்படுகின்றன. வழங்கவேண்டிய பொருள்களின் விளக்கமான பட்டியல், ஒப்பந்தப்புள்ளியின் இதர விவரங்கள் எல்லா வேலைநாட்களிலும் இவ்வலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

விவரம்

1. நீரளிப்புத் துறை நீர் பகிர்மான குழாய்கள் பராமரிப்பதற்கான பொருட்கள் வழங்குதல்.
2. நீரளிப்புத் துறைக்குத் தேவையான 14" மற்றும் 16" விட்டமுள்ள வார்ப்பு இரும்புக் ( Cast Iron ) குழாய்கள் வழங்குதல்.
3. நீரளிப்புத் துறை குழாய் இணைப்புகள் பராமரிப்பதற்கான பொருட்கள் வழங்குதல்.
4. நகராட்சி உபயோகத்திற்கான மின்விளக்குகள், இதர மின் சாதனங்கள் வழங்குதல்.
5. நகராட்சிக்குத் தேவையான 2.5 மெட்ரிக் டன் பிளீச்சிங் பவுடர் 1972–73-ல் வழங்குதல்.

ஆணையர்.

(த. 57)

## ஒப்பந்தப் புள்ளி

### பொதுப்பணித் துறை

வேலையின் பெயர்—உதகமண்டலத்தில் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கான விடுதிக் கட்டடத்திற்கான கட்டுமானம்.

மேற்கூறப்பட்ட வேலைக்கான ஒப்பந்தப் புள்ளியின் ரசீதைப் பெற கடைசி நாள் 26–4–1972 என்ற காலக் கெடு, 24–5–1972 மாலை 3 மணி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள். விற்பனைக்கு "நிருவாகப் பொறியாளர், கட்டடப் பகுதி பொ.ப.து. கோயம்புத்தூர் அவர்களின் அலுவலகத்தில் 22–5–1972 வரை கிடைக்கும். ஒப்பந்தப்புள்ளி மூல அறிவிப்பின் பட்டியலில் மாற்ற மேதும் இல்லை.

எம். எஸ். கோபாலகிருட்டிணன்,
மேற்பார்வைப் பொறியாளர்,
பொதுப் பணித் துறை,
கோவை-நீலகிரி வட்டம்,
கோவை-1.

(த. 42)



16–5—10எ

## ஏல விற்பனை

தஞ்சாவூர் மாவட்டம் பாபநாசம் வட்ட வழங்கு அலுவலகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் எம்.எஸ்.ஒய். 0836 எண்ணுள்ளதான ஒரு பழுதடைந்த வில்லீஸ் ஜீப் பாபநாசம் தாலூகா அலுவலகத்தில் 7-6-1972 புதன்கிழமை காலை 11 மணிக்குத் தஞ்சாவூர் மாவட்டவிநியோக அலுவலர் (மேற்கு) அவர்களால் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். விற்பனை நிபந்தனைகளை இம் மாவட்டத்திலுள்ள எல்லா வட்ட வழங்கு அலுவலகங்களிலும், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலும் தெரிந்து கொள்ளலாம்.

ஏலம் கேட்க விரும்புவோர் மேற்கண்ட ஜீப் வண்டியை அலுவலக வேலை நாட்களில் அலுவல் நேரங்களில் பார்வையிடலாம். இது சம்பந்தமான விவரங்களை அடியிற்கண்ட அலுவலரிடம் தெரிந்து கொள்ளலாம்.

மாவட்ட வருவாய்த்துறை அலுவலர்,

தஞ்சாவூர்.

(த. 18)

## ஒப்பந்தப் புள்ளி

### கதர் கிராமத் தொழில் வாரியம்

கதர் கிராமத் தொழில் துறை

1972–73 ஆம் ஆண்டிக்குக் கதர் கிராமத் தொழில் துறைக்கு வேண்டிய எழுது பொருள் (ஸ்டேஷனரி) சாமான்கள் சப்ளை செய்வதற்கான முத்திரையிடப் பெற்ற ஒப்பந்தங்கள 14—6—1972 மாலை 4 மணிவரை பெற்றுக் கொள்ளப்பட்டு 17—6—1972 காலை 11 மணிக்கு ஒப்பந்தங்கள் திறக்கப்படும்.

கீழ்க்கண்ட முகவரியில் ஒப்பந்தத்திற்கான நிபந்தனைகள் மற்றும் விவரங்கள் ரூ. 10-க்கு (விற்பனை வரி தனி) டிமாண்ட் டிராப்ட் அல்லது ரொக்கம் கீழே கண்ட முகவரியில் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். 22—5—1972-க்கு முன்னதாக வாங்கப் பெற்ற டிமாண்டு டிராப்டுகள் ஏற்கப்படமாட்டாது.

பொ. சோமசுந்தரம்,

இயக்குநர்,

கதர் கிராமத் தொழில் துறை,

சென்னை-4.

(த.15)

## ஏல விற்பனை

### வேளாண்மைத் தொழில் கழகம்

"அக்ரோ இல்லம்", தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை-32.

| டிராக்டர். | குதிரை திறன். | இறக்குமதி செய்யப்பட்ட நாடு. | உத்தேச விலை (வரி உட்பட). |
|---|---|---|---|
| | | | ரூ. |
| ஆர்.எஸ்.ஒ. 9 | 20 | கிழக்கு ஜெர்மனி (GDR) | 11,601·70 |
| டி. 25 .. | 20 | ரஷ்யா | 19,500·00 |

ஜெட்டார் 2011, யூ. 500, யூ. 500 என், மற்றும் யூ. 500- எம் டிராக்டர்களின் உதிரி பாகங்கள் உடனே கிடைக்கும்.

பைலாரஸ், ஜெட்டார்-5511, ஜெட்டார் 2011 ரைஸ் ஸ்பெசல் டிராக்டர்களின் உதிரி பாகங்கள் வெளிநாடுகளில் இருந்து விரைவில் இறக்குமதி செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

| கீழ்க்கண்ட டயர்களும், டியூப்புகளும் உடனே விலைக்குக் கிடைக்கும் அளவுகள். | கீழ்க்கண்ட டயர்களும், டியூப்புகளும் விரைவில் விற்பனை செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது அளவுகள். |
|---|---|
| 650 × 20 மற்றும் 14 × 38 | 6·00 × 18 |
| 5·50 × 16, 8·00 × 32 | 13 × 28 |
| 6·00 × 16, 10 × 28 | 12 × 38 |
| 11 × 28, 7·50 × 16 | |
| 8·00 ,19 | |

6 ஸ்டீல் குழாய்கள் உடனே விற்பனைக்குக் கிடைக்கும் உடனே விண்ணப்பிக்கவும்.

மேலும் கீழ்க்கண்ட எங்களது கிளை அலுவலகங்களில் தொடர்பு கொள்ளலாம்.

1. சிறு காவேரிப் பாக்கம், காஞ்சிபுரம்.
2. போக்ஸ் காம்பவுண்டு, சேலம்.
3. தொழிற்பேட்டை, மதுரை-7.
4. தொழிற் குடியிருப்பு, அரியமங்கலம், திருச்சி-10, மற்றும்
5. 219, நேருஜி ரோடு, விழுப்புரம்.

நிருவாக இயக்குநர்,

(த.6)

## ஒப்பந்தப் புள்ளி

### கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலை லிட், டி. 878

தஞ்சாவூர்

தலைவர் சார்பில், மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் கீழ்க்கண்ட வேலைக்கு நிருவாக இயக்குநரால் அவரது அலுவலகத்தில் 25—5—1972 மாலை 4 மணிவரை பதிவு செய்யப் பெற்ற ஒப்பந்த தாரர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்படும். வந்த ஒப்பந்தங்களை அதே தினம் மாலை 5 மணிக்கு, அந்தச் சமயம் வந்துள்ள ஒப்பந்தம் கொடுக்கப்பட்ட ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

வரிசை எண்ணும் வேலை விவரமும்—1. சூப்பர் மார்க்கட்.

ஒப்பந்தமுறை—ஷெடியூல் ஒப்பந்தம்.

உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ. 2.9 இலட்சம்.

ஒப்பந்தக் காலம்—12 மாதங்கள்.

முன் வைப்புத் தொகை—ரூ. 7,148.

ஒப்பந்தப் பத்திரத்தின் விலை—ரூ. 25-ம் விற்பனை வரியும்.

வரிசை எண்ணும் வேலை விவரமும்—2. கிடங்கு.

ஒப்பந்தமுறை—ஷெடியூல் ஒப்பந்தம்.

உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ. 0.75 இலட்சம்.

ஒப்பந்தக் காலம்—6 மாதங்கள்.

முன் வைப்புத் தொகை—ரூ. 3,630.

ஒப்பந்தப் பத்திரத்தின் விலை—ரூ. 25-ம் விற்பனை வரியும்.

2. மேற்கண்ட வேலைக்கு ஒப்பந்தம் செய்ய விரும்புவர்கள் நிருவாக இயக்குநர், தஞ்சாவூர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலை மேலவீதி, தஞ்சாவூர், அவர்களுக்கு மனுச் செய்து ஒப்பந்தப் பத்திரத்திற்கான விலைப் பணத்தை விற்பனை வரி உட்பட நேரிலோ அல்லது பண அஞ்சல் மூலமாகவோ அல்லது நிருவாக இயக்குநர் T. C. W. S. என்ற பெயரில் வாங்கப்பட்ட கிராஸ் டிமாண்ட் டிராப்ட் மூலமாகவோ செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்த நமூனாக்களின் விலைத் தொகை எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித்தரப்பட மாட்டாது.

3. ஒப்பந்தப் பத்திரங்களையும், நிபந்தனைகளையும் பண்டகசாலையின் தலைமை அலுவலகத்தில் வேலை நாட்களில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளிப் பத்திரம் பெற விண்ணப்பிக்க கடைசி நாள் 24—5—1972 மாலை 5 மணி.

4. மேலே குறிப்பிட்ட வேலைக்கான ஒப்பந்தப் பத்திரங்களில் ஒன்றையோ அல்லது எல்லாவற்றையுமோ எவ்விதக் காரணமும் கூறாமல் நிராகரிக்க நிருவாக இயக்குநருக்கு முழு அதிகாரமுண்டு.

5. ஒப்பந்தப் பத்திரங்கள் அஞ்சலில் அனுப்பப்படும் போது இடையில் உண்டாகும் கால் தாமதம் அல்லது காணாமல் போவது முதலியவைகளுக்கு இவ்வலுவலகம் பொறுப்பல்ல.

6. மாற்றிய வடிவமைப்பு தாங்கிய ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டா.

கூட்டுறவு கட்டடங்கள்,

மேல வீதி, தஞ்சாவூர்.

ச. அற்புதசாமி,

நிருவாக இயக்குநர்.

(த.35)

## ஒப்பந்தப் புள்ளி

### ஆட்சித் தலைவர் அலுவலகம்

### தருமபுரி

1972–73-ம் ஆண்டிற்குத் தருமபுரி மாவட்டத்திற்கு, சென்னை, கடலூர், பாண்டிச்சேரி, கொச்சி, தூத்துக்குடி முதலான துறை முகங்களிலிருந்தும், நெய்வேலி, உத்யோகமண்டல் (கேரள மாநிலம்) ஆகிய உரத் தொழிற்சாலைகளிலிருந்தும், இதர மாவட்டத்திலிருந்தும், மாவட்டத்திற்குள்ளேயும் இரசாயன உரங்கள் சாலை மூலமாக எடுத்து வருவதற்குக் கிலோ மீட்டர் ஒன்றுக்கு, டன் ஒன்றுக்கு எத்தனைக் காசு என்று குறிப்பிட்ட ஒப்பந்தம் கோரப்படுகின்றது.

நல்ல முன் அனுபவம் உள்ள லாரி சொந்தக்காரர்கள் மற்றும் போக்குவரத்து ஒப்பந்தக்காரர்கள் குறிப்பிட்ட படிவத்தில் தங்கள் ஒப்பந்தங்களை 31—5—1972 மாலை 4.00 மணிக்குள் கிடைக்குமாறு அனுப்ப வேண்டும். ஒப்பந்தக்காரர்கள் ஒப்பந்தப் படிவத்தை **"124, Capital outlays on Govt. Trading Scheme-VIII. other Miscellaneous Schemes-B. Deduct Sale proceeds"** என்ற தலைப்பில் இம்மாவட்டத்திலுள்ள கருவூலத்தில் ரூ. 2 செலுத்திச் சலானை நேரில் அனுப்பியோ அஞ்சல் மூலமாக அனுப்பியோ பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தப் படிவங்கள் 30—5—1972 பகல் 12.00 மணிக்கு மேல் தரப்படமாட்டாது. ஒப்பந்த தாரர்கள் வருமானவரி செலுத்தப்பட்டதற்கான சான்றிதழ் மற்றும் சமீபத்தில் பெற்ற ரூ. 2,000-க்குக் குறையாத சொத்து மதிப்புச் சான்றிதழ் அனுப்பப்பட வேண்டும்.

ரா. பத்மநாபன்,
மாவட்ட ஆட்சித் தலைவர்,
தருமபுரி.

(த. 34)

## விற்பனை

### காவல் கண்காணிப்பாளர் அலுவலகம்

செங்கை மாவட்டம்

கிழக்கு, பரங்கிமலை

செங்கற்பட்டு கிழக்கு மாவட்டக் காவல் துறைக்குச் சொந்தமான கண்டனம் செய்யப்பட்ட மோட்டார் சைக்கிள்கள் எம்.டி.எச். 4066-ம், எம்.டி.எச். 4067-ம் செங்கற்பட்டு கிழக்கு மாவட்ட அலுவலகம் பரங்கிமலையில் 26–6–1972 காலை 11 மணி அளவில் பகிரங்கமாக ஏலம் விடப்படும். மேற்கண்ட இருவாகனங்களின் விவரங்கள் பின் வருமாறு :—

| வரிசை எண்ணும் பதிவு எண்ணும். | விவரம். | மாடல். |
|---|---|---|
| 1 எம். டி. எச். 4066 .. | என்பீல்டு இந்தியா 3·46 சிசி. புல்லட்.. | 1965 |
| 2 எம். டி. எச். 4067 | என்பீல்ட் இந்தியா 3·46 சிசி. புல்லட். | 1965 |

நிபந்தனைகள்.

1. ஏலத்தின் முடிவு சென்னை போக்குவரத்து ஆணையரின் அனுமதியையும் உறுதி செய்யப்படுவதையும் பொறுத்ததாகும்.

2. ஏலம் கோர விரும்பும் நபர் ஏலம் ஆரம்பிக்கு முன் ரூ. 100 (ரூபாய் நூறு மட்டும்) முன் பணமாகக் கட்ட வேண்டும். முன் பணம் கட்டிய நபர்களே ஏலம் கோர அனுமதிக்கப்படுவார்கள். ஏலத்தில் வாகனத்தை எடுக்காதவர்களின் முன் பணம் ஏலம் முடிந்த வுடன் அவர்களுக்குத் திருப்பிக் கொடுக்கப்படும். வாகனத்தை ஏலம் எடுத்தவரின் முன் பணம் ஏலத்தொகைக்கு ஈடு செய்து கொள்ளப்படும்.

3. ஏலம் எடுத்தவர் கோரி முடிவான தொகையில் 25 சதவிகிதம் உடனடியாகக் கட்ட வேண்டும். அப்படி கட்டத் தவறினால் அவருடைய முன் பணம் ரூ. 100 (ரூபாய் நூறு மட்டும்) அரசாங்கத்துக்கு சேர்க்கப் படும்.

4. சென்னை போக்கு வரத்து ஆணையரின் அனுமதியும் ஏலம் உறுதி செய்யப்பட்ட தகவலும் கிடைத்த ஒரு வார காலத்திற்குள் மீதித் தொகையை ஏலம் எடுத்தவர் கட்ட வேண்டும். ஒருவார காலத்திற்குள் மேற்படி தொகையைக் கட்டத் தவறினால் முன் பணமாகக் கட்டிய 25 சதவிகிதத் தொகையை அரசாங்கத்துக்குச் சேர்த்துக் கொள்ளப்படும். அத்துடன் வாகனங்கள் மறு ஏலத்தில் விடப்படும். இதில் அரசுக்கு ஏற்படும் நட்டத்தைப் பணம் கட்டத் தவறிய ஏலத்தாரிடமிருந்து வசூலிக்கப்படும்.

5. சென்னை போக்குவரத்து ஆணையரால் ஏலம் அனுமதிக்கப் பட்டு உறுதி செய்யப்படாவிட்டால் ஏலத்தார் கட்டிய 25 சதவிகித தொகை அவருக்கு திருப்பிக் கொடுக்கப்படும்.

6. மேற்கண்ட வாகனங்களை எந்த வேலை நாட்களிலும் காலை 10-30 மணிமுதல் மாலை 5 மணி வரை பரங்கிமலை மாவட்ட அலுவலகத் தில் கூடுதல் ஆயுதப்படை ஆய்வாளரின் அனுமதியுடன் பார்வை யிடலாம்.

மு. இராமதாஸ்,
காவல் கண்காணிப்பாளர்.

(த. 41)

## ஒப்பந்தப் புள்ளி

### ஆட்சித் தலைவர் அலுவலகம்

தஞ்சாவூர்

தஞ்சாவூர் மாவட்டம் நாகப்பட்டினம் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு களில் உள்ள குருணை அரிசி 3,032 மூட்டை 8 கிலோவும் விற்பனை செய்ய ஒப்பந்தப் புள்ளிகள் மூடி முத்திரையிடப்பட்ட உறைகளில், மாவட்ட வருவாய்த் துறை அலுவலர், தஞ்சாவூர் என்ற முகவரியிட்டு 3–6–1972 மாலை 2-00 மணி முடிய வரவேற்கப்படுகின்றன. அவைகளை அதே நாளில் மாலை 3-00 மணிக்குத் திறக்கப்படும். ஒப்பந்த நிபந்தனைக்காக 5-00-ம் விற்பனை வரி 0-18 காசும் ஆக ரூ. 5·78 மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் செலுத்தி ஒப்பந்தப் பாரங்கள் பெற்றுக் கொள்ளலாம்.

குருணை அரிசி விவரம்.

| | மூ. | கிலோ. |
|---|---|---|
| ஏ.டி.டீ. 27 .. .. .. .. | 234 | 06 |
| சி.ஓ. 33 .. .. .. .. | 82 | 14 |
| வாடன் சம்பா .. .. .. | 787 | 15 |
| ஐ.ஆர். 8 .. .. .. .. | 683 | 00 |
| ஏ.டி.டீ. 8 .. .. .. .. | 293 | 48 |
| சி.ஓ. 25 .. .. .. .. | 952 | 00 |
| | 3,032 | 08 |

ஒப்பந்தம் எடுக்க விரும்புகிறவர்கள் கட்டுத் தொகை ரூ. 500 **"P.D. Account of the Commissioner of Civil supplies"** என்ற தலைப்பில் ஸ்டேட் பாங்கில் செலுத்திக் காசோலையை ஒப்பந்தத் துடன் அனுப்ப வேண்டும்.

மாவட்ட வருவாய்த் துறை அலுவலர்,
தஞ்சாவூர்.

(த. 45)

## ஒப்பந்தப் புள்ளி

### பொதுப்பணித் துறை

தமிழ்நாடு ஆளுநர் சார்பிலும் அவர் பொருட்டும் தமிழகப் பொதுப் பணித்துறை தஞ்சை மாவட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர் களால் தஞ்சாவூரிலிருக்கும் அன்னாரது அலுவலகத்தில் 24–5–1972 மாலை 3-00 மணி வரை கீழ்க்கண்ட வேலைகளுக்கான முத்திரையிட்ட ஒப்பந்த விவரங்கள் பெற்றுக் கொள்ளப்படும்.

(1) வேலையின் பெயர்—தஞ்சாவூரில் மன்னர் சரபோஜி அரசினர் கலைக்கல்லூரிக்கான அதிகப் படியான இணைக் கல்வி வகுப்பறை கட்டடங்கள் கட்டுதல்.

(2) ஒப்பந்த வகை—மொத்தத் தொகை எல். எஸ்.

(3) வைப்புத் தொகை—ரூ. 3,600.

(4) ஒப்பந்தப் பத்திரங்களின் விலை அரசினர் கருவூலகங்களில் பொதுப்பணித்துறை செலுத்துத் தொகை என்ற தலைப்பில் செயற் பொறியாளர், கல்லணைக் கால்வாய் கோட்டம், தஞ்சை அவர்களின் கணக்கில் கட்ட வேண்டும்.

III. மற்றைய செலுத்துத் தொகை.

(5) விற்பனை வரி (அரசினர் கருவூலங்களில் XII. விற்பனை வரி (பி) பற்றுச் சீட்டு மாநில விற்பனை வரி என்ற தலைப்பில் செலுத்த வேண்டும்—ரூ. 1·05 (ரூபாய் ஒன்று காசு ஐந்து மட்டும்).

(6) ஒப்பந்தப் பத்திரங்கள் கொடுக்க ஆரம்பிக்கும் நாள்—10–5–1972.

(7) கால அளவு—8 மாதங்கள்.

ஆர். வேணுகோபால்,
மேற்பார்வைப் பொறியாளர், பொ.ப. து.
தஞ்சை வட்டம், தஞ்சாவூர்.

(த. 44)

## கோவை நகராட்சி

கீழ்க் குறிப்பிட்டுள்ள வேலைகளுக்கான மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 31–5–1972 தேதி மாலை 3 மணி வரை நகராட்சிப் பொதுப் பணிப் பொறியாளர் அவர்களால் பெறப்படும். ஒப்பந்தப் புள்ளிகளின் மேலுறையில் வேலையின் பெயரும் தேதியும் குறிப்பிட்டு ஆணையர், கோவை நகராட்சி என்று விலாசமிட்டு அனுப்பி வைக்கவேண்டும். ஒப்பந்தப் புள்ளிகள் 31–5–1972 மாலை 3–30 மணிக்கு நகராட்சிப் பொதுப்பணிப் பொறியாளர் அவர்களால் திறக்கப்படும். இவ்வேலைகளுக்கான நிபந்தனைகள், ஷெட்யூல் பாரங்கள் மற்றும் இதர விவரங்களை அதற்குண்டான தொகையை நகராட்சிக் கருவூலத்தில் செலுத்தி, பொதுப்பணிப் பொறியாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| எண்ணும் வேலையின் பெயரும். | கட்டுத்தொகை. | ஷெட்யூல் விலை. | முடிக்க வேண்டிய காலம். |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | |
| 1 கோவை, ஆர்.எஸ். புரத்தில் கடைகளும் தங்கும் விடுதிகளும் கொண்ட இரண்டு மாடிக் கட்டிடம் கட்டுதல். | 4,100 | 20·70 | எட்டு மாதங்கள். |
| 2 கோவை ரங்கே கவுடர் வீதியில் குடோனும் அதன் மேல் மாடியில் ஆபீசும் கட்டுதல். | 1,130 | 10·35 | நான்கு மாதங்கள் |
| 3 கோவை ஆர்.எஸ். புரம் பெண்கள் உயர் நிலைப் பள்ளியில் நான்கு அறைகள் கொண்ட தற்காலிகக் கட்டடம் கட்டுதல். | 875 | 10·35 | மூன்று மாதங்கள் |
| 4 அவிநாசி ரோட்டிலிருந்து ஆவாரம் பாளையம் ரோடு வரை பாப்பநாயக்கன் பாளையம் பிரதான ரோட்டிற்குத் தார் தளமிடும் வேலை. | 928 | 8·32 | மூன்று மாதங்கள் |
| 5 தடாகம் ரோட்டிலிருந்து லைசியால் ரோடு வரை சஞ்சிவன் வீதிக்குத் தார் தளமிடும் வேலை. | 760 | 7·28 | மூன்று மாதங்கள் |

ஆணையர்.

(த. 51)

## மின்சார வாரியம்

தமிழ்நாடு மின்சார வாரியம்—சுருளியாறு நீர்மின்திட்டம், குறிப்பிடுகை எண் SUR 9, SUR 10, சுருளியாறு மேல் முகாமில் நாவல்வாளி கேம்ப்பில் தற்காலிகக் கட்டடங்கள் கட்டுவது.

(1) தமிழ்நாடு மின்சார வாரியத்திற்காகவும் வாரியத்தின் சார்பிலும் மேலே குறிப்பிட்டுள்ள குறிப்புகளுடன், ஒப்பந்ததாரின் பெயரும் மேலுறையில் எழுதப்பட்டு, மூடி அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தங்களை கீழே கையொப்பமிட்டுள்ளவரால் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியால் அவரது அலுவலகத்தில் கீழே குறிப்பிட்ட தேதிகளில் பிற்பகல் 3–00 மணி வரையில் பெற்றுக் கொள்ளப்படும். அதே நாளில் இவ்வலுவலகத்தில் பிற்பகல் 4–00 மணிக்கு வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் அல்லது அவரது அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளின் முன் ஒப்பந்தங்கள் திறக்கப்படும்.

| வரிசை எண். | குறிப்பிடுகை எண். | வேலையின் பெயர். | ஒப்பந்தப் பிரதியின் விலை, விற்பனை வரி உட்பட. | கட்டுத் தொகை. | ஒப்பந்தம் பெற்றுக் கொள்ளப்படும் கடைசித் தேதி. |
|---|---|---|---|---|---|
| | | | ரூ. | ரூ. | |
| 1 | SUR.-9 | சுருளியாறு மேல் முகாமிலுள்ள நாவல்வாளி கேம்ப்பில் தற்காலிக 8 G Type கட்டடம் ஒரு பிளாக் கட்டுவது. | 10.35 | 1.300 | 9–6–1972 |
| 2 | SUR. 10 | சுருளியாறு மேல் முகாமில் நாவல்வாளி கேம்ப்பில் தற்காலிக 6 F Type கட்டடம் ஒரு பிளாக் கட்டுவது. | 10.35 | 1,400 | 9–6–1972 |

(2) ஒப்பந்தப் பிரதிகள் வேண்டுவோர் ஒவ்வொரு பிரதிக்கும் ரூ. 10–35 (ரூபாய் பத்து காசு முப்பத்து ஐந்து மட்டும் விற்பனைவரி உட்பட) வீதம் செலுத்தி கீழே கையொப்பமிட்டுள்ளவரின் அலுவலகத்திலோ அல்லது நிருவாகப் பொறியாளர் சிவில், சுருளியாறு மின் திட்டம் சின்னமனூர், மதுரை மாவட்டம் அவர்கள் அலுவலகத்திலோ ஒப்பந்தப் பிரதி பெற்றுக் கொள்ளலாம். இந்தத் தொகை எந்த காரணத்தை முன்னிட்டும் திருப்பித் தரப்படமாட்டாது.

(3) மேலே குறிப்பிட்டுள்ள வேலைகளுக்கான கட்டுத் தொகை (E.M.D.) கீழே கையொப்பமிட்டுள்ளவரின் அலுவலகத்தில் செலுத்தப்பட்டு அதற்கான செலுத்துச் சீட்டு ஒப்பந்தத்துடன் இணைக்கப்பட வேண்டும். எக்காரணத்தை முன்னிட்டும் காசோலைகள் ( Cheques ) ஏற்கப்படமாட்டா. கட்டுத்தொகையின்றி சமர்ப்பிக்கப்படும் ஒப்பந்தங்கள் கட்டாயமாக நிராகரிக்கப்படும். டிமாண்ட் டிராப்ட் (Demand Drafts) அனுப்புவதானால் ஒப்பந்தம் கொடுப்பதற்கு முன்னதாகவே அனுப்பப்பட வேண்டும். இந்த ஒப்பந்தத்திற்கான கட்டுத் தொகையை ஒப்பந்தத்துடன் செலுத்தாமல் வேறு ஒப்பந்தத்துக்காக ஒப்பந்ததாரரால் கட்டுப்பட்ட தொகையோ வேறு தொகையையோ, ஈடு செய்யக்கோரும் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படமாட்டது.

(4) ஒப்பந்தம் ஒப்புக்கொள்ளப்பட்டவுடன் ஒப்பந்தத்துக்குரியவர் இவ்வலுவலகத்தில் குறிப்பிட்ட நாட்களுக்குள் பிணைவைப்புத் தொகையை (Security Deposit) செலுத்த வேண்டும். இப்பிணை வைப்புத் தொகை கட்டுத் தொகையுடன் சேர்ந்து வேலைக்கான மதிப்பில் 5% (ஐந்து சதவீதம்) இருக்கும். இந்த பிணை வைப்புத் தொகைக்கும், கட்டுத் தொகைக்கும் வட்டி தரப்படமாட்டாது. இந்த மொத்தத் தொகையும் ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்படி திருப்திகரமாக வேலை முடிந்த பின் திருப்பித் தரப்படும். ஒப்புக் கொள்ளப்பட்ட ஒப்பந்ததாரர் குறிப்பிட்ட தினங்களுக்குள் பிணை வைப்புத் தொகையை செலுத்த தவறினாலும், ஒப்பந்தம் ஒப்புக்கொள்ளப்பட்ட பிறகு ஒப்பந்தப்படி வேலை செய்வதிலிருந்து பின் வாங்கினாலும் கட்டுத் தொகை திருப்பித் தரப்படமாட்டாது.

(5) இவ்வலுவலகத்தின் மனு பாரத்தில் இல்லாத ஒப்பந்தங்களும் குறித்த காலம் தள்ளி வரும் ஒப்பந்தங்களும் கண்டிப்பாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. மேலே குறிப்பிட்ட வேலையை சில அல்லது எல்லா ஒப்பந்ததாரர்களுக்கும் பகிர்ந்து வழங்குவதற்கோ அல்லது சில ஒப்பந்தங்களையோ எல்லா ஒப்பந்தங்களையோ காரணம் தெரிவிக்காமல் நிராகரிக்க கீழே கையொப்பமிட்டுள்ளவருக்கு உரிமை உண்டு.

(6) ஒப்பந்தப் பிரதிகளை சாதாரண தபாலிலேயே அனுப்பப்படும். தபால் போக்குவரத்தில் கால தாமதம் ஏற்படினும் ஒப்பந்தப் பிரதிகள் தபாலில் தொலைந்து போனாலும் இவ்வாரியம் பொறுப்பல்ல. ஒப்பந்தப் பாரங்கள் ஒருவர் பெயரிலிருந்தது மற்றொருவர் பெயருக்கு மாற்றுவதற்கு உரியதல்ல.

மேற்பார்வைப் பொறியாளர்,
கோதையாறு நீர் மின் திட்டம்.
34-ஏ, பெருமாள்புரம், திருநெல்வேலி– 7.

(த. 56)

## ஒப்பந்தப் புள்ளி

### கோவை நகராட்சி

கீழே கொடுக்கப்பட்டுள்ள வேலைகளுக்காக மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள், ஆணையர், கோவை நகராட்சி அவர்களால் 31–5–1972 மாலை 3 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒவ்வொரு வேலைகளுக்கும் தனித்தனியாக வேலையின் பெயருடன், கடைசி நாள 31–5–1972 என்று குறிப்பிடப்பட்ட உறைகளையும் "ஆணையர், கோயம்புத்தூர் நகராட்சி" அவர்கள் முகவரிக்கு ஒப்பந்தப் புள்ளியோடு அனுப்ப வேண்டும். அதே நாளில் மாலை 3–30 மணிக்குக் கோவை நகராட்சி குடிமுறைப் பொறியாளர் அவர்களால், அவரது அலுவலகத்தில் ஒப்பந்தப் புள்ளிகள் திறக்கப்படும். கீழே குறிப்பிட்டுள்ள வேலைகளுக்கு அதன் எதிரெதிரே குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்தப் புள்ளிகளின் பட்டியல் விலையை நகராட்சிக் கருவூலத்தில் செலுத்தி, நகராட்சிக் குடிமுறைப் பொறியாளர் அவர்களின் அலுவலகத்தில், ஒப்பந்தப் புள்ளிப் பட்டியலையும் உடன் நிபந்தனைகளையும் மற்ற பிற விவரங்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

| வரிசை எண். | வேலையின் பெயர். | முன் வைப்புத் தொகை. ரூ. | ஒப்பந்தப்புள்ளிப் பட்டியலின் விலை. ரூ. | வேலையை முடிக்க வேண்டிய காலம். |
|---|---|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் ஆர்.எஸ். புரம் ஆரோக்கியசாமி சாலையில் தரையிலும் முதல் தளத்திலும் கடைகள் குடியிருப்புப் பகுதிகள் கட்டுதல். | 4,100 | 20.70 | எட்டு மாதங்கள். |
| 2 | கோயம்புத்தூர் ரங்கைய கவுடர் தெருவில் தரையில் பொருள் கிடங்கும் முதல் தளத்தில் அலுவலகமும் கட்டுதல். | 1,130 | 10.35 | நான்கு மாதங்கள். |
| 3 | கோயம்புத்தூர் ஆர். எஸ். புரம் பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் நான்கு வகுப்பறைகளுக்குத் தற்காலிகக் கொட்டகைக் கட்டுதல். | 875 | 10.35 | மூன்று மாதங்கள் |
| 4 | பி. என். பாளையம் முக்கிய (மெயின்) சாலைக்காக அவினாசிசாலையிலிருந்து அவரம்பாளையம் சாலைவரையிலுள்ள பழைய தார் பகுதிக்கு மேல் கப்பிட்டுசாலை அமைத்தல். | 928 | 8.12 | டி |
| 5 | தாட்கம் சாலையிலிருந்து வைசியல் தெரு வரை சலிவண் தெருவில் பழைய தார் ரோட்டில் மேல் கப்பிட்டு சாலை அமைத்தல். | 60 | 7.28 | டி |

(த. 47)

ஆணையர்.

---

## ஒப்பந்தப் புள்ளி

### குடிநீர் வடிகால் வாரியம்

| | |
|---|---|
| வேலையின் பெயர் .. .. | தூத்துக்குடி தொழில் மையத்துக்கு நீர் வழங்கு திட்டம் (20 MGD நீர் வழங்கு திட்டம்) 48" (1,200 MM) உள் நடுவிட்டமுள்ள ஜி.ஐ.எஸ். / எஸ். பைப்புகள் "பி" பிரிவு வகையிலும் சம்பந்தப்பட்ட B. S. S. இடும் பொருந்தியும் F. O. R. சால்ட் கொட்டார்ஸ் சென்னை வழங்கல் டெலிவரி. |
| ஒப்பந்த வடிவம் .. .. | மொத்தத் தொகை. |
| கட்டுத் தொகை .. .. | ரூ. 3,000 (ரூபாய் மூவாயிரம் மட்டும்) |
| வேலை முடிக்க வேண்டிய காலம். | 2 மாதங்கள். |
| ஒப்பந்தப்பத்திரங்களின் விலை. | ரூ. 10.00 இத்துடன் விற்பனை வரி 35 காசு (இது திருப்பித் தரப்பட மாட்டாது). |

மேற்கண்ட வேலைக்காக ஒப்பந்தப்புள்ளி பெறுவதற்குரிய காலம் 19–5–1972 மாலை 3 மணி வரை நீட்டிக்கப்பட்டிருக்கிறது. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3-30 மணிக்குத் திறக்கப்படும். ஒப்பந்தப் பத்திரங்களை நிருவாகப் பொறியாளர் ம.ந.பொ.இ.த.கு.வ. வாரியம் கோட்டம் 1, 34, 10-வது தெரு, தூவேபுரம், தூத்துக்குடி 3-ல் 17–5–1972 மாலை 5 மணி வரை பெறலாம். ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பில் மற்ற நிபந்தனைகளில் மாற்றம் இல்லை.

**மேற்பார்வைப் பொறியாளர்,**
த.கு.வ.வா. நிருவாக வட்டம்,
தூத்துக்குடி.

(த. 31)

---

## ஏல விற்பனை

### வேளாண்மைத் துறை

ஒரு "செவர்லட்" 1945 மாடல் லாரி (எம்.எஸ்.சி. 9545), 25–5–1972 அன்று மாலை 4 மணிக்கு உதவி வேளாண்மைப் பொறியாளர் (ஆய்வு) திருநெல்வேலி-7 அவர்களால் அவரது அலுவலகத்தில் ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.

வண்டியை அவரது அலுவலகத்தில் அலுவல் நாட்களில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.

அரசின் நலன் கருதி எந்த நேரத்திலும் ஏலத்தை ஒத்தி வைக்கவோ, ரத்து செய்யவோ, ஏலத்திலிருந்து பின் வாங்கிக் கொள்ளவோ வேளாண்மைத் துறைக்கு உரிமை உண்டு.

மேற்கொண்டு விவரங்களையும் ஏல நிபந்தனைகளையும் உதவி வேளாண்மைப் பொறியாளர் (ஆய்வு) திருநெல்வேலி-7 அவர்களிடமிருந்து பெறலாம்.

**இயக்குநர்,**
வேளாண்மைத் துறை.

(த. 19)

---

## ஏல விற்பனை

### சேலம் நகராட்சி

20–5–1972-ம் நாள் சனிக்கிழமை காலை 11 மணிக்கு சேலம் நகராட்சி அலுவலகத்தில் சேலம் நகராட்சி எல்லைக்குள் தெருக்களிலும் பாதைகளிலும் திரியும் பன்றி எருக்களைஎடுத்துக் கொள்ளும் உரிமையை பிரிவு வாரியாக (18 பிரிவுகள்) ஒப்புவிக்கப்படும் நாள் முதல் 31–3–1973 முடிய உள்ள காலத்திற்கு குத்தகைக்கு வைத்துக் கொள்ள நகர் மன்ற ஆணையரின் நேர்முக உதவியாளர் அவர்களால் பலரறிய ஏலத்தில் விடப்படும். இதர விவரங்களுக்கு ஆணையரை அணுகவும்.

**பி. ஹமீதலி,**
ஆணையர்.

சேலம் நகராட்சி அலுவலகம்,
(த. 43)

---

### சேலம் நகராட்சி

1972-ம் ஆண்டு ஆகஸ்டு செப்டம்பர் மாதங்களில் 43 நாட்களுக்கு சேலம் போஸ்ா மைதானத்தில் பொருட்காட்சி நடத்தும் உரிமையை நகராட்சி அலுவலகத்தில் 27–5–1972 நாள் சனிக்கிழமை காலை 11 மணிக்கு இந் நகராட்சி ஆணையரால் பொது ஏலத்தில் குத்தகைக்கு விடப்படும்.

அதற்கான ஏல நிபந்தனைகளை நகராட்சி ஆணையரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**பி. ஹமீதலி,**
ஆணையர்,
சேலம் நகராட்சி.

(த. 37)

---

### வனத் துறை

சுமார் 10 டன் பெறுமான சந்தன வெள்ளடைக் கட்டைகளும். சீவல்களும் வருகிற "மே" திங்கள் 22-ம் நாள், பகல் 2 மணிக்கு ஓசூர் கோட்ட மாவட்ட வன அலுவலர் அவர்களால் தேன்கனிக் கோட்டை வனச்சரக அலுவலகத்தில் ஏலமிடப்படும். தேவையான விவரங்களுக்கு மாவட்ட வன அலுவலர், ஓசூர் கோட்டம், ஓசூர் கால்நடைப் பண்ணை, தருமபுரி மாவட்டம்—அவர்களுக்கு எழுதவும்.

**ப. பால்சாமி,**
மாவட்ட வன அலுவலர்.

(த. 55)

## நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பொறியியல் பணித்துறை

தமிழ்நாடு ஆளுநர் அவர்களின் சார்பாகவும் உத்திரவுப்படியும், கோயம்புத்தூர் வட்டம் நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பொறியியல் பணித் துறை மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் கீழ்க்கண்ட வேலை களுக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் 24–5–1972-ம் நாள் மாலை 3 மணி வரையில் கோயம்புத்தூர் ரத்தினசபாபதிபுரம் வெங்கட்ரமணா சாலையில் மேற்படியார் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்படும். மேற்படி ஒப்பந்தங்கள் அதே நாள் மாலை 3-15 மணி அளவில் (அலுவலகக் கடிகாரப்படி) திறக்கப்படும்.

| வரிசை எண். | வேலையின் பெயர். | கோட்டம். | முன் வைப்புத் தொகை. |
|---|---|---|---|
| | | | ரூ. |
| 1 | சேலம் நகராட்சி எல்லைக்குள் சேலம் திருச்சிராப்பள்ளி சாலையில் மைல் 1/8-ல் திருமணிமுத்தார் ஆற்றின் குறுக்கே உள்ள பாலத்தை அகலப்படுத்துதல். | சேலம் .. | 3,450 |
| 2 | எட்டிமடை ரயில்வே பீடர் சாலை மைல் 0/2-ல் ஒரு பாலம் கட்டுதல். | கோயம்புத்தூர். | 3,485 |
| 3 | மதுக்கரை செட்டிபாளையம் சாலையில் மைல் 5/1-ல் ஒரு பாலம் கட்டுதல். | கோயம்புத்தூர். | 2,975 |
| 4 | கோயம்புத்தூர் நகராட்சி எல்லைக்குள் சேலம் கொச்சி சாலையில் (தே. நெ. 47) அவிநாசி சாலையில் மைல் 328/7-ல் தற்போதைய ரயில் சந்திக்குப் பதிலாக கட்டும் மேம்பாலத்தில், சாக்கடை, நடைபாதை மற்றும் சர்வீஸ் சாலை கட்டும் வேலைகள். | கோயம்புத்தூர். | 6,530 |

ஒப்பந்த நிபந்தனைகள், வரைபடங்கள், பத்திரங்கள் ஆகியவற்றை அந்தந்தக் கோட்டப் பொறியாளர்களிடமிருந்து ஒவ்வொரு வேலைக்கும் ரூ. 20 உடன் விற்பனை வரியும் செலுத்தி 17–5–1972 முதல் 23–5–1972 வரை பெற்றுக் கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது. ஒப்பந்த நாளன்று ஒப்பந்தப் பத்திரங்களுக்கான மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

மேலே கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள முன் வைப்புத் தொகையை அந்தந்தக் கோட்டப் பொறியாளர் சார்பில் அவருடைய வரம்பிற்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலேனும் "ரெவின்யூ டெபாசிட்" என்ற தலைப்பின் கீழ் செலுத்திச் செல்லுச் சீட்டை ஒப்ந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். பாங்கு காரண்டி முன்வைப்புத் தொகையாகப் பெற்றுக் கொள்ளப்பட வேண்டுமேயானால் ரிசர்வ் பாங்கு ஆப் இந்தியாவின் மேற்படி பாங்கு காரண்டிக்கான ஒப்புதலையும் சேர்த்து ஒப்பந்தத்துடன் இணைக்க வேண்டும். தவறினால் ஒப்பந்தங்கள் நிராகரிக்கப்படும்.

பா. சேக் உமர்,
மேற்பார்வைப் பொறியாளர்,
(நெ.கி.ப.),
கோவை-2.

ரத்தினசபாபதிபுரம்,
கோயம்புத்தூர்-2.

(த. 81)



## தொழில் நுட்பக் கல்வித் துறை

சென்னை-25.

சென்னை-25 கிண்டி பொறியியல் கல்லூரியில் அப்ளைடு சயன்சில், (பேச்சிலர் ஆப் சயன்ஸ்) பட்டப் படிப்புக்கு மாணவர்களைச் சேர்த்தல் :

கிண்டி பொறியியல் கல்லூரியில் மேற்கண்ட பட்டப் படிப்புக்கு 1972–73-ம் ஆண்டுக்கு மாணவர்களைச் சேர்க்க, தொழில் நுட்பக் கல்வித் துறை இயக்குநர், சென்னை-25 அவர்களால் மனுக்கள் வரவேற்கப்படுகின்றன.

மேற்கண்ட படிப்புக்கான மனு படிவங்களையும், விவரக் குறிப்பு களையும் முதல்வர், பொறியியல் கல்லூரி, கிண்டி, சென்னை-25 அவர்களிடம் ரூ. 1-க்கு கிராஸ் செய்யப்பட்ட போஸ்டல் ஆர்டர் (இது 1972, மே 15-க்கு முந்தி தேதியிட்டதாக இருக்கக்கூடாது) "தொழில் நுட்பக் கல்வி இயக்குநர்" சென்னை-25 அவர்களுக்கு வைத்து, தன் முகவரியிட்ட 65 காசு, 5 காசு அகதி வில்லை ஒட்டிய 22 சி.எம். × 9·5 சி.எம். அளவுள்ள உறையையும் வைத்துக் கோரிக்கைக் கடிதம் அனுப்பிப் பெறலாம்.

### தகுதி

இப் பட்டப் படிப்பில் முதலாண்டுக்கான மாணவர்களைச் சேர்ப்பதில், மாணவர்கள் சென்னை, மதுரை பல்கலைக் கழகத்தில் கணிதம், பௌதிகம், இரசாயனம் ஆகிய பாடங்களைப் புகுமுக வகுப்பில் எடுத்து "முதல் வகுப்பில்" தேர்வு பெற்றவர்களாக அல்லது தமிழ்நாடு தொழில் நுட்பக் கல்வி போர்டு நடத்தும் புகுமுக தொழில் நுட்பக் கல்வியில் தேர்வு பெற்றவராக அல்லது இந்தப் பல்கலைக் கழகங்களால் சமமானது என்று ஏற்றுக் கொள்ளப்பட்ட வேறு பல்கலைக் கழகங்களின் தேர்வில் தேர்வு பெற்றவர்களாக இருக்க வேண்டும்.

தாழ்த்தப்பட்ட வகுப்பினர், பழங்குடியினர் தவிர்த்த மற்ற வகுப்புகளைச் சேர்ந்த மனுதார்கள் புகுமுக வகுப்பில் அல்லது புதுமுக தொழில் நுட்பப் படிப்புத் தேர்வில் கீழ்க்கண்டவாறு மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும்.

1. கணிதத்தில் குறைந்த பட்சம் 55 சதவிகிதம் அத்துடன்
2. பௌதிகம், இரசாயனம் இரண்டையும் சேர்த்தால் குறைந்த பட்சம் 55 சதவிகிதம் சராசரி இருக்க வேண்டும்.

மேலே சொல்லப்பட்ட 1, 2 ஆகிய இரண்டிலும் சேர்த்து மொத்தம் 120 மதிப்பெண்களுக்குக் குறையாமல் இருக்க வேண்டும்.

வயது வரம்பு—

சேர்க்கப்படும் ஆண்டில் ஜூலை 14-ம் தேதியன்று மாணவர்கள் 15 வயதும் 6 மாதங்களும் ஆனவர்களாக இருக்க வேண்டும். இதில் மேல் வயதுக்கான வரம்பு தேர்வு ஆண்டில் ஜூலை 1-ம் தேதி வைத்துக் கணக்கிடப்படும். இந்த வகையில் வயது வரம்பு வருமாறு :—

| | |
|---|---|
| தாழ்த்தப்பட்ட வகுப்பினர், பழங்குடியினர். | 24 ஆண்டுகள். |
| பொற்கொல்லர் வகுப்பினர் .. .. .. | 24 ஆண்டுகள். |
| பர்மா, இலங்கை முதலியவைகளிலிருந்து தமிழகத்துக்குத் திருப்ப அனுப்பப்பட்டவர்கள். | 24 ஆண்டுகள். |
| மற்றவர்கள் .. .. .. .. .. | 21 ஆண்டுகள். |

தமிழ் நாட்டைச் சேர்ந்த மனுதாரர்களின் மனுக்கள் மட்டுமே சேர்ப்பதற்குரிய பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

இந்த மாநிலத்தைச் சேராத ஆனால் மத்திய அரசாங்கப் பணிகளில் உள்ளவர்களைச் சேர்ந்த மாணவர்கள் இப் படிப்பில் சேர மனுச் செய்யலாம். மனு கொடுக்கும் சமயத்தில் இந்த மாநிலத்தில் பணியில் இருப்பதாகச் சம்பந்தப்பட்ட தங்கள் நிருவாகியிடமிருந்து சான்று பெற்றிருக்க வேண்டும்.

இந்த மாநிலத்தைச் சேராதவர்கள் பதிவு செய்யப்பட்ட ஜாயின்ட் ஸ்டாக் கம்பெனிகளில், தனியாரால் அல்லது பொது நிறுவனங்களில், அரசினரால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் இருப்பவர்களும் மனுச் செய்யலாம். அத்தகையவர்கள் நிறுவனத்தில் நிரந்தரப் பணியாளர் என்பதற்கு நிறுவன நிருவாகியிடமிருந்து சான்று பெற்றுத் தர வேண்டும்.

தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் வேறு மாநிலங்களில் படித்தவர்களாக இருப்பின் அவர்கள் மனு படிவத்துடன் இணைக்கப்பட்ட குறிப்பிட்ட படிவத்தில் தாங்கள் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் என்பதற்கான சான்று தரவேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட மனுக்களைத் தொழில் நுட்பக் கல்வி இயக்குநர், சென்னை அவர்களுக்குப் பதவிப் பெயரிட்டு முகவரி எழுதி 21–6–1972, குள் கிடைக்கும்படி அனுப்ப வேண்டும்.

சென்னை-25.

தொழில் நுட்பக் கல்வி இயக்குநர்.

(த. 12)

## சேலம் மாவட்டக் கூட்டுறவு விநியோக விற்பனைச் சங்கம் லிமிடெட்
## சேலம்-9.

1. சேலம் மாவட்டத்திலுள்ள கீழ்க்கண்ட இராசாயன உர அரசு இருப்பாளர் கிடங்குகளுக்கு லாரிகள் மூலம் இரசாயன உரங்கள் போக்குவரத்துக்கு ஒப்பந்தப் புள்ளிகள் மூடிமுத்திரையிட்ட உறைகளில் லாரி உரிமையாளர்களிடமிருந்து வரவழைக்கப்படுகின்றன.

1. சேலம்.
2. ஆத்தூர்.
3. இராசிபுரம்.
4. நாமக்கல்.
5. வேலூர் (பரமத்தி).
6. திருச்செங்கோடு.
7. குமாரபாளையம்.

2. மேற்படி ஒப்பந்தம் 1—6—1972 முதல் 31—5—1973 வரை ஒரு வருடகாலத்திற்கு அமலில் இருக்கும்.

3. மேற்கூறிய சேலம் மாவட்டத்தில் உள்ள ஏழு இடங்களுக்குக் கீழ்க்கண்டதுறைமுகங்களிலிருந்தும், மற்றும்வேர்ஹவுஸ் கிடங்குகளிலிருந்தும் அல்லது வேறு மாவட்டங்களிலிருந்தும் போக்குவரத்து செய்ய வேண்டியிருக்கும்.

துறைமுகங்கள்.

1. சென்னை.
2. கடலூர்.
3. நாகப்பட்டினம்.
4. தூத்துக்குடி.
5. கொச்சி.
6. பாண்டிச்சேரி மற்றும்.
7. நெய்வேலி.
8. எப்.ஏ.சி.டி., உத்தியோக மண்டல் (ஆல்வாய்).
9. மன்னார்குடி, குரோம்பேட்டை மற்றும் உள்ள வேர்ஹவுஸ் கிடங்குகள்.

4. ஒப்பந்தப் புள்ளி கொடுக்க விரும்புவோர், ஒவ்வொரு துறைமுகத்திற்கும், மற்றும் எப்.ஏ.சி.டி. உத்யோக மண்டல், நெய்வேலி, வேர் ஹவுஸ் போக்குவரத்து, மாவட்ட இருப்பிலிருந்து போக்குவரத்து செய்தல் ஆகிய ஒவ்வொன்றுக்கும் தனித்தனி ஒப்பந்தப் புள்ளி (Tender) படிவத்தில் கொடுக்க வேண்டும். மேற்படி குறிப்பிட்ட படிவம் செயலர், சேலம் மாவட்ட கூட்டுறவு விநியோக விற்பனைச் சங்கம் லிமிடெட், சேலம்-9 என்பவரிடமிருந்து நேரிலோ தபாலிலோ ஒப்பந்தப் படிவம் ஒவ்வொன்றிற்கும் விலை ரூ. 1 (ரூபாய் ஒன்று) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

5. குறிப்பிட்ட ஒப்பந்தப் படிவத்தில் பூர்த்தி செய்யப்படாத ஒப்பந்தங்கள் நிராகரிக்கப்படும்.

6. ஒப்பந்தம் கோருபவர், ஒப்பந்தப் படிவத்துடன் ஒப்பந்த டிபாசிட் தொகையாக சென்னை, கடலூர், பாண்டிச்சேரி, நாகப்பட்டினம், தூத்துக்குடி, கொச்சி, நெய்வேலி, எம்.ஏ.சி.டி. உத்தியோக மண்டல், மற்றும் வேர்ஹவுஸ் போக்குவரத்து, மாவட்ட மாற்றப்போக்குவரத்து ஆகிய இவைகளுக்கு ஒவ்வொன்றிற்கும்; தனித்தனியாக ஒப்பந்த டெபாசிட் தொகை ரூ. 2,000 (ரூபாய் இரண்டாயிரம்) சேலம் மாவட்டக் கூட்டுறவு விநியோக விற்பனைச் சங்கம் லிமிடெட், சேலம்-9-ல் ரொக்கமாக செலுத்தி அதற்கான செலானையும் இணைத்தனுப்ப வேண்டும். ஒப்பந்த டெபாசிட் தொகை செக் மூலமாகவோ, டிராப்ட் மூலமாகவோ அனுப்பிவைத்தால் கண்டிப்பாக ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. மேற்படி ஒப்பந்த டெபாசிடிற்கு வட்டி ஏதும் கிடையாது.

7. ஒப்பந்ததாரர், வருமானவரி பாக்கி ஏதும் இல்லை என்ற ஒப்பந்த சம்பந்தப்பட்ட வருமானவரி அதிகாரியிடமிருந்து பெற்று அதனை ஒப்பந்தங்களுடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

8. ஒப்பந்ததாரர்கள் குறைந்தபட்சம் இரண்டு லாரிகள் உரிமையுடையவராகவோ அல்லது அவரது பொறுப்பில் உள்ளனவாகவோ இருப்பதுடன் மேற்படி லாரிகளுக்கு நடைமுறையில் உள்ள பர்மிட்டுகளுடன் உள்ளதாகவும் இருக்க வேண்டும்.

9. ஒப்பந்ததாரர்கள் ரேட் குறிக்கும்போது ஒரு கிலோ மீட்டருக்கு ஒரு மெட்ரிக் டன்னுக்கு வாடகை குறிக்க வேண்டும். ரேட் எண்ணாலும் எழுத்தாலும் குறிக்கப்பட வேண்டும்.

10. தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்ததாரர்கள் உத்திரவு கிடைத்த ஒரு வாரத்திற்குள் ரூ. 3,000 (ரூபாய் மூவாயிரம்) மட்டும் ஒவ்வொரு துறைமுகம் மற்றும் நெய்வேலி, எப்.ஏ.சி.டி. உத்தியோக மண்டல், வேர்ஹவுஸ் போக்குவரத்து மற்றும் மாவட்ட மாற்றப் போக்குவரத்து இவைகளுக்கு தனித்தனி காப்புத் தொகையாக செலுத்த வேண்டும். மேற்படி காப்புத் தொகை ரூ. 3,000 (மூவாயிரம்) அவர்கள் ஏற்கெனவே செலுத்திய ஒப்பந்த டெபாசிட் தொகையாகிய ரூ. 2,000 (இரண்டாயிரம் மட்டும்)ஐ சரிக்கட்டிக் கொண்டு மீதித் தொகை ரூ. 1,000 (ஓராயிரம் மட்டும்) உத்திரவு பிறப்பித்த ஏழு தினங்களில் சேலம் மாவட்டக் கூட்டுறவு விநியோக விற்பனைச் சங்கம் லிமிடெட், சேலம்-9-ல் செலுத்திவிட வேண்டும். மேற்படி காப்புத் தொகைக்கு வட்டி ஏதும் கிடையாது.

11. ஒப்புக்கொள்ளப்படாத ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்த டெபாசிட் தொகை ரூ. 2,000 ஒப்பந்த முடிவு ஆணை பிறப்பித்த உடன் திரும்ப வழங்கப்படும்.

12. தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்ததாரர்கள், ரூ. 50,000 (ரூபாய் ஐம்பதினாயிரம் மட்டும்) மதிப்புள்ள சொத்து மதிப்புச் சான்றிதழை ( Solvency Certificate ) சம்பந்தப்பட்ட தாலுகா தாசில்தாரிடம் பெற்று மேற்படி தேர்வு ஆணைகிடைத்த ஏழு தினங்களுக்குள் இவ்வலுவலகத்திற்கு ஒப்படைக்க வேண்டியது. அவ்வாறு குறிப்பிட்ட காலத்திற்குள் மேற்படி சொத்து மதிப்புச் சான்றிதழ் ஒப்படைக்காவிடில் தேர்வு செய்த ஒப்பந்தத்தை ரத்துச் செய்வதுடன், ஒப்பந்ததாரர்கள் செலுத்தியுள்ள ஒப்பந்த டெபாசிட் தொகை ரூ. 2,000 (இரண்டாயிரமும்)-ம் பறிமுதல் செய்து அரசுக்கு தாக்கல் செய்யப்படும். மேற்படி சால்வன்ஸி சர்டிபிகேட் ஒப்பந்ததாரர் பெயரிலேயே இருக்கவேண்டும். ஒப்பந்ததாரர்கள் அல்லாதார் பெயரில் வழங்கப்படும் சால்வன்ஸி சர்டிபிகேட் கண்டிப்பாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

13. லாரி போக்குவரத்துக்கு எவ்வப்பொழுது தேவையோ அவ்வப்போது மட்டுமே காண்ட்ராக்டர்களுக்கு வேலை கொடுக்கப்படும். ஒப்பந்தம் செய்ததாலேயே அவர்களுக்கு ஆண்டு முழுவதும் வேலை கொடுக்க வேண்டும் என்கிற நிர்ப்பந்தம் ஏதும் இல்லை என அறிவிக்கப்படுகிறது.

14. லாரி போக்குவரத்துக்கு ஒப்படைக்கப்பட்ட இருப்புகள் கூட ஒப்படைக்கப்பட்டால் இடையில் மேற்படி ஒப்படைக்கப்பட்ட சரக்குகள் முழுமையுமாகவோ அல்லது ஒரு பகுதியோ இரயில் மூலம் அனுப்பினால் எவ்வித உரிமையும் கொண்டாட காண்டிராக்டருக்கு உரிமை இல்லை.

15. காண்ட்ராக்டருக்கு வாடகை வழங்குவதில் அரசு இலாக்காவினரால் நிர்ணயிக்கப்பட்ட தூரத்தைக் கணக்கில் கொண்டே வழங்கப்படும்.

16. போக்குவரத்துக்கு ஒப்படைக்கப்பட்ட சரக்குகளில் நனைவு, குறைவு, சேதாரம் ஏதும் நேரிட்டால் காண்ட்ராக்டரே முழுப் பொறுப்பாவார். அதனால் ஏற்படும் சகல நஷ்டங்களையும் காண்ட்ராக்டரிடமிருந்து வசூல் செய்வதுடன் உரக்கட்டுப்பாடு ஆணையின்கீழ் சட்டப்படி நடவடிக்கைகளையும் தொடரப்படும்.

17. போக்குவரத்துக்கு ஒப்படைக்கப்படும் சரக்குகளை குறிப்பிட்ட காலத்தில் டெலிவரி கொடுக்க வேண்டும். கால தாமதம் நேரிடினும் குறிப்பிட்ட காலவரை மீறினாலும் அதனால் நேரிடும் சகல நட்டங்களையும் காண்ட்ராக்டரிடமிருந்து வசூல் செய்யப்படும்.

18. ஒப்புக்கொள்ளப்பட்ட ஒப்பந்ததாரர்கள் குறிப்பிட்ட காலத்திற்குள் காண்ட்ராக்ட் வேலை செய்து முடிக்காமல் இடையில் நின்றுவிட்டால் அவரது செக்யூரிடி டெபாசிட் தொகை பறிமுதல் செய்து அரசுக்கு தாக்கல் செய்து அதனால் ஏற்படும் சகல நஷ்டங்களையும் அவரிடமிருந்து வசூல் செய்யப்படும்.

19. ஒப்புக்கொள்ளப்பட்ட ஒப்பந்ததாரர்களுக்கு காண்ட்ராக்ட் காலத்தில் வேலை அளிக்கப்பட்டால் அவர்களுக்கு வழங்கப்பட்ட லாரி வாடகைத் தொகை முழுவதும் வருவாய் வாரியத்தினிடமிருந்து திரும்பப் பெற்றுபின்னர்தான்அவர்களதுடெபாசிட் தொகை திரும்ப வழங்கப்படும்.

20. சேலம் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு எந்த ஒரு ஒப்பந்தப் புள்ளியையும் யாதொரு காரணமும் காட்டாமல் ஏற்றுக்கொள்ளவோ நிராகரிக்கவோ அதிகாரம் உண்டு.

21. ஒப்பந்தங்கள்முத்திரையிட்டஉறையில் "செயலாளர்,சேலம்மாவட்டக் கூட்டுறவு விநியோக விற்பனைச் சங்கம் லிமிடெட், சேலம்-9" என்ற பெயரில் உறையில் மேல் "போக்குவரத்து ஒப்பந்ததாரர் எனக் குறித்து 31—5—1972-ம் தேதி பகல் 12 மணி வரை "செயலாளர், சேலம் மாவட்டக் கூட்டுறவு விநியோக விற்பனைச் சங்கம் லிமிடெட், சேலம்-9-ல் ஒப்படைக்கப்படவேண்டியது. 31—5—1972-ம் தேதி பகல் 12 மணிக்குப் பின் வரும் டெண்டர்கள் கண்டிப்பாய் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

22. மேற்படி ஒப்பந்தங்களை 31—5—1972-ம் தேதி மாலை 4-00 மணியளவில் தென் சேல மாவட்ட வளர்ச்சி அலுவலர் அவர்களாலோ அல்லது அவரது அதிகாரம் பெற்றவராலோ சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் திறக்கப்படும்.

23. சட்ட ரீதியான நடவடிக்கைகள் யாவும் சேலம் டவுன் எல்லைக்குட்பட்ட நீதிமன்றங்களிலேயே ஒப்பந்ததாரர் நடத்த வேண்டும்.

24. ஒப்புக்கொள்ளப்பட்ட ஒப்பந்ததாரர் உத்திரவிடப்பட்ட ஏழு தினங்களில் ரூ. 2.50 மதிப்புள்ள ஸ்டாம்பு பத்திரத்தில் காண்ட்ராக்ட் ஒப்பந்தம் எழுதி ஒப்பமிட்டு கொடுக்க வேண்டும்.

**எஸ். பத்மநாப ஐயர்,**
செயலாளர்.

(த. 92)

## ஈரோடு நகராட்சி

புதிய பேருந்து நிலையத்தில் பேருந்துகள் வந்து செல்லும் நேரங்களையும், மற்றும் வியாபார விளம்பரங்களையும் இடையிடையே ஒலி பெருக்கி மூலம், 1-6-1972 முதல் 31-3-1973 முடிய உண்டான காலத்திற்கு, அறிவிக்கும் உரிமையை 1972-ம் ஆண்டு மே மாதம் 26-ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 10-30 மணிக்கும், பிறகு தள்ளிப் போடும் நாட்களிலும், ஈரோடு நகர் மன்றக்கூட்டக் கட்டடத்தில் பலரும் அறிய ஏலத்தில் விடப்படும். ஏலம் கூற விரும்புகிறவர்கள் கட்டுத் தொகை ரூ. 50 செலுத்த வேண்டும். மற்றைய விவரங்களை அலுவலக நேரத்தில் நேரிலோ அல்லது கடிதம் மூலமோ தெரிந்து கொள்ளலாம்.

**ச. சிதம்பரம்,**
ஆணையர்.

(த. 94.)

## ஈரோடு நகராட்சி

1972-ம் ஆண்டு ஜூன் மாதம் 1-ம் தேதி முதல் 1973-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 31-ம் தேதி முடிய, உள்ள காலத்திற்கு வீரபத்திர செட்டியார் ரோட்டிலுள்ள பேருந்து நிலையத்திற்கு வந்து போகும் ஆட்டோ ரிக்ஷாக்களுக்குக் கட்டணம் வசூலிக்கும் உரிமையை (நாள் கட்டணம் ஒரு ஆட்டோ ரிக்ஷாவுக்கு 0.20 காசு ஆகும்) ஈரோடு நகராட்சி ஆணையர் அவர்களாலோ அல்லது அவரது அதிகாரம் பெற்றவராலோ 26-5-1972-ம் தேதி காலை 10-30 மணிக்கு ஈரோடு நகர் மன்றக் கூட்டக் கட்டடத்தில் பலரும் அறிய ஏலம் விடப்படும். கட்ட வேண்டிய கட்டுத் தொகை ரூ. 100. 1972-73-ம் ஆண்டில் பொது ஏல நிபந்தனைகள் அனைத்தும் இதற்குப் பொருந்தும். கூடுதல் விவரங்களுக்கு அலுவலக நேரத்தில் நேரிலோ அல்லது கடித மூலமோ தெரிந்து கொள்ளலாம்.

**ச. சிதம்பரம்,**
ஆணையர்.

(த. 95)

## கோவை நகராட்சி

நகராட்சிக்குச் சொந்தமான தியாகி குமரன் மார்க்கெட்டில் உள்ள கடை எண் பி. 143-ல் 31-3-1975 வரை வியாபாரம் செய்யும் உரிமையை 31-5-1972-ம் தேதி காலை 11 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் பகிரங்க ஏலத்தில் விடப்படும். ஏலம் கூறுமுன் கட்ட வேண்டிய முன்வைப்புத் தொகை ரூ. 100. சால்வன்சி இல்லாதவர்கள் டிபாசிட்டை இரட்டிப்பாகக் கட்டி ஏலம் கூறவும். மற்ற நிபந்தனைகளை அலுவலகத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளவும்.

**ஆணையர்.**

(த. 96)

## மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம்

1972-ஆம் ஆண்டு மே திங்கள் 31-ஆம் நாள் புதன் கிழமையன்று கீழ்க்கண்ட ஜீப்புகள் (டிரெயிலர் இல்லாதவை) அவற்றிற் கெதிரே குறிப்பிட்டப்பட்டுள்ள நேரங்களில் மதுரை நகரிலுள்ள மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் மதுரை மேற்கு மாவட்ட வளர்ச்சி அலுவலரவர்களால் பகிரங்கமாக ஏலத்தில் விற்பனை செய்யப் படும்.—

1. ஜீப் பதிவு எண் எம்.எஸ். எக்ஸ். 2787, 1958-ஆம் வருட மாடல் .. .. .. காலை 10 மணி.
2. ஜீப் பதிவு எண் எம்.எஸ்.ஒய். 2161, 1968-ஆம் வருட மாடல் .. .. .. காலை 11 மணி.
3. ஜீப் பதிவு எண் எம்.எஸ்.இசட். 8360, 1952-ஆம் வருட மாடல் .. .. மாலை 3 மணி.
4. ஜீப் பதிவு எண். எம்.எஸ்.ஒய். 0825, 1954-ஆம் வருட மாடல் .. .. .. மாலை 4 மணி.
5. ஜீப் பதிவு எண் எம்.எஸ்.ஒய். 0831 1954-ஆம் வருட மாடல் .. .. மாலை 5 மணி.

ஏலம் கேட்பவர்கள் ரூ. 100 கட்டுத் தொகை கட்ட வேண்டும். மேற்கொண்டு, தகவல்களைப் பெறுவதற்கு மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் உள்ள மதுரை மேற்கு மாவட்ட வளர்ச்சி அலுவலர் அவர்களுடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

### ஏல நிபந்தனைகள்

1. கண்டம் செய்யப்பட்ட மேற்கண்ட ஜீப்புகள் தற்போதுள்ள நிலையில் கண்டபடி ஏலம் விடப்படும்.

2. மேற்குறித்த ஜீப்புகள் மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

3. மதுரை மேற்கு மாவட்ட வளர்ச்சி அலுவலரவர்களால் ஏலம் நடத்தப்படும்.

4. ஏலத்தில் கலந்து கொள்ள விரும்பும் நபர்கள் நேரிலோ அல்லது அவரது அத்தாட்சி (பவர் ஆப் அட்டர்னி) பெற்றவர்களோ கலந்து கொள்ளலாம்.

5. ஏலம் கேட்கும் நபர்கள் ரூ. 100 (ரூபாய் ஒருநூறு மட்டும்) கட்டுத் தொகை கட்டவேண்டும். கட்டுத் தொகை கட்டாதவர்கள் ஏலம் கேட்க அனுமதிக்கப்படமாட்டார்கள்.

6. உச்ச தொகைக்குக் கேள்வி கேட்பவர்கள் பேரில் சாதாரணமாக ஏலம் முடிவு செய்யப்படும். ஆனால் காரணம் ஏதும் கூறாமல் எந்தக் கேள்வியையும் நிராகரிக்கவும் ஏலம் நடத்தும் அலுவலருக்கு அதிகாரம் உண்டு.

7. ஏலத்தில் வெற்றி பெறாத நபர்களுக்குக் கட்டுத் தொகை உடனடியாக வாபஸ் செய்யப்படும். ஏலம் எடுத்தவரின் கட்டுத் தொகை ஏலத் தொகைக்குச் சரிக்கட்டப்படும்.

8. உயர் அலுவலரால் ஏலம் ஊர்ஜிதம் செய்யப்பட்ட பின்னரே ஏலம் முடிவானதாகக் கருதப்படும்.

9. ஏலம் முடிந்ததும் உச்சக் கேள்விதார், கட்டுத் தொகையுடன் ஏலத் தொகையில் 25 சதவிகிதம் உடனடியாகக் கட்ட வேண்டும். மீதித் தொகையை, ஏலம் ஊர்ஜிதம் செய்யப்பட்ட ஒரு வார காலத்திற் குள்ளாகக் கட்டி விட வேண்டும்.

10. மொத்த ஏலத் தொகைக்கு நடப்பு நிலவரப்படி விற்பனை வரி வசூலிக்கப்படும்.

11. ஒன்று முதல் 10 முடியவுள்ள ஏல நிபந்தனைகள் அனுசரிக்கப் படும் வரையிலும் உயர் அதிகாரியால் ஏலம் ஊர்ஜிதம் செய்யப்படும் வரையிலும், ஏலதார் ஏலம் விடப்பட்ட வாகனத்தின் பாகங்களையே, வாகனத்தையோ எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படமாட்டார்.

12. ஏலம் எடுத்தவர் மேலே கூறப்பட்ட நிபந்தனைகளைக் கடைப் பிடிப்பதில் தவறினால் காரணம் ஏதும் கூறாமல் ஏலத்தை ரத்துச் செய்துவிட்டு மறு ஏலம் நடத்த ஏலம் நடத்தும் அலுவலருக்கு அதிகாரம் உண்டு. அவ்வாறு மறு ஏலம் நடத்தும் பட்சத்தில் ஏற்கனவே ஏலம் எடுத்த மேற் கூறப்பட்ட நிபந்தனைகளைக் கடைப்பிடிக்கத் தவறியயவர் செலுத்தியுள்ள தொகைகளைப் பறிமுதல் செய்வதுடன் ஏற்கெனவே விடப்பட்ட ஏலத்திற்கும் மறு ஏலத்திற்கும் உள்ள வித்தியாசத் தொகையும் வசூல் செய்யப்படும்.

**ஆர். ஏ. சீத்தாராம்தாஸ்,**
மாவட்ட ஆட்சித் தலைவர்.

(த. 97)

## கோவை நகராட்சி

கோவை நகராட்சிக்குச் சொந்தமான கழிவு நீர்ப் பண்ணையிலுள்ள 8 லாட் வண்டல் மண்ணை 1-6-1972-ம் தேதி காலை 11 மணிக்கு கழிவு நீர்ப் பண்ணையிலேயே பகிரங்க ஏலத்தில் விடப்படும். கட்ட வேண்டிய முன்வைப்புத் தொகை ஒவ்வொரு லாட்டிற்கும் ரூ. 50 ஏலத்தொகையில் ½ பங்குத் தொகையை ஏலம் முடிந்தவுடன் செலுத்த வேண்டும். மற்ற நிபந்தனைகளை அலுவலகத்தில் தெரிந்து கொள்ளலாம்.

**ஆணையர்.**

(த. 88)

## வேலை வாய்ப்பு

### கோவை மருத்துவக் கல்லூரி

கோவை மருத்துவக் கல்லூரியில் ஆவி இயந்திரக் கம்மியர் (Gas Mechanic) பதவி ஒன்றிற்கும், ஆவி உற்பத்தியாளர் (Gas Maker) பதவி ஒன்றிற்கும் சம்பளம் ஏற்றம் முறையே ரூ. 150—4—170—5—225 உடன் ரூபாய், 140—3—155—4—175—5—210 உடன் வழக்கமான படிகளுமுள்ள இருபதவிகளுக்கும் விண்ணப்பப் படிவங்கள் வரவேற்கப்படுகின்றன.

தகுதிகள் :

#### ஆவி இயந்திரப் பம்மியர்

(1) அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு பள்ளியில் மூன்றும் படிவம். தேர்ச்சியுற்றிருக்க வேண்டும்.

(2) ஆவி இயந்திரக் கம்மியலில் தகுதியான சான்றிதழ்கள், சென்னை அரசினர் பொது மனையிலுள்ள மின் இயல் மேற்பார்வை யாளர்கள் உடன் ஆவி, இயந்திரக் கம்மியர்கள் (Gas Mechanics) அவர்களால் வழங்கப்பட்டதாகயிருக்க வேண்டும்.

#### ஆவி உற்பத்தியாளர்

(1) அங்கீகரிக்கப்பட்ட பள்ளியில் மூன்றும் படிவம் அல்லது எட்டாம் நிலை தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

(2) தொழிற் பட்டறையில் தகுதியுடையவராக Fitter குறைந்தது இரண்டாண்டிற்குக் குறையாத அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

(3) சென்னை பொதுப் பணிகள் தொழிற்பேட்டைகளின் பொது மேற்பார்வையாளரிடத்தில் செயல்முறை அனுபவத்தில் நிறைவு பெற்ற விண்ணப்பதாரர்களுக்குச சலுகைகள் கொடுக்கப்படும்.

#### பொது வயது வரம்பு

25 வயதிற்கு மேற்படாதவர்களாயிருக்க வேண்டும். தாழ்த்தப்பட்ட வகுப்பினர், தாழ்த்தப்பட்ட மலைச்சாதி பிரிவினர், இவர்கள் விஷயத்தில் வயது 30 வரை தளர்த்தப்படும். முன்னாள் பணியாளர்கள் விஷயத்தில் வயது 40 வரை தளர்த்தப்படும்.

விண்ணப்பங்கள், விண்ணப்பதாரர்களுடைய தகுதிகளின் நிலையையும் அவர்களின் பிறந்த நாளையும் குறித்து அனுப்பப்பட்டதாயிருக்க வேண்டும். அவ்வாறு குறித்து அனுப்பப்படாத விண்ணப்பப் பட்டியல்கள் மறுக்கப்படும். முழுமையான விண்ணப்பப் படிவங்கள் முதல்வர், கோவை மருத்துவக் கல்லூரி, கோவை-4 என்ற முகவரிக்கு 25—5—1972க்கு முன்னதாக அனுப்பப்பட வேண்டும்.

முதல்வர்,
கோவை மருத்துவக் கல்லூரி.

(த. 54)

## வேலை வாய்ப்பு

### கோவை மருத்துவக் கல்லூரி

கோவை மருத்துவக் கல்லூரியில், ரூபாய் 150—4—1,0—5—225 சம்பள ஏற்றமுள்ள பிளம்பர் (Plumber) பதவிக்கான விண்ணப்பப் படிவங்கள் வரவேற்கப்படுகின்றன.

தகுதிகள் :—1. அங்கீகரிக்கப்பட்ட பள்ளியில் மூன்றும் படிவத்தில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

உடன்

(2) சென்னை மத்தியத் தொழில் நுட்பக் கல்லூரியில் இரண்டாண்டு பயிற்சி பெற்று, உரிய பிளம்பர்கள் தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். அப்பயிற்சிக் காலத்தில் உரிமம் பெற்ற பிளம்பர் துப்புறவுப் பொறியாளர், அல்லது துப்புறவுப் பொறியியல் ஒப்பந்ததாரர் ஆகியவர்களில் யாரேனும் ஒருவரிடம் பயிற்சி உதவியாளராக இருந்திருக்க வேண்டும்.

வயது :—25 வயதிற்கு மேற்படாதவராகயிருக்க வேண்டும். தாழ்த்தப்பட்ட வகுப்பினர், தாழ்த்தப்பட்ட மலைச் சாதி வகுப்பினர்களாயிருந்தால் 30 வயதிற்கு மேலாகாதவர்களாக இருக்க வேண்டும்.

விண்ணப்பதாரர்கள் விண்ணப்பப்படிவங்களில் தங்களுடைய, தகுதிகளையும் பிறந்தநாளினையும் குறிப்பிட வேண்டும். மற்றபடி, அவைகளில்லாத படிவங்கள் மறுக்கப்படும். விண்ணப்பப்படிவங்கள் "முதல்வர், கோவை மருத்துவக் கல்லூரி, கோவை-14" அவர்களுக்கு 25—5—1972 முன்பாக அனுப்பப்பட வேண்டும்.

முதல்வர்,
கோவை மருத்துவக்கல்லூரி
கோவை.

(த. 53)

## ஒப்பந்தப் புள்ளி

### பொதுப்பணித் துறை

வேலையின் பெயர் :—மதுரை அரசினர் எர்ஸ்கின் மருத்துவ மனையிலுள்ள செவிலியர்கள் குடியிருப்பு இல்லங்களில் தற்போதுள்ள இரண்டாவது தளத்தின் மீது கல்நார் தகடுக்கூரையோடு கூடிய மூன்றும் தளத்திற்கான கட்டுமானம் பற்றி :

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்சார்பிலும் முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் பத்திரங்கள் மேற்கண்ட வேலைக்கு "மேற்பார்வைப் பொறியாளர் பொதுப் பணித்துறை மதுரை மாவட்டம், மதுரை-2" அவர்களால் 31—5—1972 மாலை 3 மணி வரை பெற்றுக் கொள்ளப்பட்டு அன்று மாலை 24—5—1972லிருந்து 29—5—1972 வரை கொடுக்கப்படும்.

ஒப்பந்தப் படிவம் : மொத்தத் தொகை.

முன்வைப்புத் தொகை: ரூபாய் 6,400 (ஆருயிரத்து நானூறு ரூபாய்கள்).

வேலையை முடிக்க வேண்டிய காலம் : 6 மாதங்கள்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்தின் விலை ரூ. 20ஐ (எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித்தரப்படமாட்டாது)"P.W. Remittances III O.R." என்ற தலைப்பிலும் விற்பனைவரி 0·70 காசை "XII Sales Tax(d) Miscellaneous" என்ற தலைப்பிலும் ஒரே சலானில் "நிருவாகப் பொறியாளர், பொதுப்பணித் துறை, மதுரை மாவட்டம், மதுரை" அவர்கள் கணக்கில், அரசாங்கக் கருவூலங்களிலோ அல்லது ரிசர்வ் வங்கியிலோ கட்டப்பட வேண்டும். மேற் கண்ட சலானைக் கொடுத்தப் பின்னர்தான் ஒப்பந்தப் பத்திரங்கள் வழங்கப்படும்.

முன்வைப்புத் தொகை, டெபாசிட் அழைப்பு ரசீது செலான் வடிவில் ஏற்றுக் கொள்ளப்படும். அல்லது ஷெட்யூல்டு வங்கியின் டிமாண்ட் டிராப்டுகளும் மாநில அரசுக் கடன் பத்திரங்களும், நாட்டுடைமையாக்கப்பட்ட பதினன்கு வங்கிகளில் எந்த ஒரு வங்கியினுடைய காரண்டியும் தமிழ்நாடு மின்வாரியப் பத்திரங்களும், தேசீய சேமிப்புப் பத்திரங்களும் விற்பனை மதிப்பில் 5 சதவீதம் குறைத்துக் கட்டுத் தொகையாக ஏற்றுக் கொள்ளப்படும். வேறு எந்த வகையிலும் கட்டுத் தொகை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

மேற்பார்வைப் பொறியாளர்,
பொதுப்பணித்துறை.

(த. 49)

## ஒப்பந்தப் புள்ளி

### வனப் பொறியாளர் கோட்டம்

கீழ்க் காணும் வேலைக்காக மூடி முத்திரையிட்ட ஒப்பந்தங்களை "வனப் பொறியாளர், திருச்சி" தமிழ்நாடு ஆளுநர் சார்பாக வரவேற்கிறார்.

"கோனலார்—கவுஞ்சிசாலை இரண்டாம் மூன்றும் பிரிவுகளின் மேம்பாட்டு வேலை—கொடைக்கானல் சரகம்—மதுரை வடக்கு வனக் கோட்டம்"

கட்டுத் தொகை .(இ. எம். டி.) ரூபாய் 688.

ஒப்பந்தம் பெற்றுக் கொள்ளவும், திறக்கவும் கடைசி நாள் 19—5—1972. நேரம் முறையே மாலை 3.00 மணி, 3.05 மணி.

ஒப்பந்தப் பத்திரங்களை வனப் பொறியாளர், 1-எ, ராயல் ரோடு, கண்டோன்மெண்ட், திருச்சி-1 என்ற முகவரியிலிருந்து ரூபாய் 1.04 பணமாகவோ அல்லது பண ஆணை மூலமாகவோ செலுத்தி விண்ணப்பத்தின் பேரில் 2—5—1972 முதல் 18—5—1972 முடிய எல்லா வேலை நாட்களிலும் அலுவலக வேலை நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

வி. பா. துரைராஜ்,
வனப்பொறியாளர், திருச்சி.

(த. 40)



16-5—11எ

## மன்னார்குடி நகராட்சி

கீழ்க்கண்ட நகராட்சி வேலைகளுக்காக 27-5-1972-ம் தேதி மாலை 4-00 மணி வரை கீழ்க் கையொப்பமிட்டவரால் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்படும். இதர விவரங்களை நேரிலோ, தபாலிலோ கோரிப் பெறலாம்.

| வேலையின் விவரம். | மொத்த மதிப்பீட்டுத் தொகை. ரூ. | கட்டுத் தொகை. |
|---|---|---|
| 1 நகராட்சி எல்லைக்குள் நடைபெற இருக்கும் ரோடு வேலைகள், கட்டடவேலைகள் (பத்து வேலைகள்). | 52,600 | ஒவ்வொரு வேலைக்கும் மதிப்பீட்டுத் தொகையில் 5 சதவிகிதம், |
| 2 குடிநீர் இணைப்பு விஸ்தரிக்க தேவையான 3 அங்குல ஏ.சி. பிரஷர் பைப், ஜி.ஐ. பைப்புகள் மற்றும் இதர உபகரணங்கள் சப்ளை செய்ய. (மூன்று வேலைகள்). | 11,400 | ஷை |

கோ. முருகன், பி.ஏ.,
ஆணையர்.

(த. 61)

## அறிவிப்பு

## திருச்சிராப்பள்ளி கூட்டுறவு வீடு கட்டும் சங்கம்

திருச்சிராப்பள்ளி கூட்டுறவு வீடுகட்டும் சங்கத்தினரால் உருவாக்க இருக்கும் புதிய தென்னூர் விஸ்தரிப்புத் திட்டத்தில் மனை ஒதுக்குவதற்காக, மனுக்கள் 12-5-1972 முதல் 9-6-1972 வரை வழங்கப்படும். இதற்கான மனு பாரங்கள், தில்லை நகரில் உள்ள மேற்படி அலுவலகத்திலிருந்து அலுவலக வேலை நேரத்தில் ரூ. 5 செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். மனுதாரின் பூர்த்தி செய்த மனுக்கள், அதில் குறிப்பிட்டுள்ள கட்டுத் தொகையுடன் 10-6-1972 முதல் 10-7-1972 வரையில் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்படும். D.T.P. அவர்களின் அனுமதி பெற்ற பின் Lay out படி மனைகள் ஒதுக்கப்படும்.

(த. 58)

## இராசிபுரம் நகராட்சி

கீழ்க்கண்ட பணியைச் செய்ய மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 1972-ம் ஆண்டு மே மாதம் 27-ம் தேதி சனிக்கிழமை மாலை 4-00 மணி வரை ஆணையர் அவர்களால் பெற்றுக் கொள்ளப்படும்.

| வேலையின் பெயர். | மதிப்பீட்டுத் தொகை. ரூ. | கட்டுத் தொகை. ரூ. |
|---|---|---|
| வாரச் சந்தையின் மேற்கு நுழைவுவாயிலின் மேற்கு பகுதியில் 5 கடைகள் கொண்ட கட்டடம் கட்டுதல். | 16,000 | 400 |

வே. பாலசுப்ரமணியம்,
ஆணையர்.

(த. 59)

## குடிநீர் வடிகால் வாரியம்

வேலையின் பெயர்: காவேரிப்பாக்கம் குடிநீர் வழங்குத் திட்டம் முதல் கட்டம்—பிரிவு 1-ல் 2.5 லட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள நீர்த்தேக்கம் கட்டுதல்.

மேற்கண்ட வேலைக்காக தமிழ்நாடு குடிநீர் வாரியத்தின் சார்பில் துறைக்குரிய வடிவத்தில் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள், மேற்பார்வைப் பொறியாளர் பொது. சு. பொ. (சர்க்கிள்) வட்டம் சென்னை அவர்களால், 52, கெங்குரெட்டி சாலை எழும்பூர், சென்னையிலுள்ள அவரது அலுவலகத்தில், துறையிலுள்ள பிரிவில் பதிவு செய்துகொண்டுள்ள ஒப்பந்ததாரர்களிடமிருந்தும், இதுபோன்ற அரசு நிறுவனங்கள் சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்தும் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 24-5-1972 மாலை 3 மணி வரை வரவேற்கப்பட்டு, அதே நாள், மாலை 3-30 மணிக்கு அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் பிரிக்கப்படும்.

ஒப்பந்தப்படிவம்: மொத்தத் தொகை.

முன்வைப்புத் தொகை: ரூ. 1,620 (ஆயிரத்து அறுநூற்று இருபது ரூபாய்).

(கருவூலச் செலான் வடிவில் அல்லது ஒப்பந்த நிபந்தனைகளில் சொல்லப்பட்ட ஏற்கத்தக்க வேறு வடிவில் செலுத்தப்பட வேண்டும்.)

3. ஒப்பந்தப் பத்திரத்தின் விலை: ரூ. 10.35 (பத்து ரூபாயும் முப்பத்தைந்து காசுகளும்).

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களின் விலை:—

T. Deposits and Advances—I. Deposits bearing interest—Other Deposits—T.W.A.D. Funds—I. Receipts—G. (III) Other Remittance என்ற தலைப்பிலும், விற்பனை வரி "XII. Sales D. Misc.—i. General Sales-tax" என்ற தலைப்பிலும் நிருவாகப் பொறியாளர், பொ.சு.பொ. கோட்டம், வாணியம்பாடி அவர்களின் கணக்கில் தனித்தனி செலான்களில் செலுத்தப்பட வேண்டும்.

4. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரம் கிடைக்கும் இடம்: நிருவாகப் பொறியாளர் (பொ.சு.பொ.) கோட்டம், 301, ஜமத் சாலை, வாணியம்பாடி, வட ஆர்க்காடு மாவட்டம்.

5. வேலையை முடிக்க வேண்டிய காலம்: ஆறு மாதங்கள்.

மேற்பார்வைப் பொறியாளர்,
பொ. சு. பொ. கோட்டம், சென்னை-8.

(த. 36)

## கரூர் நகராட்சி

கரூர் நகராட்சி ஆணையர் அவர்களால் கீழே கொண்டுள்ளவற்றிற்கான மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 25-5-1972-ம் தேதி மாலை 4 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். மற்ற முழு விவரங்கள் நகராட்சிப் பொறியாளருக்கு விண்ணப்பித்துத் தெரிந்து கொள்ளலாம்.

| | | பொறுப்புத் தொகை. ரூ. |
|---|---|---|
| 1. | குடிநீர், குழாய்களைப் பராமரிக்க குழாய் சாமான்கள் சப்ளை செய்தல். | 50 |
| 2. | சிமிண்ட் கலவை இயந்திரத்தைப் பழுதுபார்த்தல் .. | 25 |

வி. டி. உமாபதி,
ஆணையர்.

(த. 60)

## குடிநீர் வடிகால் வாரியம்

எண். 764/மு.வ. 2/72, நாள்: 29-4-1972.

பொருள்:—தருமபுரி குடிநீர் திட்டம்—முதல் கட்டம் உயர்மட்டப் பகுதிக்கான பகிர்வு முறைக் குழாய்கள் பதித்தல்.

தகவல்: இவ்வலுவலக ஒப்பந்த அறிவிப்பு எண் 764/மு.வ. 2/72, தேதி 18-3-1972.

மேற்படி பணிக்கான ஒப்பந்தங்கள் பெறப்படும் கடைசி நாள் 26-4-1972—லிருந்து 26-5-1972 மாலை 3-00 மணி வரை நீட்டிக்கப்படுகிறது.

ஒப்பந்தப் பத்திரங்கள் விற்கப்படும் நாளும் 23-5-1972 முடிய நீட்டிக்கப்படுகிறது.

மேற்படி ஒப்பந்த அறிவிப்பில் அறிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளில் வேறு எவ்வித மாற்றமும் இல்லை.

மேற்பார்வைப் பொறியாளர்.

(த. 80).

## ஏல விற்பனை

### காவல்துறை

தஞ்சாவூர் மேற்கு மாவட்டக் காவல் துறையைச் சேர்ந்த கண்டனம் செய்யப்பட்ட பதிவு எண் எம்.டி.ஓ. 3309 லாரியை, தஞ்சாவூர் மேற்கு மாவட்டக் காவல்துறை அலுவலகத்தில் 25—5—1972 காலை 10-30 மணி அளவில் பகிரங்கமான ஏலம் விடப்படும்.

ஏலம் விடப்படும் வண்டியின் விவரங்கள் :

பதிவு எண் எம். டி.ஓ. 3309 பெட்ரோல் இயக்கம் பெட்போர்டு—1961 மாடல் வீல்பேஸ்—167" குதிரை இயக்கம் 29·4. கொள்ளவு 24 நபர்கள்.

மேற்படி வண்டியைப் பற்றிய மற்ற விவரங்களுக்குத் தஞ்சாவூர் மாவட்டக் காவற்துறை ஆயுதப்படை துணைக் கண்காணிப்பாளரை அணுகவும்.

ச. இ. ஜாபர்அலி,
காவல் கண்காணிப்பாளர்,
தஞ்சை மேற்கு.

(த.79)

## பயிற்சி

### மக்கள் நல்வாழ்வுத்துறை

இன்டக்ரேட் கோர்ஸ் ஆப் மிட்வைய்பரி கம் ஹெல்த் விஸிட்டிங்.

1—7—1972-லிருந்து நடக்கவிருக்கும் மேற்கண்ட பயிற்சிகளுக்குப் பெண்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்படுகின்றன.

வயது.—ஜூலை 1-ம் தேதி 18 வயது பூர்த்தியாகி மேலும் 35-க்கு மேற் படாமலும் இருக்கவேண்டும்.

கல்வி.—கல்லூரி சேர்வதற்கானத் தகுதி பெற்ற பள்ளி இறுதியாண்டு சான்றிதழ்கள் பெற்றவர்கள் மட்டுமே விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்.

தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு மாதம் 50 ரூபாய் உபகாரச் சம்பளம் கொடுக்கப்படும். பயிற்சிக் காலம் 2½ ஆண்டுகள்.

வயது, படிப்பு முதலிய தகுதிகளை எழுதி அத்துடன் 50 காசு மதிப்புள்ள போஸ்டல் ஆர்டரையும், போதுமான அஞ்சல் வில்லைகள் ஒட்டிய உறையையும், இணைத்து 25—5—1972-க்குள் அனுப்பி விண்ணப் பத்தாள்களை இணை இயக்குநர், மக்கள் நல்வாழ்வுத் துறை மேலும் குடும்பநலத் திட்டம், 81, அண்ணாசாலை, சென்னை என்ற விலாசத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம். பூர்த்தி செய்த விண்ணப்பத் தாள்களை 31—5—1972ஆம் தேதிக்குள் அனுப்பிவைக்க வேண்டும். விண்ணப்பத்தாள்கள் மேலே குறிப்பிட்ட தேதிக்குப்பின் அனுப்பினால் அவைகள் நிராகரிக்கப்படும்.

ஆர். நாராயணன்,
மக்கள் நல்வாழ்வு குடும்பநலத்துறை
இணைஇயக்குநர், சென்னை-6.

(த.72)

## பயிற்சி

### மக்கள் நல்வாழ்வுத் துறை

ரெகுலர் ஹெல்த் விசிட்டர் பயிற்சி.

1—7—1972 விருந்து நடக்க விருக்கும் ஹெல்த் விசிட்டர் பயிற்சிக்குப் பெண்களிடமிருந்து விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன.

தேர்ந்தெடுக்கப்படுவர்களுக்கு ரூ.50 உபகாரச் சம்பளம் கொடுக்கப்படும். பயிற்சிக்காலம் 18 மாதங்கள்.

வயது: ஜூலை 1-ம் தேதி 23 வயது முடிந்தவர்களாக இருக்கவேண்டும்.

கல்வி :

விண்ணப்பதாரர் கீழ்க்கண்ட சான்றிதழ்கள் பெற்றவர்களாக இருக்க வேண்டும்.

(1) பேறுகால மருத்துவத்திலும், ஜெனரல் சிக் நர்சிங்கிலும் (Midwifery and general Sick Nursing)
(2) மிட் ஒய்ப்பரி மட்டுமாவது அல்லது
(3) ஆக்விலரி நர்ஸ் மிட் ஒய்ப்பரி கோர்ஸ் (Auxiliary Nurse and Midwifery Course)

இத்துடன் போதுமான கல்வித் தகுதியும் இருக்கவேண்டும்.

வயது, கல்வி முதலிய தகுதிகளை எழுதி அத்துடன் 50 காசு மதிப்புள்ள போஸ்டல் ஆர்டரையும், போதுமான தபால் வில்லைகள் ஒட்டிய விலாசம் எழுதிய உறையையும் வைத்து கீழ்க்கானும் விலாசத்தில் —5—1972-க்குள் விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ளவும்.

" இணை இயக்குநர், மக்கள் நல்வாழ்வுத் துறை,
குடும்பநலத் திட்டம், தபால் பெட்டி எண் 722,
81, அண்ணா சாலை, சென்னை-6.

பூர்த்தி செய்த விண்ணப்பத்தாள்கள் 31—5—1972-க்குள் இவ்வலுவலகத்திற்கு அனுப்பிவைக்க வேண்டும்.

ஆர். நாராயணன்,
மக்கள் நல்வாழ்வு குடும்பநலத்துறை
இணைஇயக்குநர், சென்னை-6.

(த.71)

## ஒப்பந்தப் புள்ளி

### வேளாண்மைத் துறை

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவரது ஆணையின் படியும் கடலூர் 1-பி, கடற்கரை சாலையில் உள்ள வேளாண்மை கோட்டப்பொறியாளரால், இரண்டு போர்ட்புள் டீசலால் இயக்கப்படும் வெல்டிங் பிளாண்ட் மின் ஓட்டம் 60 முதல் 375 ஆம்பியர் உள்ளவை. (Two Portable diesel driven welding Plant, with a current range of 60 to 375 Amps. ) வழங்க, குறிப்பிட்ட படிவத்தில், மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 15—6—1972 மாலை 3 வரை வரவேற்கப்படுகின்றன.

2. ஒப்பந்தப் புள்ளி ரூ. 1,400-க்கான செலுத்துச் சீட்டுடன் (முன் வைப்புத்தொகை) வரவேண்டும்.

3. ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் கடலூர் வேளாண்மைக் கோட்டப் பொறியாளரிடமிருந்து ரூ. 5·20 செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

4. ஒப்பந்தப் புள்ளி 15—6—1972 மாலை 4 மணிக்குத் திறக்கப்படும். ஒப்பந்தங்கள் ஒன்றையோ (அல்லது) எல்லாவற்றையுமோ, நிராகரிக்கவோ, (அல்லது) ஏற்றுக்கொள்ளவோ வேளாண்மை கோட்டப் பொறியாளருக்கு முழு உரிமை உண்டு.

கோட்ட வேளாண்மைப் பொறியாளர்,
1-பி, கடற்கரை சாலை, கடலூர்-1.

(த-66)

## ஒப்பந்தப் புள்ளி

### மின்சார வாரியம்

35,000 பில் புத்தகங்களைப் பிரிண்ட் செய்து சப்ளை செய்வதற்குத் இதன் அடியில் ஒப்பமிட்டுள்ளவரால் மூடி அரக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் தமிழரசில் விளம்பரம் செய்த பதினைந்தாவது நாள் மாலை 4 மணி வரை வரவேற்கப்படுகின்றது.

ஒப்பந்தங்கள் அடங்கிய ஒவ்வொரு பிரதிக்கும் ஐந்து ரூபாய் வீதம் ரொக்கமாகவோ பண அஞ்சல் மூலமாகவோ சீப் அக்கவுண்டெண்ட் எக்ஸ்பெண்டிசர், திருநெல்வேலி மின் அமைப்பு, திருநெல்வேலி-3 அவர்களுக்கு அனுப்பியும் ஸ்பெசிபிக்கேஷன் எண்ணைக் குறிப்பிட்டும், ஒப்பந்தப் பாரப்பிரதிகளைப் பெற்றுக்கொள்ளலாம். மேற்படி தொகை, எந்தக் காரணத்தைக் கொண்டும் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது. பண அஞ்சல்கள் முடிவு தேதிக்கு ஐந்து தினங்களுக்கு முன்பு வரைதான் பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப் பாரங்கள் சாதாரண அஞ்சலில்தான் மனுதாரர்களுக்கு அனுப்பப்படும். அஞ்சல் போக்கு வரத்தில் ஏற்படும் தவறுகளுக்கு மின்வாரியம் எந்த விதத்திலும் பொறுப்பேற்காது. ஒப்பந்தப் பாரங்களுக்கு விண்ணப்பிக்கையில் ஸ்பெசிபிக்கேஷன் எண் ஒப்பந்த விலை செலுத்தியதற்கான ரசீது முதலியவற்றைத் தவறாது அனுப்ப வேண்டும். மேற்படி ஒப்பந்தப் பாரங்கள் பிறருக்கு மாற்றிக் கொள்ளத்தக்கதல்ல.

ஒப்பந்தங்கள் பரிசீலிக்கப்படுகையில் நேரில் கலந்து கொள்ள விருப்பமுள்ளவர்கள் கலந்து கொள்ளலாம். ஒப்பந்தப் பாரங்கள் 20-5-1972 விருந்து விற்பனைக்கு வைக்கப்பட்டிருக்கும். இதன் மூலம் கீழே ஒப்பமிட்டுள்ளவரை குறைந்த விலை ஒப்பந்தத்தையோ அல்லது வேறு ஒப்பந்தத்தையோ அனுமதிக்கத்தான் வேண்டுமென்று கட்டுப்படுத்தாது என்பதையும் அறிவிக்கப்படுகிறது.

மேற்பார்வை மின் பொறியாளர்,
திருநெல்வேலி மின் திட்டம்,
திருநெல்வேலி-3.

(த. 77]

## சேலம் நகராட்சி

சேலம் நகராட்சிக்குச் சொந்தமான டிராக்டர் எம்.டி.எஸ். 3,800-க்கு (ஃபோர்ட்ஸன் மேஜர்) தேவையான உதிரி உறுப்புகளை வழங்குவதற்காக மே மாதம் 26-ந் தேதி வரை மூடி முத்திரையிட்ட முன்னீடுகள் நகராட்சி ஆணையரால் வரவேற்கப்படுகின்றன. இதர விவரங்களுக்குச் சிறப்பு அலுவலர் (குடிநீர் விநியோகம்) சேலம் நகராட்சி அவர்களை அணுகவும்.

பி. அமீது அலி, பி.ஏ.பி.எல்.,
ஆணையர்.

(த. 87)

## நாகர்கோவில் நகராட்சி

நகர் மன்றத்திற்குச் சொந்தமான பொது மராமத்து பார உந்து M.DK 514 Fitnes Certificate எடுப்பதற்கு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 26-5-1972 மாலை 4 மணி வரை ஆணையரால் பெற்றுக் கொள்ளப்படும். கூடுதல் விவரங்களுக்கு நகர்மன்ற பொறியர் அவர்களிடமிருந்து நேரில் தெரிந்து கொள்ளலாம்.

பொறுப்புத் தொகை ரூ. 100.

பி. தங்கவேலு, எம்.ஏ.,
ஆணையர்.

(த. 84)

## திருநெல்வேலி நகராட்சி

மேலவீரராகவபுரம் நகர்மன்ற கஸ்தூரிபாய் வெளி மருத்துவ மனைக்கு மருந்துகள் விநியோகிக்க மூடி முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் 15-5-72 திங்கள் மாலை 4 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும். மேலும் விவரங்கள் நகர்மன்ற அலுவலகத்தில் தெரிந்து கொள்ளலாம்.

தெ. ரா. கனகசபாபதி,
ஆணையர்.

(த. 85)

## பழனி நகராட்சி

நகராட்சியில் மொத்தம் எஸ்டிமேட் ரூ. 29,950-ல் ஏழு வேலைகளுக்கு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் ஆணையாளரவர்களால் 26-5-72 மாலை 4 மணிவரை வரவேற்கப்படுகிறது. தகுந்த முன்வைப்புத்தொகை இல்லாத ஒப்பந்தங்கள் எவ்வித முகாந்தரமின்றி நிராகரிக்கப்படும். வரப் பெற்ற ஒப்பந்தங்கள் அன்று மாலை 4-30 மணிக்குத் திறக்கப்படும். மேற்கொண்டு விவரம் தெரிந்து கொள்ள விரும்புவோர் நகராட்சிப் பொறியர் அலுவலகத்தில் நேரிலோ அல்லது அஞ்சல் மூலமாகவோ தெரிந்து கொள்ளலாம்.

கு. பொன்னுசாமி, பி.ஏ.,
ஆணையர்.

(த. 86)

## எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை, சென்னை-1

சென்னை அரசினர் அச்சகத்திற்கு ஒரு "செமி ஆட்டோமேடிக் ஆஃப் செட் புரூப் பிரஸ் மிஷின்" ( One No: Semi Automatic Offset proofing Machine ) சப்ளை செய்வதற்காக 31-5-72 மாலை 3 மணி வரை அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் (டெண்டர்கள்) பெற்றுக் கொள்ளப்படும். மேற்கொண்டு விவரங்களுக்கு இயக்குநர், எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை அலுவலகம், சென்னை-1, அவர்களுக்குத் தொடர்பு கொள்ளவும்.

ஜி. ரங்காராவ்,
இயக்குநர்.

அரசினர் எழுதுபொருள் அச்சுத்துறை
இயக்குநர் அலுவலகம்,
சென்னை-1.

(த. 91)

## நிலநீர் இயக்குநர் அலுவலகம்

10-ஏ தண்டபாணி தெரு, தியாகராய நகர், சென்னை-17.

வேலையின் பெயர் : நிலநீர் இயக்குநர் அலுவலகத்திற்குக் கேசிங் குழாய்த் துணைக்கரங்கள் (Cassing pipe accessories) வழங்கல்.

தமிழ்நாடு ஆளுநருக்காக, அவர் சார்பில், நிலநீர் இயக்குநர் அவர்களால், மேலே குறிப்பிட்ட வேலைக்கான, முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள், மேற்கண்ட அலுவலகத்தில் 12-6-1972 அன்று மாலை 3-00 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள், நிலநீர் இயக்குநர் அவர்களால், மேற்கண்ட அலுவலகத்தில், அதே தேதியில் மாலை 3-30 மணிக்கு, அச்சமயம், அங்கு வந்திருக்கும், ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

| | |
|---|---|
| முன்வைப்புத் தொகை .. .. .. .. | ரூ. 5,000 |
| ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களின் விலை .. | ரூ. 10. |
| விற்பனை வரி .. .. .. .. .. | ரூ. 0.40, |
| வேலை முடிக்க வேண்டிய காலம் .. | 2 மாதங்கள். |

ஒப்பந்தப் பத்திரங்கள் மேற்குறித்த அலுவலகத்தில் அலுவலகங்களில் கிடைக்கும் காலம் :—1-5-1972 முதல் 7-6-1972 வரை.

ஒப்பந்தப் பத்திரங்களின் விலை (எச்சூழ் நிலையிலும் திருப்பி அளிக்க இயலாதது) அரசாங்கக் கருவூலம் ( Treasury ) அல்லது ரிசர்வ் வங்கியில் (Reserve Bank) "Public Works Remittances III Other Remittances" என்ற தலைப்பில், நிர்வாகப் பொறியாளர், நிலநீர் கோட்டம், சென்னை-17 அவர்களின் கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

விற்பனை வரித்தொகை அரசாங்கக் கருவூலம் ( Tresury ) அல்லது ரிசர்வ் வங்கியில் (Reserve Bank) XI Sales tax—b; Receipts under State Sales-tax Act General Sales tax;" என்ற தலைப்பில் செலுத்தப்பட வேண்டும்.

மேற்குறித்த சலான்களைக் கொடுத்த பின்புதான் ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் அளிக்கப்படும்.

சா. பஞ்சநதன்,
இயக்குநர், நிலநீர், சென்னை-17.

(த. 98)

## இராசிபுரம் நகராட்சி

கீழ்க்கண்ட பணியைச் செய்ய மூடி முத்திரையிட்ட மறு ஒப்பந்தப் புள்ளிகள் 1972-ம் ஆண்டு மே மாதம் 27-ம் தேதி சனிக்கிழமை மாலை 4 மணி வரை ஆணையர் அவர்களால் பெற்றுக் கொள்ளப்படும்.

| வேலையின் பெயர். | மதிப்பீட்டுத் தொகை. ரூ. | கட்டுத் தொகை. ரூ. |
|---|---|---|
| வாரச் சந்தையின் மேற்கு நுழைவு வாயிலின் மேற்குப் பகுதியில் 5 கடைகள் கொண்ட கட்டடம் கட்டுதல். | 16,000 | 400 |

வெ. பாலசுப்ரமணியன்,
ஆணையர்.

(த. 70)

## நாகர்கோவில் நகராட்சி

நகர்மன்றத்திற்கு 1971–72-ம் ஆண்டிற்குச் சுமார் ரூ. 9,00,000 மதிப்புள்ள பொது வேலைகளுக்கு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 26—5—1972 மாலை 4-00 மணி வரை ஆணையரால் பெற்றுக் கொள்ளப்படும். கூடுதல் விவரங்களுக்கு நகர் மன்ற பொறியர் அவர்களிடமிருந்து நேரில் தெரிந்து கொள்ளலாம்.

பி. தங்கவேலு, எம்.ஏ.,
நாகர்கோவில் ஆணையர்.

(த. 83)

## பயிற்சி

## தொழில் நுட்பக் கல்வித் துறை, சென்னை-25

1972–73 நடப்புக் காலத்தில் சர்க்கரை தொழில் நுட்பவியலில் பயிற்சிக்காக ( **Sandwich Course** ) விண்ணப்பப் படிவங்கள், தனி அலுவலர், இரசாயன தொழில் நுட்ப நிலையம், சென்னை-20 அவர்களுக்கு 21—6—1972 மாலை 5 மணிக்குமுன் அடையு மாறு அனுப்பப்படுகின்ற விண்ணப்பப்படிவங்கள் வரவேற்கப்படுகின் றன.

(2) விண்ணப்பப்படிவங்களையும் மற்ற பிற விவரங்களையும் "தனி அலுவலர், இராசயன தொழில் நுட்ப நிலையம், அடையாறு சென்னை-20" மேற்கூறியவரின் முகவரியின் தலைப்பில் ரூபாய் 1 குறுக்கே கோடிட்ட அஞ்சல் ஆணையையும் (15—5—1972-க்கு முன்பு வாங்கியிருக்கக் கூடாது) சுய விலாசமிட்ட 22 செ.மி. X 9.5 செ.மீ. நீளமுள்ள 50 காசு வில்லையையும் அதனுடன் 5 காசு அகதிகள் வில்லையும் ஒட்டிய உறையையும் அனுப்ப வேண்டும்.

(3) சேருவதற்கான தகுதிகள்.—எஸ்.எஸ்.எல்.சி.யில் தேர்ந்தெடுக்கப் பட்ட பாடமாக பௌதிகம் அல்லது இரசாயனம் அல்லது பொறியியல் ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றுடன் அல்ஜீப்ராவும், ஜியோமிட்ரியும் எடுத்து பல்கலைக் கழகப்பாடத் திட்டத்தில் சேருவதற்குத் தகுதி பெற்றிருக்க வேண்டும்.

(அல்லது)

தமிழ்நாடு பள்ளிக் கல்விக் கழகத்தால் மேற்கூறிய தகுதிகளுக்குச் சமமென அங்கீகரிக்கப்பட்ட தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும்.

குறிப்பு.—(1) தொழில் நுட்பத்தில் முன் தேர்ச்சி பெற்றவர்கள் 1972–73 ஆண்டு நடப்புக் காலத்தில் நேரடியாக 2-வது ஆண்டு பிரிவில் சேருவதற்கு " தனி அலுவலர், இராசயன தொழில் நுட்ப நிலையம், சென்னை-20 " அவர்களுக்கு விண்ணப்பிக்கலாம்.

(2) சர்க்கரைத் தொழிற்சாலையின் மூலம் வரும் விண்ணப்பதாரர் களுக்குச் சலுகைகள் கொடுக்கப்படும்.

வயது வரம்பு.—இப்பாடப் பிரிவில் சேருவதற்கு வயது வரம்பு கிடையாது.

சேருவதற்கு விண்ணப்பம் செய்துள்ள விண்ணப்பதாரர்கள் நேர் காணலுக்கு அழைக்கப்பட்டால் அவர்களுடைய சொந்தச் செலவிலேயே வந்து போவதற்குத் தங்களைச் தயார் செய்து கொள்ள வேண்டும்.

(6) விண்ணப்பப்படிவங்கள் " தனி அலுவலர், இரசாயன தொழில் நுட்ப நிலையம், சென்னை-20," அவர்களுக்கு அவர்களின் பெயரைக் குறித்து அனுப்பாமல் பதவிப் பெயரிலேயே அனுப்பப்பட வேண்டும்.

**தொழில் நுட்பக் கல்வி இயக்குநர்,**
சென்னை-25.

(த.4)

## பயிற்சி

## தொழில் நுட்பக் கல்வித் துறை, சென்னை-25

பிராந்திய அச்சுப்பள்ளி, அடையாறு, சென்னை.

அறிவிப்பு

சென்னை-20, பிராந்திய அச்சுப்பள்ளி நடத்தும் அச்சு அதனைச் சார்ந்த தொழில் நுட்பங்களில் டிப்ளமோ, மற்றும் சான்றிதழ் பெறும் படிப்பிற்காக, தமிழ்நாடு, கேரளம், ஆந்திரப் பிரதேசம் மாநிலங்களைச் சேர்ந்த மாணவர்களிடமிருந்து மனுக்கள் வரவேற்கப்படுகின்றன.

மனு வடிவம், இதர விவரக் குறிப்புகளை முதல்வர், பிராந்திய அச்சுப் பள்ளி, சென்னை-20 அவர்களிடமிருந்து பெறலாம். இதற்காக கோரிக்கைக் கடிதமும் அத்துடன் சுய முகவரி எழுதிய 50 காசு+5காசு அகதி உதவி வில்லை ஒட்டப்பட்ட 22 சி.எம்.×9.5 சி.எம். அளவுள்ள உறையும், " முதல்வர், அச்சுப்பள்ளி, சென்னை-20 " அவர்களுக்கு கிராஸ் செய்யப்பட்ட ஒரு ரூபாய் போஸ்டல் ஆர்டரையும் வைத்து அனுப்ப வேண்டும்,

மற்ற மாநிலங்களைச் சேர்ந்த மனுதாரர்கள் பூர்த்தி செய்யப்பட்ட மனுக்களை அந்தந்த மாநில தொழில் நுட்பக் கல்வி இயக்குநருக்கு அனுப்ப வேண்டும்.

படிப்பு வகை :

1 டிப்ளமோ படிப்பு—

(1) லெட்டர் பிரஸ் குரூப் 3 ஆண்டு முழு நேரம்.
(2) லெட்டர் பிரஸ் குரூப் 5 ஆண்டு முழு நேரம்.
(3) லித்தோ கிராபிக் குரூப் 3 ஆண்டு முழு நேரம்.

2. சான்றிதழ் படிப்பு—

ஒவ்வொன்றும் மூன்று ஆண்டுகள் பகுதி நேரம்.

(1) கையால் அச்சுக் கோத்தல்.
(2) லைனோ இன்டர் டைப்.
(3) லெட்டர் பிரஸ் பிரிண்டிங்.
(4) பைண்டிங், பாக்கேஜ்.
(5) லித்தோ கிராபிக் பிரிண்டிங்.
(6) லித்தோ கிராபிக் பிளேட் மேகிங் & ஆர்ட் வொர்க்.
(7) போட்டோ என்கிரேவிங், கேமிரா ஆபரேஷன்.

குறிப்பு.—ஒரு சமயத்தில் ஒருவகைப் படிப்பு மட்டுமே படிக்கலாம்.

தகுதி—

டிப்ளமோ படிப்பு—எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு கல்லூரிப் படிப்புக்குச் சேரும் தகுதியுடன் அல்லது தமிழ்நாடு செகண்டரி கல்வி போர்டு அதற்குச் சமமானது என்று அங்கீகரித்துள்ள வேறு தகுதிகள்.

குறிப்பு.—எஸ்.எஸ்.எல்.சி. 10 ஆண்டுகளாக உள்ள கேரள மா நிலத்தைச் சேர்ந்தவர்களும் அல்லது வேறு மாநிலங்களைச் சேர்ந்தவர் களும் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டார்கள். அத்தகையவர்கள் புதுமுக தேர்வு அல்லது அதற்குச்சமமாக வேறு தேர்வு பெற்றிருக்க வேண்டும்.

மைசூர் மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் மைசூர் எஸ்.எஸ்.எல்.சி. ஒரே தடவையில் 4 பாகங்கள் தேறியிருக்க வேண்டும்.

சான்றிதழ் படிப்பு.—அச்சுத் தொழிலில் உரிய பிரிவுகளில் தொழில் பழகுநர்கள் மற்றும் இளநிலை பழகுநர்கள் ஆகியோர் பகுதி நேர சான்றிதழ் படிப்பில் சேரலாம். இதற்குக் குறைந்தபட்ச கல்வித் தகுதி 3-வது படிவத்தில் அல்லது 8-வது வகுப்பில் அல்லது அதற்குச் சமமான படிப்பில் தேறியிருப்பது விரிவுரைகளைப் கேட்டுப் புரிந்து கொள்ளும் அளவுக்கு ஆங்கில அறிவு இருக்க வேண்டும்.

இதர மாநிலங்களிலிருந்து பகுதி நேரடிப்புக்குச் சேர்க்கப்படுபவர்கள் விஷயத்தில், சென்னை நகரில் அச்சகங்களில்பழகுநர்ளாகாப் பயிற்சிபெற உதவி செய்யப்படும்.

டிப்ளமோ படிப்புக்கும் சான்றிதழ் படிப்புக்கும் வயது வரம்பு இல்லை.

தமிழ்நாட்டினைச் சேர்ந்தவர்களிடமிருந்து முதல்வர், பிராந்திய அச்சுப் பள்ளி, அடையாறு, சென்னை-20 அவர்களால் மனுக்களைப் பெற்றுக் கொள்ளக் கடைசி தேதி 21—6—1972 ஆகும்.

மற்ற மாநிலங்களைச் சேர்ந்த மனுதாரர்கள் அந்தந்த மாநில தொழில் நுட்பக் கல்வி இயக்குநர்களிடமிருந்து 21—6—1972க்குள் மனுக்களைச் சமர்ப்பிக்க வேண்டும். அவர்கள், மனுதாரர்களைத் தேர்ந்தெடுத்து தேர்ந்தெடுக்கப்பட்ட மனுக்களை முதல்வர், பிராந்திய பயிற்சிப்பள்ளி, சென்னை-20 அவர்களுக்கு அனுப்பி வைப்பார்கள்.

**தொழில் நுட்பக் கல்வி இயக்குநர்.**

(த. 13.)

## ஒப்பந்தப் புள்ளி

## பல்லவா போக்குவரத்துக் கழகம்

அண்ணாசாலை, சென்னை-2.

தலைவர், பல்லவா போக்குவரத்துக் கழகம் சார்பில், கட்டடப் பொறியாளரால், வரும் மூன்று வருடத்திற்குப் பல்லவா போக்கு வரத்துக் கழகம், தியாகராய நகர் பேருந்து நிலையத்திலுள்ள கடை நம்பர் 2-ஐ ,உலர் சலவை நிலையம் நடத்தப்படுவதற்காக, குத்தகைக்கு விடப்படும். முத்திரையிடப்பட்ட உறைகளில், கட்டடப் பொறியாளர், பல்லவா போக்குவரத்துக் கழகம், அண்ணா சாலை, சென்னை-2, அவர்களால், ஒப்பந்தங்கள் 31-5-1972 மாலை 3 மணி வரை, வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தங்கள் அதே நாள் 31-5-1972 மாலை 3-15 மணிக்குத் திறக்கப்படும். ஒப்பந்த விதிமுறைகள், கட்டடப் பொறியாளர், பல்லவா போக்குவரத்துக் கழகம், அலுவலகத்தில் எல்லா வேலை நேரங்களிலும் ரூ. 1·04 கட்டி பெற்றுக் கொள்ளலாம். எக்காரணத்தைக் கொண்டும் இந்தப் பணம் திருப்பித்தரமாட்டாது.

**நிருவாக இயக்குநர்.**

(த- 7

## ஒப்பந்தப் புள்ளி

### சேலம் நகராட்சி

1972–73-ம் ஆண்டிற்குச் சேலம் நகராட்சி பொது சுகாதார துப்புரவு தொழிலாளர்களுக்குத் தேவையான பெரிய மூங்கில் கூடைகள் சப்ளை செய்யவும் குப்பை வண்டி எருதுகளுக்கு லாடம் அடிப்பதற்கும், மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 26—5—1972 மாலை 4 மணி வரை வரவேற்கப்படும். இதர விவரங்களுக்கும் நிபந்தனைகளுக்கும் சுகாதார அதிகாரியை அணுகவும்.

| | கட்டுத் தொகை. ரூ. |
|---|---|
| 1. பெரிய கூடைகள் சப்ளை செய்ய .. .. .. .. | 100 |
| 2. குப்பை வண்டி எருதுகளுக்கு லாடம் அடிப்பதற்கு .. | 200 |

**பி. ஹமிதலி பி.ஏ., பிஎல்.,**
ஆணையர்.

(த. 74)

### வேளாண்மைத் துறை

தமிழ்நாடு அரசு ஆளுநர் சார்பிலும் அவருக்காகவும், கடலூர் உதவி வேளாண்மைப் பொறியாளர் (ஆய்வு) அலுவலகத்தில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளடிராக்டர்கள், புல்டோசர்கள், கலப்பைகள்மற்றும் உதிரி பாகங்களை உள்ளது உள்ளபடியே தற்போது இருக்கின்ற நிலையில் வாங்கிக் கொள்ள மூடி, அரக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்த புள்ளிகள் 5—6—1972 மாலை 3-00 மணி வரையில் வரவேற்கப்படுகின்றன. விற்பனை சம்பந்தமாக விதி முறைகளுக்கும் மற்ற விவரங்களுக்கும் 1பி, பீச்ரோடு, கடலூர் உதவி வேளாண்மைப் பொறியாளர் (ஆய்வு) அலுவலகத்தில், அலுவலக நேரத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

| வரிசை எண். | டிராக்டர், புல்டோசர்கள் உள்ளது. | | இடம். | பொறுப்பில் உள்ள அலுவலர். |
|---|---|---|---|---|
| 1 | டிராக்டர்கள்— | | | |
| | 1. டபிள்யூ 6—3 | 7 | கடலூர். | உதவி வேளாண்மைப் பொறியாளர் (ஆய்வு). |
| | 2. ஜான்டீர்—2 | | | |
| | 3. டேவிட்பிரௌன்—2 | | | |
| 2. | புல்டோசர்கள்— டிடி 14....2 .. .. | | ஷை | ஷை |
| 3. | கலப்பைகள் .. .. .. | | ஷை | ஷை |
| 4. | உதிரி பாகங்கள் .. .. | | ஷை | ஷை |

ஒப்பந்தப்புள்ளி பத்திரங்களை மேற்குறித்த அலுவலகத்தில் 31-5-1972 வரை பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தப் பத்திரத்திற்கான விலை ரூ. 3-ஐ "XXV. Agriculture—Agvl. Engg. Receipts—Miscellaneous என்ற தலைப்பிலும், விற்பனைவரி 0.11 காசை XII—Sales-tax—b—Receipts—Under State Sales-tax—Act —General Sales-tax." என்ற தலைப்பிலும், கருவூலகத்திற்கு அல்லது ஸ்டேட் பாங்கிலோ செலுத்திச் செலுத்துச் சீட்டை மேற்குறிப்பிட்டஅலுவலகத்திற்குஅனுப்பி ஒப்பந்தப்புள்ளி நமூனுவைப்பெற்றுக் கொள்ளலாம். மேற் குறிப்பிட்ட தொகை எக்காரணத்தை முன்னிட்டும் திருப்பி தரப்படமாட்டாது.

ஒப்பந்தப்புள்ளி நமூனுக்களை 5—6—1972 மாலை 3-30 மணி அளவில் அங்கு வந்திருக்கும் ஒப்பந்ததாரர் (அல்லது) அவர்கள் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

ஒப்பந்தப் பிரதிகள் அஞ்சலில் அனுப்பப்படும் போது இடையில் உண்டாகும் காலதாமதம் (அல்லது) காணமற் போவது முதலியவைகளுக்கு இவ்வலுவலகம் பொறுப்பல்ல இவ்வலுவலகத்தில் மனு பாரத்தில் இல்லாத ஒப்பந்தங்களையும் குறிப்பிட்ட நேரத்திற்கு பின் வரும் ஒப்பந்தங்களையும் கட்டுத் தொகை ரசீது இணைக்கப்படாத ஒப்பந்தங்களையும் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

**உதவி விவசாயப் பொறியாளர், (ஆய்வு)**
கடலூர்.

(த. 67)

### கல்வி

### மதுரை மருத்துவக் கல்லூரி, மதுரை

ஆர்த்தோப்டிக்ஸ் கோர்ஸில் டிப்ளமோ ஜூலை 1972

செஸன்.—1972-ஆம் ஆண்டு ஜுலை மாதம் 1-ஆம் தேதிமுதல் மதுரை மருத்துவக் கல்லூரியில் ஆரம்பிக்கவிருக்கும் மேற்படி கோர்ஸ் சேர்க்கைக்கான விண்ணப்பங்கள் (பெண் விண்ணப்பதாரர்களிடமிருந்து மட்டும்)முதல்வர், மதுரை மருத்துவக் கல்லூரி, மதுரை அவர்களால் 15—6—1972 வியாழக்கிழமை அன்று மாலை 5 மணி வரையில் பெற்றுக்கொள்ளப்படும்.

தகுதி.—பி.யூ.சி (விஞ்ஞானம் விருப்பப்பாடத்துடன்) அல்லது அதற்கு சமமாகக் கருதப்படும். இதர தேர்வுகளில் தேறி இருக்க வேண்டும்.

வயது—17 முதல் 25 வயதிற்குள்.

கோர்ஸின் காலம்.—இரண்டு வருடம்.

உதவித் தொகை.—படிப்புக்காலத்தில் ரூ. 60 மேற்படி மாணவிகளுக்கு ஒவ்வொரு மாதமும் கொடுக்கப்படும்.

மேற்படி மாணவிகள் தமிழக அரசின் கீழ் ஐந்து வருடக்காலத்திற்கு வேலை பார்க்க உறுதிப் பத்திரம் கொடுக்க வேண்டும்.

தேவையான உள்ளடக்கத்துடன் ( enclosures ) விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

விண்ணப்பப் பாரம் மற்றும் பிராஸ்பெக்டஸ்களுக்கு, முதல்வர், மதுரை மருத்துவக் கல்லூரி, மதுரை அவர்கள் பெயருக்குக் கோடு கிழிக்கப்பட்ட ரூபாய் ஒன்றுக்கான இந்தியன் போஸ்டல் ஆர்டரை வாங்கி, 40 காசு (35 காசு + 5 காசு) அஞ்சல் தலையொட்டிய சுய விலாசமிட்ட உறையுடன் மனுச் செய்து மேற்படி கல்லூரி அலுவலகத்தில் பெறலாம்.

குறிப்பு.—போஸ்டேஜ் ஸ்டாம்புகள், மணியார்டர்கள் ரொக்கமாகச் செலுத்துதல், செலான் முதலியவைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது போஸ்டல் ஆர்டருடன், சுய விலாசமிட்ட உறையுடனும் வராத மனுக்கள் பரிசீலனை செய்யப்படமாட்டாது.

**டாக்டர் எஸ்.ஏ. கபீர், எம்.பி.பி.எஸ்.**
டி.ஏ. (லண்டன்) எப்.எப்..ஏ. ஆர். சி.எஸ்.
(இங்கிலாந்து)

(த-73).

## ஒப்பந்தப் புள்ளி

### பொதுப்பணித் துறை

வேலைகளின் பெயர்

(1) மதுரையிலுள்ள தொத்து நோய் மருத்துவ மனைக்கான, காலரா நோயாளிகளை அனுமதிக்கும் நிலையத்திற்கு 28 படுக்கையறை கொண்ட வார்டுக்கான கட்டடம் நிர்மாணித்தல்.

(2) மதுரையிலுள்ள தொத்து நோய் மருத்துவ மனையின் காலரா மருத்துவ மனைக்கான 4 செவிலியர்க்கான குடியிருப்பு மனைகள் கட்டுதல்.

தமிழக ஆளுநருக்காகவும் அவர் சார்பிலும் மேற்பார்வைப் பொறியாளர் மதுரை வட்டம், மதுரை-2 அவர்களால் மேற்கண்ட வேலைகளுக்கான முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 24—5—72 மாலை 3·00 மணி வரையில் பெற்றுக் கொள்ளப்பட்டு, மாலை 4·00 மணிக்குத் திறக்கப்படும். 11—5—72 முதல் 22—5—72 வரை ஒப்பந்தப் பத்திரங்கள் விற்பனைக்குக் கிடைக்கும்.

| | முதல் வேலை | இரண்டாவது வேலை |
|---|---|---|
| ஒப்பந்த முறை | மொத்தத் தொகை | மொத்தத் தொகை |
| முன் வைப்புத் தொகை | ரூபாய் 4,500. | ரூபாய். 1,500. |
| முடிக்க வேண்டிய காலம் | 6 மாதங்கள். | 6 மாதங்கள். |

ஒவ்வொரு வேலைக்கான ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களுக்கான விலைத் தொகை ரூ. 20·00 (அது எந்த சூழ்நிலையிலும் திருப்பித் தரமாட்டாது) கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கி ஆகியவற்றில் "P. W. Remittances—III other Remittances" என்ற தலைப்பின் கீழ் நிர்வாகப் பொறியாளர் பொதுப்பணித்துறை கட்டடங்கள் கோட்டம், மதுரை என்பவர் கணக்கில் செலுத்தப்பட வேண்டும். விற்பனைவரி ஒவ்வொரு வேலைக்கும் ரூ. 0·75 (காசுகள் எழுபத்தைந்து மட்டும்) கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில் "XII Sales Tax (d) Miscellanes" என்ற தலைப்பில் செலுத்தப்பட வேண்டும்.

ஒவ்வொரு வேலைக்கான முன் வைப்புத் தொகையும் கருவூலச்சீட்டு வடிவிலோ, தேசியச் சேமிப்புப் பத்திரங்களாகவோ அல்லது செட்யூல்டு வங்கிகளின் கால் ரசீது டெபாசிட்டு வகையிலோ அல்லது செட்யூல்டு வங்கிகளின் டிமாண்டு டிராப்டுகளாகவோ ஏற்றுக் கொள்ளப்படும். மாநில அரசுக் கடன் பத்திரங்களும் தமிழ்நாடு மின்வாரியக் கடன் பத்திரங்களும் மதிப்பில் ஐந்து விழுக்காடு குறைத்துப் பெற்றுக் கொள்ளப்படும். முன் வைப்புத் தொகை வேறு எந்த வடிவிலும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

**வ. துரைராஜ்,**
மேற்பார்வைப் பொறியாளர், பொ. ப. து.,
மதுரைவட்டம், மதுரை.

(த. 39)

## குந்தாநீர் மின் திட்டம்

தமிழ்நாடு மின்சாரவாரியத்தின் சார்பாகக் கீழ்க்கண்ட பொருள்கள் அவை இருக்கும் நிலையிலேயே வாங்குவதற்காக மூடிமுத்திரையிட்ட தனித்தனி விலையொப்பங்கள் ( Tenders ) கீழே குறிப்பிட்ட நாட்களில் மாலை 3-00 மணி வரை வரவேற்கப்படுகின்றன. தனித்தனிக் உறைகளில் சாற்றுக் குறிப்பெண்ணும், முடிவுத் தேதியும் குறிப்பிட்டு மேற்பார்வைப் பொறியாளர், மின் உற்பத்தி வட்டம், நீர் மின் நிலையங்கள், குந்தா பாலம் அஞ்சல், குந்தா, நீலகிரி என்ற அவர்களது அலுவலகத்தில் அனுப்புதல் வேண்டும்.

| வரிசை எண்ணும் சாற்றுக்குறிப்பு எண்ணும். | பொருட்கள் விவரம். | கட்டுத் தொகை. | இறுதி நாள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | ரூ. | ரூ. |
| 1 கே.ஜி.சி. 35/72–73 | ஸ்டோன் கிரஷர்கள் | 2,000 | 26—5—1972 |
| 2 கே.ஜி.சி. 36/72–73 | ரஷ்யன் பம்பர் | 1,000 | 26—5—1972 |
| 3 கே.ஜி.சி. 37/72–73 | பிரிட்டானியா ரோடு மார்ஷல் ரோடு ரோலர் | 1,500 | 26—5—1972 |
| 4 கே.ஜி.சி. 38/72–73 | காஃப்டோசர் | 500 | 26—5—1972 |
| 5 கே.ஜி.சி. 39/72–73 | பலவகைப்பட்ட கழிவு சாமான்கள் (பழைய இரும்புத் தகடுகள் முதலியன). பழைய சன்னல்கள், கதவுகள், முதலியன. | 500 | 5—6—1972 |
| 6 கே.ஜி.சி. 40/72–73 | உயர்ரக ஸ்டீல் பிளேட்டுகள் | 1,000 | 5—6—1972 |
| 7 கே.ஜி.சி. 41/72–73 | உயர்ரக ஸ்டீல் பட்டைகள் | 200 | 5—6—1972 |
| 8 கே.ஜி.சி. 42/72–73 | கழிக்கப்பட்ட காகிதத்துண்டுகள் | 50 | 5—6—1972 |
| 9 கே.ஜி.சி. 43/72–73 | டிப் டிரக் அங்கங்கள் முதலியன | 500 | 5—6—1972 |

மேற்கூறிய ஒப்பந்த சாற்றுக் குறிப்புப் பிரதிகள் வேண்டுவோர், பிரதி ஒன்றுக்கு ரூ. 2 (ரூபாய் இரண்டு வீதம்) தலைமைக் கணக்காயர், குந்தா நீர்மின் உற்பத்தி வட்டம், குந்தா பாலம் அஞ்சல், நீலகிரி என்ற முகவரிக்கு பண அஞ்சல் மூலமாகவோ, நேரிலோ செலுத்தி 19—5—1972 அன்றோ அல்லது அதற்கு பிறகோ பெற்றுக் கொள்ளலாம்.

இத்தொகையைப் பண அஞ்சல் மூலமாக அனுப்புவோர், தமது முகவரியையும், தேவையான பிரதிக்குரிய, சாற்றுக் குறிப்பு எண்ணையும் தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். பிரதிகள் சாதாரண அஞ்சல் மூலம்தான் அனுப்பப்படும். அவை உரியவருக்கு அஞ்சல் மூலம் சேராவிட்டால், மின்சார வாரியம் பொறுப்பு அல்ல.

ஒப்பந்தப் படிவங்கள் மாற்றிக் கொள்ளத் தக்கவையல்ல. குறித்த காலத்திலும், தேதியிலும் வராத ஒப்பந்தங்கள் நிராகரிக்கப்படும். ஒப்பந்தப் படிவங்களில், விவரிக்கப்பட்டுள்ள விதிமுறைகளின்படியே தான் மேற்கூறிய பொருட்களின் விற்பனை மேற்கொள்ளப்படும்.

ஒவ்வொரு சாற்றுக் குறிப்பிற்கும் குறிப்பிட்ட கடடுத்தொகையை ஒப்பந்தப் படிவங்கள் அனுப்பும்போது கண்டிப்பாகக் கட்டியிருக்க வேண்டும். கட்டுத் தொகையைக் கட்டாத ஒப்பந்தங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

முத்திரையிட்ட விலை ஒப்பந்தங்கள் குறிப்பிட்ட முடிவுத் தேதிகளில் மாலை 4-00 மணி அளவில் வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

மேற்பார்வை மின் பொறியாளர்,
குந்தா பாலம், நீலகிரி.

(த.99)

## பொதுப் பணித் துறை

வேலையின் பெயர் :—மதுரையிலுள்ள மத்திய சிறைச்சாலையில், (பிளஸ் அவுட் கக்கூஸ்) நீரடிக் கழிப் பிடங்கள் கட்டுதல்.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், ஆளுநரின் சார்பாகவும், "மேற்பார்வைப் பொறியாளர், பொதுப் பணித் துறை, மதுரை வட்டம், மதுரை-2," அவர்களால் மேற் கூறப்பட்ட வேலைக்கு 7-6-1972 மாலை 3 மணி வரை ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்பட்டு, அதே நாள் மாலை 4.00 மணிக்குத் திறக்கப்படும். ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் 1-6-1972-லிருந்து 5-6-1972 வரை விற்பனைக்குக் கிடைக்கும்.

ஒப்பந்தப் படிவம் :—மொத்தத் தொகை.

முன்வைப்புத் தொகை:—ரூ. 5,900 (ஐயாயிரத்து தொள்ளாயிரம் ரூபாய் மட்டும்).

வேலையை முடிக்க வேண்டிய காலம் :—6 மாதங்கள்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்தின் விலை ரூபாய் 20-ஐ (இருபது ரூபாய் மட்டும்) P.W. Remittances—III O.R." என்ற தலைப்பில், "நிருவாகப் பொறியாளர், பொதுப் பணித் துறை, மதுரைக் கோட்டம், மதுரை" அவர்கள் கணக்கில் கருவூலத்திலோ அல்லது ரிசர்வ் வங்கியிலோ கட்ட வேண்டும். ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்திற்கான 0·75 காசு சர்சார்ஜ் உடன் விற்பனை வரியை, "XII Sales Tax (d) miscellaneous" என்ற தலைப்பில் அதே சலானில் கருவூலத்திலோ அல்லது ரிசர்வ் வங்கியிலோ கட்ட வேண்டும். செலானைப் பெற்ற பின்னரே ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் கொடுக்கப்படும்.

முன்வைப்புத் தொகை செலான் வடிவில் ஏற்றுக்கொள்ளப்படும். டெபாசிட் அழைப்பு ரசீதுகளும், ஷெடியூல்டு பேங்குகளால் வழங்கப்படும் பேங்க் காரண்டிக்கும், டிமாண்ட் டிராப்டுகளும், தமிழ்நாடு மாநில மின்சார வாரியப் பத்திரங்களும், தேசிய சேமிப்புப் பத்திரங்களும், விற்பனை மதிப்பில் 5 சதவிகிதம் குறைத்து முன்வைப்புத் தொகையாக ஏற்றுக்கொள்ளப்படும். வேறுப் எந்தப் பணம் செலுத்தும் வகையும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

வி. துரைராஜ்,
மேற்பார்வைப் பொறியாளர்,
மதுரை வட்டம்.

(த. 103)

## ஒப்பந்தப் புள்ளி

## பொதுப்பணித் துறை

வேலையின் பெயர் :—சென்னை அரசினர் கஸ்தூரிபாய் காந்தி மருத்துவ மனையில் புற நோயாளிகளுக்கான புதிய பகுதி ஒன்று கட்டுவதற் கான பைல் (Pile) அடித்தளம் அமைத்தல்

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர் சார்பிலும் மேற்கண்ட வேலைக் காக மேற்பார்வைப் பொறியாளர், பொதுப்பணித்துறை சென்னை—செங்கற்பட்டு வட்டம் சென்னை-5 அவர்களால் சேப்பாக்கத்திலுள்ள அவர்கள் அலுவலகத்தில் 29—5—1972 பிற்பகல் 3-00 மணிவரை மூடிமுத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளிகள் மேற்பார்வைப் பொறியாளர், சென்னை—செங்கற்பட்டு வட்டம் பொதுப்பணித்துறை, சென்னை-5 அவர்களால் அதே நாளில் பிற்பகல் 3-15 மணிக்கு அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

1 ஒப்பந்தப்படிவம்—மொத்தத் தொகை.

2 கட்டுத் தொகை—ரூ. 6,250.

3. வேலை முடிக்க வேண்டிய காலம்—6 மாதங்கள்.

4. ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் விலை—ரூபாய் 30 (ரூபாய் முப்பது மட்டும்) கருவூலத்திலோ (அல்லது) இந்திய ரிசர்வ் பாங்கியிலோ "Public Works Remittances III Other Remittances" என்ற தலைப்பில் நிருவாக இஞ்சினியர், கட்டடக் கோட்டம்-1 சேப்பாக்கம், சென்னை-5 அவர்கள் கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

5. விற்பனை வரி—ரூ. 1-05 (ரூபாய் ஒன்றும் ஐந்து காசு மட்டும்) அதே சலானில் குறித்து கருவூலத்திலோ, இந்திய ரிசர்வ் பாங்கியிலோ "XII விற்பனைவரி, "பி" மாநில விற்பனை வரி சட்டத்தின்கீழ் வரவினம்" என்ற தலைப்பில் செலுத்த வேண்டும்.

6. ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் அலுவலக நேரத்தில் விற்பனையாகும் தேதி—20—5—1972 முதல் 28—5—1972 வரை.

7. ஒப்பந்தப்புள்ளி தேதி—29—5—1972 (பிற்பகல் 3-00 மணி).

மேற்கண்ட விவரங்களை மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம் பொதுப்பணித்துறை சென்னை—செங்கற்பட்டு வட்டம், சேப்பாக்கம், சென்னை-5-ல் அலுவலக நாட்களில் வேலை நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். எந்த ஒப்பந்தப் புள்ளியையும் (அல்லது) எல்லா ஒப்பந்தப்புள்ளிகளையும் எவ்விதக் காரணமும் கூறாமல் நிராகரித்துவிட மேற்பார்வைப் பொறியாளர், பொதுப்பணி துறை, சென்னை—செங்கற்பட்டு வட்டம், சென்னை-5 அவர்களுக்கு உரிமை உண்டு.

பி. கே. கந்தசாமி,
மேற்பார்வைப் பொறியாளர், பொதுப்பணித் துறை,
சென்னை—செங்கற்பட்டு வட்டம்,
சென்னை-5.

(த.76)

## கல்வி

## மதுரை மருத்துவக் கல்லூரி, மதுரை

சர்டிபைட் ரேடியாலஜிகல் அஸிஸ்டெண்ட் கோர்ஸில் டிப்ளமோ,
செஸன் : ஜுலை 1972.

1972-ம் ஆண்டு ஜுலை மாதம் 1-ம் தேதி முதல் மதுரை மருத்துவக் கல்லூரியில் ஆரம்பிக்கவிருக்கும் மேற்படி கோர்சு சேர்க்கைக்கான விண்ணப்பங்கள், முதல்வர், மதுரை மருத்துவ கல்லூரி, மதுரை, அவர்களால் 15—6—1972 அன்று மாலை 5 மணிவரையில் பெற்றுக் கொள்ளப்படும்.

தகுதி:

பி.யூ.சி: (கணிதம், விஞ்ஞான பாடங்களுடன்) அல்லது அதற்குச் சமமாக கருதப்படும் இதர தேர்வுகளில் பாஸ்செய் திருத்தல் வேண்டும்.

கோர்ஸின் காலம்:

ஒரு வருடம்

தேவையான உள்ளடக்கத்துடன் (Enclosures) விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

விண்ணப்பபாரம், மற்றும் பிராஸ்பெக்டஸ்களுக்கு, முதல்வர், மதுரை மருத்துவக் கல்லூரி, மதுரை, அவர்கள் பெயருக்கு ரூபாய் ஒன்றுக்கான கோடு கிழிக்கப்பட்ட இந்தியன் போஸ்டல் ஆர்டரை வாங்கி 40 காசு (0.35+0·05) தபால்தலை யொட்டிய சுய விலாசமிட்ட உறையுடன் மனுச்செய்து மேற்படி கல்லூரி அலுவலகத்தில் பெறலாம்.

குறிப்பு :

போஸ்டேஜ் ஸ்டாம்புகள், மணியார்டர்கள், ரொக்கமாக செலுத்துதல், செலான் முதலியவைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. போஸ்டல் ஆர்டருடனும், சுயவிலாசமிட்ட உறையுடனும் வராத மனுக்கள் பரிசீலனை செய்யப்படமாட்டாது.

டாக்டர் எஸ்.ஏ. கபீர், எம்.பி.,பி.எஸ்.,
மதுரை: முதல்வர், மதுரை மருத்துவக் கல்லூரி, மதுரை.

(த.75)

## ஒப்பந்தப் புள்ளி

## வேளாண்மைத் துறை

(1) வேலையின் பேயர்.—வேலூர் தாலுக்காவில் உள்ள எடையன் சாத்து கிராமத்தில் அரசு வெடி மருந்து கிடங்குக் கட்டுதல்.

(2) ஒப்பந்தத்தின் படிவம்.—கே. 2 (பிணைப்புத் தொகை ரூ. 230 (ரூபாய் இருநூற்று முப்பது மட்டும்).

(3) வேலையை முடிக்கும் காலம்.—3 மாதங்கள்.

(4) மேற்படி வேலைக்கான முத்திரையிட்ட ஒப்பந்த விவரங்கள் தமிழ்நாடு ஆளுநர் சார்பில் வேலூர் கோட்ட விவசாயப் பொறியாளர் அவர்களுடைய அலுவலகத்தில் 16—6—1972 அன்று மாலை 3 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். அன்று மாலையே 3–15 மணி யளவில் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் மூடி முத்திரையிட்ட உறைகள் திறக்கப்படும்.

(5) ஒப்பந்ததாரர் கோட்ட விவசாயப் பொறியாளர் அலுவலகம் (103, முதல் மேற்கு நெடுஞ்சாலை, காட்பாடி நகர் விரிவு, வேலூர்-6) நேரில் ரூ. 5·18 செலுத்தி மேற்படி வேலைக்கான ஒப்பந்த அறிவிப்பு வேலை விவர அட்டவணை வரை படம் முதலியவை பெற்றுக் கொள்ள வேண்டியது. நேரில் வந்து பெற்றுக் கொள்ள முடியாதவர்கள் மேற்குறிப்பிட்ட தொகையை மணியார்டர் மூலம் செலுத்தி உடன் "9×4" என்ற உறையில் சொந்த விலாசம் எழுதி போதிய தபால் தலைகளுடன் (ரூ. 2·00) அனுப்பி பெற்றுக் கொள்ள வும்., இத்தொகை எந்தக் காரணத்தை முன்னிட்டும் திருப்பி தரமாட்டாது.

(6) இத்துறையில் வழங்கப்பட்ட குறிப்பிட்ட படிவத்தில் மட்டுமே ஒப்பந்த விவரம் அளிக்கப்பட்ட வேண்டும். அதை பிணை வைப்புத் தொகைக்கான சலான் இவைகளை உறையில் இட்டு மேலே வேலையின் பெயர், பிணை வைப்புத் தொகை, சலான் முகவரி முதலியவற்றைத் குறிப்பிட்டு முத்திரையிட்டு அளிக்க வேண்டும். பிணைவைப்புத் தொகை கீழ்க்காணும் படிவங்களில் ஏற்றுக் கொள்ளப்படும். மற்றவை ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

(7) ஒப்பந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி பிணைவைப்புத் தொகை ரூபாய் 230 கருவூலத்தில் செலுத்தி கருவூல சீட்டு படிவத்தில் மட்டும் தான் ஏற்றுக்கொள்ளப்படும்.

(8) விதிகள் 6, 7-ல் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுடன் இல்லாத ஒப்பந்த விவரங்கள் தள்ளுபடி செய்யப்படும்.

(9) ஒப்பந்த விவரத்தை அங்கீகரிக்கும் போது அங்கீகரிக்கும் அலுவலர் விருப்பப்பட்டால் வேலையை மேலே குறிப்பிட்ட காலத்திற் குள்ளும் திருப்திகரமாகவும் செய்து முடிக்க தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்ததாரரை மேலும் பாதுகாப்புத் தொகை செலுத்தும்படி கேட்கப்படலாம்.

(10) எந்த ஒப்பந்த விவரத்தையும் அல்லது ஒப்பந்த விவரங்கள் அனைத்தையும் காரணமேதும் காட்டாமல் தள்ளுபடி செய்ய கோட்ட விவசாய பொறியாளர், வேலூர் கோட்டம் உரிமை பெற்றவராவர்.

க. து. வேதாசலம்,
கோட்ட விவசாயப் பொறியாளர்,
வேலூர்-6.

(த. 68)

## ஏல விற்பனை

## நெடுஞ்சாலை கிராமப்பொறியியல் பணித்துறை

இவ்விலாகாவின் பயன்படுத்த முடியாத பழுதடைந்த "போர்டு லாரி" எம்.எஸ்.சி. 9082 ஒன்று 19-5-72 மாலை 3-30 மணியளவில் சென்னை-25 நெடுஞ்சாலை போக்குவரத்து இயந்திரக் கோட்டத்தில் பொது ஏலத்திற்கு விடப்படும்.

ஏலத்திற்குட்பட்ட பொருள்களின் விவரங்களையும், மற்ற விவரங்களையும் வேலை நேரத்தில் எந்த வேலை நாளிலும் நெடுஞ்சாலை போக்குவரத்து இயந்திரக் கோட்ட அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

கே. விஸ்வநாதன்,
கோட்டப்பொறியாளர் (நெ)
போ. வ. இய. கோட்டம்,
சென்னை-25.

(த. 89)

## ஏல விற்பனை

### பல்லவா போக்குவரத்துக் கழகம் அண்ணாசாலை, சென்னை-2

பயன்படாத—ஒதுக்கப்பட்ட டயர்கள், பேரல்கள், பேட்டரிகள், மரத் துண்டுகள், அலுமினியத் துண்டுகள், வெற்று டப்பாக்கள், டியூப்கள், பிளாப்புகள் போன்ற பொருட்களை விற்பனை செய்ய மத்திய டிப்போ, அயனாவரம், அடையாறு, மாதவரம், அம்பத்தூர், வடபழனி, தண்டையார்பேட்டை ஆகிய டிப்போக்களில் முறையே 23, 24, 25, 26, 27, 29, உடன் 30—5—1972 ஆகிய தேதிகளில் காலை 10 மணிக்குப் பொது ஏலம் போடப்படும்.

ஏல நிபந்தனைகள், மற்றும் பிற விவரங்களையும் தளவாட (Meterial) மேலாளரிடம் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

நிருவாக இயக்குநர்.

போக்குவரத்து இல்லம்,
அண்ணா சாலை, சென்னை-2.

(த. 107)

## கல்வி

### மதுரை மருத்துவக் கல்லூரி, மதுரை.

பார்மஸி கோர்சில் டிப்ளமோ—ஜூலை, 1972.

செஸன்.—1972-ஆம் ஆண்டு, ஜூலை மாதம் 1-ம் தேதி முதல் மதுரை மருத்துவக் கல்லூரியில் ஆரம்பிக்கவிருக்கும் மேற்படி கோர்சு சேர்க்கைக்கான விண்ணப்பங்கள், முதல்வர், மதுரை மருத்துவக் கல்லூரி, மதுரை அவர்களால் 12—6—1972 அன்று மாலை 5 மணி வரையில் பெற்றுக் கொள்ளப்படும்.

தகுதி:—எஸ்.எஸ்.எல்.சி. பொது விஞ்ஞானம் பாடத்துடன் (கல்லூரி நுழைவு தகுதி) அல்லது அதற்கு சமமாக கருதப்படும் இதர தேர்வுகளில் பாஸ் செய்திருத்தல் வேண்டும்.

கோர்சின் காலம்.—இரண்டு வருடம், தேவையான உள்ளடக்கத்துடன் (Enclosures) விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

விண்ணப்பப் பாரம் மற்றும் பிராஸ்பெக்டஸ்களுக்கு முதல்வர், மதுரை மருத்துவக் கல்லூரி, மதுரை அவர்கள் பெயருக்கு ரூபாய் ஒன்றுக்கான கோடு கிழிக்கப்பட்ட இந்தியன் போஸ்டல் ஆர்டரை வாங்கி, 40 காசு (0·35+0·05) தபால் தலையொட்டிய சுய விலாசமிட்ட உறையுடன் 5—6—1972-க்குள் மனுச் செய்து மேற்படி கல்லூரி அலுவலகத்தில் பெறலாம்.

குறிப்பு.—போஸ்டேஜ் ஸ்டாம்புகள், மணியார்டர்கள் ரொக்கமாக செலுத்துதல், செலான் முதலியவைகள், ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. போஸ்டல் ஆர்டருடன், சுய விலாசமிட்ட உறையுடனும் வராத மனுக்கள் பரிசீலனை செய்யப்படமாட்டாது.

டாக்டர் எஸ். ஏ. கபீர், எம்.பி., பி.எஸ்.,
முதல்வர், மதுரை மருத்துவக்
கல்லூரி, மதுரை.

(த.69)

## ஒப்பந்தப் புள்ளி

### பொதுப்பணித் துறை.

மேற்பார்வையாளரின் அலுவலகம், பொ.ப.து., இராமநாதபுரம் வட்டம் மதுரை. ந.க.எண்.5310/72/வ5 நாள் 22—4—72.

தமிழ்நாடு ஆளுநருக்காக ஆளுநரின் சார்பில் பொதுப்பணித் துறை மதுரையில் உள்ள இராமநாதபுரம் பெருவட்டம், மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால கீழ்க்கண்ட வேலைக்குப் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்தும் கீழே குறிப்பிட்டுள்ள கண்மாய் பாசனத்தில் உள்ள நில உரிமை பெற்றவர்களிடமிருந்தும் மேற்பார்வைப் பொறியாளரின் அலுவலகத்தில் 24-5-72-ம் தேதி மாலை 4-00 மணி வரையில் அரக்கு முத்திரையிடப்பட்ட உறையில் ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுக் கொள்ளப்படும்.

வேலையின் பெயர்—அருப்புக்கோட்டை வட்டம்—திருவிருந்தால்புரம் கிராமம் அருகே புதிய கண்மாய் அமைத்தல் வேலை.

ஒப்பந்த வகை.—கே-2.

கட்டுத் தொகை.—ரூ. 4,140—(நாலாயிரத்து நூற்று நாற்பது மட்டும்).

ஒப்பந்தப் புள்ளி விலை.—ரூ.10-35.

வேலை முடிக்கவேண்டிய காலம்.—6 மாதங்கள்.

வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகள் 24-5-72 மாலை 4-30 மணிக்கு அலுவலகம் வந்த ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் ஷ யார் அலுவலகத்தில் திறக்கப்படும். மேற்கண்ட வேலைகளை எடுத்துச் செய்ய விரும்புவோர் ஒப்பந்தப் பத்திரத்திற்கான தொகைக்கு ரூ. 10-35-ஐ அரசாங்கக் கருவூலத்தில் 2 கருவூல ரசீதுடன் செலுத்தி மேற்படி ரசீதுடன் மேற்பார்வைப் பொறியாளர் (பொதுப்பணித் துறை) இராமநாதபுரம் வட்டம் மதுரை-1. என்ற விலாசத்திற்கு மனு செய்தால் ஷ வேலைகளுக்கான ஒப்பந்தப் பட்டியல் விதிகள் முதலியவைகள் ஒப்பந்தப் புள்ளியுடன் வழங்கப்படும்.

ஒப்பந்தப் புள்ளியின் விலையான ரூ. 10-ஐ பி.டபிள்.யூ. 111 ஓ. ஆர். என்ற கணக்குத் தலைப்பில் நிருவாகப் பொறியாளர், பொதுப்பணித் துறை, விருதுநகர் கோட்டம், விருதுநகர் அவர்கள் கணக்கிலும், விற்பனை வரிக்காக 35 காசை "12 விற்பனை வரி" என்ற கணக்குத் தலைப்பிலும் அரசாங்கக் கருவூலத்தில் தனித்தனியாக செலுத்தி ரசீதுகளை அனுப்பவேண்டும். இத்தொகை எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித் தரமாட்டாது.

ஒப்பந்தப்புள்ளி கொடுக்கும்போது உறையின்மேல்வேலையின் பெயரும் கருவூலத்தின் ரசீது நம்பரும் எழுதப்பட்டிருக்கவேண்டும். இவ்வலுவலதின் மூலம் கொடுக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிப் பத்திரத்தில்தான் தொகை குறிப்பிட்டுக் கொடுக்க வேண்டும்.

ஒப்பந்தப்புள்ளிகள் மேற்பார்வைப் பொறியாளர், பொதுப்பணித் துறை,இராமநாதபுரம் வட்டம், மதுரை அலுவலகத்தில் 15-5-72 முதல் 22-5-72 முடிய விற்பனைக்காக இருக்கும். ஒப்பந்தப்புள்ளி கோரி வரப்படும் மனுக்கள் இவ்வலுவலகத்திற்கு 22-5-72 மாலை 5 மணிக்கு வந்து சேரவேண்டும். அதற்குப் பின் வரும் மனுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. அஞ்சல் மூலமாக ஏற்படும் தாமதத்திற்கோ அல்லது இழப்பிற்கோ இத்துறையினர் பொறுப்பாக மாட்டார்கள். இதுபோன்ற செயல் இத்துறையினர் பொறுப்பிற்கு அப்பாற்பட்டதாகும்.

இவ்வேலையை எடுத்துச் செய்ய விரும்பும் ஒப்பந்ததாரர்களிடமிருந்து கட்டுத் தொகையை அரசாங்கக் கருவூலத்தில் செலுத்திய கருவூல ரசீது மூலமாகவோ அல்லது ஷெட்யூல்டு வங்கிகளின் மூலமாகவோ ஏற்றுக் கொள்ளப்படும். மாநில அரசு செக்யூரிட்டிகள், தமிழ்நாடு மின்சார வாரியம் கடன்பத்திரங்கள்அரசாங்கச் சேமிப்பு பத்திரங்கள்முதலியவைகள் அவைகள் நிர்ணயிக்கப்பட்ட மதிப்பு இவற்றில் எது குறைவாக உள்ளதோ அவற்றில் 5 சதவீதம் குறைவாக ஏற்றுக்கொள்ளப்படும். வேறு விதமாக ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. இவ்வேலையை எடுத்துச் செய்ய விரும்புவோர் நடப்பு வருடத்திற்கான வருமானவரி , விற்பனைவரி முதலியவைகளின் அத்தாட்சியாக சான்றிதழ் கொடுக்கவேண்டும். கடடத் தொகை செலுத்தாமலோ அல்லது இவ்வலுவலகத்தில் நிர்ணயிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிப் பத்திரத்தில் ரேட்டுக்களைக் குறிப்பிட்டுகொடுக்காமலே இருந்தால் இவை மேற்பார்வைப் பொறியாளரால் நிராகரிக்கப்படும். ஆயக்கட்டுதாரர்கள் பங்கெடுத்துக்கொண்டால் டெப்டி தாசில்தாருக்கு ஆயக்கட்டுதார் சர்டிபிகேட்டும் ரெவின்யூ அதிகாரியிடமிருந்து சொத்து உரிமை சர்டிபிகேட்டும் வாங்கி ஒப்பந்தத்துடன் இணைக்கவேண்டும்.

மேற்பார்வைப் பொறியாளர் அவர்கள் எக்காரண அறிவிப்பையும் உரிமைப்படுத்தாமல் ஏதாவது அல்லது வரப்பெற்ற அத்தனை ஒப்பந்தப்புள்ளிகளையும் நிராகரிக்க உரிமைப் பெற்றுள்ளனர்.

கே. எஸ். இராமசாமி,
மேற்பார்வைப் பொறியாளர்,
இராமநாதபுரம் பெருவட்டம்,
மதுரை.

(த. 101)

## நெடுஞ்சாலை கிராமப்பொறியியல் பணித்துறை தேசீய நெடுஞ்சாலை வேலைகள் (மதுரைக் கோட்டம்)

தமிழ்நாடு ஆளுநர் அவர்களுக்காக அவர்களுடைய சார்பில், கீழே குறிப்பிட்டுள்ள வரிசை எண் 1 முதல் 10 வரையுள்ள வேலைக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட ஷெட்டியூல் வகுப்புகள், கோட்டப் பொறியாளர் தேசீய நெடுஞ்சாலை, மதுரை-2 பி.டி. இராசன்சாலை, மதுரை-2, விலாசத்திலுள்ள அலுவலகத்தில் 7—6—1972-ம் தேதி புதன்கிழமை பிற்பகல் 3-30 மணி (அலுவலக கடிகாரப்படி) வரையிலும், மேலும் வரிசை எண் 11 முதல் 27 வரையுள்ள வேலைகளுக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட ஷெட்டியூல் ஒப்பந்தங்கள் உதவிப் பொறியாளர், தேசீய நெடுஞ்சாலை, திருநெல்வேலி - நீர் 1, அன்புத் தெரு, முருகன் குறிச்சி, திருநெல்வேலி-2 விலாசத்திலுள்ள உட்கோட்ட அலுவலகத்தில் 9—6—1972-ம் தேதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3-30 மணி (அலுவலக கடிகாரப்படி) வரையிலும் பெற்றுக் கொள்ளப்பட்டு அதே நாட்களில் பிற்பகல் 3-35 மணிக்குக் கோட்டப்பொறியாளர், தேசீய நெடுஞ்சாலை, மதுரை அவர்களால் இதே அலுவலகங்களில் திறக்கப்படும்.

| வரிசை எண்ணும் வேலையின் பெயரும். | | | கட்டுத் தொகை. ரூ. | ஒப்பந்த நமூனுக்கள் கிடைக்குமிடம். |
|---|---|---|---|---|
| 1 மதுரை-கன்னியாகுமரி சாலை கி.மீ. 55—59-ல் உள்ள சாலையை அகலப்படுத்திப் பலப்படுத்துதல். | | | 8,850 | கோட்டப் பொறியாளர் (தேசீய நெடுஞ்சாலை), மதுரை-2 அலுவலகம். |
| 2 மதுரை-கன்னியாகுமரி சாலை கி.மீ. 59—62-ல் உள்ள சாலையை அகலப்படுத்திப் பலப்படுத்துதல் | | | 8,000 | ஷை |
| 3 மதுரை கன்னியாகுமரி சாலை கி.மீ. 62—65-ல் உள்ள சாலையை அகலப்படுத்திப் பலப்படுத்துதல் | | | 8,000 | ஷை |
| 4 ஷை | கி.மீ. 65—68 | ஷை | 8,200 | ஷை |
| 5 ஷை | கி.மீ. 68—71 | ஷை | 9,150 | ஷை |
| 6 ஷை | கி.மீ. 71—74 | ஷை | 7,700 | ஷை |
| 7 ஷை | கி.மீ. 74—77 | ஷை | 6,500 | ஷை |
| 8 ஷை | கி.மீ. 105—108 | ஷை | 9,350 | ஷை |
| 9 ஷை | கி.மீ. 108—111 | ஷை | 6,800 | ஷை |
| 10 ஷை | கி.மீ. 111—115 | ஷை | 9,350 | ஷை |
| 11 ஷை | கி.மீ. 134—138 | ஷை | 10,750 | உதவிப் பொறியாளர், (தேசீய நெடுஞ்சாலை), திருநெல்வேலி-2. அலுவலகம். |
| 12 ஷை | கி.மீ. 138·8—142·8 | ஷை | 10,550 | ஷை |
| 13 ஷை | கி.மீ. 142·8—146·4 | ஷை | 10,000 | ஷை |
| 14 ஷை | கி.மீ. 170—173 | ஷை | 8,200 | ஷை |
| 15 ஷை | கி.மீ. 173—177 | ஷை | 9,750 | ஷை |
| 16 ஷை | கி.மீ. 177—181 | ஷை | 8,700 | ஷை |
| 17 ஷை | கி.மீ. 183—186 | ஷை | 8,250 | ஷை |
| 18 ஷை | கி.மீ. 186—189 | ஷை | 9,050 | ஷை |
| 19 ஷை | கி.மீ. 189—192 | ஷை | 9,950 | ஷை |
| 20 ஷை | கி.மீ. 192—195 | ஷை | 9,050 | ஷை |
| 21 ஷை | கி.மீ. 195—198 | ஷை | 6,950 | ஷை |
| 22 ஷை | கி.மீ. 198—200 | ஷை | 6,150 | ஷை |
| 23 ஷை | கி.மீ. 200—203 | ஷை | 8,050 | ஷை |
| 24 ஷை | கி.மீ. 213—216 | ஷை | 8,500 | ஷை |
| 25 ஷை | கி.மீ. 216—219 | ஷை | 9,500 | ஷை |
| 26 ஷை | கி.மீ. 219—221 | ஷை | 5,900 | ஷை |
| 27 ஷை | கி.மீ. 221—224 | ஷை | 8,000 | ஷை |

ஒப்பந்த நிபந்தனை, விவர நிர்ணய பாரங்கள் ஷெட்யூல்கள், பிளான்கள் முதலியன அடங்கிய ஒவ்வொரு செட்டுக்கும் விற்பனை வரி உள்பட ரூ. 20·70 வீதம் செலுத்தி, எழுத்து மூலம் வேண்டிக்கொள்வதின் மூலம் வரிசை எண் 1 முதல் 10 வரையுள்ள வேலைகளுக்காகக் கோட்டப் பொறியாளர், தேசீய நெடுஞ்சாலை, மதுரை-2-ல் உள்ள அலுவலகத்தில் 1—6—1972 முதல் 6—6—1972 வரையிலும், வரிசை எண் 11 முதல் 27 வரையுள்ள வேலைகளுக்காக உதவிப்பொறியாளர் தேசீய நெடுஞ்சாலை, திருநெல்வேலி-2-ல் உள்ள அலுவலகத்தில் 2—6—1972 முதல் 28—6—1972 வரையிலும் எல்லா அலுவலக நாட்களில், அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

மாற்றிய வடிவமைப்பு கொண்ட ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

மேலே குறிப்பிட்டுள்ள கட்டுத் தொகை டெபாசிட்டைக் கோட்டப் பொறியாளர் தேசிய நெடுஞ்சாலை மதுரை அதிகார எல்லைக்குள் உள்ள அரசினர் கருவூலங்களில்" ரெவின்யூ டெபாசிட் " என்ற தலைப்பில் செலுத்தியதற்கான செலானை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்பவேண்டும். இது தவிர 10 வருட தற்பகாப்பு டெபாசிட் அத்தாட்சிகளும், 12 வருட தேசிய தற்காப்பு அத்தாட்சிகளும், மாநில அரசு ஈட்டுப்பத்திரங்களும், தமிழ் நாடு மின்சார வாரியப் பத்திரங்களும், ஷெட்யூல் பாங்குகளால் வழங்கப்படும் பாங்க் கேரண்டிகளும், டிமாண்ட் டிராப்டுகளும், டெபாசிட் அழைப்பு ரசீதுகளும் கட்டுத் தொகைக்காக ஏற்றுக் கொள்ளப்படும்.

பாங்கு கியாரண்டிகளைச் சமர்ப்பிக்கும்பொழுது ரிசர்வ் பாங்கு ஒப்புதல் பெற்று ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். அப்படி அனுப்பப்படாத ஒப்பந்தங்கள் நிராகரிக்கப்படும்.

முன்வைப்புத் தொகைக்கான ரசீது இல்லாத ஒப்பந்தங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

கு. பெருமாள்,
கோட்டப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை), மதுரை-2.

(த. 100)

---

## ஒப்பந்தப் புள்ளி

---

### குடிசைப் பகுதி மாற்று வாரியம்

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்றுவாரியத்திற்காகவும், அதன் சார்பாகவும் கீழே தொடரப்பட்டுள்ள வேலைகளுக்காக, பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து, உறையின்மீது, வேலையின் பெயரும், ஒப்பந்ததாரரின் பெயரும், குறிப்பிடப்பட்ட மூடிமுத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள், "நிருவாகப் பொறியாளர், குடிசைமாற்றுவாரியம், கோட்டம் எண். 1, 35/37, ஜகான்கீர் தெரு, இரண்டாவது லைன் பீச், சென்னை-1, அவர்களால் 5—6—1972 மாலை 3 மணிவரை வரவேற்கப்பட்டு, அதேநாள் மாலை 3.05 மணிக்கு கீழே கையொப்பமிட்டவரால் அப்போது வருகை தந்திருப்பவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும்.

| வேலையின் பெயர். | திட்ட மதிப்பீடு. | முன்வைப்புத் தொகை. | ஒப்பந்தப் படிவம். | ஒப்பந்தப்பத்திரத்தின் விலை (திருப்பித் தர மாட்டாது) |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | ரூபாய். | ரூபாய். | | |
| 1 யானைகவுனி காவல்நிலையத்திற்குப் பின்புறம் கல்யாணபுரத்தில் ஆர்.எஸ். எண். 1277/4-ல் டி.டி. 217/70ன்படி தொகுதி—1 5 மாடி (1—2 பிளாக்கில் 40) குடியிருப்புப் பகுதிகள் கட்டுதல். | 4,80,000 | 7,200 | மொத்தத் தொகை | ரூ. 20 + விற்பனை வரி. |
| 2 யானைகவுனி காவல்நிலையத்திற்குப் பின்புறம் கல்யாணபுரத்தில் ஆர்.எஸ். எண். 1277/4-ல் டி.டி. 217/70-ன்படி தொகுதி 2, 5 மாடி (1—2 பிளாக்கில் 40)குடியிருப்புப் பகுதிகள் கட்டுதல். | 4,80,000 | 7,200 | ஷை | ரூ. 20 +விற்பனை வரி. |
| 3 யானைகவுனி காவல்நிலையத்திற்குப் பின்புறத்தில் ஆர்.எஸ். எண். 1277/4-ல் டி.டி. 217/70-ன்படி தொகுதி 3, 5 மாடி (1—1 பிளாக்கில் 40 உடன் 1—1 பிளாக்கில் 20) குடியிருப்புப் பகுதிகள் கட்டுதல். | 3,60,000 | 5,400 | ஷை | ரூ. 20 +விற்பனை வரி. |
| 4 யானைகவுனி காவல்நிலையத்திற்குப் பின்புறம் கல்யாணபுரத்தில் ஆர்.எஸ். எண். 1277/4-ல் டி.டி. 217/70-ன்படி தொகுதி 4—5 மாடி (1—1 பிளாக்கில் 20 உடன் 1—1 பிளக்கில் 24) குடியிருப்புப் பகுதிகள் கட்டுதல். | 2,64,000 | 3,960 | ஷை | ரூ. 20 +விற்பனை வரி. |

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள், " நிருவாகப் பொறியாளர், குடிசைமாற்று வாரியம், கோட்டம் எண்.1, 35-37, ஜகான்கீர் தெரு, இரண்டாவது லைன்பீச், சென்னை-1 " அவர்தம் அலுவலகத்தில் 20—5—1972 முதல் 3—6—1972வரை எல்லா வேலைநாட்களிலும் காலை 11.00 மணி முதல் மாலை 3 மணிவரை ஒப்பந்தப் புள்ளிப் படிவத்தின் விற்பனைவரியுடன் செலுத்தியதற்கான செல்லுச் சீட்டைக் கொடுத்துப் பெறலாம்.

ஒப்பந்தப் புள்ளிப் படிவங்களின் விலை, விற்பனைவரி, இவைகளை, நிருவாகப் பொறியாளர், குடிசைமாற்றுவாரியம், கோட்டம் எண்.1, அவர் களுடைய சேமிப்புக் கணக்கின் தலைப்பில், சென்னை-6, காத்ரிவால் சாலையிலுள்ள, இந்தியன், ஓவர்சீஸ் பேங்கில் கட்ட வேண்டும்.

பெறப்பட்ட ஒன்று அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையும் எக்காரணமும் கூறாமல் நிராகரிக்க உரிமை உண்டு.

எம். ஆத்மநாதன்,
நிருவாகப் பொறியாளர்.

(த.93.)

## தொழில் நுட்பக் கல்வித் துறை, சென்னை-25

## பொறியியல் ஐந்தாண்டு பட்டப் படிப்பில் சேருவதற்கு

1972–73-ம் ஆண்டு, பொறியியல் 5 ஆண்டு பட்டப் படிப்பில் முதல் ஆண்டில், சென்னை, மதுரை ஆகிய பல்கலைக் கழகங்களுடன் இணைக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட பொறியியல் கல்லூரிகளில் சேருவதற்கு தொழில் நுட்பக் கல்வி இயக்குநர், சென்னை–25 அவர்களால் மனுக்கள் வரவேற்கப்படுகின்றன.

### அரசுக் கல்லூரிகள்

1. பொறியியல் கல்லூரி, கிண்டி, சென்னை–25.
2. அரசு தொழில் நுட்பக் கல்லூரி, கோயம்புத்தூர்.
3. அரசு தொழில் நுட்பக் கல்லூரி, சேலம்.
4. அழகப்ப செட்டியார் பொறியியல் மற்றும் தொழில் நுட்பக் கல்லூரி, காரைக்குடி.

### தனியார் கல்லூரிகள்

1. பி.எஸ்.ஜி. தொழில் நுட்பக் கல்லூரி, கோயம்புத்தூர்.
2. கோயம்புத்தூர் தொழில் நுட்ப நிறுவனம், கோயம்புத்தூர்.
3. தியாகராஜர் பொறியியல் கல்லூரி, மதுரை.

### மண்டலக் கல்லூரி

1. மண்டலப் பொறியியல் கல்லூரி, திருச்சிராப்பள்ளி.

மேற்கண்ட பொறியியல் கல்லூரிகளில் சேருவதற்கான மனு படிவங்கள் பெற மேற்குறிப்பிட்ட எந்த ஒரு கல்லூரி முதல்வர்களுக்கும் "தொழில் நுட்பக் கல்வி இயக்குநர், சென்னை" அவர்கள் பெறும் வகையில் கோடிட்ட ரூ. 1 அஞ்சல் ஆணையுடன் ,எழுதி சுய விலாசமிடப் பட்ட (65 காசு+5 காசு அகதிகள் நிவாரண வில்லைகள்) (22 செ.மீ. ×9½ செ.மீ.) உறையில் வைத்து அனுப்பிப் பெறலாம். (அஞ்சல் ஆணை 15–5–1972–ஆம் தேதிக்கு முன்பு செலுத்தப்பட்டிருக்கக் கூடாது.)

### சேருவதற்கான தகுதி :

பொறியியல் 5 ஆண்டு பட்டப் படிப்பில் முதல் ஆண்டில் மனுதாரர் சேருவதற்குக் கீழ்க்கண்டவற்றில் தேறியிருக்க வேண்டும்.

1. தமிழ்நாடு தொழில் நுட்பக் கல்விப் பயிற்சி மாநில போர்டு நடத்தும் தேர்வில் புகுமுகத் தொழில் நுட்பப் படிப்பில் தேறியிருக்க வேண்டும்.

அல்லது

2. சென்னை, மதுரை பல்கலைக் கழகங்களில் புகுமுக வகுப்பில் பாகம்—3 பிரிவு ஏ-ல் கணக்கு, பௌதிகம், இரசாயனம் அல்லது சென்னை/மதுரை பல்கலைக் கழகங்களால் ஏற்றுக் கொள்ளப் பட்ட மற்ற பல்கலைக் கழகங்களில் ஒரு தேர்வில்—

மனுதாரர்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பு தாழ்த்தப்பட்ட மலைச்சாதி வகுப்பைச் சேர்ந்தவராய் இருப்பின் சொல்லப்பட்ட தேர்வில் மூன்று தடவைகளுக்கு மேற்படாமலும், மற்றவர்கள் இரண்டு தடவைகளுக்கு மேற்படாமலும் எழுதித் தேறியிருக்க வேண்டும்.

தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மலைச்சாதியினர் தவிர்த்த மற்ற வகுப்பினர் புகுமுகத் தொழில் நுட்பப் படிப்பில் அல்லது கல்லூரி புகுமுக வகுப்பில் கீழ்க்கண்ட வகையில் தேர்வு பெற்றிருக்க வேண்டும்.

1. கணக்கில் குறைந்தது 50 சதவிகிதம்

2. பௌதிகம் மற்றும் இரசாயனமும் சேர்ந்து குறைந்த பட்ச சராசரி 50 சதவிகிதம் மேலே (1) (2) ஆகியவைகளில் மொத்த மதிப்பெண்கள் 110 மதிப்பெண்களுக்குக் குறையாமல் இருக்க வேண்டும்.

### வயது வரம்பு :

இப்படிப்பில் சேர விரும்பும் மாணவர்கள் அந்தந்த ஆண்டில் ஜூலை மாதம் 15 தேதியில் 15 வருடம் 6 மாதங்கள் பூர்த்தியடைந்தவர் களாக இருக்கவேண்டும். தாழ்த்தப்பட்ட வகுப்பினர், மலைச்சாதியினர் பர்மா இலங்கை ஆகியவற்றிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டவர், பொற் கொல்லர் விஷயத்தில் மேல் வயது வரம்பு 24 ஆண்டுகளாகும். மற்றவர்கள் விஷயத்தில் ஜூலை முதல் தேதியில் வயது வரம்பு 21 ஆண்டுகளாகும்.

5. அ. தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் மட்டுமே சேர்க்கப்படுவதற்கு பரிசீலிக்கப்படுவர். ஆயினும் இந்த மாநிலத்தைச் சேராத மத்திய அரசு ஊழியரின் குழந்தைகளும், அவருடைய பெற்றோர், மனுச் செய்யும் காலத்தில் இந்த மாநிலத்தில் பணியாற்றிக் கொண்டிருப்பின் அவர்களும் மனுச் செய்யலாம். இவ்வகையில் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் அலுவலக நிருவாகிகளிடமிருந்து சான்றிதழ் காட்டப் பெற வேண்டும்.

ஆ. இந்த மாநிலத்தைச் சேராதவர்கள் மனுச் செய்யும் காலத்தில் இந்த மாநிலத்தில் பதிவு செய்யப்பட்ட ஜாயின்ட் ஸ்டாக் கம்பெனியிலோ தனியார் அல்லது பொது நிறுவனங்களிலோ அல்லது அரசினரால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலோ இருப்பார்களானால் அவர்களும் மனுச் செய்யலாம். மனுவுடன் தொழில் அல்லது நிறுவனத்தின் நிருவாகியிடமிருந்து சான்று பெற்று மனுவுடன் வைத்து அனுப்ப வேண்டும்.

இ. மற்ற மாநிலங்களில் படித்தவர்கள், ஆனால் அவர்கள் பெற்றோர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களாய் இருப்பவர்களானல், தாங்கள் தமிழகத்தைச் சேர்ந்தவர் என்பதற்கு உரிய வடிவத்தில் (மனுவுடன் இணைக்கப்பட்டுள்ள வடிவம்) சான்று தர வேண்டும்.

6. மனுக்களைப் பெற்றுக் கொள்ளக் கடைசித் தேதி பின்வருமாறு :—

அ. சென்னையில் பேட்டியளிக்கப்பட்ட விரும்புவோர் 17–6–1972 மாலை 5 மணி வரை.

(ஆ) மதுரையில் பேட்டியளிக்கப்பட விரும்புவோர் 18–6–1972.

(இ) திருச்சிராப்பள்ளியில் பேட்டியளிக்கப்பட விரும்புவோர் 18–6–72.

(ஈ) கோயம்புத்தூரில் பேட்டி அளிக்கப்பட விரும்புவோர் 19–6–72.

மனு வடிவங்களை முறையாகப் பூர்த்தி செய்து கடைசித் தேதிக்கு வேண்டுமளவு முன்னதாகவே மனுக்கள் அனுப்பி வைக்குமாறு மனுதாரர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தொழில் நுட்பக் கல்வி இயக்குநர்.

(த. 106)



## ஒப்பந்தப் புள்ளி

### குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும் குறிப்பிடப்பட்டுள்ள வேலைக்காக, " தலைமைப் பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் " அவர்களால் 12—6—1972 மாலை 3 மணிவரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் துறைக்குரிய படிவத்தில் வரவேற்கப்படுகின்றன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் அதே நாள் மாலை 3.30 மணிக்கு, அந்தச் சமயத்தில் வந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் " தலைமைப் பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் " அவர்களால் அல்லது அவரால் நியமிக்கப்பட்ட எந்த ஒரு அலுலரால் திறக்கப்படும்.

| | |
|---|---|
| வேலையின் பெயர் .. .. .. | தூத்துக்குடி தொழில் மையத்திற்காக 20 எம்.ஜி.டி நீர் வழங்குத் திட்டம்—1200. எம்.எம். உள்நடு விட்டமுள்ள. பி.எஸ்.சி. குழாய்களுக்குப் பொருத்தமானது—வழங்குதல் |
| ஒப்பந்தப் படிவம் .. .. | மொத்தத் தொகை. |
| முன் வைப்புத் தொகை .. .. | ரூபாய் 15,000 (பதினையாயிரம் ரூபாய் மட்டும்). |
| வேலை முடிக்க வேண்டிய காலம் .. | 6 மாதங்கள். |
| ஒப்பந்தப் பத்திரத்தின் விலை .. | ரூ. 10·35 விற்பனை வரி உட்பட |

ஒப்பந்தப் பத்திரத்தின் விலையை பணமாகவோ, அல்லது மணி யார்டர் மூலமாகவோ 10–5–1972லிருந்து, " நிருவாகப்பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் 1-14, எட்வர்ட் எலியட்ஸ் ரோடு, சென்னை–4, " அவர்களிடம் செலுத்தி ஒப்பந்தப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். எந்தச் சூழ்நிலையிலும் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்தின் விலை திருப்பித்தரப்பட மாட்டாது.

தலைமைப் பொறியாளர்,
குடிநீர் வடிகால் வாரியம்.

(த. 102)

## வேலைவாய்ப்பு

### பயிற்சித் துறை, சென்னை-5

நாகர்கோயில் எஸ். எம். ஆர். வி. தொழில் நுட்ப நிறுவனத்தில் கீழ்க்கண்ட படிப்புக்கு 1972–73-ஆம் ஆண்டுக்கு மாணவர்களைச் சேர்ப்பதற்கு மனுக்கள் வரவேற்கப்படுகின்றன. 1–8–1972லிருந்து இப்பயிற்சிப் படிப்பு தொடங்கும்.

| தொடர் எண். | பயிற்சி வகை. | பயிற்சிக் காலம். |
|---|---|---|
| 1 | கைத்தறி நெசவு .. .. .. .. | 12 மாதங்கள். |
| 2 | விசைத்தறி நெசவு .. .. .. | 12 மாதங்கள். |
| 3 | கைத்தறி நெசவில் மேற்படிப்பு .. | 12 மாதங்கள். |

மனுதாரர்கள் வயது 15-க்குமேல் 25-க்குள் இருக்கவேண்டும். மெட்ரிகுலேஷன் அல்லது அதற்குச் சமமான படிப்பில் 2 வகுப்புகள் கீழே இருக்கவேண்டும். கைத்தறி நெசவில் மேற்படிப்புக்குச் சேர விரும்புவோர் நாகர்கோயில் எஸ். எம். ஆர். வி. தொழில் நுட்ப நிறுவனத்தில் கைத்தறி நெசவுக்காக அல்லது விசைத்தறி நெசவுக்காகச் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். அல்லது துறையின் கண்காணிப்பில் உள்ள தொழிற் பள்ளி ஒன்றில் கை நெசவுக்கான சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். அல்லது தமிழ்நாடு அரசினர் தொழில நுட்பத் தேர்வில் கைநெசவில் லோயர் கிரேடு தேறியிருக்க வேண்டும். இத்துடன் குறைந்த பட்ச கல்வித் தகுதி இருக்க வேண்டும்.

தகுதியைப் பொறுத்து, மனுதார்கள் மற்ற வகையில் தகுதி பெற்றவர்களாக இருப்பின் கைத்தறி நெசவு மேற் படிப்புக்குச் சேர்ப்பதில் வயது வரம்பு தளர்த்தப்படலாம்.

பர்மா, இலங்கை ஆகியவைகளிலிருந்துத் திரும்பிய இந்தியக் குடி மக்கள், நாகர்கோயில் எஸ். எம். ஆர். வி. தொழில் நுட்ப நிறுவனத்தில் சேரவிரும்பினுல் மனுத் தேதியில் அவர்கள் 35 வயதுக்கு உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும். இரண்டாவது படிவம் அதாவது நிர்ணயிக்கப்பட்ட 9-ஆம் வகுப்பு என்பதற்கு 2 வகுப்புகள் கீழே இருத்தல் வேண்டும்.

மேற்கண்ட மூன்று வகைப் படிப்புக்கும் எல்லா மாணவர்களுக்கும் முறையே ரூ. 20, ரூ. 20, ரூ. 25 என்ற அளவில் பயிற்சிக்கால உதவிப் பணம் வழங்கப்படும்.

விவரக் குறிப்புக்காக , மனு வடிவம் ஆகியவைகளைக் கண்காணிப்பாளர் எஸ். எம். ஆர். வி. தொழில் நுட்ப நிறுவனம், நாகர்கோயில் அவர்களிடமிருந்து தன் முகவரியிட்ட போதிய அஞ்சல் தலை ஒட்டப்பட்ட ஏற்ற அளவுள்ள உறைகளை அனுப்பி வைத்து இலவசமாகப் பெறலாம். பூர்த்தி செய்யப்பட்ட மனுக்கள் அத்தாட்சி பெற்ற சான்று நகல்கள் முதலியவைகளுடன் கண்காணிப்பாளர், எஸ். எம். ஆர். வி. தொழில் நுட்ப நிறுவனம் நாகர்கோவில் அவர்களுக்கு 28–6–1972-க்குள் வந்து சேர வேண்டும்.

பேட்டிக்காக அழைக்கப்படுவோர் சொந்தச் செலவில் செல்ல வேண்டும். பேட்டிக்கு அழைக்கப்படுவதென்பது, தேர்வு உத்திரவாதம் என்று கருதலாகாது.

இயக்குநர்,
வேலை வாய்ப்பு பயிற்சி.

(த. 104)

### மத்திய பட்டுத் தொழில் ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவனம்.

மைசூர் மத்திய பட்டுத் தொழில் ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவனத்தில் பட்டுத் தொழிலில் பட்ட மேல் டிப்ளமா படிப்புக்குச் சேர்க்க வகை செய்வதற்காகக் கீழ்க்கண்ட தகுதிகள் உள்ள மனுதாரர்களிடமிருந்து சாதாரண தாள்களில் மனுக்கள் கீழ்க்கண்டவரால் வரவேற்கப்படுகின்றன. இந்தப் படிப்பு 1972 ஜூலை 1 முதல் தொடங்கும்.

தகுதி :

பல்கலைக் கழக மானியக் குழுவினுல் அங்கீகரிக்கப்பட்ட ஏதாவது ஒரு பல்கலைக் கழகம் அல்லது நிறுவனத்தில் தாவர இயல் அல்லது விலங்கியலை முக்கியப் பாடமாக கொண்டு பி. எஸ்சி. பட்டம். முக்கியப் பாடத்தில் முதல்வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பு பெற்றவர்கள் மட்டும் மனுசெய்க. 1-7-1972-ல் 26 வயதுக்கு மேற்பட்டவர்களாக இருக்கக்கூடாது.

பயிற்சிக்காலம் 1–7–1972-லிருந்து 18 மாதங்கள் ஆகும். பயிற்சியின் போது நபருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 120 பயிற்சிக்கால உதவிப் பணம் தமிழ்நாடு அரசினரால் வழங்கப்படும். வேலைக்கு நியமனத்தில் உத்தரவாதம் எதுவும் தரப்படாது என்றுலும் பயிற்சி முடிந்தபின்பு பட்டுத் தொழில் உதவி ஆய்வாளராக ரூ. 250—10—400 சம்பள விகிதத்தில் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்படக்கூடும். தெரிந்தெடுக்கப் பட்டவர்கள் பின்னர், பயிற்சி முடிந்ததும், பயிற்சி முடிந்த காலத்திலிருந்து 3 ஆண்டுகளுக்குத் தமிழ்நாடு தொழில் துறையில் 3 ஆண்டுகளுக்குக் குறையாமல் பணியாற்றுவதாகப் பத்திரம் எழுதிக் கொடுக்க வேண்டும். இதில் தவறினுல் ரூ. 2,160-ம் அரசு செலுத்தியிருக்கக் கூடிய வேறு தொகைகளும் வசூலிக்கப்படும்.

வயது, கல்வித் தகுதி, சி கிரேடு முதலியவைகளுக்குச் சான்று நகல்கள் அத்தாட்சியோடு மனுக்களைப் பெற்றுக்கொள்ள கடைசித் தேதி 10–6–1972 ஆகும். மனுதாரர்கள் சென்னையில் பேட்டிக்குத் தங்கள் சொந்தச் செலவில் வரவேண்டும். பயணப்படியோ வேறு செலவுகளோ ஏற்கப்படாது.

(த. 105)

தொழில் வணிக இயக்குநர்,
சென்னை-5.

## பெரியகுளம் நகராட்சி

கீழே கொடுக்கப்பட்டுள்ள விவரப்படி வேண்டிய குழாய்கள் வழங்குவதற்காக, கீழே கையொப்பமிட்டவரால் 29—5—1972 மாலை 4 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

| குழாய் வழங்குவதற்குரிய விவரங்கள். | அடக்கவிலை மதிப்பீடு ரூபாய். | முன்வைப்புத் தொகை ரூபாய். |
|---|---|---|
| குழாய் சம்பந்தப்பட்ட பொருள்கள் வழங்குதல். | 4,700 | 170 |

மேலும் தேவையான குறிப்புகளை நகராட்சிப் பொறியாளர், பெரியகுளம், அவர்களிடமிருந்து விண்ணப்பம் செய்து பெற்றுக்கொள்ளலாம்.

ஜே. சுருளிராஜா, எம்.ஏ.,
நகராட்சிப் பொறியாளர்.

(த-82)

## பொதுப்பணித் துறை

அறிக்கை எண் 11.

கீழே தொடரப்பட்டுள்ள பொருள்கள் வழங்குவதற்காக 31—5—1972 மாலை 1 மணி வரை கீழ்க்கையொப்பமிட்டவரால் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| விரிப்பு (Tarpaulin) | 6·10 | 5·10 மீட்டர் | 100 |

கீழ்க்கையொப்பமிட்டவரின் நேர்முக உதவியாளரிடமிருந்து தேவையான ஒப்பந்தப் புள்ளிகளையும், மற்ற நிபந்தனைகளையும் விண்ணப்பம் செய்து இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

எஸ். சச்சிதாநந்தம்,
பொது மேற்பார்வையாளர்,
பொதுப்பணிப்பட்டறையின் கிடங்குகள்.

(த.63)

## பால்பத வளர்ச்சித் துறை

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர் சார்பிலும் மதுரைப் பால் பதத் திட்டத்திலிருந்தும், மாதவரம் மையப்பால் பதத் திட்டம், பால் குடியிருப்பிலிருந்தும் நெய் கொள்முதல் செய்வதற்காக மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. குறிப்பிட்டுள்ள விலையினைச் செலுத்தி விட்டு மாதிரி நெய்யினை பால் உற்பத்தி உதவி ஆணையர், (வழங்குதல்), சென்னை-35 உடன் திட்ட மேலாளர் மதுரைப் பால் பதத் திட்டம், மதுரை-20 ஆகியவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். வெளியிடங்களுக்கு மாதிரி நெய் அனுப்பி வைக்கப்பட மாட்டாது.

முழு விவரங்களுடனும், நிபந்தனைகளுடனும் கூடிய ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களை, பால் உற்பத்தி உதவி ஆணையர், (வழங்குதல்) நந்தனம், சென்னை-35 அவர்களின் அலுவலகத்தில் அலுவலக நாட்களில் 11 மணி முதல் மாலை 3 மணி வரை ரூ. 5 விற்பனைவரி மற்றும் சர்சார்ஜ் ரொக்கமாகக் கட்டிப் பெற்றுக்கொள்ளலாம். ஒப்பந்தப் புள்ளிகள் 25—5—1972 பிற்பகல் 1 மணி வரை பெறப்பட்டு அதேநாள் மாலை 3 மணிக்கு அப்போது வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் அல்லது அவர்களது அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளின் முன்னிலையில் அவை பிரிக்கப்படும்.

எம். கே. கோமேதகவேலு,
ஆணையர்.

(த. 64)

## பொதுப்பணித் துறை

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர் சார்பிலும் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் கீழே குறிக்கப்பட்டுள்ள வேலைக்கு, "மேற்பார்வைப் பொறியாளர், பொ.ப.து. கோவை நீலகிரி வட்டம், கோயம்புத்தூர்-1" அவர்களால் அவருடைய அலுவலகத்தில் 29-5-1972 மாலை 3 மணிவரை பெற்றுக்கொள்ளப்படும்.

வேலையின் பெயர்—ஈரோட்டிலுள்ள தாலுகா தலைமையிடங்கள் மருத்துவ மனையில் ஒரு இருதய சிகிச்சை தனி மருத்துவ மனை கட்டடத்திற்குரிய கட்டுமானம்.

ஒப்பந்தப்படிவம்—மொத்தத்தொகை.

முன்வைப்புத்தொகை—2,600 ரூபாய்.

விற்பனை வரி உட்பட ஒப்பந்தப் பத்திரங்களின் விலை—ரூ. 5 18.

வேலை முடிக்கவேண்டிய காலம்—4 மாதங்கள்.

ஒப்பந்தப் பத்திரங்களை, "மேலாளர், நிருவாகப் பொறியாளரின் அலுவலகம், கட்டடப் பிரிவு, கோயம்புத்தூர்", அவர்களின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் 12–5–1972லிருந்து மேற்கூறப்பட்ட ஒப்பந்தப் பத்திரத்தின் விலையைக் கட்டி (எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித்தரமாட்டாது.) கோரிக்கைக் கடிதம் எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

கோபாலகிருஷ்ணன்,
மேற்பார்வைப் பொறியாளர்,
பொ. ப. து.
கோவை–நீலகிரி–வட்டம்.

(த. 65)

## குடிநீர் வடிகால் வாரியம்

வேலையின் பெயர்—கிங் நிலையம் கிண்டி—நீர் வழங்குதலை அதிகமாக்குதல்—2,27,300 லிட்டர் திறன் கொள்ளளவுள்ள ஆர். சி. சி. நீர்த்தேக்கம்.

ஆதாரம்—அலுவலக ஒப்பந்தப் புள்ளி அறிக்கை எண். 6827/இ எக்ஸ். இ/72.1/15-3-72.

மேற்குறிப்பிட்டுள்ள வேலைகளுக்கான ஒப்பந்தப் புள்ளியினைப் பெற கடைசி நாள் 26–5–1972–ஆக நீட்டிக்கப்பட்டுள்ளது.

மூல ஒப்பந்தப் புள்ளியில் சொல்லியிருக்கிற மற்ற எல்லா நிபந்தனைகளையும் நினைவூட்டுவதோடு அதில் மாற்றமேதுமில்லையென அறிவிக்கப்படுகிறது.

மேற்பார்வைப் பொறியாளர்,
(பொ.சு.பொ.)
குடிநீர்வடிகால் வாரியம், சென்னை-8.

(த.90)

## தொழில் வணிகத் துறை

சேப்பாக்கம், சென்னை-5.

சேலம் மாவட்டத்தில் ஓமலூரில் ஊரகப் பணிகள் மையத்தின் மட்பாண்டப் பிரிவில் உற்பத்தி செய்யப்பட்ட கல் ஜாடிகள், கிண்ணங்கள், உணவகத் தட்டுகள் உடன் மற்ற இனங்களுக்கான முகவர்கள் நியமனங்களுக்கான விண்ணப்பப் படிவங்கள் வரவேற்கப்படுகின்றன. தற்போது தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம், பாண்டி, மைசூர், கேரளா ஆகிய மாநிலங்களில் முகவர்கள் நியமிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மட்பாண்டங்கள் விற்பதில் அனுபவமுள்ள புகழ்பெற்ற நிறுவனங்கள் மட்டுமே விண்ணப்பிக்கவேண்டும். விண்ணப்பங்கள் குறிப்பிட்ட படிவத்தோடு, "தொழில் வணிகத்துறை இயக்குநர் அவர்களுக்கு 31–5–1972க்கு முகவரியில் முன் அடையுமாறு அனுப்பவேண்டும்.

மேலும் தேவையான விவரங்களுக்கு, "துணை இயக்குநர், (மட்பாண்டம்) தொழில் வணிகத்துறை, சேப்பாக்கம், சென்னை-5" என்ற தொடர்பு கொள்க.

இயக்குநர்,
தொழில் வணிகத்துறை,
சேப்பாக்கம், சென்னை-5.

(த.62)

ஆசிரியர், வெளியிடுபவர்: செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர். தமிழ்நாடு அரசு அச்சக எழுதுபொருள் இயக்குநரால், சென்னை, அண்ணா சாலை, தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது; முகவரி: தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை-2.